ஸ்ரீபிரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர் இயற்றிய

ப்ரஸன்ன ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ர பாஷ்ய

கிருதியின் தமிழ் அர்த்த விளக்கங்கள்

வெளியிடுவோர்:

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு

ஸ்ரீபிரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர் இயற்றிய

ப்ரஸன்ன ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ர பாஷ்ய

கிருதியின் தமிழ் அர்த்த விளக்கங்கள்

ஸ்ரீஹரிவாயு குருகளின் ஆசியுடன், விஸ்வாவஸு ஜேஷ்ட சுக்ல சதுர்த்தசி, 10.06.2025 செவ்வாய்க் கிழமை, ஸ்ரீஸ்ரீபாதராஜரின் ஆராதனை நாளான அன்று இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது.

தமிழில் அர்த்தம் எழுதி வெளியிட்டவர்கள்:
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross, JP Nagar 4th Phase
Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

இந்தப் புத்தகத்தை வெளியிட பொருளுதவி செய்த அனைத்து ஹரிபக்தர்களுக்கும் நன்றி!!

முன்னுரை

ஹரிதாஸ ஸாகித்யத்தில் ஒரு அற்புதமான க்ருதி - ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர் இயற்றிய ஸ்ரீப்ரஸன்ன விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ர பாஷ்யமான - இந்த கன்னட க்ருதி. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் வரும் 1000 பெயர்களுக்கு விளக்கம் அளிக்கும் விதமாக ஸ்ரீதாஸர் இயற்றியிருக்கும் இந்த க்ருதியை தமிழில் அர்த்தங்களை எழுதி வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி.

இதே போல, ஸ்ரீதாஸரின் மற்ற தீர்க்க க்ருதிகளையும் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்ற நம் ஆசையை, ஸ்ரீதாஸரும், அவருடைய அந்தர்யாமியான பாரதிரமண முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸனே நிறைவேற்ற வேண்டும்.

மிகப்பெரிய புத்தகம். 200 ப்ரதிகளுக்கே அதிக தொகை வேண்டியிருக்கும், அவற்றை அனுப்பத் தேவையான குரியர், தபால் செலவுகள் என மேலும் தொகை தேவைப்படும் என நினைத்தால், அதைவிட அதிகமாக நமக்கு பல ஹரிபக்தர்கள் ஸ்பான்ஸர் செய்திருப்பது, ஸ்ரீதாஸரின் அருளாலேயே. அவர்கள் அனைவருக்கும் நமது நன்றிகள்.

நமது புத்தகங்கள் பலருக்கும் சென்று சேர்வதற்கு, தபாலில் சென்று சேர்ப்பதற்கு, தொடர்ந்து உதவி வரும் பொள்ளாச்சி திரு. ராமமூர்த்தி அவர்களுக்கும், தர்மபுரி திரு. ப்ரஸன்னன் அவர்களுக்கும் மிக்க நன்றிகள்.

ஸ்ரீதாஸரின் வாழ்க்கை சரிதத்தை சுருக்கமாக இங்கு சேர்த்திருக்கிறேன். இதை கன்னடத்தில் எழுதியவர் திரு. நாகராஜ் ஹாவேரி என்பவர்.

நன்றி. ஹரே ஸ்ரீனிவாஸா.

சத்ய நாராயணன்
01.06.2025

ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர்

விஶேஷ க்ரந்தா2தி3 விரசிதம்
அஸங்க்ய ஶிஷ்ய கோடி உத்தாரகம் |
ப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ பாதா3ராத3கம்
ப்ரஸன்ன ஸ்ரீனிவாஸதா3ஸ கு3ரும்ப4ஜே ||

ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸரைப் பற்றி அவரது ஸிஷ்யரான ஸ்ரீ ஸ்ரீஷ பூவராஹ விட்டலாங்கிதரான ஸ்ரீ ஸ்ரீதரமூர்த்தி ஆசார்யர் இயற்றிய பாடல்.

எந்து வர்ணிஸலி கு3ருக3ள மஹிமெ |
கந்துபிதனொலுமெ படெ3த3 தீ4மந்த || ப

மந்த்ராலய தொ3ரெ காருண்யதி3
யந்த்ரோத்தா4ரகனனுக்3ரஹதி விபு4
மாதுளாந்தக அனக4 ஸ்ரீ கிருஷ்ண
த்ராத ப்ரஸன்ன ஸ்ரீனிவாஸன த3யதி3 புட்டித3 || 1

ஏஸு கருண இவரல்லி கு3ரு ஹரி
வாஸுகிஶயன நிருத பூஜெகொ3ண்டு
பா4ஸவாகி3வர மனதி3 ஒலிது3 ப்ரேரிஸி
விஶேஷ க்3ரந்தக3ள ரசிஸித3 மஹந்தர || 2

கோ3பால விஜய புரந்தரார்யரலி
தபோ வித்4யா விரக்த ஸ்ரீவாதிராஜரலி
ஸ்ரீபன கு1வர கா3ளிவேத3 மத்4வரலி
கோ3ப்ய ப4குதி மாட்3யபரோக்ஷ படெத3வர || 3

ஸ்ரீ ஹரி ப்ராதுர்ப4வாதி3 விஷயக3ள
மஹா மாத்4வ யதிவரேண்யர சரிதெக3ள
மஹோன்னத ரீதியலி நிரூபிஸித3
ஸ்ரீஹயாஸ்ய நாரஸிம்ஹ ஸ்ரீனிகேதனனர்ச்சிஸித3 || 4

ஶேஷாசலேஶ மத்ஸ்ய கூர்ம வராஹ
ஶிஶு ப்ரஹ்லாதகொ3லித3வன வடு பா4ர்க்க3வ
தஶஶிரனஹிதன தே3வகீ தனய புத்த கல்கி
ஸ்ரீஶப்ரஸன்ன பூ4வராஹன நிஜ தா3ஸாக்3ரணிய || 5

ஸ்ரீதாஸரைப் பற்றிய குறிப்புகள்:

பெயர் : ஸ்ரீ புருஷோத்தமாசார்யார்
தந்தை : ஸ்ரீ வெங்கட கிருஷ்ணாசார்யார்
தாய் : ஸாத்வி. ஸீதம்மா
அவதாரம்: 1905 விஸ்வாவஸூ நாம ஸம்வத்ஸரம்
ஜென்ம ஸ்தள: காவேரி தாம்ரபர்ணி நதி தீரமான ‘ஸூலபுர’ (கோவைக்கு அருகில்).
அங்கிதம்: ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ
உபதேச குருகள்: ஸ்ரீ கோபாலதாஸர்
நிர்யாண : 1995ம் ஆண்டு ஆஷாட பௌர்ணமி

ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர் ஒரு முறை திருப்பதியில் ஸ்ரீனிவாஸனின் ஸன்னிதானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது அவருக்கு அங்கு ஒரு காகிதம் கிடைத்தது. அதில் ஸ்ரீகோபாலதாஸரின் தம்பியான ஸ்ரீகுரு கோபாலதாஸர் இயற்றிய 'பாலிஸய்யா தேவ' என்னும் தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட கிருதி இருந்தது. அப்போது இரவு மணி 10. ஸ்ரீதாஸர், ஸ்ரீனிவாஸனிடம் இவ்வாறு வேண்டிக் கொண்டார்.

ஹே ஸ்வாமி. இத்தகைய அருமையான ஸ்வாமியின் நாமத்தை எழுதுவதற்கு, ஸ்ரீகுரு கோபாலதாஸருக்கு நீ அருளினாய். என் மூலமாகவும் உன்னை புகழ்வதற்கு ஒரு ஸ்துதியை இயற்றுவதற்கு சாத்தியமா? என்று கேட்டு மனதில் கவலைப்பட்டவாறு..

பாலிஸு என்னனு ஹரியே
ஸிரிதே³வி தொ³ரெயெ |
ஸரஸிஜாஸன பிதனே || ப

பார்த்தஸூத பன்னகாகி³ரி நிலய
பவமான வந்த்ய || அப

ஸ்ரீ பூ⁴ரமணனெ ஸ்ருஷ்டிகொ³டெ³யனெ
ஆதி³காரண அதுள மஹிமனே |
ப³ஜிப ப⁴க்தர க்லேஷ களெயுவ
கைடபாரி கருண ஶரதியே || 1

என்னும் பல்லவி, அனுபல்லவி மற்றும் முதலாம் நுடியை இயற்றினார். இவ்வாறு சிந்தித்தவாறு தம் ஆராத்ய தெய்வமான ஸ்ரீநிவாஸனை பார்த்துக் கொண்டிருந்தபோது, ஸ்ரீனிவாஸனின் முகம் அத்யந்த ப்ரஸன்னமாயிற்று.

அந்த அத்யானந்தத்தின் நிமிடங்களில், ஸ்ரீனிவாஸன் தன் பரம பக்தனான ஸ்ரீதாஸார்யருடன் பேசிய ஸம்பாஷணையே அவருடைய முதல் தேவர நாமாவின் அடுத்தடுத்த பத்திகளுக்கு நாந்தி ஆயிற்று.

அந்த சமயத்தில் அங்கு இருந்த ஒருவர் ஸ்ரீதாஸரிடம் 'வ்யாப்தோபாஸனை' செய்யுமாறு கூறினார். அவருடைய அங்கித நாமத்தில் 'ஸங்கர்ஷண மத்தோஷ பரிஹரிஸோ' என்னும் போது, எவ்வளவோ தோஷங்களைக் கொண்டவன் நான், ஸ்வாமியோ நிர்தோஷ பூர்ணன் என்னும் பாவனையுடன், 'நித்ய நிர்மல நிகம வேத்ய' என்று கூறியிருக்கிறார்.

ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸரின் சில க்ருதிகளில் இந்த கேள்வி - பதில் முறை அடங்கியிருக்கிறது. பற்பல க்ருதிகள், ஸ்வாமியின் எதிரில் நின்று நேராக அவனிடம் பேசியவாறு எழுதியிருக்கிறார். இவ்வாறாக, ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸரின் க்ருதிகள் மேலோட்டமாக பார்த்தால், மிகவும் சரளமாக இருந்தாலும், அவற்றில் அடங்கியிருக்கும் தத்வங்கள், ரகசியங்கள் அபாரமானவை.

ராக³ ரஹித ராக⁴வேந்த்ர ஸம்ஸேவ்ய ஹரியே
அஜன தாத ப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ
லக்ஷ்மீ ஈஶ ப்ரணத ஆர்திஹர
ப்ரமோதி நீனே பாலிஸென்ன ஹரியே ||

ஸ்ரீதாஸரே தம் ஆப்த ஸிஷ்யரிடம் கூறியதாக உள்ள இந்த மேற்சொன்ன க்ருதியின் பின்னணி.

ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீகோபாலதாஸர்கள் வந்து ஸ்வப்னத்தில் சொன்ன குறிப்பின்படி, ஸ்ரீபுருஷோத்தமாசார்யர், மந்த்ரயாலத்திற்கு வந்து, மிகுந்த பக்தி ஸ்ரத்தையுடன் ராயரின் ஸேவையை செய்து வந்தார். ஒரு நாள் மதிய நேரத்தில், அவர் சத்திரத்தில் இருந்தபோது, ராயர் அங்கு ப்ரத்யக்ஷமாகவும், ஸ்ரீகோபாலதாஸர் ஸூக்ஷ்ம ரூபத்திலும் தென்பட்டு, ஸ்ரீராயரின் சன்னிதியில் 'ப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ' என்னும் அங்கிதத்தை அளித்து, மந்த்ரோபதேசம் செய்தார்.

ஸ்ரீகோபாலதாஸரின் காலத்திற்கும், ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸரின் காலத்திற்கும் வித்தியாசம் இருந்தாலும், அவர் இவருக்கு விஸேஷ அனுக்ரஹம் செய்வதற்காக வந்திருக்கிறார். ஸ்ரீஹரியின் ஆணைப்படி மட்டுமே இவையெல்லாம் நடப்பது சாத்தியம்.

கணேஷ அம்ஸரான ஸ்ரீகோபாலதாஸரே நம் தாஸரின் அங்கித உபதேச குருகள். ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீவிஜயதாஸருக்கு கனவில் வந்து அங்கித உபதேசம் செய்தால், ஸ்ரீராயரின் ஸன்னிதானத்தில் ஸ்ரீகோபாலதாஸர் வந்து ‘ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ’ என்று அங்கித உபதேசம் செய்திருக்கிறார்.

ஸ்ரீகோபாலதாஸரின் காருண்யம்

அங்கிதம் கிடைப்பதற்கு முன்னர், சில ஆண்டுகளுக்கு முன், கெங்கேரி அருகில் உள்ள ராமவள்ளியில் ஸ்ரீகோபாலதாஸர் ஸ்ரீதாஸருக்கு தரிசனம் கொடுத்திருக்கிறார். இந்த விஷயத்தை ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸரே தம் ஒரு க்ருதியில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

நின்ன த^{3}யதி^{3}ந்தலே என்ன ஜீவனவு
க^{4}ன்ன கோ^{3}பாலவிட்டல தா^{3}ஸராயா || ப

துங்கெ^{3} க்ருஷ்ண மத்யரங்க க்ஷேத்ரதி^{3} முத^{3}தி^{3}
துங்க^3 விஜயார்யர பத^{3}ங்க^{3}ளிகெ^{3} எரகி^{3}
க^{3}ங்கெ^{3} பித மாதங்க^3 வரத^3 நாமன அந்த
ரங்க^{3}தி நோடி^{3} கு^{3}ணக^{3}ளனு பாடி^{3}தெ^{3}யோ || 1

அனுஜரிகு^{3} அசல மாதெகு ஶரண ஸுஜனரிகெ^{3}
மௌனி பண்டி^{3}தரிகு^{3} என்னந்த பாமரரிகு^{3}
ஞான ஸுதத்வ ஸன்மார்க்க^3 போ^{4}தி^{3}ஸி ஜக^3
ன்னாதன மனஸின அனுப^{4}வகெ தந்தெ || 2

பே^{3}ஸரதி^{3} நா ஸீதாபதிபல்லி யல்லி மலகெ^{3}
ஏனு கருணவோ தா^{3}ஸராஜ நீ ப^{3}ந்து^{3}
வ்யாஸமுனிமட கு^{3}ரு பூஜெகெ^{3} கரெதொ^{3}ய்து^{3}
தஶப்ரமதி பாஷ்ய பட^{2}னார்ச்சனெய தோரிஸிதெ^{3} || 3

கோ^{3} எனலு கருடவாஹன பீடெ^{3} பரிஹரிஸுவ
பா^{1} எனலு பரம புருஷ பாலிபனு
ல எனலு லக்ஷ்மீஶ நிகி^{2}லேஷ்டகளனீவ
அனவரத கோபாலதாஸரிகெ ஶரணு || 4

ஆனந்தமுனிஹ்ருஸ்த^2 வனஜஸம்ப^{4}வ பித ப்ர
ஸன்ன ஸ்ரீனிவாஸ ஜக^{3}ன்னாத நின்ன
நின்னவர பாத^3 ஸம்ஸ்மரிஸுவ ஸுஜனரனு
அனவரத பாலிஸுவ ஸந்தே^{3}ஹவில்ல || 5

ஸ்ரீவ்யாஸராஜ மடாதீசரான ஸ்ரீவித்யா ப்ரஸன்ன தீர்த்தர் செய்யும் ஸம்ஸ்தான பூஜையை, ஸ்ரீகோபாலதாஸர் அழைத்துக் கொண்டு போய் காட்டிய விஷயத்தை இந்த க்ருதியில் கூறியிருக்கிறார்.

ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸரின் படைப்புகள்:

1. ப்ரஸன்ன நிர்ணய ராமாயண - 300 நுடிகள்
2. ஸ்ரீராகவேந்த்ர விலாஸ - 3 அத்தியாயங்களில் 326 நுடிகள்
3. ஸ்ரீப்ரஸன்ன ஸத்யபோதார்யர் - 4 அத்தியாயங்களில் 81 நுடிகள்
4. ஸ்ரீவெங்கடேஷ ஸஹஸ்ர நாமத்திற்கு பாஷ்யம்
5. கீதாஸார ஸங்க்ரஹ - 100 நுடிகள்
6. ஸுந்தரகாண்ட
7. நவக்ரஹ ஸ்தோத்ரம்
8. ஸ்ரீராகவேந்த்ர அணு விலாஸ சரித்ரெ - 19 நுடிகள்
9. ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ கல்யாண (ஸ்ரீவெங்கடேஷ கல்யாண) - 25 நுடிகள்
10. ஸ்ரீஜகன்னாத தாஸரின் சரிதெ - 9 அத்யாயங்கள் 244 நுடிகள்
11. ஸ்ரீகோபாலதாஸ விஜயம் - 124 நுடிகள்
12. ஸ்ரீவிஜயதாஸ சரிதெ - 5 அத்யாயங்கள் 120 நுடிகள்
13. ஸ்ரீப்ரஹ்ம ஸூத்ராம்ருதஸார
14. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரரூப பாஷ்ய
15. ஸ்ரீராகவேந்த்ர விஜய
16. ஸ்ரீ நரஹரிதீர்த்த விஜய
17. ஸ்ரீ ஜயதீர்த்த விஜய
18. ஸ்ரீவரதேந்த்ர விஜய
19. ஸ்ரீதீரேந்த்ர தீர்த்த சரித்ரெ
20. ஸ்ரீஸுதீந்த்ர தீர்த்த சரித்ரெ
21. அணு ப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ கல்யாண
22. ஸ்ரீராஜராஜேஷ்வரி ஸ்தோத்ர - 27 நுடிகள்
23. ஸௌபாக்ய ஸப்த த்ரிம்ஷதி (ஸ்ரீப்ரஹ்ம வாயு ருஜுகளின் ஸ்தோத்ரம்) - 37 நுடிகள்
24. ஸ்ரீ ஸ்ரீபாதராஜ சரித்ரெ
25. ஸ்ரீருக்மிணீஷ விஜய

மேற்கண்ட தீர்க்க க்ருதிகளுடன், ஸகல தேவதா தாரதம்ய ஸ்தோத்ரங்கள், மாத்ய யதிகளின் ஸ்தோத்ரங்கள் ஆகியவற்றை கொண்ட சுமார் 5,000 க்ருதிகளை இயற்றிய மஹாத்மா் ஸ்ரீதாஸர்.

ஸிஷ்யர்கள்:

1. ஸ்ரீப்ரஸன்ன ஹயவதன (பஷுபதிஹாள ஸ்ரீ நாராயண ராவ்)
2. ஸ்ரீப்ரஸன்ன ஜயராமசந்த்ர (ஸ்ரீ ராகவேந்த்ர ராவ்)
3. ஸ்ரீஸ்ரீஷ ப்ரஸன்ன பூவராஹ (ஸ்ரீ ஸ்ரீதரமூர்த்தி ஆசார்யர்)
4. ஸ்ரீப்ரஸன்ன கோபிவல்லப கிருஷ்ண (ஸ்ரீ ஸ்ரீதரமூர்த்தி ஆசார்யரின் மனைவி)
5. ஸ்ரீப்ரஸன்ன கோபிவல்லப கோபாலவிட்டல (ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸரின் மனைவி. இவர் ஸம்ஸ்க்ருதத்தில் பி.ஹெச்.டி செய்துள்ளார்).
6. ஸ்ரீப்ரஸன்ன லக்ஷ்மி நரஸிம்ஹ (ஸ்ரீ நாகராஜாசார்யர்)
7. ஸ்ரீப்ரஸன்ன ரகுவீர (ஸ்ரீ கோபாலகிருஷ்ண)

நிர்யாண:

ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர் 1995ம் ஆண்டு ஆஷாட பௌர்ணமியன்று வைகுண்டத்திற்கு சென்றார்.

த^{3}யமாடி^{3} ஸலஹய்ய கு^{3}ருவே
ப^{4}யவ பரிஹரிஸி உத்த^{4}ரிஸை கு^{3}ருவே || ப

பூ^{4}தளதி^{3} நரரந்தெ அவதரிஸி
மாதரிஶ்வ மத்^{4}வ சாஸ்த்ர க்ரந்தக^{3}ள
யதிவரேண்யர சரித்ரெக^{3}ள ரசிஸித^{3}
மதிஹீனராதெ^{3}ம்மனு க்ருபெயிம் ஸலஹிரை || 1

ஞானிவரேண்யரு தாவு ஸிரி ப்ரஸன்ன
ஸ்ரீனிவாஸனர்ச்சிஸித தீ^{4}மந்தரு
மனோவாக்காயதி^{3} மாடி^{3}த^{3}ந்த
அனேகானேக கார்யவ ஹரிக^{3}ர்ப்பிஸித || 2

ஸ்ரீஶப்ரஸன்னபூ^{4}வராஹன்ன துதிஸித^{3}
வாஸுதே^{3}வ வாதஸுதன நிஜதா^{3}ஸ
விஶேஷ மஹிமெக^{3}ள புவியல்லி தோரி
ஶிஷ்யாதி^{3}க^{3}ள ப்ரீதியிந்த^{3} அனுக்^{3}ரஹிஸித^{3} || 3

***

ஸ்ரீபிரஸன்ன ஸ்ரீனிவாஸ தாஸர் இயற்றிய
ப்ரஸன்ன ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ர பாஷ்ய
கிருதியின் தமிழ் அர்த்த விளக்கங்கள்

அறிமுக ஸந்தி (முன்னுரை)

கல்யாணதம ரூப அனக4 ஸுகு3ணார்ணவனெ
மாலக்ஷ்மிபதி பி3ரம்ம விஶ்வாக்2ய விஷ்ணு வஷட்கார
ஶீல ஜீவோத்தம வர வாயு பி3ரம்மதா4மன ஹ்ருத்
கீலாலஜாந்தஸ்ய பரமாத்ம கேஶவ நமஸ்தே ||ப

அனந்த கல்யாண ரூபங்களைக் கொண்டவன்; தோஷங்கள் அற்றவன்; நற்குணங்களைக் கொண்டவன்; லட்சுமிபதி; உலகத்தை காப்பவன்; உலகின் அனைத்து செயல்களையும் செய்பவன்; வாயு பிரம்மர்களின் இதயத்தில் அந்தர்கதனாக இருப்பவன்; பரமாத்மனான கேசவனே, உன்னை வணங்குகிறேன்.

ஶாஸ்த்ரேஷு பா4ரதம் ஸாரம் தத்ர நாம ஸஹஸ்ரகம்
ஸ்ரீஶ விஷ்ணோ நின்னானந்தரூப நாமக3ள தி3வ்ய
ஈ ஸஹஸ்ரநாம வர்ணக3ள் ப்ரதி3பாதி3ஸுதிவெ
ப்3ருஹதிஸஹஸ்ர போ4த்4யானந்த ரூபனே நமஸ்தே ||1

சாஸ்திரங்களின் ஸாரமான பாரதம் - அதில் உள்ளதான ஆயிரம் பெயர்கள்; இவை - ஸ்ரீஷனான விஷ்ணுவே, உன்னுடைய அனந்தானந்த திவ்யமான இத்தகைய நாமங்களை, இந்த சஹஸ்ரநாமம் (இதில் உள்ள எழுத்துக்கள்) பிரதிபலிக்கின்றன. ப்ருஹதி சஹஸ்ரத்தினால் போற்றப்படுபவனான ஸ்ரீஹரியே, உன்னை வணங்குகிறேன்.

அனுஷ்டுப் சந்தஸ்ஸு ஶ்லோக ரூபத3லி ஸங்கலித
விஷ்ணுவின ஸஹஸ்ரநாமக3ளு பா4ரததி3
ஆம்னாயவு ப்3ருஹதி சந்தஸ்ஸு ரிக்கல்லி ஸஹஸ்ர
ஈ நாமக3ள அர்த்த2ரூப ப்ருத2க் ப்ருத2க் விவ்ருத ||2

அனுஷ்டுப் சந்தஸ் கொண்ட ஸ்லோகத்தினால் உள்ள விஷ்ணுவின் சஹஸ்ரநாமங்கள், பாரதத்தில் சொல்லி புகழப்பட்டுள்ளன; இவற்றை, ப்ருஹதி சந்தஸ் கொண்ட பத்யங்களில், இந்த சஹஸ்ர நாமங்களை அர்த்தத்தினை சொல்வதான தனித்தனியான பத்யங்களில் நான் விளக்குகிறேன்.

ஸ்ரீ மஹாபா4ரததி3 அனுஷாஸன பர்வத3லி
பீ4ஷ்ம யுதி4ஷ்டி2ரகெ3 போ4தி3ஸித்3து3 ஈ நாமக3ளு
ஆமய ப4ய ப3ந்த4னாஷகவு ஷுப4ப்ரத3வு
ரமேஷ விஷ்ணுவ தி3வ்யோரு ப3ல ஸஹஸ்ரநாம ||3

இத்தகைய மகாபாரதத்தில், அனுஷாஸன பர்வத்தில், யுதிஷ்டிரனுக்கு பீஷ்மாசார்யர் போதித்த நாமங்கள் இவை. அனைத்து வித பயங்களையும், சம்சார பந்தனங்களையும் அழிக்க வல்லவை இது. நலன்களைக் கொடுக்க வல்லவை. ரமேஷனான ஸ்ரீவிஷ்ணுவின் திவ்யமான, சிறப்பு வாய்ந்த பெயர்கள் இந்த ஸஹஸ்ர நாமங்கள்.

மஹாவ்ரத இந்த்3ரக்ருத் யக்ஞுதி3 விஶ்வாமித்ர ரிஷி
மஹிதா3ஸ ஸ்ரீஹரிகெ3 ப்ரியதமவாகி3ருவ
ப்3ருஹதீ ஸஹஸ்ரக3ள படி2ஸித3 புன: புன:
ஸ்ரீஹரிய தோஷிஸித3 அனுக்3ரஹ ஹொந்தி3த3னு ||4

இந்திரன் செய்த மிகப்பெரிய யாக சமயத்தில், விஷ்வாமித்ர ரிஷியானவர், அங்கு வந்த மஹிதாஸ ஸ்ரீஹரியை, அவருக்கு மிகவும் பிடித்ததான ப்ருஹதி ஸஹஸ்ரங்களை திரும்பத் திரும்ப சொல்லி, அவரை வணங்கினார். ஸ்ரீஹரியின் அருளைப் பெற்றார்.

விஶ்வாமித்ர ப்^{3}ருஹதி ஸஹஸ்ர ருக்குக^{3}ளல்லதெ^{3}
விஶ்வவிஷ்ணு வஷட்காராதி^{3} ஸஹஸ்ர நாமக^{3}ள்கு^{3}
ஸ்ரீஸத்யஸந்தா^{3}தி^{3} வைஷ்ணவோத்தமரு ஸூரிவர்யரு
விஶத^{3}தி^{3} ப்ரதியொந்து^{3} ஶப்^{3}தா^{3}ர்த்த^{2}வ பேளிஹரு ||5

இத்தகைய விஷ்வாமித்ர ரிஷிகள் கூறிய ப்ருஹதி ஸஹஸ்ர ரிக்குகள் அல்லாமல்; விஷ்வம் விஷ்ணுர் வஷட்கார என்று துவங்கும் ஸஹஸ்ர நாமங்களுக்கும்; ஸ்ரீஸத்ய ஸந்த தீர்த்தர் முதலான வைஷ்ணவோத்தமர்கள் / மிகச்சிறந்த தேவதைகள், அந்த ஒவ்வொரு சொல்லின் அர்த்தங்களையும், மிகவும் அற்புதமாக விளக்கினர்.

அனக^{4}கு^{3}ணவாரிநிதி^{4} ஸ்ரீஶ ஸ்ரீவேத^{3}வ்யாஸ
ஈ நாம அனுஷ்டுப் ஶ்லோகரூப மந்த்ரக்கெ ரிஷியு
கிருஷ்ண பரமாத்மனேவெ ப்ரதிபாத்^{3}ய தே^{3}வதெயு
அனிலஸ்த^2 நாராயண வாஸுதே^{3}வ மஹிதா^{3}ஸ ||6

அபாரமான அற்புத குணங்களின் கடலான, ஸ்ரீலட்சுமியின் தலைவனான, ஸ்ரீவேதவ்யாஸரே இந்த ஸஹஸ்ரநாமங்களுக்கு ரிஷி. இது அனுஷ்டுப் சந்தஸ்ஸில் இருக்கிறது. இதில் புகழப்படும் தேவதை யார் என்றால் - அது ஸ்ரீகிருஷ்ண பரமாத்மனே. அவனே முக்யபிராணந்தர்கதனான நாராயணன். வாஸுதேவன். மஹிதாஸன்.

முந்து^{3} ப^{3}ருவ பத்^{3}யக^{3}ளொள் ப்^{3}ருஹதி ஸஹஸ்ரத^3
அதி ஸங்க்ஷேப அபி^{4}ப்ராய ப்ரத^{2}மத: ஆமேலெ
ததி^{3}தர அர்த்த^{2}க^{3}ளு ஸஹஸ்ரநாம ஶப்த^{3}க்கு
அதி ஸங்க்ஷேப வ்யக்த ஹரிநுடிது^{3} நுடிஸித்^{3}து^{3} ||7

அடுத்து வருவதான பத்யங்களில், ப்ருஹதி ஸஹஸ்ரத்தின் மிகச் சுருக்கமான விஷயங்கள் முதலில் சொல்லப்பட்டுள்ளன. அதனை தொடர்ந்து வேறு சில அர்த்தங்களும் கூறப்பட்டுள்ளன. இவ்வாறாக ஸ்ரீஹரி சொல்லி, சொல்ல வைத்ததைப் போல, ஸஹஸ்ர நாமங்களுக்கும் அர்த்தங்கள் சொல்லப்பட்டுள்ளன.

பத்^{3}யபங்க்திக^{3}ளோள் மொத^{3}லு நமோ ஶப்^{3}த^3 பர்யந்த
அதி ஸங்க்ஷேபதி^{3} ஸூசிதவு ப்^{3}ருஹதி தாத்பர்ய
தத^{3}னந்தர ப^{3}ருவுவு நாம ஶ^{3}ப்^{3}தா^{3}ர்த்த^{2}க^{3}ளு
அதி ஸங்க்ஷேபிததி^{3} த^{3}ர்ஷிதவு ஸ்தோத்ர ரூபத^{3}லி ||8

இந்த பத்யங்களில் ‘நமோ’ என்ற சொல் வரும்வரை, அந்த நாமத்தின் பொருள் சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளது. அதன் பிறகு வருவது, அந்த நாமத்தின் வேறு அர்த்தங்கள். இவை அனைத்தும் ஸ்தோத்திர ரூபத்தில், சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளன.

ப்ரணவாஷ்ட த்வாத^{3}ஶ அக்ஷரி கா^{3}யத்ரி பும்ஸூக்த
ஆம்னாய ருகா^{3}தி^{3}க^{3}ள இதிஹாஸக^{3}ளெரட^3
க^{4}ன பஞ்சராத்ர ஸாது^{4} புராணக^{3}ள பா^{4}க^{3}வத
கிருஷ்ணப்ரிய இவுக^{3}ள ஸார ஈ ஸஹஸ்ர நாம ||9

இந்த விஷ்ணு ஸஹஸ்ரநாமங்கள் ஆனவை இவை அனைத்தின் ஸாரமே ஆகும். அதாவது : பிரணவ மந்திரம், நாராயண அஷ்டாக்ஷர மந்திரம், வாஸுதேவ த்வாதாக்ஷர மந்திரம், காயத்ரி மந்திரம், புருஷ ஸூக்தம், ரிகாதி வேதங்கள், இதிகாசங்கள், சிறந்ததான பஞ்சராத்ரங்கள், புராணங்கள், பாகவத ஆகிய அனைத்தின் ஸாரமே ஆகும்.

நூரு ப்ரகாரார்த்த2 வித்3வத்ஸபெ4யல்லி தோரிஸித3
வரவாயு அவதார ஆனந்த3 தீர்த்த2கெ3 நமோ
ஸூரிவர்ய ஸத்யஸந்த4 தீர்த்தா2ர்ய வ்யாக்2யாத்ரோ நமோ
நாரதா3னுக்3ரஹி ஸ்ரீனிவாஸாசார்யரிகெ3 வந்தே3 ||10

வரவாயுதேவரின் அவதாரரான, இந்த விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்கு (ஒவ்வொரு நாமத்திற்கும்) 100 அர்த்தங்கள் உள்ளன என்பதை சொல்லிக் காட்டிய ஸ்ரீஆனந்த தீர்த்தருக்கு நமோ. இதற்கு வ்யாக்யானம் எழுதிய, யதிகளில் சிறந்தவரான ஸ்ரீஸத்ய ஸந்த தீர்த்தருக்கு நமோ. நாரதரின் அருளைப் பெற்றவரான ஸ்ரீனிவாஸாசார்யருக்கும் என்னுடைய நமஸ்காரங்கள்.

அஷ்ட த்3வாதஷ3 ஷடக்ஷர கா3யத்ரி மந்த்ரக3ள
கிருஷ்ணமந்த்ர ஸஹ உப க்ரமோபஸம்ஹார ஜப
விஷ்ணு ஸஹஸ்ரநாம மத்து ஈ நுடிக3ள் பட2ண
கிருஷ்ணப்ரீத்யர்ப்பிபுது3 மனோவாக்காய ஶுசியிந்த3 ||11

சுத்தமான மனம், வாக்கு, தேகத்துடன், உபகிரம, உபஸம்ஹார (துவக்க, இறுதியான ஸ்லோகங்களுடன்) மந்திரங்களுடன் - நாராயண அஷ்டாக்ஷர மந்திரம், வாஸுதேவ த்வாதச அக்ஷர மந்திரம், காயத்ரி மந்திரம், கிருஷ்ண மந்திரம் ஆகியவற்றை ஜெபம் செய்து, விஷ்ணு ஸஹஸ்ர நாம மற்றும் இந்த நுடிகளை படித்தால், ஸ்ரீகிருஷ்ணன் இவற்றால் மகிழ்கிறான்.

ஸ்த்ரீயரு கிருஷ்ண மந்த்ரோபதி3ஷ்டர் படி2ஸெ அர்ஹரு
காயித்ர்யாத்3யுபதே3ஶ அனதி4காரி ஸர்வரிகு3
தி3வ்ய பா4ஷ்யரூப ஈ நுடி3க3ள ஶ்ரவண மாத்ர
காய வாங்மன ஶுசி ப4க்தி ஶ்ரத்3தா4 இரலேபே3கு ||12

பெண்கள், கிருஷ்ண மந்திரத்தை உபதேசம் பெற்றவர்கள், காயத்ரி உபதேசத்திற்கு அதிகாரம் இல்லாதவர்கள் என அனைவரும், அழகான, பாஷ்ய ரூபமான இந்த நுடிகளை கேட்டால் மட்டுமே, அக புற என அனைத்தும் சுத்தம் ஆகிறது. இதற்கு ஸ்ரத்தா பக்தியும் அவசியம் இருக்க வேண்டும்.

நம: பரஸ்ம்யை புருஷாய பூ4யஸே ஸது3த்3ப4வ
ஸ்தா2ன நிரோத4 லீலயா க்3ருஹீத ஶக்தி த்ருதீயா
ய தே3ஹினாம் அந்தத்4ருவாயானு பலப்4ய வர்த்மனே
ஸவிஷ ஆத்மாத்மவதாம் அதீ4ஶ்வர ஸ்த்ரயீமய: ||13

நம:பரஸ்மை புருஷாய ... வர்த்மனே - இது பாகவத ஸ்லோகம் (2-4-12). ஸ்ருஷ்டி ஸ்திதி லயத்திற்கு காரணனான, அனைவருக்குள்ளும், அனைத்திலும் வ்யாப்தனான, ஸர்வோத்தமனான ஸ்ரீஹரிக்கு என்னுடைய வணக்கங்கள்.

த4ர்மமயஸ்தபோமய: க3தவ்யரீகைரஜம் ஶம்
கராதி3பி4ர் விதர்க்ய லிங்கோ3 ப4க3வான் ப்ரஸீத3தாம்
நமஸ்த்ஸ்மை ப4க3வதே வாஸுதே3வாய வேத4ஸே
ஸ்ரீபா4க3வத த்விதீய ஸ்கந்த4 சதுர்த்த2 அத்4யாய ||14

ஸ ஏஷ... ப்ரஸீததாம் - இது பாகவத ஸ்லோகம் (2-4-19). ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன். அனைத்து வேதங்களாலும் புகழப்படுபவன் அவனே. பிரம்மா, ருத்ர முதலான அனைத்து தேவதைகளாலும் வணங்கப்படுபவன். அத்தகைய ஸ்ரீஹரி திருப்தி அடையட்டும்.

கு3ருக3 மத்4வக3 ஸரஸிஜாஸனபித ஸ்ரீஶ
விரஜ கல்யாணதம ஸுகு3ணாப்3தி4 ஸர்வகர்த்த
'ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ' ஸஹஸ்ர நாமனே நமோ
நீ ரசிஸி நுடிஸித்3து3 அர்ப்பிதவு ப்ரீதனாகோ3 ||ப

பல்லவி

குருவந்தர்கதனான, மத்வாந்தர்கதனான, பிரம்மனின் தந்தையான, லட்சுமிதேவியின் பதியான, அனைத்து கல்யாண குணங்களின் கடலான, அனைத்தையும் செய்பவனான, 'ஶ்ரீபிரஸன்ன ஶ்ரீனிவாஸனே' , ஆயிரம் நாமங்களைக் கொண்டவனே - உனக்கு நமோ. நீயே என்னுள் இருந்து இயற்றச் செய்தது இது. இதனால் நீ திருப்தி அடைவாயாக.

||முன்னுரையான முதலாம் ஸந்தி முடிந்தது ||
||ஶ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து||

***

இரண்டாம் ஸந்தி

கல்யாணதம ரூப அனக[4] ஸுகு[3]ணார்ணவனெ
மாலக்ஷ்மிபதி பி[3]ரம்ம விஶ்வாக்[2]ய விஷ்ணு வஷட்கார
ஶீல ஜீவோத்தம வர வாயு பி[3]ரம்மதா[4]மன ஹ்ருத்
கீலாலஜாந்தஸ்ய பரமாத்ம கேஶவ நமஸ்தே ||ப

பல்லவி:

அனந்த கல்யாண ரூபங்களைக் கொண்டவன்; தோஷங்கள் அற்றவன்; நற்குணங்களைக் கொண்டவன்; லட்சுமிபதி; உலகத்தை காப்பவன்; உலகின் அனைத்து செயல்களையும் செய்பவன்; வாயு பிரம்மர்களின் இதயத்தில் அந்தர்கதனாக இருப்பவன்; பரமாத்மனான கேசவனே, உன்னை வணங்குகிறேன்.

1. ஶ்ரீவிஷ்வாய நம:
வர வாய்வந்தர்யாமி 'விஶ்வ' நமோ நமோ நினகெ[3]
சராசர ஸர்வ ஔஹொர வ்யாப்த நீ ஸர்வேஶ |
ப்ரக்ருதி நியாமக ஜக[3]ஜ்ஜன்மாதி[3]க[3]ள கர்த்த
கரு[3]ட[3]வாஹன பரமபூர்ண ஸ்வதந்த்ர ஶ்ரீஶ ||

முக்யபிராணாந்தர்கதனான விஷ்வனே உனக்கு நமஸ்காரங்கள். சராசரங்கள் என அனைவருக்குள்ளும் / அனைத்திற்குள்ளும் நீ வ்யாப்தன். நீயே அனைவருக்கும் ஈசன். ப்ரக்ருதியை கட்டுப்படுத்துபவன் நீயே. ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய காரணன் நீயே. கருட வாகனனே. அனைத்திலும் பூரணனானவன். ஸ்வதந்த்ரன். ஶ்ரீலட்சுமிதேவியின் தலைவன்.

2. ஶ்ரீவிஷ்ணவே நம:
விஶேஷதி[3] சேஷ்டெக[3]ள மாடி[3]ஸுவவனு நீனு
அஸம உருப[3]லாதி[3]ரூப 'விஷ்ணு' நமஸ்துப்[4]யம்
தே[3]ஶகால வஸ்து ஸர்வ வ்யாபிஸிதெ[3] த்ரிவிக்ரம
ஸுஶுபரூபதி[3] பாத[3]க்ரமண மாடி[3]தி[3] விஷ்ணோ ||

அனைத்து செயல்களையும் செய்விப்பவன் நீயே. ஒப்பீடு இல்லாதவன். பலம் முதலான அனைத்தின் ரூபம் நீ. விஷ்ணுவே உன்னை வணங்குகிறேன். தேஷ, கால, வஸ்துகள் என அனைத்திலும் நீ வியாபித்திருக்கிறாய். மங்களகரமான, த்ரிவிக்ரம ரூபத்தில், மூன்றடி நிலம் அளந்தாய். விஷ்ணுவே.

3. ஶ்ரீ வஷட்காராய நம:
ஜீவ ஸ்வரூப கு[3]ண த்[3]யுசித் ஸுகோ[2]ஜஸ் ஸஹ ப[3]ல
தி[3]வ்யாபரோக்ஷ ப்ரதா[3]த 'வஷட்கார' நமோ எம்பெ[3] |
ஸர்வஸ்யவஶி மஹா ஐஷ்வர்ய ஞான யஷஸ் வீர்ய
ஶ்ரீவைராக்[3]ய கு[3]ணக்ரியா பூர்ணனாகி[3] உள்ளவனே ||

ஜீவர்களின் ஸ்வரூப, குணங்களுக்கு ஏற்ப, அவர்களுக்கு, சுகம், சக்தி, வலிமை, அபரோக்ஷம் என கொடுக்கும் ‘வஷட்கார’ உனக்கு நமோ என்கிறேன். அனைத்து இடங்களிலும் வ்யாப்தன். மிகப்பெரிய செல்வம், ஞானம், புகழ், வீரம், வைராக்கியம், குணம், செயல்கள் என அனைத்தும் பூரணமாக உள்ளவனே.

4. ஸ்ரீபூதபவ்ய பவத்ப்ரபவே நம:
பூ4தப4வ்ய ப4வத்கால ஜனக்கெ ஒள்ளெ ஐஸ்வர்ய
ப்ரத3 ‘பூ4தப4வ்ய ப4வத்ப்ரப4வே’ நமோ நமஸ்தே |
ஹிந்தி3ன முந்தி3ன ஈகி3ன ஈ மூரு காலத3ல்லு
எந்தி3கு3 பிரபு4 நீனு மங்க3ளப்ரத3னு ஸ்ரீபதியு ||

இறந்த, நிகழ், எதிர்கால ஜீவர்களுக்கு நற்செல்வங்களை கொடுப்பவனான ‘பூதபவ்ய பவத்பிரபுவே’ உனக்கு நமஸ்காரங்கள். இந்த அனைத்து காலங்களிலும் நீயே அனைவரின் பிரபு (தலைவன்). நீயே மங்களப்ரதன். ஸ்ரீபதி.

5. ஸ்ரீபூதக்ருதே நம:
ருத்3ரன்ன ஸ்ருஷ்டிஸிதி3 ‘பூ4தக்ருத்’ நமோ நமோ எம்பெ3
க்ஷுத்3ர பூ4தாதி3க3ளுபத்ரவ களெது3 பொரெவி
மோத3மய நீ ஸ்வதந்த்ர ஸர்வப்ராணிக3ள ஸ்ரஷ்டா
‘யதோவா இமானி’ இந்தா ஶ்ருதி ஹொக3ளுதிவெயு ||

ருத்ரரை படைத்தவனான ‘பூதக்ருத்’ உனக்கு நமஸ்காரங்கள். கெட்ட பூதங்களின் தொந்தரவுகளை களைந்து காக்கிறாய். ஆனந்தமயன். ஸ்வதந்த்ரன். அனைத்து ப்ராணிகளையும் காப்பவன். உன்னை ஸ்ருதியானது ‘யதோவா இமானி’ (ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயத்திற்கு நீயே காரணம் என்று தைத்திரிய உபநிஷத் வசனம்) என்று புகழ்கிறது.

6. ஸ்ரீபூதப்ருதே நம:
ப்ராணி எல்லர போஷக ‘பூ4தப்4ருத்’ நமோ நினகெ3
நின்னாதீ4னவு ஸர்வ சராசர ஜக3த்து ஸ்வாமி
நீனேவெ ஸர்வ ஆதா4ரனாகி3ருதிஹி ஸ்ரீபதே
ஆம்னாய ஸ்ம்ருதி ஸித்3த4வு பி3ப4ர்த்யவ்யய ஈஶ்வர

ப்ராணிகள் அனைவரின் போஷகனான (காப்பவன்) ‘பூதப்ருத்’ உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து சராசர ஜகத்தும் உன் அதீனத்திலேயே இருக்கிறது. ஸ்வாமி, நீயே, அனைத்திற்கும் ஆதாரனாக இருக்கிறாய். ஸ்ரீபதி. ஸ்ருதிகள் உன்னையே புகழ்கின்றன. அனைத்தையும் தரித்திருப்பவன். ஈஸ்வரன்.

7. ஸ்ரீபாவாய நம:
ஆனந்த3 நின்ன ப்4ருத்யரிகீ3வி ‘பா4வ’ நமோ எம்பெ3
ஞான ரக்ஷண காந்திதா3த ஸர்வக3னாகி3ருவி
இன ஸோம தாரெ மொத3லாஹவரொளு ப்ரவேஶிஸி
நீனு அவர்க3ள பா4ஸகனாகி3ஹியோ ஸ்வதந்த்ர ||

உன் பக்தர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறாய். ‘பாவ’ னே உனக்கு நமஸ்காரங்கள். ஞானத்தைக் கொடுப்பவனே. ஒளியை (புகழை) கொடுப்பவனே. அனைத்து இடங்களிலும் வ்யாப்தனானவன். சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் என இத்தகையவர்களில் நுழைந்து, நீயே அவர்களுக்கு ஒளி கொடுப்பவனாக இருக்கிறாய். ஸ்வதந்த்ரனே.

8. ஸ்ரீபூதாத்மனே நம:
ஜக3ன்னாத2 ஸர்வ ஜக3த்வாஸ ‘பூ4தாத்ம’ நமஸ்தே
வாகீஶ ஶிவ விப ஶக்ராதி3 ப்ராணி ஸர்வ ஜக3த்
திகெ3 நியாமக ஶாஸகனு ஸ்வாமியு நீனேவெ
அக4தூ3ர கு3ணபூர்ண ஆனந்த3 ப்ரசுர ||

ஜகன்னாதனே. அனைத்து ஜகங்களிலும் வசிப்பவனே. பூதாத்மனே – உனக்கு நமஸ்காரங்கள். பிரம்மா, சிவ, கருட, இந்திர முதலான அனைவருக்கும், மற்றும் அனைத்து உலகிற்கும் நியாமகன். அனைவரையும் ஆள்பவன். ஸ்வாமி நீயே. அனைவரின் கஷ்டங்களையும் போக்குபவன். குணங்கள் நிறைந்தவன். ஆனந்தமயன்.

9. ஸ்ரீ பூதபாவனாய நம:
ஸர்வ ப்ராணிக3ள உத்பாத3கனு 'பூ4தபா4வன'
ஸர்வதா3 நமோ நினகெ3 ப்ராணி மனோ ஸஞ்சரனே
ஸர்வ ப்ராணி மனோவ்ருத்தி மாடி3ஸுவி காரயித
ஸர்வபூ4தக3ள ஸத்தா ப்ரவ்ருத்தாதி3க3ள தா3தா ||

அனைத்து பிராணிகளையும் படைப்பவன். பூதபாவனனே உனக்கு நமஸ்காரங்கள். பிராணிகளின் மனங்களில் சஞ்சரிப்பவனே. அனைவரின் மனதின் செயல்களை செய்விப்பவன் நீயே. அனைவருக்கும் சுக துக்கங்களைக் கொடுப்பவன் நீயே.

10. ஸ்ரீ பூதாத்மனே நம:
நிர்தோ3ஷ ஸுபவித்ர ரூப 'பூதாத்ம' நமோ எம்பெ3
ஶஶ்வத் ஸுபவித்ர மூல அவதார ஸர்வத3லு
ஸதா3 அபஹத பாப்மா நிர்லிப்த நீனு ஸம்போ4க3
'ப்ராப்திசேன்ன வைஷேஷ்யாத்' எந்து நிர்ணய ஸூத்ரத3ல்லி ||

தோஷங்கள் அற்றவனே, பவித்ரமான ரூபத்தைக் கொண்ட 'பூதாத்மா' உனக்கு நமஸ்காரங்கள். மூல ரூபம், அவதார ரூபங்கள் என அனைத்திலும், எவ்வித குறைகளும் இல்லாதவன். நிர்லிப்தனாக இருப்பவன் (எதிலும் சம்பந்தப்படாமல் இருப்பவன்). ஸம்போக ப்ராப்திசேன்ன வைஷேஷ்யாத் – என்று ஸூத்ர பாஷ்யத்தில் இதுவே சொல்லபட்டிருக்கிறது.

11. ஸ்ரீ பரமாத்மனே நம:
ப4க்தருக3ளல்லி ப்ரீத அனுக்3ரஹ மாடு3வவ
ப4க்தேஷ்டப்ரிய விஷய 'பரமாத்மனே' நமஸ்தே
'நத்3யைவா கேஶவாத் பரமம்' ஸ்ரீஶனெ ஸர்வோத்தமனு
கீ3தோக்தியு 'மத்த: பரதர நான்யத் கிஞ்சித3ஸ்தி' ||

பக்தர்களிடம் அன்பாக இருப்பவன். அவர்களுக்கு அருள்பவன். பக்தர்களால் விரும்பப்படும் விஷயம் நீயே – பரமாத்மனே, உனக்கு நமஸ்காரங்கள். கேசவனைவிட உயர்ந்தவன் வேறு யாரும் இல்லை (மகாபாரத வசனம்). கீதை வசனம் -> என்னை விட உயர்ந்தவர் வேறு யாரும் இல்லை (7-7).

12. ஸ்ரீமுக்தானாம் பரமாயை கதயே நம:
முக்தருக3ள பரம ப்ராப்யனாகி3 இருவி நீ
முக்தானாம் பரமாக3தயே நமஸ்தே வ்யாஸ உக்தி
'முக்தோபஸ்ருஷ்ட2 வ்யபதே3ஶாச்ச' ஸூத்ர நிர்ணயவு
மத்து 'பரஞ்யோதி ரூபஸம்ப3த்ய' இத்யாதி3க3ளு

முக்தர்கள் அடையும் பொருளாக நீயே இருக்கிறாய். முக்தர்களுக்கான பரம கதியே, உனக்கு நமஸ்காரங்கள். 'முக்தோபஸ்ருபவ்யபதேஷாத்' மற்றும் 'பரஞ்சோதி ரூபஸம்பத்ய' என்னும் பிரம்ம ஸூத்ர பாஷ்யங்களும் இதையே சொல்கிறது.

13. ஸ்ரீ அவ்யயாய நம:
அஹல்ய அவினாஶ கு3ணரூப 'அவ்யய' நமோ
கல்யாண கு3ணகு3ணார்ணவனு எந்தி3கு3 நீனு
மாலின்ய விகாராதி3 நால்குவித4 நாஶவில்லவு

எல்ல கு3ணரூபக3ளு ஸம்பூர்ணவு ஶாஶ்வதவு

அழகான, அழிவில்லாத, குண ரூபங்களைக் கொண்ட ‘அவ்யய’ னே உனக்கு நமஸ்காரங்கள். கல்யாண குணங்களை, எப்போதும் கொண்டவன் நீ. விகாரம் முதலான நான்கு வித அழிவுகள் (தோற்றம், அழிவு, வளர்ச்சி, குறைவு) இல்லாதவன் நீ. உன்னிடம் இருக்கும் அனைத்து குண ரூபங்களும் முழுமையானவை மற்றும் அவை நிரந்தரமானவை.

14. ஸ்ரீபுருஷாய நம:
ப3ஹுவாத3 ஈப்ஸிதார்த்த2 ஈவி ‘புருஷனே’ நமோ
பஹள ஸாத4ன கெ3ய்ஸி அரிஸமூஹவ கேளி
ஸ்ரீஹரே நீ பூர்ணமோக்ஷாக்ய ப2லகொடு3வவனு
மஹார்ஹபூர்ணைஶ்வர்ய ரூப ஹ்ருஷிகேஶ ஸர்வக்ஞ

அனைத்து விதமான விருப்பங்களையும் (புருஷார்த்தங்களையும்) நிறைவேற்றும், புருஷனே உனக்கு நமஸ்காரங்கள். அதிகமான ஸாதனைகளை புரிந்த உன் பக்தர்களுக்கு நீ மோட்சம் முதலான பலன்களைக் கொடுக்கிறாய். அபரிமிதமான, முழுமையான ஐஸ்வர்யங்களைக் கொண்ட ரூபத்தைக் கொண்டவன். ஹ்ருஷிகேஷன். ஸர்வக்ஞன்.

15. ஸ்ரீ ஸாக்ஷிணே நம:
ஸாக்ஷாத்3த3ர்ஶியு ‘ஸாக்ஷி’ நினகெ3 நமோ எம்பே3னு
ஸர்வாத்4யக்ஷனு ஸர்வதோமுக2னு ஸ்ரீ மஹாவிஷ்ணோ
பூ4தாந்தராத்மா நீனு ப்ராக்ருத கு3ண ரஹிதனு
ஸ்ருதி ஸ்ம்ருதிக3ளு நீ ஸாக்ஷி என்னுதிவெயோ ஸ்ரீஶ

சாட்சாத்தாக தரிசனம் கொடுப்பவன் ‘ஸாக்ஷியே’ உனக்கு நமஸ்காரங்கள். ஸர்வோத்தமன். அனைத்து இடங்களிலும் வ்யாபித்து இருப்பவன். ஸ்ரீமகாவிஷ்ணு. அனைத்து சேதனர்களிலும் ஆத்மனாக உள்ளே இருப்பவன் நீ. ப்ராக்ருத குணங்களான ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் இல்லாதவன். ஸ்ருதி, ஸ்ம்ருதிகள் உன்னை ஸாக்ஷி என்று அழைக்கின்றன. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே.

16. ஸ்ரீ க்ஷேத்ரக்ஞாய நம:
ஜீவ ஶரீரவ திளித3 ‘க்ஷேத்ரக்ஞ’ நமோ நமோ
ஜீவ ஶரீராதி3 ஸர்வக்ஷேத்ர வ்யாப்தியாகி3ருவி
ஸர்வக்ஞ ஸர்வ நியாமகனு நீனேவெ அன்யரல்ல
ஜீவனிகெ3 க்ஷேத்ரக்ஞத்வ அனுபபன்ன அபூர்ண

ஜீவ சரீரங்களில் இருந்து, அவற்றை அறிந்தவனே ‘க்ஷேத்ரக்ஞனே’ உனக்கு நமஸ்காரங்கள். ஜீவ சரீரங்கள் மற்றும் அனைத்து க்ஷேத்திரங்களில் வ்யாப்தனாக இருக்கிறாய். ஸர்வக்ஞன். அனைத்தையும் நடத்துபவன் நீயேதான், வேறு யாரும் அல்ல. ஜீவனுக்கு க்ஷேத்ரக்ஞத்வத்தை அருள்பவன், யோக்யதைக்கேற்ற பலன்களைக் கொடுப்பவன். முழுமையற்ற நிலையைக் கொடுப்பவன்.

17. ஸ்ரீ அக்ஷராய நம:
நாஶரஹிதனு நீனு ‘அக்ஷரனு’ நமோ நமோ
ஶாஶ்வத வைகுண்டாதி3யலி ரமிபி ஸ்வரமண
ஈஶ ஸர்வாதா4ர நின்னதீ4னே அவியோகி3 ரம்மே
ஸ்ரீஶ நின்னலி ஓத ப்ரோதவாகி3ஹுது3 ஸ்ரீதத்வ ।।

அழிவில்லாத நீயே ‘அக்ஷரன்’ உனக்கு நமஸ்காரங்கள். நிரந்தரமாக (நிரந்தரமான) வைகுண்ட முதலான தாமங்களில் நிலைத்திருக்கிறாய். எதற்கும் யாரையும் எதிர்பார்க்காத ஸ்வரமணன். அனைவருக்கும் தலைவன். அனைவருக்கும் ஆதாரமானவன். உன் நியத பத்னியான லட்சுமிதேவி,

உன் அதீனமாகவே இருக்கிறாள். லட்சுமிதேவியின் தலைவன். ஶ்ரீதத்வமானது, உன்னில் (குறுக்கும் நெடுக்குமாக) எங்கும் நிறைந்திருக்கிறது.

18. ஶ்ரீ யோகா3ய நம:
யக்ஞாதி3 கர்மயோஜனெமாள்ப 'யோக3' நமோ எம்பெ3
ஸுத்4யான மொத3லாத3 கர்மக3ள ப்ரேரிஸுவி நீ
காயமனஸிஜ தோ3ஷ மத்து ஸம்ஸார நிவ்ருத்தி
நித்ய ஸுக2 மோக்ஷக்கெ உபாயனாகி3ருவி நீனே

யக்ஞம் முதலான கர்மங்களுக்கான செயல்களை செய்விப்பவனான 'யோக' னே உனக்கு நமஸ்காரங்கள். தியானம் முதலான கர்மங்களை செய்யும்படி செய்க்கிறாய். உடல், மனம் ஆகியவற்றிற்கு வரும் நோய்களின் பரிகாரகன் நீயே. சம்சார சாகரத்தை தாண்டச் செய்கிறாய். நித்ய ஸுகமான மோட்சத்தை அருள்பவன் நீயே.

19. ஶ்ரீ யோக3விதா3ம் நேத்ரே நம:
வேத3 ஸர்வவு யோக3 வ்ருத்தியலி மாத4வன்னேவெ
ப்ரதிபாதி3ஸுதிவெ எந்து3 அரித ப4க்தரிகெ3
மோத3வீவியோ யோக3விதா3ம் நேதா நமோ நினகெ3
ப4க்தரிகெ3 மோக்ஷாக்2ய ஸுப2ல ப்ராபகனு நீனே

வேதங்கள் அனைத்தும் மாதவனையே புகழ்கின்றன என்று அறிந்த பக்தர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் 'யோகவிதாம் நேதனே' உனக்கு நமஸ்காரங்கள். பக்தர்களுக்கு மோட்சமே முதலான பலன்களைக் கொடுப்பவன் நீயே.

20. ஶ்ரீ ப்ரதா4ன புருஷேஷ்வராய நம:
ப்ரக்ருதிகு3 புருஷனிகு3 ஈஶனாகி3ருவந்தா2
'ப்ரதா4ன புருஷேஶ்வர' நமோ நமோ எம்பெ3 ஶ்ரீஶ
ப3ந்த4 ஹேது ப்ரக்ருதிகு3 ப3த்3த4மான ஜீவனிகு3
ஸத்தாதிதா3தனு ப்ரவர்த்தக ஸ்வாமி நமோ ஆத்மா

ப்ரக்ருதிக்கும், புருஷர்களுக்கும் தலைவனாக இருப்பவனே 'ப்ரதான புருஷே ஶ்வரனே' உனக்கு நமஸ்காரங்கள். ஶ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. சம்சார பந்தனங்கள் இல்லாத ப்ரக்ருதிக்கும், சம்சார பந்தனங்கள் உள்ள ஜீவனுக்கும் ஸத்தா (இருப்பு) முதலான அனைத்தையும் கொடுத்து, அவர்களை வழிநடத்துபவன். ஸ்வாமியே உனக்கு நமஸ்காரங்கள். ஆத்மனே.

21. ஶ்ரீ நாரஸிம்ஹ வபுஷே நம:
'நாரஸிம்ஹவபு' நமோ த்4யாயேன் ந்ருஸிம்ஹ முரு வ்ரு
த்த ரவி த்ரினேத்ரம் ஜானுப்ரஸக்த கரயுக3 ம
தாபராப்4யாம் சக்ரம்த4ரஞ்ச த3த4தம் ப்ரியயா ஸ
மேதம் திக்3மாம்ஶு கோட்யதி4க தேஜஸ் ஸமக்3ர்ய ஶக்திம்

'நாரஸிம்ஹவபு' வே உனக்கு நமஸ்காரங்கள். சூரியனைப் போல சிவந்த 3 கண்கள், அகன்ற தோள்கள்; அதற்கு அருகில் இரு நீளமாக கைகள்; அதில் சக்ராதி ஆயுதங்கள்; லட்சுமிதேவியுடன் அமர்ந்திருக்கும்; மிக அதிகமான தேஜஸ்ஸினைக் கொண்டவனான நரசிம்ம ஸ்வாமியை நாம் தியானம் செய்வோம்.

22. ஶ்ரீ ஶ்ரீமதே நம:
ஸம்பத்துவந்தனே ஶ்ரீமான் நமோ நமோ நமோ எம்பே3
ஶோபனைஶ்வர்ய ஸுந்த3ர அமித உஜ்வலரூப
'ஶ்ரீபதே' ப்4ருகு3ராம வாமன வேத3வ்யாஸ ஹரி

அபரிமித ஸுகக்ஞான ப^{3}லாதி கு^{3}ணபூர்ண

செல்வந்தனே. ஸ்ரீமந்தனே. உனக்கு நமஸ்காரங்கள். ஒளிர்வதான செல்வங்களைக் கொண்டவனே. அழகானவனே. எல்லைகள் அற்றவனே. ஒளிர்பவனே. ஸ்ரீபதியே. ப்ருகுராமனே. வாமனனே. வேதவ்யாஸனே. ஹரியே. அபாரமான ஸுக, ஞான, வலிமை முதலான குணங்களை முழுமையாகக் கொண்டவனே.

23. ஸ்ரீ கேஶவாய நம:
பி^{3}ரம்மனிகு^{3} லக்ஷ்மிகு^{3} கீர்த்தி கொடு^{3}வ ஸ்வாமி நீனு
அஹர்னிஷி ஸ்மர்தவ்ய ‘கேஶவ’ நமஸ்தே நமஸ்தே
மஹாது^{3}ஷ்ட கேஶியன்ன கொந்தி^{3}யோ ஜனார்த்த^{4}னனே
பி^{3}ரம்ம ஈஶான நியாமக மஹார்ஹ ப^{3}லஶாலி

பிரம்மனுக்கும், லட்சுமிதேவிக்கும் புகழினைக் கொடுக்கும் ஸ்வாமி நீயே. எப்போதும் நினைக்கத் தக்க (நினைக்க வேண்டியவனே) கேஶவனே. உனக்கு நமஸ்காரங்கள். அசுரனான கேஶியை கொன்றவனே. ஜனார்த்தனனே. பிரம்ம, ஈஷான ஆகியோரின் நியாமகனே (அவர்களை வழி நடத்துபவனே). பலசாலியே.

24. ஸ்ரீ புருஷோத்தமாய நம:
ப^{3}ஹுப்ரத^{3}னெ உத்க்ருஷ்ட ‘புருஷோத்தமனே’ நமோ
பி^{3}ரம்ம ஈஶானாதி^{3}க^{3}ளிகு^{3} முக்த அமுக்தரிகு
மஹாலட்சுமிகு^{3} உத்தமனு பூ^{4}தி^{1}த^3 உதா^{3}ரனு
மஹைஸ்வர்ய பூர்ண கல்யாணதம தூ^{3}ப ஸர்வேஶ

அனைத்தையும் கொடுப்பவனே. சிறந்தவனே. புருஷோத்தமனே உனக்கு நமஸ்காரங்கள். பிரம்ம ஈஷான ஆகியோருக்கும், முக்த அமுக்த ஜீவர்களுக்கும், ஸ்ரீலட்சுமிதேவிக்கும் என அனைவரை விடவும் உத்தமனே. கருணை கொண்டவனே. மிகச்சிறந்த செல்வங்களை கொண்டவனே. மங்கள கல்யாண ஸ்வரூபனே. அனைவருக்கும் தலைவனே.

25. ஸ்ரீ ஸர்வாய நம:
ஸர்வப்ராணிக^{3}ள ஸ்வாமி ‘ஸர்வனே’ நமோ நினகே^{3}
ஸர்வஸ்ருஷ்டாபாதா அத்தா நியாமகனாகி^{3}ருவி
ஸர்வனெந்தெ^{3}னிஸுவியோ ஸர்வத^{3}லி வ்யாப்த நீனு
ஸர்வஶப்த^{3}க^{3}ளிந்த^3 முக்^{2}ய வ்ருத்தியலி வாச்யனு

அனைத்து பிராணிகளின் தலைவனே. ஸர்வனே. உனக்கு நமஸ்காரங்கள். அனைவரின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்கு நீயே காரணம். ஸர்வ என்று அழைக்கப்படுகிறாய். அனைத்திலும் வ்யாப்தனாக இருக்கிறாய். ஸர்வ ஷப்த வாச்யன் (அனைத்து எழுத்துக்களாலும் நீயே அழைக்கப்படுகிறாய்).

26. ஸ்ரீ ஶர்வாய நம:
ஜக^{3}த்தின ஸுக^2 க்ரீடா^{3} நடெ^{3}ஸுவ ‘ஶர்வ’ நமோ
ஸுக^2 ஸ்வரூப நீ ப்ரவ்ருத்தி மாள்பெ காணிஸத^{3}லெ
ப^{4}க்தாரி ஸுரத^{3}விட் அக^{4}சாரிது^{3}ஷ்ட ப^{3}லக்ரூர
அத^{4}மரன்னு ஸம்ஹார மாடு^{3}வியோ ஶர்வ ஸ்வாமி

உலகின் சுக செயல்களை செய்விக்கும் ‘ஶர்வனே’ உனக்கு நமஸ்காரங்கள். நீ சுக ஸ்வரூபமாக இருக்கிறாய். அனைத்தையும் நடத்துகிறாய். காட்டிக் கொள்ளாமல், பக்தர்களின் கஷ்டங்களை பரிகரிக்கிறாய். அதமர்களை சம்ஹாரம் செய்கிறாய். ஸ்வாமியே.

27. ஶ்ரீ ஶிவாய நம:

அதிஶயானந்தா3னுப4வி 'ஶிவனே' நமோ எம்பே3
ஜக3த்விலக்ஷண பூர்ணஸுக மங்க3ல ஸ்வரூப
ப4க்தரிகெ3 மங்க3லத3 முக்தரிகெ3 நித்ய ஸுக2
வர்த்திஸுவி ஶிவரூபி ஶிவத ஶ்ரீபூ4ரமண

அதிசயமான (அபாரமான) ஆனந்தத்தை அனுபவிப்பவனே - ஶிவனே - உனக்கு நமஸ்காரங்கள். உலகிலிருந்து வேறுபட்டவனே. முழுமையான சுகத்தை கொண்டவனே. மங்கல ஸ்வரூபனே. பக்தர்களுக்கு மங்கல சுகத்தையும்; முக்தர்களுக்கு நித்ய சுகத்தையும் கொடுப்பவனே. ஶிவ ரூபியே. ஶ்ரீ-பூ- ஆகியோரின் தலைவனே.

28. ஶ்ரீ ஸ்தா2ணவே நம:

ஸ்தா2யி ஸர்வத்ர நீ விகாரவில்லதெ3 இருதியோ
மத்து அணுரூபனு 'ஸ்தா2ணு' நமோ எம்பெ3 நினகெ3
ஸ்தி2ரத்வதி3ந்த3லி நீனு 'ஸ்தா2ணு' எந்தெ3னிஸுவியோ
ஸர்வத்ர திஷ்ட ப3லாதி3க3ளல்லி ந்யூனதெ இல்ல

நிரந்தரமானவனே. அனைத்து இடங்களிலும் நீ எவ்வித மாற்றங்களும் இல்லாமல் நிறைந்திருக்கிறாய். அணு ரூபனாக இருக்கிறாய். ஸ்தாணுவே உனக்கு நமஸ்காரங்கள். நிரந்தரமாக இருப்பதால், நீ ஸ்தாணு என்று அழைக்கப்படுகிறாய். அனைத்து இடங்களிலும் நீ வ்யாபித்திருக்கிறாய். வலிமை முதலான உன் குணங்களில் எவ்வித குறைகளும் இல்லை.

29. ஶ்ரீபூ4தாத3யே நம:

ப்ராணிக3ள காரணனே 'பூ4தாதி3' நமோ நினகெ3
நீனேவெ ஸர்வப்ராணிக3ள ஜன்மாதி3 காரணனு
நீனே ஸர்வ ப்ராணிக3ள ப4க்ஷகனு எந்தி3ஹுது
நிர்ணய ஸூத்ர அத்தா சராசர க்3ரஹணாத் எந்து3

ப்ராணிகளுக்கு காரணமானவனே. பூதாதி-யே உனக்கு நமஸ்காரங்கள். அனைத்து ப்ராணிகளின் ஜென்மாதி அனைத்திற்கும் காரணன் நீயே. அத்தா சராசர க்ரஹணாத் - என்று, பிரம்ம ஸூத்ர பாஷ்யமானது - நீயே அனைத்து பிராணிகளையும் உண்பவன் என்று சொல்கிறது.

30. ஶ்ரீ நித4யே நம:

ப்ராணிக3ள ஸ்தா2னரூப 'நிதி4' நீனு நமோ எம்பெ3
'நிதீ4யதே ஹ்ருதி3 ஸஜ்ஜனைரிதி நிதி4:' ஹீகெ3ந்து3
இஹுது3 ஶ்ரீ ஸத்யஸந்தா4ர்யர வ்யாக்2யானவு
ப்ராணிக3ள நின்னல்லி இட்டுகொம்பி3 ப4க்த நிதி4யே

ப்ராணிகளின் இருப்பிடம் 'நிதி' நீயே உனக்கு நமஸ்காரங்கள். ஶ்ரீ ஸத்ய ஸந்தரின் வ்யாக்யானத்தில் - 'நிதீயதே ஹ்ருதி ஸஜ்ஜனைரிதி நிதி:' என்று இருக்கிறது. பிராணிகளை உன்னிடம் வைத்துக் கொள்கிறாய். பக்தர்களின் நிதியே.

31. ஶ்ரீ அவ்யயாய நம:

நாஶவில்லத3 நீனு 'அவ்யய' நமோ நமோ எம்பெ3
நீனு ஸவித்ரு மண்ட3ல மத்4யவர்த்தி நாராயண
ஶஶ்வதே3க ப்ரகார நின்ன ப3லாதி3 கு3ணக3ளு
அக்ஷேண அவிகார நித்யவு பூர்ண ஸர்வோத்க்ருஷ்ட

அழிவில்லாத நீ 'அவ்யய' என்று அழைக்கப்படுகிறாய். உனக்கு நமஸ்காரங்கள். 'ஸவித்ரு மண்டல மத்யவர்த்தி நாராயண' நீயே. உன்னுடைய பல முதலான குணங்கள் என்றும் குறைவதில்லை, மாற்றம் கொள்வதில்லை, நித்யமானவை. முழுமையானவை மற்றும் மிகச் சிறந்தவை.

32. ஸ்ரீ ஸம்ப4வாய நம:

இச்சோத்பத்திகா3ஶ்ரயனே 'ஸம்ப4வ' நமோ நினகெ3
மச்ச கச்சப வராஹ ந்ருஸிம்ஹாதி3 ரூபக3ளு
ஸ்வேச்சா அவதாரக3ள ஆவிர்ப4விஸி ஆகா3க3
ப்ரோச்ச ஸுக2 தேஜஸ் ப3ல ஸ்வரூப நமஸ்தே ஹரே

விருப்பங்களை உருவாக்க காரணமாக இருப்பவனே. ஸம்பவனே உனக்கு நமஸ்காரங்கள். மச்ச, கூர்ம, வராக, நரசிம்மாதி ரூபங்கள் நீயே. தன் இஷ்டத்திற்கேற்ப அவதாரங்கள் மூலமாக தோன்றிகிறாய். ஸுகமயமானவன். தேஜஸ் கொண்டவன். பல ஸ்வரூபன். ஸ்ரீஹரியே உனக்கு நமஸ்காரங்கள்.

33. ஸ்ரீ பா4வனாய நம:

ஞான நியமன மாள்ப 'பா4வன' நமோ விஷய
ஸன்னிகர்ஷதி3 மனவ பரிணமிஸி நீ அல்லி
ஞான புட்டிஸி ஒத3கு3வி அபி4ப்ராயக3ளன்னு
நினகெ3 நமோ ஸங்கர்ஷண வாஸுதே3வ ப்ரத்3யும்ன

ஞானத்தைக் கொடுப்பவனே 'பாவன' னே உனக்கு நமஸ்காரங்கள். விஷயத்தை சுருக்கி, மனதை உன் வசம் இழுத்து, அதில் ஞானத்தை உருவாக்கி, அங்கு அபிப்பிராயங்களை கொடுப்பாய். உனக்கு நமஸ்காரங்கள். ஸங்கர்ஷணனே. வாஸுதேவனே. பிரத்யும்னனே.

34. ஸ்ரீ ப4த்ரே நம:

ப4க்த க்ருத ஸ்துதிக3ள ஸ்வீகரிஸி இட்டுகொம்ப3
ப4ர்த்தா நமோ த3யதி3 நீ ஒப்பி இட்டுகோ ஈ ஸ்தோத்ர
ப4க்தவத்ஸல ஞான ஸுக2 புஷ்டி ப்ரதா3தனு ஸ்ரீ
ஸீதாரமண ஸ்ரீகிருஷ்ண வேத3வ்யாஸ ஸ்ரீநிவாஸ

பக்தர்கள் செய்யும் ஸ்துதிகளை ஏற்று வைத்துக் கொள்ளும் 'பர்த்தா' உனக்கு நமஸ்காரங்கள். இந்த ஸ்தோத்திரங்களை நீ கருணையுடன் ஒப்புக் கொண்டு ஏற்றுக் கொள். பக்தவத்ஸலனே. ஞான, சுகங்களைக் கொடுப்பவனே. ஸ்ரீஸீதா ரமணனே. ஸ்ரீகிருஷ்ணனே. வேதவ்யாஸனே. ஸ்ரீனிவாஸனே.

35. ஸ்ரீப்ரப4வாய நம:

ஸர்வ விஷயதி3 ப்ரக்ருஷ்ட ஞானவந்த 'ப்ரப4வ'
ஸர்வதா3 நமோ வ்ருஷப4 ஸனத் குமார ஆத்ரேய
ஸவித்ரு ஸூர்யலி ஜ்வலிப ஹம்ஸ ஹயமுக2
கவிகே3ய ஸ்ரீவ்யாஸ ரக்ஷமாம் தே3ஹிமே ஸுபு3த்3தி4ம்

அனைத்து விஷயங்களாலும் சிறந்த ஞானம் கொண்டவனே. 'ப்ரபவ' உனக்கு நமஸ்காரங்கள். வ்ருஷபனே. ஸனத் குமாரனே. ஆத்ரேயனே. ஸவித்ரு என்னும் சூரியனில் ஜொலிப்பவனே. ஹம்ஸனே. ஹயக்ரீவனே. கவிஞர்களால் போற்றப்படுபவனே. ஸ்ரீவ்யாஸனே. என்னை காப்பாயாக. எனக்கு நல்புத்தியைக் கொடுப்பாயாக.

36. ஸ்ரீ ப்ரப4வே நம:

பூ4மி ஸ்வர்க்கா3தி3க3ளல்லி நீ ப்ரக்ருஷ்ட 'ப்ரபு4' ஸ்வாமி
நமோ பாரதந்த்ராதி3 தோ3ஷதூ3ர ஸ்ரீ பூ4ரமண
பூ4மாதி3கு3ண மஹைஶ்வர்ய ஸம்பூர்ண நீ ஸர்வதா3
ஸமாதி4க ரஹிதோத்தம அவதாரத3ல்லியு

பூமி, ஸ்வர்க்காதிகளில் நீ சிறந்தவன். 'பிரபு' . ஸ்வாமியே உனக்கு நமஸ்காரங்கள். பாரதந்த்ர முதலான தோஷங்கள் எதுவும் அற்றவன். ஸ்ரீ-பூ-ரமணனே. அனைத்து நற்குணங்களையும் கொண்டவன். மிகச் சிறந்த செல்வங்களைக் கொண்டவன். ஸம்பூர்ணனே. நீ எப்போதும் சம-அதிக இல்லாத ஸர்வோத்தமன். அவதாரங்களிலும்கூட இதுவே.

37. ஸ்ரீ ஈஶ்வராய நம:

ஸர்வ நியாமகனு 'ஈஶ்வர' நமோ நமோ எம்பெ3
பார்வதீஶாதி3க3ளிகு3 உத்தமனு அஜபிதா
தே3வனீ மஹைஶ்வர்ய அனிர்விண்ண ஆனந்த3 ரூப
தே3வி லக்ஷ்மீரமண தோ3ஷ தூ3ர புருஷோத்தம

அனைத்தையும் வழி நடத்துபவன். 'ஈஶ்வர' உனக்கு நமஸ்காரங்கள். பார்வதியின் தலைவனான ஈசன் முதலான அனைவரை விட உத்தமன் நீயே. பிரம்மனின் தந்தையே. தேவனே. மிகச் சிறந்த செல்வங்களைக் கொண்டவனே. சோர்வு அற்றவன். ஆனந்த ரூபன். தேவியான லட்சுமியின் தலைவன். தோஷங்கள் அற்றவன். புருஷோத்தமனே.

38. ஸ்ரீ ஸ்வயம்பு4வே நம:

ஸ்வதந்த்ரனாகி3யே ஆவிர்ப4விஸுவி நீ ஸ்வயம்பு4'
ஆத3ரதி3 நமோ எம்பெ3 தீ3பாத் தீ3பாந்தர வோலு
மோத3 சின்மய அவதாரக3ள ப்ரகடிஸுவி
மத்ஸ்யாதி3 அவதாரக3ளு கர்ம நிமித்தவல்ல

ஸ்வதந்த்ரமாகவே (யாருடைய தயவும் / உதவியும் இன்றி) தோன்றுவாய். நீ ஸ்வயம்பு. உனக்கு மரியாதையுடனான நமஸ்காரங்கள். ஒரு தீபத்திலிருந்து இன்னொரு தீபத்தை ஏற்றுவதைப் போல, உன்னுடைய சின்மய அவதாரங்களை நீ வெளிப்படுத்துகிறாய். அத்தகைய அவதாரங்கள், ஏதோவொரு கர்மங்களை செய்வதற்காக வந்தவை அல்ல (உன் இஷ்டப்படியே வந்தவை).

39. ஸ்ரீ ஶம்பு4வே நம:

ஆனந்த3 உத்பாத3க ஸ்தா2னவாகி3ருவந்த2 'ஶம்பு4'
நினகெ3 நமோ ஸுக2நிதே4 ஆனந்தோ3த்3ரேகதி3ந்த3
ஆனந்த3 லீலாவதார ஜக3த்ஸ்ருஷ்ட்யாதி3க3ளன்னு
நீனே மாடி3 ஸாத4னெகெ3ய்ஸி ஸுக2 ஒத3கி3ஸுவி

மகிழ்ச்சியை உருவாக்கும் இடமாக இருக்கும் 'ஶம்பு' வே உனக்கு நமஸ்காரங்கள். ஸுக நிதியே. மிக்க மகிழ்ச்சியுடன், உன் லீலைகளால், உலகின் ஸ்ருஷ்ட்யாதி அனைத்தையும் நீயே செய்து, அனைவர் மூலமாக ஸாதனைகளை செய்ய வைத்து, சுகங்களை கொடுக்கச் செய்கிறாய்.

40. ஸ்ரீ ஆதி3த்யாய நம:

உதா3ர விஸ்தார மொத3லு மரியாதெ3 உள்ளவ
'ஆதி3த்ய' நமோ ப4க்தி ஸுபூஜெக3ள கொள்ளோ ஸ்ரீஶ
ஆதி3த்யாந்தஸ்த2னாகி3ருவத3ரிம் ஆதி3த்ய நீனு
அதி3திஸுத வாமன உபேந்த்3ர நமோ நமஸ்தே

கருணை கொண்டவனே. (அனைவரிடமிருந்தும்) முதல் மரியாதையைக் கொண்டவன். ஆதித்யனே உனக்கு நமஸ்காரங்கள். (என்னிடமிருந்து) பக்தி, பூஜைகளை பெற்றுக் கொள்வாயாக. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. ஆதித்யனில் இருப்பதால் நீ அதித்யா. அதிதி ஸுதனே. வாமனனே. உபேந்திரனே. உனக்கு நமஸ்காரங்கள்.

41. ஸ்ரீ புஷ்கராக்ஷாய நம:
நினக3ன்ய புஷ்டிகரர்யாரிஹரோ அவரன்ன
நீ நிராஸமாடி3 புஷ்டிகரரின்யாரு இல்லதெ3
நீனாகி3யே இருவி 'புஷ்கராக்ஷனே' நமோ எம்பெ3
வனஜாக்ஷ அஸம உதா3ர போஷண ஸமர்த்த2

உனக்கு ஆதாரமாக யார் இருக்கிறார்கள் என்று நினைக்கிறாரோ, அவர்களை வென்று, உனக்கு ஆதாரம் என்று யாரும் இல்லாமல் நீயாகவே இருப்பாய். புஷ்கராக்ஷனே. உனக்கு நமஸ்காரங்கள். தாமரைக் கண்ணனே. சமம் இல்லாதவனே. கருணாளுவே. அனைவரையும் காப்பவனே.

42. ஸ்ரீ மஹாஸ்வனாய நம:
ஞானவாகி3ஹ மஹத4னப்ரத3 'மஹாஸ்வனனெ'
நினகெ3 நமோ நமோ பரமபூஜ்ய நீ ஸர்வக்3ஞ
ஆம்னாய ருகாதி3 ஸதா3க3மக3ளிந்த3 ஞேய நீ
விக்ஞான அபரோக்ஷ வீவி ப4க்தர்கெ3 ஹயஶீர்ஷ

ஞானம் என்னும் மிகப்பெரிய செல்வத்தைக் கொடுப்பவனே. மஹாஸ்வனனே. உனக்கு நமஸ்காரங்கள். பரமபூஜ்யனே. ஸர்வக்ஞனே. ரிகாதி அனைத்து ஆகமங்களாலும் நீ போற்றப்படுகிறாய். பக்தர்களுக்கு விசேஷமான ஞானத்தை / அபரோக்ஷத்தைக் கொடுப்பவனே. குதிரை முகம் கொண்டவனே.

43. ஸ்ரீ அனாதி3 நித4னாய நம:
ஜனன ம்ருதி இல்லத3 'அனாதி3நித4ன' நமோ
நீ நித்ய அப்ராக்ருத விக்3ரஹானந்த3 ஞானருபமய
ஜனி ஜராத்3யகி2ள தோ3ஷதூ3ரனு அவிகார
நீனு காலாதீத அக்ஷரனு ஸ்வதந்த்ரனு ஆத்ம

பிறப்பு, இறப்பு இல்லாதவனே 'அனாதிநிதனனே' உனக்கு நமஸ்காரங்கள். நீ நித்யமான, அப்ராக்ருதமான, ஆனந்தமயமான ரூபம் கொண்டவன். உலகத்தின் எவ்வித தோஷங்களும் அற்றவன். விகாரம் இல்லாதவன். காலத்தை மீறியவன். அக்ஷரன். ஸ்வதந்த்ரன். ஆத்மனே.

44. ஸ்ரீ தா4த்ரே நம:
ஸ்வீகரிஸி த4ரிஸி நீ ரக்ஷிஸிபோஷிப 'தா3த'
பா3கி3 ஶிர நமோ எம்பெ3 ஸ்ரீஶ வேதே3ஶ ஸர்வேஶ
ஏகாத்மா ஸ்ரீகரனே பிரம்மன்னத4ரிஸி நாபி4ய
ஸுகமலதி3 ஜன்மவித்து பொரெவி நாராயண

(ஜீவர்களை) ஏற்றுக் கொண்டு, தரித்துக் கொண்டு, காப்பவனான 'தாத' நீயே. உனக்கு நமஸ்காரங்கள். ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. வேதங்களின் தலைவனே. ஸர்வேஷனே. ஏகாத்மனே. ஸ்ரீகரனே. நாபியில், தாமரையில், பிரம்மனை தரித்து, அவரை படைத்து காக்கிறாய். நாராயணனே.

45. ஸ்ரீ விதா4த்ரே நம:
உத்தம ஸ்தோத்ரக3ள ஸ்வீகரிஸி த4ரிஸுவி நீ
'விதா4தா' நமோ சந்தோக3ம்ய க3ருட3வாஹனனே
ஶ்ருதி ஸ்ம்ருதிக3ளிந்த3 ஸம்ஸ்துத்ய ஆஶ்ரயனு நீனு
முக்தருக3ளிகு3 ஆஶ்ரயனு ஸுக2தா3த நீனே

உத்தமமான ஸ்தோத்திரங்களை நீ ஏற்றுக் கொள்கிறாய். விதாதா-வே, உனக்கு நமஸ்காரங்கள். சாம வேதத்தினால் புகழப்படுபவனே. கருட வாகனனே. ஸ்ருதி ஸ்ம்ருதிகளால் போற்றப்படுபவனே. அனைவருக்கும் கதி அளிப்பவன் நீயே. முக்தர்களுக்கும் கதி நீயே. சுகத்தைக் கொடுப்பவன்.

46. ஸ்ரீ தா4துருத்தமாய நம:
சதுர்முக2 பி3ரம்மனிகெ3 நியாமக உத்தமனு
‘தா3துருத்தமனு’ நமோ ஸர்வேஶ்வர நீனு ப்ரக்ருதி
தா4துக3ள வ்யவஹார ப்ரவர்த்திஸுவ ஸ்வாமியு
வைதி3க ஶப்தக3ளிந்த3 முக்2ய வ்ருத்தியலி வாச்ய

சதுர்முக பிரம்மனுக்கு நியாமகன். உத்தமன். தாருதுத்தம-னே உனக்கு நமஸ்காரங்கள். நீயே ஸர்வேஸ்வரன். ப்ரக்ருதியின் அனைத்து செயல்களை செய்விப்பவன். ஸ்வாமியே. வேத சொற்களால் முக்கியமாக புகழப்படுபவன் / போற்றப்படுபவன் நீயே.

47. ஸ்ரீ அப்ரமேயாய நம:
பரிமாண இல்லத3வனு ‘அப்ரமேயனே’ நமோ
யாரிந்த3லு ஸாகல்ய நின்ன அரியலு அஶக்ய
ஶிரி மத்து பி3ரம்மேஶாதி3க3ளெஷ்டே யத்னிஸித3ரு
ஹரிகு3ண மஹிம கொனெ அரியெ அஶக்தரு

எல்லைகள் அற்றவன். அப்ரமேயனே - உனக்கு நமஸ்காரங்கள். யாராலும், உன்னை முழுமையாக அறிய முடியாது. ஸ்ரீலட்சுமிதேவி, பிரம்ம, ருத்ர ஆகியோர் முயன்றாலும்கூட அது முடியாது. உன்னிடம் இருக்கும் குணங்களின் மகிமைளின் எல்லைகளை யாராலும் அறியமுடியாது.

48. ஸ்ரீ ஹ்ருஷிகேஶாய நம:
இந்தி3ரியக3ளிகெ3 ஸ்வாமி ‘ஹ்ருஷிகேஶ’ நமோ எம்பெ3
இந்தி3ரியாபி4மானிக3ளொளு இத்து நியமிஸுவி
இந்தி3ரெகு3 பி3ரம்மனிகு3 ப4க்தஜன ஸர்விகு3
மந்த3ரோத்3த4ர நீனு யதா2யோக்3ய ஹர்ஷவன்னீவி

இந்திரியங்களின் ஸ்வாமியே ஹ்ருஷிகேஶனே உனக்கு நமஸ்காரங்கள். இந்திரிய அபிமானிகளில் இருந்து கொண்டு, நீ அவர்களை வழி நடத்துகிறாய். ஸ்ரீலட்சுமிக்கும், பிரம்மனுக்கும் மற்றும் உன் பக்தர்கள் அனைவருக்கும் அவரவர்களின் யோக்யதைக்கேற்ப அவரவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறாய். மந்தரோத்தரனே.

49. ஸ்ரீ பத்மனாபா4ய நம:
பத்மஸம்ப4வ வேத3 கா3யனதி3 ஸ்துதிஸுவந்த2
வேத3வாக்யக3ளல்லி இருவி ப்ரதிபாத்3யனாகி3
‘பத்மனாப4னே’ நமோ விஶ்வ ஆஶ்ரய முக்2யஸ்வாமி
ஜ்யோதிர்மய ஞானத3னே த3யதி3 பாலயமாம்

பிரம்மனானவர், வேதங்களால் உன்னை துதிக்கிறார். அத்தகைய ஸ்துதி வாக்கியங்களில் நீ இருக்கிறாய். அந்த வேதங்களில் பிரதிபாத்யன் நீயே. பத்மனாபனே உனக்கு நமஸ்காரங்கள். உலகிற்கே நீயே கதி. முக்கிய ஸ்வாமியே. ஜ்யோதிர்மயனே. ஞானத்தை அளிப்பவனே. என்னை கருணையுடன் அருள்வாயாக.

50. ஸ்ரீ அமரப்ரப4வே நம:
தீ3ர்க்கா4யுஷீயரிகெ3 ஸ்வாமியே ‘அமர ப்ரப4வே’
பாகி3 ஶிர நமோ எம்பெ3 பாஹிமாம் பாஹி த3யதி3
வாகீ3ஶ ஹனுமதா3தி3க3ள ப்ரபு4 சின்மயனே
ஸுக2மயனே ஸுக2ஞான தா3தனே நமோ எம்பெ3

தீர்க்க ஆயுள் கொண்டவர்களுக்கு ஸ்வாமியே. அமர ப்ரபுவே, தலை வணங்கி உன்னை வணங்குகிறேன். என்னை அருள்வாயாக. பிரம்ம, வாயு முதலான அனைவரின் தலைவனே. சின்மயனே. ஸுகமயனே. சுக, ஞான ஆகியவற்றை அருள்பவனே. உன்னை வணங்குகிறேன்.

51. ஸ்ரீ விஶ்வகர்மணே நம:
ஸர்வகர்மக3ளிகெ3 காரணனாகி3 இருவி நீ
‘விஶ்வகர்மனே’ நமோ க3ருட3வாஹன விஶ்வேஶ
ஸர்வ கர்மக3ளு ஸ்வதந்த்ர நின்ன தெ3ஸெயிந்த3லே
ஸர்வதா3 கர்மதோ3ஷாதி3 லேபவில்லத3ந்தர்யாமி

அனைத்து கர்மங்களுக்கும் நீயே காரணன். விஶ்வகர்மனே உனக்கு நமஸ்காரங்கள். கருடவாகனனே. விஶ்வேஷனே. ஸ்வதந்த்ரனான உன்னிடமிருந்தே அனைத்து கர்மங்களும் துவங்குகின்றன. எப்போதும் எவ்வித கர்ம தோஷங்களும் இல்லாதவன் நீயே.

52. ஸ்ரீ மனவே நம:
ஞ்யாத்வா நீ ‘மனு’ நினகெ3 நமோ திளிஸோ எனகெ3
விதத கு3ணரூப க்ரியாதி3 மஹாத்ம்யக3ளனு
காலதே3ஶவ்யாப்தனே ஜீவ பி3ம்பா3ஹ்வயனே ஸ்ரீஶ
ஸதா3க3ம வேத்3ய ஸ்ரீவேத3வ்யாஸ ஸனத்ஸுஜாதா

அனைத்தையும் அறிந்தவன். மனு - உனக்கு நமஸ்காரங்கள். உன்னுடைய குண, ரூப, க்ரியாதிகளின் சிறப்புகளை எனக்கு விளக்குவாயாக. கால, தேசமாக எப்போதும், எல்லா இடங்களிலும் வ்யாப்தனே. ஜீவர்களில் பிம்பனாக இருப்பவனே. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. நல்ல ஆகமங்களால் புகழப்படுபவனே. ஸ்ரீவேதவ்யாஸனே. ஸனத் ஸுஜாதனே.

53. ஸ்ரீத்வஷ்ட்ரே நம:
தீ3ப்திமந்தா ‘த்வஷ்ட்ரா’ நமோ ஸ்ரீமன் நாராயண க்4ருணி
ப4க்த த்ரிவித4ரிகெ3 ஹொரகு3 ஒளகு3 ஸர்வத்ர
நக்ஷத்ர தடிஶ்சந்த்ர அர்க்கனந்த3தி3 ஹொளெயுவ
ஸ்வதேஜ:புஞ்ச ஸர்வகர்த்தா ஸ்பூர்த்தித3னு நீ த்4யேய

ஒளிபொருந்தியவனே. த்வஷ்ட்ரா - உனக்கு நமஸ்காரங்கள். ஸ்ரீமன் நாராயணனே. மூன்று வித பக்தர்களுக்கும், அவர்களின் உள்ளேயும் வெளியேயும் இருப்பவனே. நட்சத்திரம், சூரியன், சந்திரன் ஆகியோரில் இருந்து ஒளிர்பவன் நீயே. அவர்களுக்கு ஒளி கொடுப்பவன் நீயே. அனைத்தையும் செய்விப்பவன். தியானிக்கப்பட வேண்டியவன் நீயே.

54. ஸ்ரீ ஸ்த2விஷ்டாய நம:
அத்யந்த தேஜஸ்வியே ‘ஸ்த2விஷ்டனே’ நமோ நினகெ3
பூ4த பஞ்சக பி3ரம்மாண்ட ஒள ஹொரகெ3 ஸர்வஸ்த2
ஸுதேஜஸ்தம விராண்ணாம புருஷனே நமஸ்தே
மார்த்தாண்ட3 ப3த3ராதி3க3ளிகெ3 தேஜஸ் ப்ரதா3த

அபாரமான தேஜஸ்வியே. ஸ்தவிஷ்டனே உனக்கு நமஸ்காரங்கள். பஞ்ச பூதங்களால் நிரம்பிய இந்த பிரம்மாண்டத்தின் உள்ளே வெளியே அனைத்து இடங்களிலும் வ்யாப்தன் நீயே. அற்புதமான தேஜஸ் கொண்டவன். புருஷனே. உனக்கு நமஸ்காரங்கள். சூரிய, சந்திரர்களுக்கு ஒளி கொடுப்பவன் நீயே.

55. ஸ்ரீ ஸ்த2விராய நம:
ரத2ஸ்த2 நீ ‘ஸ்த2விர’ நமோ ஈ நம்ம தே3ஹ எம்ப3
ரத2த3ல்லி ரதி2க ப்ராணனே ஸ்ரீஹ்ரீ ஸமேதனு
வாததே3வனிந்த3 ஸேவெ கொள்ளுதலி இருவி நீ

ஜக3த்பிதாமஹ தாத நமோ ப்ரபிதாமஹனே

ரதத்தில் வருபவன் நீயே. ஸ்தவிரனே உனக்கு நமஸ்காரங்கள். இந்த என்னுடைய தேகம் என்னும் ரதத்தில் தலைவனாக வீற்றிருப்பவனே. ப்ராணனே. ஸ்ரீலட்சுமிதேவி உடனே இருப்பவனே. வாயுதேவர் மூலமாக சேவை பெற்றுக் கொள்பவனே. உலகின் பிதாமகனான பிரம்மனின் தந்தையே. ப்ரபிதாமகனே. உனக்கு நமஸ்காரங்கள்.

56. ஸ்ரீ த்4ருவாய நம:
க3க3ன மண்ட3லத3லி ஸஞ்சரிப ஸூர்யனன்ன
வேக3க3தியிந்த3 'த்4ருவ' மண்ட3லத3 ப3தி3யல்லி
ஶீக்4ர மேலெ எத்திஸுவ த்4ருவனே நமோ நினகெ3
விகார க்ஷயாதிக3ளில்லத3 ஸ்தை2ர்யப3லரூப

வான் மண்டலத்தில் சஞ்சரிக்கும் சூரியனை, வேகமாக 'த்ருவ' மண்டலத்தின் வழியில் நிறுத்துபவனான 'த்ருவனே' உனக்கு நமஸ்காரங்கள். விகார (உருவ மாற்றங்கள்) இல்லாதவனே. ஞான, பல ரூபனே.

57. ஸ்ரீ அக்3ரஹ்யாய நம:
து3ஷ்டஜனக3ளிந்த3 க்3ரஹண மாடி3க்கொளலிக்கெ
எஷ்டொனு யோக்3யனல்லத3 'அக்3ராஹ்யனே' நமோ எம்பெ3
இஷ்ட ப4க்தரிந்த3 நீனு ஸாகல்ய திளியலாரி
எஷ்டு நின்னிச்செயிம் திளிஸுவியோ அஷ்டு லாப4வு

துஷ்ட மக்களால் புரிந்து கொள்ளப்பட முடியாத தகுதியைக் கொண்ட 'அக்ராஹ்யனே' உனக்கு நமஸ்காரங்கள். இஷ்ட பக்தர்களால் கூட உன்னை முழுமையாக அறிய முடியாது. உன்னுடைய இஷ்டத்தினால் நீ எவ்வளவு காட்டிக் கொள்கிறாயோ, அதுவே அவர்களின் லாபம் ஆகும்.

58. ஸ்ரீ ஶாஶ்வதாய நம:
எந்தெ3ந்து3 எல்லெல்லு பே4த3 பரிணாமாதி3 இல்லதெ3
ஸதா3 பூர்ணனாகி3ருவி 'ஶாஶ்வதனே' நமோ எம்பெ3
ஸ்தா2ன காலாதி3க3ளிந்த3 விகாரவில்ல நினகெ3
எந்தெ3ந்து3 எல்லெல்லு அச்யுதனு ஶாஶ்வதனு நீனு

என்றும், எங்கேயும், பேதங்கள் / மாற்றங்கள் ஆகியவை இல்லாமல் எப்போதும் பூர்ணனாக இருக்கிறாய். 'ஶாஶ்வதனே' உனக்கு நமஸ்காரங்கள். கால, தேசங்களில் எவ்வித மாற்றங்களும் இல்லாதவன் நீ. அச்யுதன். ஶாஶ்வதன் நீயே.

59. ஸ்ரீகிருஷ்ணாய நம:
சேஷ்டகனு நீ ஸர்வதா3 ஸர்வகர்தனாகி3ருவி
கிருஷ்ண நமோ ப3ல ஞானாத்3யமித கு3ண நமஸ்தே
கார்ஷ்ண ஶீலனு ஸர்வ ஜக3த்தின நியாமக
நீ ஷட்கு3ணைஶ்வர்யாதி3 பூர்ணனெந்து3 ஆக3மோக்தவு

செயல்களை செய்விப்பவன் நீ. எப்போதும் அனைத்தையும் செய்பவனாக நீ இருக்கிறாய். கிருஷ்ணனே உனக்கு நமஸ்காரங்கள். பல, ஞானங்களை அபாரமாக கொண்டவனே. கருமை வண்ணம் கொண்டவனே. அனைத்து உலகங்களின் நியாமகனே. நீ ஷட்குண - ஐஸ்வர்யங்களால் பூர்ணன் என்று அனைத்து ஆகமங்களும் சொல்கின்றன.

60. ஸ்ரீ லோஹிதாக்ஷாய நம:
ராஜஸரிகெ3 ஆஸ்ரய 'லோஹிதாக்ஷ' நமோ எம்பெ3
ராஜ ராஜேஸ்வரனே கெங்க3ண்ணு தோரிஸுத நீனு
துர்ஜனரிகெ3 பீ4தி இத்தவர நிக்3ரஹ மாடி3
ஸஜ்ஜனர ரக்ஷிஸுவி பத்3மபத்ர ஆயதாக்ஷ

ராஜஸர்களுக்கு கதியினைக் கொடுப்பவனே 'லோஹிதாக்ஷ' னே உனக்கு நமஸ்காரங்கள். ராஜ ராஜேஸ்வரனே. கெட்டவர்களுக்க்கு உன் சிவந்த கண்களைக் காட்டி, அவர்களை அழித்து, ஸஜ்ஜனர்களை காக்கிராய். தாமரைக் கண்ணனே.

61. ஸ்ரீ ப்ரதர்த்த3னாய நம:
ப4க்தர இஷ்டப்ராபக 'ப்ரதர்த்த3ன' நமோ எம்பெ3
ப4க்தரு இஷ்ட ஸாத4ன சலிஸுவ காலத3ல்லி
ப3ந்த3 உபடள விக்4ன ஶத்ருக3ள நிவாரிஸி
ப4க்தர்கெ3 ப்ரஸாத3வீவி ப்ரக்ருதி ப3ந்த4 கடிது3

பக்தர்களால் விரும்பப்படுபவனே. ப்ரதர்த்தனனே. உனக்கு நமஸ்காரங்கள். பக்தர்கள் விருப்பப்பட்டு ஸாதனைகளை செய்யும்போது, வரும் தடைகளை போக்கி, எதிரிகளை விலக்கி, பக்தர்களுக்கு – சம்சார பந்தனத்தை விலக்கி – பிரஸாதம் அளிப்பவனே.

62. ஸ்ரீ ப்ரபூ4தாய நம:
ப்ரக்ருஷ்டோத்தமனாகி3ருவி 'ப்ரபூ4த' நமோ எம்பெ3
ஶுத்3த4னு பூர்ணனு யாரூனு நினகெ3 ஸமரில்ல
உருகு3ணார்ணவ விஸ்வவ்யாபகனு ஈஶ நீனு
த்3ரௌபதீ3 வரத3 முக்2யகாரண ஸ்வாமி ஸ்வதந்த்ர

ஸர்வோத்தமனாக இருக்கிறாய். 'ப்ரபூத' னே உனக்கு நமஸ்காரங்கள். பரிசுத்தமானவன். பூர்ணன். உனக்கு யாருமே சமம் இல்லை. சிறந்த குணங்களைக் கொண்டவன். உலகம் முழுக்க வ்யாப்தன் ஆனவன். ஈசன் நீயே. திரௌபதிக்கு வரம் (அபயம்) அளித்தவன். அனைத்திற்கும் முக்ய காரணன். ஸ்வாமி. ஸ்வதந்த்ரன் நீயே.

63. ஸ்ரீ த்ரிககுத்3தா4மனே நம:
ஆத்4யாத்மிக ஆதி4 தெ3ய்விக ஆதி4 பௌ4திக தாப
குத்ஸிதவாகி3 மாள்ப 'த்ரிககுத்3தா4மனே' நமஸ்தே
'ஜ்யோதி: த்ரிபாத்3தி3வ: பர ஆதி3வராஹ' ஸுரூப
த்ரிககுத் எரடு3 பு4ஜ கந்த3மூல விக்2யாத

ஆத்யாத்மிக, ஆதி தெய்விக, ஆதி பௌதிக என்பதான மூன்று வித தாபங்களை பரிகரிப்பவனே. 'த்ரிககுத்தாமனே' உனக்கு நமஸ்காரங்கள். ஆதி வராக ஸ்வரூபனே. ஸ்வேதத்வீப, அனந்தாஸன, வைகுண்ட என்னும் மூன்று உலகங்களிலும் இருப்பவனே. இரு தோள்களைக் கொண்டவனே. அனைத்திற்கும் வேர் ஆனவனே.

64. ஸ்ரீ பவித்ராய நம:
பாபவில்லத3வனாகி3 இருவ 'பவித்ரம்' நமோ
பாபாதி3 கர்மவில்லத3வ நீனு சக்ரதா4ரியு
பாப பர்வத பக்ஷ கடி3வ குலிஶனு நீனு
ஸ்ரீ புண்டரீகாக்ஷ யோக்3யப4க்தர பாபனகர்த்தா

பாவங்கள் இல்லாதவனே. 'பவித்ரனே' உனக்கு நமஸ்காரங்கள். பாவங்கள் இல்லாத கர்மங்களைக் கொண்டவன் நீ. சக்ரதாரி. பாவங்கள் என்னும் மலையை உடைக்கும் கோடலி நீயே. தாமரைக் கண்ணன். யோக பக்தர்களின் செயல்களை செய்விப்பவன்.

65. ஸ்ரீ மங்க3ளாய நம:

மங்க3ல ஸ்வரூபவந்த 'மங்க3ளா' நமோ நினகெ3
ப4ங்க3வில்லத3 கல்யாணதம பூர்ணைஶ்வர்ய ரூப
மங்க3லப்ரத3னு மோக்ஷ ஶோப4ன ப4க்தர்கெ3 ஈவி
க3ங்கா3பித அங்கா3ங்யபி4ன்ன ஆனந்த3மய நீனு

மங்கல ஸ்வரூபம் கொண்டவன். 'மங்களா' உனக்கு நமஸ்காரங்கள். குறைகள் அற்ற கல்யாண குணங்களைக் கொண்டவன். பூர்ண ஐஸ்வர்ய ரூபம். மங்களங்களைக் கொடுப்பவனே. உன் பக்தர்களுக்கு மோட்சத்தைக் கொடுப்பவனே. கங்கா பிதனே. அங்காங்கங்களில் ஆனந்தமயனாக இருப்பவனே.

66. ஸ்ரீ பராய நம:

ஸர்வோத்தம நீனு 'பரம்' நமோ நமோ நமோ எம்பெ3
ஸ்ரீவரனே கு3ணபூர்ண பரம்பி3ரம்ம பரமாத்ம
ஸர்வவே3த பும்ஸூக்தாதி3யிம் முக்2ய ப்ரதிபாத்3யனு
ஸர்வேஶ ஸர்வக3னு 'ஸத்யம் ஞானம் அனந்தம் பி3ரம்ம'

ஸர்வோத்தமனே. 'பரம்' உனக்கு நமஸ்காரங்கள். ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. குணங்களால் நிறைந்தவனே. பரபிரம்மனே. பரமாத்மனே. அனைத்து வேதங்களாலும், புருஷ ஸூக்தாதிகளாலும், முக்கியமாக போற்றப்படுபவனே. ஸர்வேஷனே. அனைத்து இடங்களிலும் வ்யாபதனே. 'ஸத்யம் ஞானம் அனந்தம் பிரம்ம' என்று அழைக்கப்படுபவனே.

67. ஸ்ரீ ஈஶானாய நம:

நீ ஸ்வாமி 'ஈஶான' நமோ நினகெ3 ஸ்ரீ பூ4ரமண
ஸர்வஸ்ய வஷி ஸர்வஶைஶான நீனெ ஸ்வதந்த்ர
ஸ்வஸ்த2 ஸ்வயமேவ ராஜஸ்வராட் ஸர்வஸ்வாமி நீனு
ஸ்ரீவனஜஜ ருத்ராதி3க3ளிகு3 நீனேனெ ஸ்வாமி

ஸ்வாமியே. 'ஈஶானனே' உனக்கு நமஸ்காரங்கள். ஸ்ரீ-பூ-ரமணனே. அனைவரையும் ஆள்பவனே. அனைவரின் தலைவனே. நீயே ஸ்வதந்த்ரன். வலிமையானவன். நீயே அனைவருக்கும் அரசன். அனைவரின் ஸ்வாமி. ஸ்ரீலட்சுமிதேவி, பிரம்மன், ருத்ரர் ஆகியோருக்கும் நீயே ஸ்வாமி.

68. ஸ்ரீ ப்ராணதா3ய நம:

கண்ணு மொத3லாத3ந்த2 இந்தி3ரியக3ள கொடு3வவ
'ப்ராணத3னெ' நமோ எம்பெ3 இந்3ரிய அனிமிஷரு
இனாதி3க3ள த்3வாரா என்னிம் ஸாத4னெ நீ மாடி3ஸி
நின்னத3ர்ஶனவித்து பாலிஸுவி கருணி ஸ்ரீஶ

கண் முதலான இந்திரியங்களைக் கொடுப்பவன். ப்ராணதனே. உனக்கு நமஸ்காரங்கள். இனாதி முதலான இந்திரிய அபிமானி தேவதைகளின் மூலம், நீ என்னில் நின்று ஸாதனைகளை செய்வித்து, உன்னுடைய தரிசனத்தை அளித்து காக்கிறாய். கருணாளு. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே.

69. ஸ்ரீ ப்ராணாய நம:

ப்ரக்ருஷ்ட சேஷ்டாவந்த 'ப்ராணனெ' நமோ நமோ எம்பெ3
ஸுப்ரசுர ஞானேச்சக்ரியா ப3லாதி3ரூப நீனு
ஸுராஸுர நரஸர்வ சராசர சேஷ்டகனு

உருஸுக2மய ப்ராண ஸ்ரீஶ லக்ஷ்மி ஸமேதனு

மிகச் சிறந்த செயல்களை செய்பவனே. ப்ராணனே. உனக்கு நமஸ்காரங்கள். அபாரமான ஞான, இச்சை, க்ரியா, பல ஆகிய நற்குணங்களின் ஸ்வரூப ரூபமே நீ. ஸுர, அஸுரர்கள், நரர்கள், சராசர என அனைத்தின் செயல்களை செய்விப்பவன் நீ. ஸுகமயமான ப்ராணனே. ஸ்ரீலட்சுமி சமேதமாக இருப்பவனே.

70. ஸ்ரீ ஜ்யேஷ்டாய நம:
மஹாத்ம்யவந்த ஜ்யேஷ்டனே நமோ நமோ நமோ எம்பெ3
மஹாவிபூ4த்யாதி3 மஹாத்ம்யா ப3ஹள உள்ளவனு
பி3ரம்மதே3வர ஜனக ஸ்வதந்த்ர ஸர்வேஶ ஸ்ரீஶ
மஹார்ஹப்ரஶ ஸத்தம ஸனாதன வ்ருத்3தோ3த்தம

மிகப்பெரிய உற்சாகத்துடன் இருப்பவனே. 'மஹோத்ஸாஹனே' உனக்கு என் நமஸ்காரங்கள். மஹா ஞானம் கொண்டவனே. தன் இஷ்டப்படியே ஸ்ருஷ்டி செய்யும் லட்சணங்களைக் கொண்டவனே. மிகச் சிறந்த ஐஸ்வர்ய ரூபத்தினைக் கொண்டவனே. ஜகத்தின் படைத்தல் முதலான அனைத்து மிகப்பெரிய காரியங்களை செய்பவனே. பிரம்ம, ஈசன் ஆகியோரை வழி நடத்துபவனே.

177. ஶ்ரீ மஹாப3லாய நம:

மஹாப3லவந்தனே 'மஹாப3ல' நமோ நினகெ3
மஹாத்3ரியுக் பூ4மி ஹொத்த ஶேஷன்ன ஹொத்த வாயுன்ன
மஹாகூர்ம நீ ஹொத்திருவி ஜக3த்ஸர்வவன்ன நீ
ப3ஹிரந்தர் வ்யாபிஸிருவ தா4ரகனு நியந்தா

மஹா வலிமையைக் கொண்டவனே. 'மஹாபலனே' உனக்கு என் நமஸ்காரங்கள். இந்த பிரம்மாண்டத்தை தாங்கியுள்ள சேஷனை, அந்த சேஷனை தாங்கியுள்ள வாயுவை, தாங்கியுள்ள கூர்மரூபி நீயே. உலகம் முழுக்க நீ உள்ளே மற்றும் வெளியே என அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருக்கிறாய்.

178. ஶ்ரீ மஹாபு3த்3தி4யே நம:

மஹாபு3த்3தி4வந்தனெ 'மஹாபு3த்3தி4' நமோ நினகெ3
மஹாக்ஞான ஸ்வதந்த்ர ஸதா3 ஸர்வவிஷய ஞாத்ரு
மஹாப்ரளயதி3 வேத3 நின்னொளிட்டு ரக்ஷிஸி நீ
ப்3ரம்மகெ3 போ4தி3ஸுதி ஹயஶீர்ஷ வேத3க்ஞ ஶ்ரீஶ

மஹா அறிஞனே. 'மஹாபுத்தியே' உனக்கு என் நமஸ்காரங்கள். மிகச் சிறந்த ஞானத்தைக் கொண்டவனே. ஸ்வதந்த்ரனே. எப்போதும் அனைத்து விஷயங்களையும் அறிந்தவனே. மகா பிரளய காலங்களில், வேதங்களை உனக்குள் வைத்துக் கொண்டு காத்தாய். அந்த வேதங்களை நீ ஹயக்ரீவ ரூபியாக வந்து, பிரம்மனுக்கு உபதேசம் செய்தாய். ஶ்ரீலட்சுமிதேவியின் தலைவனே.

179. ஶ்ரீ மஹாவீர்யாய நம:

மஹாவீர்ய ஸாமர்த்2யரூப 'மஹாவீர்யனே' நமோ
மஹாப்ரளய முகி3யலு ப்ரக்ருதிய க்ஷோபி4ஸி
மஹானஹங்காராதி3க3ள தத்3தே3வர்க3ள ஸ்ருஜிஸி
பி3ரம்மாண்ட3 நிர்மிஸிதி3 பி3ரம்மகு3ரோ கமலாபதே

மஹாவீர்யனே. மிகச் சிறந்த சாமர்த்தியம் கொண்டவனே. 'மஹாவீர்யனே' உனக்கு என் நமஸ்காரங்கள். மஹா பிரளய காலத்திற்குப் பிறகு, ப்ரக்ருதியை அழித்து, அஹங்கார முதலான தத்வங்களை, அதன் தத்வாபிமானி தேவதைகளை படைத்து, பிரம்மாண்டத்தை நிர்மாணம் செய்தய். பிரம்மனின் குருவே. கமலாவான ஶ்ரீலட்சுமிதேவியின் பதியே.

180. ஶ்ரீ மஹாஶக்தியே நம:

மஹாஶக்தி ஸாமர்த்2யவந்த 'மஹாஶக்தி' நமோ
பி3ரம்ம ஶ்வேத3த்வீபதி3 கண்ட3 த்வச்சக்தி ரூபக3ள
பி3ரம்ம ருத்3ரரோள் தத்தத்ரூபதி3 இத்3து3 க்ருதி மாள்பி
மஹா நின்ன ஞானேச்சக்ரியாதி3 ஶக்திகெ3ணெயில்ல

மஹாசக்தியை, மஹா சாமர்த்தியத்தைக் கொண்டவனே. 'மஹாஶக்தியே' உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்வேதத்வீபத்தில் பிரம்மன் கண்ட உன் ரூபங்களை, அதே பிரம்ம, ருத்ரர்களில் அந்தந்த ரூபங்களில் இருந்து அவரவர்கள் மூலமாக செயல்களை செய்கிறாய். உன்னுடைய மிகச்சிறந்த ஞான, இச்சா, க்ரியாதி சக்திகளுக்கு இணையே இல்லை.

181. ஶ்ரீ மஹாத்3யுதயே நம:

மஹாப்ரஸாத3ரூப 'மஹாத்3யுதி' நமோ நினகெ3
மஹாத்3யுதி நின்னிந்த3லேவெ ஸூர்ய ப்ரகாஶிஸுவ
'தமேவபா4ந்தமனுபா4தி' ஸர்வமிதி ஶ்ருதியு
மஹாவடு வ்யாஸ நாராயண பா4ர்க்க3வ ந்ருஹரே

மஹா பிரஸாதரூபமான 'மஹாத்யுதியே' உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னாலேயே சூரியன் முதலானோரும் ஒளி வீசுகின்றனர். 'தமேவாபாந்தமனுபாதி' என்று ஸ்ருதியும் இதையே சொல்கிறது. வாமனனே. வ்யாஸனே. நாராயணனே. பார்க்கவனே. நரசிம்மனே.

182. ஸ்ரீ அனிர்தே3ஷ்யவபுஷே நம:
பூர்ணவாகி3 திளியதே3 இஹ ஸ்வரூப நீ
'அனிர்தே3ஷ்யவபு' நமோ நினகி3ல்ல உபமான
ஆனந்த3 சின்மாத்ர அப்ராக்ருத வபு ஸ்தூ2லவல்ல
கு3ணத்ரய பௌ4திகவல்ல நின்னய ஶரீர

முழுமையாக அறிய முடியாததான ஸ்வரூபத்தைக் கொண்டவன் நீ. 'அனிர்தேஷ்யவபுவே' உனக்கு என் நமஸ்காரங்கள். உனக்கு ஒப்புமை என யாருமே இல்லை. ஆனந்தமயனே. சின்மயனே. அப்ராக்ருத சரீரம் கொண்டவனே. ஸ்தூல சரீரம் இல்லாதவனே. உன் சரீரம் பௌதிகமானது அல்ல.

183. ஸ்ரீ ஸ்ரீமதே நம:
ஸ்ரீ எந்த3ரெ காந்தியு நீ 'ஸ்ரீமான்' நமோ நினகெ3
ஸ்ரீ ஞான ஜோதிர்மய நம்ம இந்த்3ரிய அதிக்ராந்த
ஸ்ரீ தி3வ்ய நித்ய சாமீகராப4ரண பூ4ஷிதனு
ஸ்ரீயுதனு நீனாது3த3ரிந்த3 ஸ்ரீமான் ஸ்ரீநிதி4யு

ஸ்ரீ என்றால் ஒளி. நீ 'ஸ்ரீமான்' உனக்கு என் நமஸ்காரங்கள். ஞானமயனே. ஜோதிர்மயனே. நம் இந்திரியங்களில் வ்யாபித்திருப்பவனே. அழகானவனே. தங்கமயமான ஆபரணங்களை தரித்தவனே. செல்வந்தனே. ஆகையாலேயே நீ ஸ்ரீமான் எனப்படுகிராய். உன்னிடம் அபாரமான நிதிகள் இருக்கின்றன.

184. ஸ்ரீ அமேயாத்மனே நம:
பரிச்சேத3ரஹித ஸ்வரூப 'அமேயாத்ம' நமோ
பரிமிதி இல்லவு கால தே3ஶ கு3ணாதீதனு
யாரூனு ஸாகல்யேன திளியலு அஶக்யனாத3
ஸ்வரூபனு நீனு அக3ணித மஹாமஹிமனு

எவ்வித குற்றம் குறைகள் அற்ற ஸ்வரூபம் கொண்டவனே. 'அமேயாத்மனே' உனக்கு என் நமஸ்காரங்கள். எல்லைகள் அற்ற கால, தேச, குணங்களைக் கொண்டவனே. யாராலும் உன்னை முழுமையாக அறிவதற்கு சாத்தியம் இல்லாத ஸ்வரூபம் கொண்டவன் நீ. எல்லைகள் அற்ற அபாரமான மகிமைகளைக் கொண்டவனே.

185. ஸ்ரீ மஹாத்3ரித்4ருதே நம:
மஹா ஆத3ரணீய முக்2ய ப்ராணதா4ரக முக்2ய
ப்ராணன்ன ஸம்ரக்ஷிஸுவி நீ 'மஹாத்3ரித்4ருக்' நமோ
ப்3ருஹத்ஶைல மந்த3ரவ பெ3ன்னலல்லி ஹொத்த ஸ்ரீகூர்ம
மஹாகோ3வர்த்த4ன பெட்டிந்தெ3த்திதி3 பா3லகிருஷ்ண

மிகச் சிறந்த மரியாதைகளைப் பெறுபவனே. முக்ய பிராணரை தரித்திருப்பவனே. முக்யபிராணரை காப்பவனே. 'மஹாத்ரித்ருக்' உனக்கு என் நமஸ்காரங்கள். மிகப்பெரிய மந்தர மலையை, தன் முதுகில் தாங்கிய ஸ்ரீகூர்மனே. மிகப்பெரிய கோவர்த்தன மலையை, தன் விரலில் தாங்கிய பாலகிருஷ்ணனே.

186. ஸ்ரீ மஹேஶ்வாஸாய நம:
மஹாஶ்ரேஷ்ட த4னுர்த4ர 'மஹேஶ்வர' நமோ எம்பெ3
மஹன் நாராயண த4னுஷ்பா4ர்க்க3வ ராக4வகி3த்த
மஹேந்த்3ர கொட்டித்3த3 த4னுஸ்கொண்டி3 தபோத4னரிந்த3
மஹக்ஞான இச்சாசக்தியிம் ஸர்வதா3 க்ரியாவான்

மிகச் சிறந்தவனே. தனுர்தரனே. 'மஹேஶ்வரனே' உனக்கு என் நமஸ்காரங்கள். நாராயணனே. தனுஸ் ஏந்திய பார்க்கவனே. ருத்ரதேவர், ஸ்ரீராமனுக்கு கொடுத்த தனுஸ்ஸினை கொண்டவனே. உன்னுடைய இச்சா சக்தியினால், அறிஞர்கள் மூலமாக ஞானத்தை கொடுப்பவனே.

187. ஸ்ரீ மஹீப4ர்த்ரே நம:
க3வாஶ்வாதிக3ள ஸ்வாமி 'மஹீப4ர்த்ரா' நமோ எம்பெ3
கவாஶ்வாதி3க3ள் நின்னிந்த3 ஜன்ய ஆஶ்ரித நியம்ய
'தஸ்மாத3ஶ்வா அஜாயந்த ஏகே சோ ப4யாத3த:' க3
வோஹ ஜக்ஞி ரே தஸ்மாத்' எந்து3 ஸ்ருதி ஸ்ருஷ்டாதா4ரக

பசு, குதிரைகளின் ஸ்வாமியே 'மஹீபர்த்ரே' உனக்கு என் நமஸ்காரங்கள். பசு, குதிரைகள் ஆகியவை உன்னிடமிருந்தே பிறக்கின்றன. அனைத்திற்கும் நீயே கதி. 'தஸ்மாதஶ்வா...' என்று ஸ்ருதி சொல்வதைப் போல, ஸ்ருஷ்டி முதலான அனைத்திற்கும் ஆதாரமானவனே.

188. ஸ்ரீ ஸ்ரீநிவாஸாய நம:
ஸர்வாபீ4ஷ்டாக3ளாஶ்ரய 'ஸ்ரீநிவாஸ' நமோ எம்பெ3
ஸர்வஸம்பத்கரி ஸ்ரீ வக்ஷோனிவாஸ ஸர்வேஶ்வர
ஸ்ரீ வத்ஸத4ரயெந்து3 ஸுப்ரக்யாதனாகி3ருவி
ஸர்வத்ர ஸ்ரீஸஹ இப்ப வ்யாப்த ஔதா3ர்யஸிந்து3

அனைத்து அபீஷ்டங்களுக்கும் கதியானவனே. 'ஸ்ரீநிவாஸனே' உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து செல்வங்களையும் கொண்டவளாள ஸ்ரீலட்சுமிதேவி உன் மார்பில் வசிக்கிறாள். ஸர்வேஸ்வரனே. ஸ்ரீவத்ஸன் என்று நீ புகழ் பெற்றிருக்கிறாய். அனைத்து இடங்களிலும், ஸ்ரீலட்சுமிதேவி உடனேயே இருக்கிறாய். கருணைக் கடலே.

189. ஸ்ரீ ஸதாம்க3தயே நம:
கு3ணக3ள ஆஶ்ரய நீ 'ஸதாம்க3தி' நமோ நமோ
ஆனந்தா3விர்ப4விஸித3 முக்தரிகு3 கதி நீனு
ஞானப4க்தி வைராக்3யயுக் ஸஜ்ஜனக3ள் க3திப்ரத3
அன்ருதவல்ல ஸத்யம் ஜக3த்தெம்ப3 ஞானதா3த

நற்குணங்களின் கடல் நீயே 'ஸதாம்கதியே' உனக்கு என் நமஸ்காரங்கள். ஆனந்த நிலையில் இருக்கும் முக்தர்களுக்கு நீயே கதி. ஞான, பக்தி, வைராக்கியங்களைக் கொண்ட ஸஜ்ஜனர்களுக்கு கதியை அளிக்கிறாய். ஜகத் என்பது ஸத்யமே. பொய் அல்ல என்னும் ஞானத்தை வழங்குபவனே.

190. ஸ்ரீ அனிருத்3தா4ய நம:
நிரோத4மாள்ப ஜனரு இல்லத3வ 'அனிருத்3த4'
ஶரணு நமோ ஸ்வேச்சா ப்ரவ்ருத்தியுள்ளவ ஸ்வதந்த்ர
ஹரிபரான்முக2ராத3 ஶ்ருதி விரோதி4 து3ஷ்டர
ஜரிவ ஶரணரிகெ3 ப்ரியகர அனிருத்3த4

எதிர்க்கும் (வெல்லும்) மக்கள் யாரும் இல்லாதவனே 'அனிருத்தனே' உனக்கு என் நமஸ்காரங்கள். தன் இஷ்டப்படியே செயல்களை செய்யும் வழக்கம் கொண்டவனே. ஸ்வதந்த்ரனே. ஸ்ரீஹரிக்கு எதிரான, ஶ்ருதிக்கு எதிரான துஷ்டர்களை அழிப்பவனே. உன்னை சரணடைந்தவர்களுக்கு ப்ரியமானவனே. அனிருத்தனே.

191. ஸ்ரீ ஶூரானந்தாய நம:
உக்குவ ஸுபூர்ண ஆனந்த3 ப்ரசுர 'ஶூரானந்த3'
பா3கி3ஶிர நமோ எம்பெ3 ஆனந்த3 ஒத3கி3ஸுவி
ப4க்தரிகெ3 ஶோப4னஞான அபரோக்ஷ ப்ரதா3த
அகளங்க நித்யானந்தானுப4வ ஸ்வரூப ஸ்வாமி

நிரம்பி வழிவதான, பூர்ணமான ஆனந்தத்தைக் கொண்டவனே 'ஸுரானந்தனே' உனக்கு என் தலை வணங்கியதான நமஸ்காரங்கள். மகிழ்ச்சியைக் கொடுப்பாயாக. பக்தர்களுக்கு முக்தி ஞானத்தை, அபரோக்ஷத்தை வழங்குபவனே. களங்கமற்ற நித்யானாந்த அனுபவத்தைக் கொண்ட ஸ்வரூபத்தைக் கொண்டவனே. ஸ்வாமியே.

192. ஸ்ரீ கோ3விந்தா3ய நம:
பஶுபுத்ர மொத3லாத3வர ஸம்ப3ந்த4 மாடி3ஸுவ
ஸ்ரீஶ 'கோ3விந்த' நமோ ஹீங்கார நாம ப்ரதிபாத்3ய
பூ4ஸுரரிம் அமரரிம் ஸூரிக3ளிம் ஸம்ஸ்துதனு
ஸமஸ்த வேத3வாக்யக3ளிந்த3 கீர்த்தித வேத3வேத்3ய

மாடு, வாரிசு ஆகியவற்றை வழங்குபவனான ஸ்ரீஶனே. 'கோவிந்தனே' உனக்கு என் நமஸ்காரங்கள். ஹீங்கார என்று அழைக்கப்படுபவனே. பூமியில் வாழ்பவர்களால், முக்தர்களால், தேவதைகளால் வணங்கப்படுபவனே. அனைத்து வேத வாக்கியங்களாலும் போற்றப்படுபவனே. வேதவேத்யனே.

193. ஸ்ரீ கோ3விதா3ம்பதயே நம:
தேஜஸ்விக3ள ஸ்வாமி 'கோ3விதா3ம்பதி' நமோ எம்பெ3
ஸஞ்ஞானதேஜஸ்வி அபரோக்ஷி ப4க்தருக3ளிகு3
ஸூர்யாதி3க்3ரஹ நக்ஷத்ர த1டித்தாதி3 தே3வர்க்க3ளிகு3
தேஜஸ்வி ஸுர ரிஷியஜகர்கு3 ரக்ஷக ஸ்வாமி

அறிஞர்களின் ஸ்வாமியே 'கோவிதாம்பதியே' உனக்கு என் நமஸ்காரங்கள். உன் பக்தர்களுக்கு யதார்த்த ஞானத்தையும், அபரோக்ஷத்தையும் வழங்குபவனே. சூரியன் முதலான கிரகங்களுக்கும், நட்சத்திர முதலானவர்களுக்கும், தேவர்களுக்கும், ஞானத்தைக் கொண்ட ரிஷிகளுக்கும் கூட நீயே ரக் ஷகனாக இருக்கிறாய். ஸ்வாமியே.

194. ஸ்ரீ மரீசயே நம:
தாமஸ தை3த்யர்க3ள மரண ஹொந்தி3ஸுவ 'மரீசி'
நமோ எம்பெ3 அக்3ஞான ஸம்ஹர ஸக்ஞானதா3த
சாமீகராப4 ப்ரகாஶவான் நிர்மல ஸ்வரூப
அமலகு3ண ஜலநிதே4 க்ருபாம் ம்ருத ஸுரிஸோ

தாமஸ தைத்யர்களுக்கு மரணத்தை கொடுப்பவனே 'மரீசியே' உனக்கு என் நமஸ்காரங்கள். அஞ்ஞானத்தை அழித்து, ஸுக்ஞானத்தை அளிப்பவனே. தங்கமயமாக ஒளிர்பவனே. நிர்மல ஸ்வரூபம் கொண்டவனே. குறைகள் அற்ற குணங்களைக் கொண்டவனே. பாற்கடலில் வசிப்பவனே. உன் கருணை என்னை மழையை பொழிவாயாக.

195. ஸ்ரீ த3மனாய நம:
ஶத்ருக3ள புர நிரோத4னமாள்ப 'த3மனனே'
ஶிரபா3கி3 நமோ எம்பெ3 முப்புரக3ளுரிஸிதி3
புரஸ்த2 ஸஞ்ஜீவினி ரஸவ கோ3ரூபதி3 குடி3து3
ஹரனொளித்3து3 ஒதகி3தி3 த்ரிபுர த3ஹிஸலிகெ

எதிரிகளின் இருப்பிடங்களைக் கூட அழிப்பவனே 'தமனனே' உனக்கு தலைவணங்கி நமஸ்காரம் செய்கிறேன். முப்புரங்களை அழித்தவனே. அப்போது ஸஞ்சீவினி ரஸத்தினை பசு ரூபத்தில் வந்து குடித்து உதவினாய். த்ரிபுராஸுரர்களை அழிப்பதற்காக, ருத்ரரில் இருந்து உதவி செய்தாய்.

196. ஸ்ரீ ஹம்ஸாய நம:
ஶத்ருவத4 கொடி3ஸுவவ ஹம்ஸனே நமோ எம்பெ3
நிர்தோ3ஷத்வதி3 'ஹம்' ஸாரத்வதி3ம் 'ஸ்வ:' நிர்தோ3ஷஸுக2
ஆதி3ஸார ப3லவத்வதி3 ஞானிப4க்தபோஷண

நித்ய நிர்தோ^{3}ஷஸார ப^{3}லவந்ததி^{3}ம் ஶத்ருவத^4

எதிரிகளை அழிப்பவனே. ஹம்ஸனே உனக்கு என் நமஸ்காரங்கள். தோஷங்கள் அற்றவன் என்பதால் ‘ஹம்’ எனப்படுகிறாய். அனைத்தையும் நடத்துவதால் ‘ஸ்வ:’ எனப்படுகிறாய். தோஷங்கள் அற்ற சுகத்தினைக் கொடுத்து, அனைத்து பக்தர்களுக்கும் வலிமை ஆகியவற்றை அருளி, பக்தர்களை காப்பவனே. எதிரிகளை அழிப்பவனே.

197. ஸ்ரீ ஸுபர்ணாய நம:
விகாரவில்லதெ^{3} ஸமானவாகி^{3}ருவ ‘ஸுபூர்ண’
உத்க்ருஷ்டானந்தா^{3}னுப^{4}வ ஸ்வரூப ஸுபர்ண நமோ
அகளங்க பரமானந்த^3 ஸ்வரூப அவதார
ஸகலத^{3}லு ஸர்வஸ்த^{2}ரூபத^{3}லு ஸமானபூர்ண

எவ்வித மாற்றங்களும் இன்றி சமமாகவே இருப்பவனே ‘ஸுபூர்ணனே’ உனக்கு என் நமஸ்காரங்கள். அபரிமிதமான ஆனந்த அனுபவ ஸ்வரூபத்தை கொண்டவனே. தோஷங்கள் அற்றதான பரமானந்த ஸ்வரூபனே. உன்னுடைய அவதாரங்கள் அனைத்திலும், அனைத்து ரூபங்களிலும், ஒரே மாதிரியாக பூரணமாக இருப்பவனே.

198. ஸ்ரீ பு^{4}ஜகோ^{3}த்தமாய நம:
விஷயபோ^{4}க^{3}க்காகி^{3}யே அன்னாதி^{3} போ^{4}க^{3}ரதரு
ஸ்ரீஶனலி பரான்முக^2 தை^{3}த்யரன்ன பீடி^{3}ஸுவ
ஶாஸக ‘பு^{4}ஜகோ^{3}த்தம’ நமோ எம்பெ^{3} ஶேஷஶய்யா
ஈஶவாஹன ஸேவகப்ரிய அஸுர ஶிக்ஷகனு

அன்னம் முதலான விஷய போகங்களில் ஈடுபடும், ஸ்ரீஶனிடம் பக்தி செய்யாத தைத்யர்களை பீடிக்கும், அவர்களை ஆளும் ‘புஜகோத்தமனே’ உனக்கு என் நமஸ்காரங்கள். ஶேஷன் மேல் படுத்திருப்பவனே. வலிமையான கருடனை வாகனமாக கொண்டவனே. பக்தர்களின் ப்ரியனே. அசுரர்களை தண்டிப்பவனே.

199. ஸ்ரீ ஹிரண்யக^{3}ர்பா^{4}ய நம:
வஜ்ரஹஸ்தனே ‘ஹிரண்யனாப^{4}னே’ நமோ நினகெ^{3}
வஜ்ரரேகா^{2}ங்கித ஹஸ்ததி^{3} வஜ்ரகூரு நக^{2}தி^{3}ம்
நிர்ஜரர பூ^{4}ஸுரர ஹரிப^{4}க்த ப்ரஹ்லாத^{3}ன
மூர்ஜக^{3}த^3 வைரி ஹிரண்யகன நாபி^{4} ஸீளிதி^{3}

தங்கமயமான ஹஸ்தங்களைக் கொண்டவனே ‘ஹிரண்யனாபனே’ உனக்கு என் நமஸ்காரங்கள். தங்கமயமான ரேகைகளைக் கொண்ட கைகளால், அதில் உள்ள வலிமை பொருந்திய நகங்களால், சிறந்த தேவதையான, ஹரிபக்தனான பிரகலாதனின் எதிரியான ஹிரண்யகனின் நாபியை கிழித்து அவனை கொன்றவனே.

200. ஸ்ரீ ஸுதபஸெ நம:
அஸுரமாயா பூர்ண நாஶமாள்ப ‘ஸுதபோ’ நமோ
நீ ஸுபூர்ண ஞானஸ்வரூப மித்யாஞான ஹந்த
‘ஸு’ ஸம்பூர்ண ‘த’ தாரக ‘ப’ பரமேஶ்வர பாத^1
பி^{3}ஸஜப^{4}வ நின்னஸுத ஸுதபாத ஸுதபா

அசுர சக்திகளை முழுமையாக அளிப்பவனே ‘ஸுதபனே’ உனக்கு என் நமஸ்காரங்கள். நற்குணங்களை முழுமையாகக் கொண்டவன். ஞான ஸ்வரூபன். மித்யா ஞானத்தை அழிப்பவனே. அனைத்தையும் தரித்திருப்பவனான ஸர்வோத்தமனே. பிரம்மன் உன் மகன். ஸச்சிதானந்த ஸ்வரூபியே. அனைவரையும் காப்பவனே.

கு³ருக³ மத்⁴வக³ ஸரஸிஜாஸனபித ஸ்ரீஶ
விரஜ கல்யாணதம ஸுகு³ணாப்³தி⁴ ஸர்வகர்த்த
'ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ' ஸஹஸ்ர நாமனே நமோ
நீ ரசிஸி நுடிஸித்³து³ அர்ப்பிதவு ப்ரீதனாகோ³ ||ப

|| மூன்றாம் ஸந்தி முடிந்தது ||
|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||

நான்காம் ஸந்தி

கல்யாணதம ரூப அனக⁴ ஸுகு³ணார்ணவனெ
மாலக்ஷ்மிபதி பி³ரம்ம விஶ்வாக்²ய விஷ்ணு வஷட்கார
ஶீல ஜீவோத்தம வர வாயு பி³ரம்மதா⁴மன ஹ்ருத்
கீலாலஜாந்தஸ்ய பரமாத்ம கேஶவ நமஸ்தே ||ப

201. ஸ்ரீ பத்மனாபா⁴ய நம:
ஸிம்ஹ நாதா³தி³க³ளந்தெ பா⁴ஸநாம 'பத்மனாப⁴'
அஹர்னிஶி நமோ நினகெ³ ஆதி³வராஹ நின்ன
ஸிம்ஹ நாத³ மஹாஸ்வனதி³ நீனெந்து³ திளிஸிதி³
பி³ரம்மனிகெ³ நாபி⁴கமலதி³ ஜன்மவித்தவனு

ஸிம்ஹ நாதத்தைப் போல கம்பீரமான கர்ஜனை கொண்டவனே. 'பத்மனாபனே' உனக்கு என் இரவும் பகலுமான நமஸ்காரங்கள். ஆதிவராகனே. உன் சிம்ம நாதத்தால், உன்னைப் பற்றி தெரிவித்தாய். நாபி கமலத்திலிருந்து பிரம்மனை படைத்தவனே.

202. ஸ்ரீ ப்ரஜாபதயே நம:
ஜக³த்ப்ராணிபாலக 'ப்ரஜாபதி' நமோ நமோ
ஜக³த்தல்லி ப்ரஜெக³ள ஸ்வாமி நியந்த நீனேவெ
ஏக சித்ததி³ ஜபிபருக³ள ரக்ஷகானந்த³ப்ரத³
ஜக³த்காரணனு விஶ்வவ்யாபி நீனெ ஸர்வகர்த்தா

உலகின் அனைத்து பிராணிகளையும் காப்பவனே 'ப்ரஜாபதியே' உனக்கு என் நமஸ்காரங்கள். உலகில் அனைத்து பிரஜைகளின் ஸ்வாமி நீயே. ஒரு மனதுடன் உன்னை ஜெபிப்பவர்களை காப்பவர்களில் நீயே முதல்வன். இந்த உலகின் காரணன் நீயே. அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருக்கிறாய். அனைத்தையும் செய்பவன் நீயே.

203. ஸ்ரீ அம்ருத்யவே நம:
மாரகரு ஹிம்ஸகரூ இல்லத³வ 'அம்ருத்யு' நீ
ஶரணு நமோ ப⁴க்தரக்ஷக ஸ்ரீஶ நரஸிம்ஹ
ஶரணரிகெ³ ஜன்ம ஜராமரணாதி³ ஸம்ஸார
பரிஹரிஸி முக்தி அம்ருதத்வ நீடி³ பொரெவி

துன்பம் கொடுப்பவர். வெல்பவர் யாரும் இல்லாத 'அம்ருத்யுவே' உன்னை சரணடைகிறேன். பக்தர்களை காப்பவனே. ஸ்ரீலட்சுமி தேவியின் தலைவனே. நரசிம்மனே. உன்னை சரணடைந்தவர்களுக்கு, அவர்களின் சம்சார பந்தனத்தை பரிகரித்து, முக்தி என்னும் அமிர்தத்தைக் கொடுத்து காக்கிறாய்.

204. ஸ்ரீ ஸர்வத்³ருதே நம:
ஸர்வகாலத³லு நீ ப்ரகாஶமான மஹிமாவான்
'ஸர்வத்³ருக்' நமோ எம்பெ³ ஸர்வத்ர ஸர்வவ்யாபி நீனு
ஸர்வம்பஶ்யதி ஆது³த³ரிந்த³ ஸர்வத்³ருக் எம்பு³வரு

ஸர்வதோமுக2னெந்து3 ப்ரஸித்3த4 நீ ஸ்ரீ நாரஸிம்ஹ

அனைத்து காலங்களிலும் நீ ஒளிமயமான மகிமைகளை கொண்டவன். 'ஸர்வத்ருக்' உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து இடங்களிலும் வ்யாப்தனானவன் நீயே. அனைத்தையும் பார்க்கிறாய் ஆகையால் 'ஸர்வத்ருக்' என்பார்கள். அனைத்து திசைகளிலும் பார்ப்பவன் என்று புகழ் பெற்றிருக்கிறாய். ஸ்ரீ நரசிம்மனே.

205. ஸ்ரீ ஸிம்ஹாய நம:
மேக4தாட3னரூப ஶாஸன மாடு3வியோ 'ஸிம்ஹ'
பா3கி3 ஶிர நமோ எம்பெ3 ஶங்க்ருந்த3 பர்ஜன்ய ஸேவ்ய
நாக3ராஜன க3ர்வப3டி3தி3 கி3ரியெத்தி கிருஷ்ண
கோ3குலவ காய்த3 கோ3விந்த3 தே3வ தே3வ ஸிம்ஹ

மேகத்தை மீறியதான ரூபத்தை எடுத்து அனைவரையும் ஆள்பவனே. 'ஸிம்ஹனே' . உனக்கு தலை வணங்கி நமஸ்காரம் செய்கிறேன். அபாரமான மழை பெய்தபோது, உன் மேல் குடை பிடித்து காத்த நாகராஜனை, பின்னர் அவனுடைய கர்வத்தை அடக்கினாய் (காளிந்தி). கோவர்த்தன மலையை தூக்கி கோகுலத்தை கிருஷ்ணனான காத்தாய். கோவிந்தனே. தேவதேவனே. ஸிம்ஹனே.

206. ஸ்ரீ ஸந்தா4த்ரே நம:
ப்ருது2வீத்3யு ஸந்தா4னமாள்ப 'ஸந்தா4த' நமோ நினகெ3
த்3யுப்4வாதி3 ஸர்வதா4ரக பரம ஆத்ம ஸர்வேஶ
ஸர்வக்கு ஆதா4ரனாகி3த்3து3 ஜனபோஷண மாள்பி
தைத்தரீய ஸத்பா4ஷ்யனோள்பது3 யோக்3ய கு3ருத்3வார

பூமி, ஆயுள், வாரிசி ஆகியவற்றைக் கொடுப்பவனான 'ஸந்தாதனே' உனக்கு என் நமஸ்காரங்கள். தேவர்கள் முதலான அனைவருக்கும் ஆதாரமானவனே. பரமாத்மனே. ஸர்வேஶனே. அனைத்திற்கும் ஆதாரனாக இருந்து, மக்களை நீ காக்கிராய். ஒரு தக்க குருவின் மூலமாக தைத்திரிய ஸத்பாஷ்யத்தை படித்தால் உன்னை அறியலாம்.

207. ஸ்ரீ ஸந்தி4மதே நம:
யக்ஞக3ளிந்த3 ஸம்யோக3மான் 'ஸந்தி4மான்' நமோ நமோ
யக்3ஞப்4ருத் யக்ஞக்ருத் யக்ஞ யக்ஞபு4க் யக்ஞஸாத4ன
யக்ஞஸ்த விஷ்ணோஷரணெம்பெ3 ஸர்வஸ்வாமி நம்மொளிஹ
ஸம்யோக3 யக்ஞ நாம வாயுவந்தர்யாமி யக்ஞ ஸ்ரீஶ

யக்ஞங்களால் மகிழ்பவனே 'ஸந்திமான்' உனக்கு என் நமஸ்காரங்கள். யக்ஞங்களை செய்பவன், செய்விப்பவன், அதனால் வரும் ஸாரத்தை ஏற்றுக் கொள்பவன் மற்றும் அந்த யக்ஞத்தில் இருப்பவனான விஷ்ணுவே உனக்கு நான் சரணடைகிறேன். அனைவருக்கும் ஸ்வாமியே. நமக்குள் இருப்பவனான, பாரதிரமண முக்யபிராணாந்தர்கதனான, ஸம்யோக யக்ஞனே. லட்சுமிதேவியின் தலைவனே.

208. ஸ்ரீ ஸ்தி2ராய நம:
ஹஸ்தத3லி வஜ்ரஸ்தா2பக 'ஸ்தி2ர' நமோ நினகெ3
கஸ்த2 குஸ்த2 கே2சர ஸுராஸுர ஶிவவிதி4
ஸுஸ்திரரல்ல புட்டிபோபுரு நீ ஸ்தி2ர அச்யுத
ஸ்வதந்த்ர நித்யனு அப்ராக்ருத முக்2ய ஸ்தி2ர நீனே

கைகளுக்கு வலிமையைக் கொடுப்பவனே 'ஸ்திரனே' உனக்கு என் நமஸ்காரங்கள். பூமியில், தண்ணீரில், வானத்தில் சஞ்சரிக்கும் என அனைத்து ஜீவர்களும் / பிராணிகளும், மற்றும் தேவதைகள், ருத்ரர், பிரம்மன் ஆகியோரும்கூட நிலையானவர்கள் அல்ல, பிறப்பு இறப்பு கொண்டவர்கள். நீ

மட்டுமே ஸ்திரமானவன். அழிவில்லாதவன். ஸ்வதந்த்ரன். நித்யன். அப்ராக்ருத சரீரம் கொண்டவன். ஸர்வோத்தமனான ஸ்திரன் நீயே.

209. ஸ்ரீ அஜாய நம:

சோரரு து^{3}ஷ்டரொளு பரஸ்பர வைமனஸு
பா^{4}ரி க^{3}லபெ^{4} உண்டுமாள்ப 'அஜ' நமோ நினகெ^{3}
ஸுர நராதி^{3}க^{3}ளந்தெ ஜன்ம நினகி^{3}ல்லவு
நரஸிம்ஹ ஆவிர்பா^{4}வதி^{3}ம் நஜாயதேதி அஜ:

திருடர்கள், துஷ்டர்கள் ஆகியோருக்கும் பரஸ்பரம் கருத்து வேறுபாடு மற்றும் குழப்பங்களை உருவாக்கும் 'அஜனே' உனக்கு என் நமஸ்காரங்கள். தேவதைகள், மனிதர்கள் ஆகியோருக்கு இருப்பதைப் போல உனக்கு பிறப்பு என்பது இல்லை. நரஸிம்மனாக தோற்றம் கொண்டவனே. 'ந ஜாயதேதி அஜ:' - யார் செல்வதில்லையோ (இறப்பதில்லையோ), அவன் அஜன்.

210. ஸ்ரீ து^{3}ர்மர்ஷணாய நம:

ஶத்ருக^{3}ளிகெ^{3} உக்^{3}ர 'து^{3}ர்மர்ஷண' நமோ நினகெ^{3}
ஶத்ரு து^{3}ஷ்டரிகெ^{3} ப^{4}யங்கர கா^{4}தக ந்ருஹரே
வராஹ ராம கிருஷ்ண கல்கி நீ யாரிந்த^{3}லு
மர்ஷணகெ அஶக்யனு பூர்ணப^{3}ல ரூப நீனு

எதிரிகளுக்கு உக்ரனே. துர்மர்ஷணனே உனக்கு என் நமஸ்காரங்கள். எதிரிகளுக்கு துஷ்டர்களுக்கு பயங்கரமான எதிரியே. ந்ருஹரியே. வராகனே. ராமனே. கிருஷ்ணனே. கல்கியே. நீ யாராலும் (முழுமையாக) அறியப்பட முடியாதவன். பூர்ணபலன்களின் ரூபம் நீயே.

211. ஸ்ரீ ஶாஸ்தாய நம:

ஶத்ருக^{3}ள நாஶகனு 'ஶாஸ்தா' நமோ எம்பெ^{3}
சோரர து^{3}ஷ்டர அஸத்யவந்தர த^{3}ண்டிஸுவி
சராசர ஜக^{3}த்ஸர்வ நின்ன அதீ^{4}னவாகி^{3}ஹுது^{3}
யாரு ஸமரில்லத^3 பரமைக ஶாஸ்தா நினேவெ

எதிரிகளை அழிப்பவனே. ஶாஸ்தாவே. உனக்கு என் நமஸ்காரங்கள். திருடர்களை, துஷ்டர்களை, பொய் பேசுபவர்களை தண்டிக்கிறாய். சராசரங்களால் நிறைந்த இந்த உலகம் முழுவதும் உன் அதீனமாகவே இருக்கிறது. யாரும் உனக்கு சமமானவர் இல்லை. ஸர்வோத்தமனான ஶாஸ்தா நீ ஒருவனே.

212. ஸ்ரீ விஶ்ருதாத்மனே நம:

ப்ரஸித்^{3}த^{4}வாகி^{3} ஸ்தோத்ர மாடி^{3}ஸிகொம்ப^3 'விஸ்ருதாத்மா'
நா ஶிரபா^{3}கி^{3} நமோ நமோ எம்பெ^{3} கருணாப்^{3}தி^{4}யே
ஸ்ரீஶ ஈ ஸ்தோத்ர நுடி^{3} கொள்ளோ ஸுப்ரஸன்ன
ப்ரஸித்^{3}த^4 ஸ்வரூபவந்த விஶ்ருதாத்ம ஸ்ரீனிவாஸ

அனைவராலும் ஸ்தோத்திரம் சொல்லப்பட்டு, அவற்றை ஏற்றுக் கொள்பவனே. விஶ்ருதாத்மனே. உனக்கு நான் தலைவணங்கி நமஸ்காரம் செய்கிறேன். கருணைக்கடலே. லட்சுமிதேவியின் தலைவனே. இந்த ஸ்தோத்திரத்தை ஏற்றுக் கொள்வாயாக. புகழ்பெற்ற ஸ்வரூபங்களைக் கொண்டவனே. விஶ்ருதாத்மனே. ஸ்ரீனிவாஸனே.

213. ஸ்ரீ ஸுராரிக்^{4}னே நம:

ஸுராரி தை^{3}த்யர ஹந்தா 'ஸுராரிஹா' நமோ நமோ
ஸுராரி ஹிரண்யகரன்ன ஸீள்தி^{3} ப^{4}க்தபால
முர நரரன்ன அளிதி^{3} ஸுஜன ஸுரபாலா

ஜைரேய கௌரவர கொல்லிஸிதி3 பாண்ட3வப்ரிய

தேவதைகளின் எதிரிகளை அழிப்பவனே. ஸுராரிஹனே. உனக்கு என் நமஸ்காரங்கள். தேவர்களின் எதிரியான ஹிரண்யாக்ஷனை கொன்றவனே. பக்தர்களை காப்பவனே. முர-அசுரன், நரகாசுரன் ஆகியோரைக் கொண்றவனே. ஸஜ்ஜனர்களை, தேவர்களை காப்பவனே. பாண்டவர்களின் நண்பனே. கௌரவர்களைக் கொல்ல வைத்தவனே.

214. ஸ்ரீ கு3ரவே நம:
அம்ருதாதி3 த்3ரவ்யக3ள க்3ருஹீதா ‘கு3ருவே’ நமோ
அம்ருத ஸுரரிகு3ணிஸிதி3 அஸுரரிகெ3 இல்ல
ப்3ரம்மாதி3க3ளிகெ3 உபதே3ஶிஸி3தி யதா2யோக்3ய
நீ மூல கு3ரு ஸ்ரீமன் நாராயண ஹம்ஸ ஹயாஸ்ய

அம்ருதம் முதலான அனைத்து பொருட்களையும் (அதன் ஸாரத்தை) பெற்றுக் கொள்பவனே. ‘குருவே’ உனக்கு என் நமஸ்காரங்கள். அந்த அமிர்தத்தை தேவர்களுக்கு பிரித்துக் கொடுத்தாய். அசுரர்களுக்கு கொடுக்கவில்லை. அவரவர்களின் யோக்யதைக்கேற்ப பிரம்மாதிகளுக்கு உபதேசம் செய்தாய். நீயே மூல குரு. ஸ்ரீமன் நாராயணனே. ஹம்ஸனே. ஹயக்ரீவனே.

215. ஸ்ரீ கு3ருதமாய நம:
உத்க்ருஷ்ட ரீதியலி ஏக விஸ்தார ‘கு3ருதம’
உத்தமாங்க3த3 பா3கி3 ஶரணாகி3 நா நமோ எம்பெ3
இந்த்3ர கு3ரு ருத்3ர ருத்ரகு3ரு பத்3மஜ ஸமீர
பத்3மஜ கு3ரு ஸ்ரீபதி கு3ருதமனு அகு3ரு

மிகச் சிறந்ததான வகையில் ஸர்வோத்தமனாக இருப்பவனே ‘குருதமனே’ அனைத்து அனைத்து அங்கங்களாலும் உன்னை சரணடைந்து வணங்குகிறேன். இந்திரனின் குரு ருத்ரர்; ருத்ரரின் குரு பிரம்ம வாயுகள்; அவர்களின் குரு ஸ்ரீபதி, நீயே. குருதமனே. குரு இல்லாதவனே.

216. ஸ்ரீ தா4ம்னே நம:
ஸோமார்க்காதி3 க்3ரஹதே3வதெ பு3த்3தி4 ஹொளிஸுவி நீ
‘தா4ம’ நமோ தேஜோரூபவான் தா4ம நாமா
ஸோம ஸூர்யாதி3க3ள பு3த்3தி4 க்ரியா நின்னிந்த3லேவெ
தம்ம தம்ம ப்ரகாஶனாதி3க3ளன்னு மாடு3வரு

சந்திரன், சூரியன் ஆகிய கிரகங்களில் இருந்து அவர்களுக்கு ஒளி கொடுப்பவனே ‘தாமனே’ உனக்கு என் நமஸ்காரங்கள். ஒளி பொருந்தியவனே. தாம என்று அழைக்கப்படுபவனே. அந்த சந்திரன், சூரியன் ஆகியோர்களின் புத்தி, செயல்கள் உன்னாலேயே நடக்கின்றன. உன்னாலேயே அவர்கள் மற்றவர்களுக்கு ஒளி கொடுக்கிறார்கள்.

217. ஸ்ரீ ஸத்யாய நம:
ப4க்தரிகெ3 உத்தமவாத3 போ4க3 ஒத3கி3ஸுவி
‘ஸத்யனே’ நமோ ஸதத ப4க்தவத்ஸலனெ ஸ்ரீஶ
தத்தத்காலதி3 ப4க்தேஷ்டதா3த ஹிதகரனு நீ
ஸந்தத ப்ரியகர ஸாது4 பரிபால கருணி

பக்தர்களுக்கு மிகச்சிறந்ததான போகத்தை அருள்பவனே ‘ஸத்யனே’ எப்போதும் உன்னை வணங்குகிறேன். பக்தவத்ஸலனே. லட்சுமிதேவியின் தலைவனே. அந்தந்த (தக்க) காலங்களில் பக்தர்களின் இஷ்டங்களை நிறைவேற்றுபவனே. இதம் அளிப்பவனே. நீ எப்போதும் அனைவருக்கும் ப்ரியமானவனாக இருக்கிறாய். ஸஜ்ஜனர்களுக்கு அருள்பவனே. கருணைக் கடலே.

218. ஸ்ரீ ஸத்யபராக்ரமாய நம:

ஸோமாதி3 ஸாது4 யக்ஞரதராத3வர க்3ருஹதி3
ரமாயுக் வாஸமாள்பி 'ஸத்யபராக்ரம' நமஸ்தே
பி3ரம்மவாய்வர்க்காதி3 ஸத்யர பராக்ரம நின்னிந்த3
வாமன த்ரிவிக்ரம ஸத்யசாரி ப3லிகொ3லிதி3

ஸோமயக்ஞ முதலான யக்ஞங்களை செய்பவர்களின் வீட்டில் ஸ்ரீலட்சுமிதேவி உடன் வசிக்கிறாயே. 'ஸத்யபராக்ரமனே' உன்னை வணங்குகிறேன். பிரம்ம, வாயு, சூரியன் ஆகியோரின் பராக்கிரமங்கள் (செயல்கள்) உன்னாலேயே நடக்கின்றன. வாமனனே. த்ரிவிக்ரமனே. உண்மையை பேசி பின்பற்றியவனான பலிச் சக்கரவர்த்திக்கு அருளியவனே.

219. ஸ்ரீ நிமிஷாய நம:

ஜாக்3ரதாவந்தனே 'நிமிஷ' நமோ நமோ நினகெ3
ஜாக்3ரதா அவஸ்தா2 ப்ரவர்த்தக ஸ்தூ2லபு4க்ஞ விஶ்வ நீ
ஜக3 ஸ்தூ2ல விஷயக3ளோள் ஸுக2ஸார நீனிருவி
ஜக3ல்லீலானந்த3 நீ ஸ்வாக்2யரஸ கொம்பி3 அனக4

எப்போதும் முழிப்புடன் இருப்பவனே. 'நிமிஷனே' உனக்கு என் நமஸ்காரங்கள். விழிப்பு நிலையை கொடுப்பவனே. உலகில் அனைத்து ஸ்தூல பதார்த்தங்களிலும், அதன் சுகங்களை (சுக பலன்களை) ஏற்றுக் கொள்பவனாக இருப்பவனே. உலகின் அனைத்து செயல்களையும் உன் லீலைகளால் செய்பவனே. அனைத்திலிருந்தும் ஸ்வாக்ய ரஸத்தினை ஏற்றுக் கொள்பவனே. யாராலும் வெல்லப்பட முடியாதவனே.

220. ஸ்ரீ அனிமிஷாய நம:

மனுஷ்யாதி3 ஜீவரிகெ3 பி4ன்னனு லீலாக்ரீடா3
அனுப4வ தே3வ 'அனிமிஷனே' நமோ நினகெ3
மனுஷ்யவத் அவதார மாடி3தரூ நரனல்ல
பி4ன்னனு ஞானானந்த3ப3ல அப்ராக்ருத விக்3ரஹ

மனிதர்கள் முதலான அனைத்து ஜீவர்களைவிட பின்னனே (வேறுபட்டவனே). லீலைகளால் செயல்களை செய்பவனே. அனுபவத்தை கொடுக்கும் தேவனே. 'அனிமிஷனே' உனக்கு என் நமஸ்காரங்கள். மனிதனாக நீ அவதாரம் செய்திருந்தாலும், நீ மனிதன் அல்ல. அனைவரையும் விட வேறுபட்டவன். ஞானானந்த பலரூபனே. அப்ராக்ருத தேகத்தைக் கொண்டவனே.

221. ஸ்ரீ ஸ்ரக்3விணே நம:

அதிக்ரமிஸி இருவந்த2 'ஸ்ரக்3வி' நமோ நினகெ3
ஸ்ரீதே3விகு3 பி3ரம்மாஶிவாதி3 ஸுரநர ஸமஸ்த
ஜந்துக3ளு சராசர ஸர்வக்கு ஸஹா மீரித3
அதிபராக்ரம கு3ணப3லாதி3க3ளிந்த3 பூர்ண

அனைவரையும் மீறியவனான 'ஸ்ரக்வி' உனக்கு என்னுடைய நமஸ்காரங்கள். ஸ்ரீதேவிக்கும், பிரம்மதேவரே முதலான அனைத்து சுரர்களுக்கும், நரர்களுக்கும், அனைத்து ஜந்துக்களுக்கும், சராசரங்களான அனைத்திற்கும் எப்போதும் மீறியவனே. அனைவரையும்விட பராக்ரமியே. குண, பலங்களால் பூர்ணனே.

222. ஸ்ரீ வாசஸ்பதயே நம:

வாகீ3ந்த்3ரியாதி3பதி 'வாசஸ்பதி' நமோ நினகெ3
ஆக3மாம்னாய வேதோ3பனிஷத் வாக்யக3ள ஸர்வக்கு
அக3ணித மஹாத்ம்யவாகி3 நீனு பதியாகி3ருவி
ஸக்ரமவேத3வாக்யக3ள ரக்ஷிபி ப்ரளயதி3

வாக் இந்திரியத்திற்கு அதிபதியே 'வாசஸ்பதியே' உனக்கு என் நமஸ்காரங்கள். ஆகம, ஆம்னாய வேதங்கள், உபநிஷத் வாக்கியங்கள் என அனைத்திற்கும் நீயே தலைவனாக இருக்கிறாய். அகணித மஹாத்ம்யத்தைக் கொண்டவன் நீ. பிரளய காலத்தில் அனைத்து வேத வாக்கியங்களையும் காப்பவனே.

223. ஸ்ரீ உதா3ரதி4யே நம:
ஸர்வப3ந்த4 நாஶக கர்மவான் 'உதா3ரதீ4' நமோ
'உ' ஸர்வோத்க்ருஷ்டதா3ர லக்ஷ்மிய 'தீ4' ஞானஸுகா2தி3
ஸர்வப3லகு3ணாஸ்ரயனு உதா3ர ஸ்ருஹுத3
ஸர்வதா3 நிர்தோ3ஷ நிரவதி4க ஞானவான் நீனு

அனைத்து பந்தங்களையும் அழிக்கும் கர்மங்களை செய்விப்பவனே 'உதாரதி' யே உனக்கு என் நமஸ்காரங்கள். உ என்றால் அனைத்து நலன்களையும் கொடுப்பளான லட்சுமிதேவியின்; தீ – என்றால் அனைத்து ஞான ஸுக, பல குணங்களின் ஆஸ்ரயனே. கருணை வடிவானவனே. நல் இதயம் கொண்டவனே. எப்போதும் தோஷம் அற்றவனே. எல்லையற்றதான ஞானத்தைக் கொண்டவனே.

224. ஸ்ரீ அக்3ரணே நம:
ஶுபா4ஶுப4 கர்ம நேதா 'அக்3ரணே' நமோ நினகெ3
ஶுப4 மோக்ஷ ஸாத4னெ ஸ்ரவண மனன ஸுத்4யான
ஶுப4 விரோதி4 ஸம்ஸார தமஸு ஸாத4ன கர்ம
ஶுப4தம நீ ஈர்வித4 கர்மக்கு அக்3ர நமோ

ஶுப, அஶுப என அனைத்து கர்மங்களையும் செய்பவனே 'அக்ரணே' உனக்கு என் நமஸ்காரங்கள். ஶுபமான மோட்சத்திற்கு ஸாதனைகளான ஸ்ரவண, மனன, ஸுத்யான ஆகியவற்றை செய்விப்பவனே. அஶுபமான ஸம்ஸாரத்திற்கு, தமஸ்ஸிற்கு ஸாதனமான கர்மங்களை செய்விப்பவனே. ஶுபதமனே. நீயே இந்த இரு வித கர்மங்களுக்கும் முதல்வன் (தலைவன்).

225. ஸ்ரீ க்3ராமண்யே நம:
வித4வித4 அபீ4ஷ்டாவளி நியமேன கொடு3வி
ஸ்ரீத3 'க்3ராமணி' நினகெ3 நமோ த3யமாடு3
ஸாத4ன விவிதா4னுசரிபர யோக்3யதா அந்தெ
ஸாத4னக்கு தத்பலக்கு நீ நியாமக ஸுப2லி

பற்பல அபீஷ்டங்களின் வரிசையை யோக்யதைக்கேற்ப கொடுப்பவனே. ஸ்ரீதேவியின் தலைவனே. 'க்ராமணி' யே உனக்கு என் நமஸ்காரங்கள். கருணை புரிவாயாக. பற்பல ஸாதனைகளை செய்பவர்களின் யோக்யதைக்கேற்ப அந்த ஸாதனத்திற்கும், அதன் பலனுக்கும், நீ நியாமகனாக இருக்கிறாய். பலன்களைக் கொடுப்பவனே.

226. ஸ்ரீ ஸ்ரீமத்யை நம:
விகாரவில்லத3 கொரதெயில்லத3 காந்திமான்
ஏகாத்மா 'ஸ்ரீமான்' நமோ ஜ்யோதிர்மய ஸ்ரீகாந்தா
அர்கேந்து3 தாரா மொத3லாத3 ஸர்வதேஜஸ்விக3ள
ப்ரகாஶக்கெ ப்ரகாஶப்ரத நீ ஸ்வதந்த்ர ஜ்யோதி

எவ்வித மாற்றங்களும், குறைகளும் அற்றவனே. ஒளிமயமானவனே. ஸர்வோத்தமனே. 'ஸ்ரீமான்' உனக்கு என் நமஸ்காரங்கள். ஜ்யோதிர்மயமானவனே. ஸ்ரீதேவியின் தலைவனே. சூரிய, சந்த்ர, நட்சத்திரங்கள் என அனைத்து தேஜஸ்விகளின் ஒளிக்கு ஒளி கொடுப்பவனே. நீ ஸ்வதந்த்ரமாகவே ஜ்யோதியை வழங்குகிறாய்.

227. ஸ்ரீ ந்யாயாய நம:
மஹாபு3த்3தி4மான் 'ந்யாய' நமோ ஸதா3 நமோ நினகெ3

மஹார்ஹ நீ தத்தத்யோக்3யப2ல நியமன மாடி3
அர்ஹதெ அனுஸாரவீவ புண்யவந்தர்க3ள புண்ய
லோக, பாப மாடி3த3வரிகெ3 பாப லோகவன்ன

மிகச் சிறந்த புத்திவந்தனே. 'நியாயனே' உனக்கு என் நமஸ்காரங்கள். உத்தமமானவனே. அவரவர்களின் யோக்யதைக்கேற்ப அவர்களை வழிநடத்தி, தக்க பலன்களை கொடுப்பவனே. புண்ணியம் செய்தவர்களை புண்ணிய உலகிற்கும், பாவம் செய்தவர்களுக்கு பாவ லோகத்திற்கும் அனுப்புபவனே.

228. ஸ்ரீ நேத்ரே நம:
பர்வதசே2த3 மாடு3வ 'நேதா' நமோ நினகெ3
நிர்வாஹ மாடு3வி ஸர்வவ ஸதா3 ஸர்வத்ர நீனு
ஸர்வப்ராணிக3ள ஸத்தா ப்ரமதி ப்ரவ்ருத்திக3ளு
ஸர்வேஶ நின்னாதீ4னவாகி3ஹவு நியம்யவாகி3

பர்வதங்களை உடைக்கும் வலிமை கொண்டவனே 'நேத்ரனே' உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்தையும் நீயே நிர்வகிக்கிறாய். எப்போதும், அனைத்து இடங்களிலும், நீயே, அனைத்து பிராணிகளுக்கு நல்புத்தியைக் கொடுக்கிறாய். அவர்களது நடவடிக்கைகளை செய்து, செய்விக்கிறாய். அனைவருக்கும் ஈஶனே. அனைத்தும் உன் அதீனத்திலேயே இருக்கின்றன.

229. ஸ்ரீ ஸமீரணாய நம:
ப்ரேரகனு ஸர்வரிகு3 ஸதா3 'ஸமீரண' நமோ
ஈரயதி ப்ரேரயதி 'ஸம்' ஸம்யக் ஸமீரண நீ
வரவாயு தே3வரிகெ3 ஸுக2ப்ராபக ஸமீரண
ஸ்ரீ ரமாதே3விய ஸ்துதி ஶப்3த3தி3ந்த3 ஸேவ்ய

அனைவருக்கும் நீயே ப்ரேரகனாக இருக்கிறாய். 'ஸமீரணனே' உனக்கு என் நமஸ்காரங்கள். ப்ரேரணை செய்பவனும், அதனை நடத்துபவனும் நீயே. வாயு தேவருக்கு சுகத்தைக் கொடுப்பவன் நீயே. ஸ்ரீரமாதேவி, உன்னை எப்போதும் வணங்குகிறாள்.

230. ஸ்ரீ ஸஹஸ்ரமூர்த்4னே நம:
ப4க்தரிகெ3 சிரகால மஹாஹர்ஷ கொடு3வவ
ப4க்தேஷ்ட 'ஸஹஸ்ரமூர்த்3தா4' நமோ ஸ்ரீராமசந்த்3ர
அதி அஸங்க்2யேய மூர்த்3தா4 'ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ:'
எந்து3 புருஷ ஸூக்த ஹொக3ளுத்தெ பூர்ண ஞானாத்மா

பக்தர்களுக்கு நிரந்தரமான மகிழ்ச்சியைக் கொடுப்பவனே. பக்தர்களின் இஷ்டதெய்வமே. 'ஸஹஸ்ரமூர்த்தனே' உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீராமசந்திரனே. எண்ணிக்கையற்ற பல ரூபங்களைக் கொண்டவனே. ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ: என்று உன்னையே புருஷ ஸூக்தம் புகழ்கிறது. பூர்ண ஞானத்தைக் கொண்டவனே.

231. ஸ்ரீ விஷ்வாத்மனே நம:
ஸர்வவனு தா3னமாள்ப 'விஷ்வாத்மா' நமோ நினகெ3
விஶ்வ நியாமக விஶ்வவ்யாபகனு நீனே ஸ்வராட்
வாயுவந்தர்யாமியாகி3ருவ ஸ்வாமி ஸ்ரீபதி நீனு
ஈஶவாஹன நினகெ3 ஈஜக3த் ஆவாஸஸ்தா2ன

அனைத்தையும் அருள்பவனே. 'விஶ்வாத்மனே உனக்கு என் நமஸ்காரங்கள். விஶ்வ நாமகனே. அனைத்து இடங்களிலும் வியாபித்திருப்பவனே. அனைத்து உலகங்களையும் ஆள்பவனே. வாயுவின் அந்தர்யாமியாக இருக்கும் ஸ்வாமி நீயே. லட்சுமிதேவியின் பதி. சிறந்த வாகனங்களைக் கொண்டவனே. இந்த உலகமே உனக்கு இருப்பிடம் ஆகும்.

232. ஸ்ரீ ஸஹஸ்ராக்ஷாய நம:

ப3ஹு ஶத்ரு ஸேனெயன்னு க்ஷயமாடு3வவ நீனு
'ஸஹஸ்ராக்ஷ' நமோ ஸஹஸ்ஷீர்ஷ புருஷ ஸ்ரீஶ
ஸஹஸ்ர ஷப்3தி4த அஸங்க்யேய சக்ஷு ஸ்வந்த நீனு
மஹதா3தி3 விஶ்வஸ்த2 விஶ்வதோமுக2 விஶ்வா ஆத்மா

அதிகமான எதிரிகளின் சேனைகளை நீ அழிக்கிறாய். 'ஸஹஸ்ராக்ஷனே' உனக்கு என் நமஸ்காரங்கள். ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ: நீயே. ஸ்ரீஶனே. ஸஹஸ்ர என்றால் எண்ணிக்கையற்ற என்று பொருள். அவ்வளவு கண்களைக் கொண்டவன் நீயே. மஹத்திலும் மஹத் நீயே. உலகத்தையே முகமாகக் கொண்டவன். உலகத்தையே ஆத்மாவாகக் கொண்டவன் நீயே.

233. ஸ்ரீ ஸஹஸ்ரபதே நம:

ப3ஹு ரீதியலி ப்ரஜெக3ள பாலனெ மாடு3வ
'ஸஹஸ்ரபாத்' நமோ நினகெ3 புருஷ ஸர்வேஶ்வரா
ஸஹஸ்ரஶீர்ஷா ஸஹஸ்ராக்ஷ அஸங்க்யேய பாதா3த்ம
அஹமாத்மா கு3டா3கேஷ ஸர்வபூ4த மஹேஷ்வர:

பற்பல விதங்களாக மக்களை காக்கிறாய். 'ஸஹஸ்ரபாத்' உனக்கு என் நமஸ்காரங்கள். புருஷனே. ஸர்வேஶ்வரனே. அனந்தமான தலைகளை, கண்களை, பாதங்களைக் கொண்டவனே. அஹமாத்மா குடாகேஷ ஸர்வபூத மஹேஷ்வர: - மகாபாரதம் (6-32-20).

234. ஸ்ரீ ஆவர்த்தநாய நம:

ஶத்ருக3ளனு ஸோலிஸி விமுகராகி3 மாடி3ஸுவி
ஶத்ரு ஜய ஶீல நீனு 'ஆவர்த்தன' நமோ எம்பெ3
அத்ர தத்ர ஸர்வத்ர நீ வாஸிஸுவி ப்4ரமிஸுவி
'ப்4ராமயன் ஸர்வபூ4தானி' எந்து3 ப4க3வானுவாச

எதிரிகளை வென்று, அவர்களை தோல்வி அடையச் செய்பவனே. 'ஆவர்த்தனனே' உனக்கு என் நமஸ்காரங்கள். இங்கு, அங்கு என அனைத்து இடங்களிலும் நீ வசிக்கிறாய். அனைத்து இடங்களிலும் நீ சஞ்சரிக்கிறாய். ப்ராமயன் ஸர்வபூதானி (கீதை 18-61). அனைவருக்குள்ளும் நான் இருக்கிறேன்.

235. ஸ்ரீ நிவ்ருத்தாத்மனே நம:

எது3ரு நிந்தவராத3 ஶத்ருக3ளு அஞ்சி ஓடு3
வந்தெ3 மாடு3வ 'நிவ்ருத்தாத்ம' ஸதா3 நமோ நினகெ3
பூ4த ஸர்வ ப்ரளயதி3 உத3ரதி3 ரக்ஷிஸி
யுக்தகாலதி3 புன: ஸ்ருஜிஸுவ ஸ்ருஷ்ட்யாதி3கர்த

எதிரில் நிற்கக்கூடிய எதிரிகள் பயந்து ஓடுமாறு செய்யும் 'நிவ்ருத்தாத்மனே' உனக்கு என் நமஸ்காரங்கள். பிரளய காலத்தில் அனைத்து ஜீவர்களையும் உதரத்தில் வைத்து காத்து, தக்க காலத்தில் மறுபடி அவர்களை படைக்கும் ஸ்ருஷ்ட்யாதி கர்தனே.

236. ஸ்ரீ ஸம்வ்ருதாய நம:

ஸம்பூர்ணப3லஶாலி 'ஸம்வ்ருதனெ' நமோ நினகெ3
ஸம்பூர்ண ஞானானந்த3 வீர்யாதி3 கு3ணக3ணக3ள
ஸ்வரூப நீனு எந்தா3க3ம ப்ரஸித்த ஞானிக3ம்ய
பாபிமூட4 தாமஸக3ள கூட நீனு ஸம்வ்ருதனு

முழுமையான வலிமையைக் கொண்டவனே. ஸம்வ்ருதனே - உனக்கு என் நமஸ்காரங்கள். முழுமையான ஞானானந்த வீர்ய ஆகிய குணங்களின் ஸ்வரூபன் நீ என்று ஆகமங்கள் உன்னை புகழ்கின்றன. ஞானிகளில் வசிக்கிறாய். பாவிகளை, தாமஸர்களுக்கு தக்க தண்டனைகளை கொடுப்பவனே.

237. ஸ்ரீ ஸம்ப்ரமர்த்த3னாய நம:

ப4க்திகெ3 விரோத4 கு3ணக3ளு ஹரித்3வேஷி ஹரி
ப4க்தர த்3வேஷி தை3த்யர நாஶமாள்ப 'ஸம்ப்ரமர்த்த3ன'
ஸாத3ரதி3 நமோ எம்பெ3 ஹிரண்யகாதி3 வித்3வம்ஸி
அப4க்தரிகெ3 து3க்க2வே ஈவி நீ ப4க்தேஷ்டதா3த

பக்திக்கு எதிரான குணங்களைக் கொண்டிருப்பவர்களை; ஹரித்வேஷிகளை; ஹரி பக்தர்களின் த்வேஷிகளை, தைத்யர்களை அழிக்கிறாய். ஸம்ப்ரமர்த்தனே உன்னை நான் பக்தியுடன் நமஸ்காரம் செய்கிறேன். ஹிரண்யகாதி அசுரர்களை நீ அழிக்கிறாய். அபக்தர்களுக்கு துக்கத்தினை கொடுக்கிறாய். பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அளிக்கிறாய்.

238. ஸ்ரீ அஹ:ஸம்வர்த்தகாய நம:

ஞானிப4ய ஹர 'அஹஸ்ஸம்வர்த்தகனே' நமோ
ஞானிக3ளிகெ3 ஸம்ஸாரப4ய ஶத்ருப4ய மத்து
மன காய தோ3ஷப4ய நிவாரணமாள்பி அஹ:
ஸம்வர்த்தக வந்தே3 காலப்ரவர்த்தக காலஸ்வாமி

ஞானிகளின் பயத்தினை போக்குபவனே. அஹ:ஸம்வர்த்தகனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஞானிகளுக்கு சம்சார பயம், எதிரிகளின் பயம், மற்றும் உள்ளம், உடல் ஆகியவற்றால் செய்யப்படும் தோஷங்களின் பயம் ஆகியவற்றை நிவாரணம் செய்கிறாய். காலபிரவர்த்தகனே. கால ஸ்வாமியே.

239. ஸ்ரீ வன்ஹயே நம:

ப3லநியாமக ப3லதா3தா நீனு 'வன்ஹி' நமோ
ப3லபூர்ண நீனு ஸர்வஜகத் விஸ்வவாஹகனு
எல்ல ஜக3த் விஸ்வவாஹக ஶேஷ ஆதா4ரவாயு
ப3லிஷ்ட2வாயு கூர்மகாதா4ர மஹாகூர்ம நீனு

வலிமையை கொடுப்பவனே. 'வன்ஹியே' உனக்கு என் நமஸ்காரங்கள். பலபூர்ணனே. அனைத்து உலகங்களையும் வியாபித்திருப்பவனே. உலகத்தை தாங்கியிருக்கும் சேஷனை, அவரை தாங்கியிருக்கும் வாயுவை, அந்த வாயுதேவரை தாங்கியிருக்கும் மகாகூர்மன் நீயே.

240. ஸ்ரீ அனிலாய நம:

ஶத்ருக3ள அவர ஸ்தா2னதி3ந்தோடி3ஸுவுத3ரல்லி
ப்ரபஞ்ஜன வாயு தே3வனந்தெ3 நீனு 'அனிலனே'
ஶிரபா3கி3 நமோ எம்பெ3 ஸ்வதந்த்ர ப3லஶாலி நீ
தா4ரகனு ஸர்வக்கு நின்ன தா4ரகனு யாரு இல்ல

எதிரிகளை அவர்களின் இடங்களிலிருந்து ஓட்டுவதில் வாயுதேவரைப் போல நீயும் 'அனிலனே' உனக்கு நான் தலைவணங்குகிறேன். ஸ்வதந்த்ரமான வலிமையானவன் நீயே. அனைத்தையும் தாங்குபவன். உன்னை தாங்குபவர்கள் யாரும் இல்லை.

241. ஸ்ரீ த4ரணீத4ராய நம:

ஹரித3த்த பூ4மியுள்ள ப4ரத்வாஜாதி3க3ளன்ன
ஹருஷபடிஸுவி அன்னாதி3 ஸாது4போ4ஜ்யவித்து
'த4ரணீத4ர' நமோ நினகெ3 புருஷார்த்த2 தா3தா
மந்த3ர கோ3வர்த்த4னதா4ரியே பூ4மிஜன பாலா

ஸ்ரீஹரி அளித்த பூமிகளை கொண்ட பரத்வாஜாதி முனிவர்களுக்கு, அன்னாதி அனைத்து ஸாத்விக போஜனங்களை அளித்து மகிழ்ச்சிப்படுத்துகிறாய். தரணிதரனே உனக்கு என் நமஸ்காரங்கள். புருஷார்த்தங்களை கொடுப்பவனே. மந்தர மற்றும் கோவர்த்தன மலைகளை தூக்கியவனே. பூமியில் உள்ள அனைத்து மக்களையும் காப்பவனே.

242. ஸ்ரீ ஸுப்ரஸாதா3ய நம:

ஸஜ்ஜனர ஹஸ்ததா4ரக 'ஸுப்ரஸாத3னே' நமோ
ஸஜ்ஜனரு ஞானிக3ளிகெ3 மோக்ஷ ஹேது ப்ரஸாத3
த்ரிஜதீ3ஶனே நீனு நித்ய ஸுக2 ஒத3கு3வி
அஜ ஶிவாதி3க3ளிகெ3 த்வத் ப்ரஸாத3தி3ந்த3லேவெஸ்தா2ன

ஸஜ்ஜனர்களின் கைகளைப் பிடித்து காப்பவனே. ஸுப்ரஸாதனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸஜ்ஜனர்கள் மற்றும் ஞானிகளுக்கு மோட்சத்தைக் கொடுப்பவனே; மூன்று உலகங்களின் தலைவனே. நித்ய ஸுகமான மோட்சத்தை நீ கொடுக்கிறாய். பிரம்ம, ருத்ரர்களுக்கு அவரவர்களின் இடமானது உன்னுடைய பிரஸாதத்தினாலேயே கிடைத்திருக்கிறது.

243. ஸ்ரீ ப்ரஸன்னாத்மனே நம:

த்3யுப்4யாதி3 ஸர்வத்ர இருவ ஜீவர்க3ளு ப4யதி3ம்
ப்ரவர்த்திஸுவந்தெ மாள்பி 'ப்ரஸன்னாத்மா' நமோ எம்பெ3
நிவ்ருத்தி கர்மசரிஸுவ ப4க்தரிகெ3 ப்ரஸன்ன
ஸ்ரீத4ர ஸ்ரீனிவாஸ நீ ஒலியெ ஸர்வேஷ்ட லாப4

ஸ்வர்க்கம் முதலான அனைத்து உலகங்களிலும் இருக்கும் ஜீவர்கள், பயத்துடன் (பக்தியுடன்) இருக்குமாறு செய்கிறாய். பிரஸன்னாத்மனே உனக்கு என் நமஸ்காரங்கள். நிவ்ருத்தி கர்மங்களை செய்யக்கூடிய பக்தர்களுக்கு மகிழ்கிறாய். ஸ்ரீதரனே. ஸ்ரீனிவாஸனே. நீ மகிழ்ந்தால் அதுவே அனைத்து விதமான லாபம் ஆகும்.

244. ஸ்ரீ விஶ்வத்3ருஷே நம:

ஸர்வரூபாதி3 அஸுர நாஶகனு நீ 'விஶ்வத்3ருக்'
ஸர்வதா3 நமோ நினகெ3 விஶ்வோத்பாத3கனு நீனு
விஶ்வதா4ரகனு நீனு விஶ்வாலயகர்த்தனு நீனு
விஶ்வ நிலயன ஞானாவ்ருதிப3ந்த4 மோக்ஷகர்த

அனைத்து ரூபங்களாலும், அசுரர்களை அழிப்பவன் நீ. விஶ்வத்ருக் உனக்கு என் நமஸ்காரங்கள். உலகத்தை படைப்பவன் நீயே. உலகிற்கு ஆதாரகன் நீயே. உலகத்தில் இருப்பவர்களின் ஞானத்தை வளர்த்து, அவர்களை மோட்சத்திற்கு அழைத்துச் செல்பவனும் நீயே.

245. ஸ்ரீ விஶ்வபு4ஜே நம:

ஶம்ப3ராதி3 ப3ஹு அஸுரபுர நாஶ மாடு3வ
ஸுப3லவான் 'விஶ்வபு4க்' நமோ நமோ எம்பெ3 நினகெ3
'பு4ங்க்தே விஶ்வ பு4க3வ்யய' எந்து3 உக்தவாகி3ஹுது3
விஶ்வபோஷக ஞானானந்தா3 ப3ல ஓஜஸ்ஸுபூர்ண

ஷம்பர போன்றதான பல அசுரர்களை அழிப்பவனே. மிகச் சிறந்த பலசாலியே. விஶ்வபுக். உனக்கு என் நமஸ்காரங்கள். 'புங்க்தே விஶ்வபுகவ்யய' என்று சரியாகவே சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்தை காப்பவனே. ஞான, ஆனந்த, பல, ஓஜஸ் ஆகிய குணங்களை முழுமையாகக் கொண்டவனே.

246. ஸ்ரீ விபு4வே நம:

உத்க்ருஷ்ட ஶாஶ்வத ப3லாதி3 த4ர்மவான் 'விபு4' நமோ
நித்யஞானானந்த3 ப3ல ஸ்வரூபவுள்ள ப்ரத்3யும்ன
வாஸுதே3வ கோல நாராயணானிருத்3த4 ந்ருஸிம்ஹ
அதிப3ல ஸங்கர்ஷண ஶேஷஶாயி ஸாமஸ்துத்ய

மிகச் சிறந்ததான நிரந்தரமான பலம் முதலான அனைத்து குணங்களையும் கொண்டவனே. தர்மவானே. விபுவே உனக்கு என் நமஸ்காரங்கள். நித்ய ஞானானந்த பல ஸ்வரூபம் உள்ள ப்ரத்யும்னனே,

வாஸுதேவனே. நாராயணனே. அனிருத்தனே. நரசிம்மனே. மிகவும் பலசாலியே. ஸங்கர்ஷணனே. ஶேஷஶாயியே. ஸாம வேதத்தால் போற்றப்படுபவனே.

247. ஸ்ரீ ஸத்கர்த்ரே நம:

ப4க்தர ஸத்கர்ம ப்ரஸித்3த4 மாடு3வவனு
'ஸத்கர்தா' நமோ நமோ ஸத்யஜக3த்கர்தா ரமேஶ
தை3த்ய து3ர்ஜன ஹிம்ஸகனு ஸஜ்ஜனபோஷகனு
ஸதா3ஶோகரஹித ஶுக்ர நீனு ஸ்ரீஶ ப்ரக்2யாத

பக்தர்களின் ஸத் கர்மங்களை பலிக்க வைப்பவனே. ஸத்கர்தனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸத்யமான இந்த ஜகத்தினை படைத்தவனே. ரமாதேவியின் தலைவனே. தைத்யர்களை, கெட்டவர்களை அழிப்பவனே. ஸஜ்ஜனர்களை காப்பவனே. எப்போதும் துக்கங்கள் இல்லாதவனே. பவித்ரமானவனே. நீ லட்சுமிதேவியின் தலைவன். அனைத்து உலகங்களிலும் புகழ் பெற்றவன்.

248. ஸ்ரீ ஸத்க்ருதயே நம:

ப4க்தியிந்து3த்தம ஸ்தோத்ர மாள்பர ப்ரியனு நீனு
ப4க்தியிந்து3த்தம ஸ்தோத்ர மாள்பரல்லி இருவி
'ஸத்க்ருதி' நமோ நினகெ3 ப4க்தக்ருத பூஜெகொம்பி3
க்ருதிரமண ப4க்தேஷ்ட ப்ரத்3யும்ன ஸம்ஸ்துத்ய ப்ரீத

பக்தியுடன் மிகவும் உத்தமமான ஸ்தோத்திரத்தை செய்பவர்களின் ப்ரியன் நீயே. அப்படி ஸ்தோத்திரம் செய்பவர்களில் நீ இருக்கிறாய். ஸத்க்ருதியே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்கள் செய்யும் பூஜையை ஏற்றுக் கொள்கிறாய். க்ருதி ரமணனே. பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் ப்ரத்யும்னனே. ஸ்தோத்திரங்களால் மகிழ்ச்சி அடைபவனே.

249. ஸ்ரீ ஸாத4வே நம:

அஸுரரிந்த3 அபஹார மாட3ல்பட்ட கோ3க3ள
நீ ஸம்ரக்ஷிஸுவுத3காகி3 ஶைலா ஶீலா ஒட3தி3
ஹே 'ஸாது4' நமோ நினகெ3 தீ3னஜன க்ருபாகர
நீ ஸதா3 ப்ராணிரக்ஷக ஸ்வப்ரயோஜன ரஹித

அசுரர்களால் கடத்தப்பட்ட பசுக்களை காப்பதற்காக நீ மிகப்பெரிய மலைகளை உடைத்தாய் (தூக்கினாய்); ஹே ஸாதுவே உனக்கு என் நமஸ்காரங்கள். உன் பக்தர்களை காப்பவனே. நீ எப்போதும் அனைத்து பிராணிகளையும் காப்பவன். எதனாலும் உனக்கு எவ்வித பிரயோஜனங்களும் இல்லை.

250. ஸ்ரீ ஜன்ஹவே நம:

ஸுரர ப4க்தர ஸுஸ்வபா4விக3ள ஸஹ நீனு
ஸரஸ ஸக்2யாதி3க3ள மாள்ப 'ஜன்ஹு' நமோ எம்பெ3
உரக3 பூ4ஷண தாண்ட3வ விப்ரோத்தம ஸுதா4ம
ஸுக்3ரீவ மாலாகாரோத்3த4வ கோ3கோ3ப கோ3பீஸக2

தேவர்களின், பக்தர்களின், ஸஜ்ஜனர்களின் நண்பன் நீயே. சுலபமாக அனைவருக்கும் நீ இருக்கிறாய். ஜன்ஹுவே உனக்கு என் நமஸ்காரங்கள். பாம்பினை தரித்தவனே. நர்த்தனம் ஆடுபவனே. ஸர்வக்ஞனே. வைகுண்டனே. சுக்ரீவனுக்கு மாலையை அணிவித்து, அவனை காத்தவனே. பசுக்களை மேய்த்தவனே. கோபியர்களின் தோழனே.

251. ஸ்ரீ நாராயணாய நம:

நரோபயோக3க்கெ ஜலாதி3க3ளீவ 'நாராயண'
ஶிரபா3கி3 நமோ எம்பெ3 ஸ்ரீபூ4மஹாது3ர்கா3பதே1
அரது3ர க்ஷயஹீன நிர்தோ3ஷ ஞானாதி3பூர்ண
நரோத்பாத3க நரவந்த்3ய ஜலஶாயி லக்ஷ்மீஶ

ஜீவர்களின் பயன்பாட்டிற்காக தண்ணீர் ஆகியவற்றை கொடுக்கும் நாராயணனே. உனக்கு தலை வணங்கி நமஸ்காரங்களை செலுத்துகிறேன். ஸ்ரீ, பூ, துர்காவின் பதியானவனே. தோஷ தூரனே. குறைகள் அற்றவனே. ஞானாதி பூர்ண குணங்களைக் கொண்டவனே. அனைவரையும் மேம்படுத்துபவனே. அனைவரையும் வெல்பவனே. தண்ணீரில் படுத்திருப்பவனே. லட்சுமிதேவியின் தலைவனே.

252. ஸ்ரீ நராய நம:
பூ4மிகெ3 ஜலக3ள ஒத3கி3ஸுவ ‘நர’ நமோ
ஆமயதூ3ரனு அவிகார ஆனந்த3ரூப
ரமா மத்து பி3ரம்ம ஶிவேந்த்3ராத்3யமர ப4க்தவந்த்3ய
ஸ்வாமியு அப்ராக்ருதனு ஶேஷவாயுவந்தர்யாமி

பூமிக்கு தண்ணீரை கொடுப்பவனே. நரனே உனக்கு என் நமஸ்காரங்கள். தோஷங்கள் அற்றவனே. விகாரம் அற்றவனே. ஆனந்தமயனே. ரமா, பிரம்மா, ருத்ர, தேவர்கள் மற்றும் பக்தர்களால் வணங்கப்படுபவனே. ஸ்வாமியே. அப்ராக்ருதனே. ஶேஷ, வாயுகளின் அந்தர்யாமியாக இருப்பவனே.

253. ஸ்ரீ அஸங்க்யேயாய நம:
ப4க்தரிகெ3 அனந்த ஸுக2தா3தா ‘அஸங்க்யேயனே’
ஆத3ரதி3 நமோ எம்பெ3 அக3ணித கு3ணபூர்ண
உத்தம ஸுபூர்ண ஞானானந்த3 ப3லாதி3க3ளு
உத்தம ஸுபூர்ண ஸுக2லீலா க்ரியா அஸங்க்யேய

பக்தர்களுக்கு நிரந்தர சுகமான முக்தியை கொடுப்பவனே. எண்ணிக்கையற்ற ரூபங்களைக் கொண்டவனே. உனக்கு பக்தியுடன் நான் வணங்குகிறேன். எண்ணிக்கையற்ற குணங்களை பூர்ணமாக கொண்டவனே. உத்தமமான ஞானானந்த வலிமைகளை முழுமையாக கொண்டவனே. அனைத்தையும் உன் லீலைகளால் செய்பவனே.

254. ஸ்ரீ அப்ரமேயாத்மனே நம:
ரிபுக3ள கையிந்த3 ஸோது ஹோக3த3 புத்ரதா3த
‘அப்ரமேயாத்மா’ நமோ அபரிமித பரிமாண
அபரிமித வ்யாபகனு தே3ஶகாலகு3ண
அபரிச்சின்ன தன்னிச்சா இல்லதெ3 காணிஸிகொள்ள

எதிரிகளால் தோற்கடிக்கப்பட முடியாதவனே. செல்வங்களை கொடுப்பவனே. அப்ரமேயாத்மனே உனக்கு என் நமஸ்காரங்கள். அபாரமான குணங்களைக் கொண்டவனே. அபாரமான வ்யாபகனே. தேஶ கால, குணங்களால் கட்டுப்படாதவனே. உன் இச்சை இல்லாமல் காட்டிக் கொள்ளாதவனே.

255. ஸ்ரீ விஶிஷ்டாய நம:
விஶேஷ ஸ்துத்யனாகி3ஹ ‘விஶிஷ்ட’ நமோ நினகெ3
பி3ஸஜ ஸம்ப4வ ஆதி3கவி ஸ்தோத்ர மாடி3த3னு
ஈஶான ஷக்ர ஸ்வாயம்பு4வ ப்ரஹ்லாத3 த்4ருவாதி3க3ள்
ப்ரசேதஸரு அமர நர கூடதி3ம் ஸ்துத்ய ஸ்ரீஶ

விஶேஷமாக வணங்கப்படக் கூடியவனே. விஶிஷ்டனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஆதிகவியான பிரம்ம தேவன் உன்னை ஸ்தோத்திரம் செய்தான். ருத்ரர், இந்திரன், ஸ்வாயம்புவ, பிரகலதன், த்ருவ, தேவர்கள், ஜீவர்கள் என அனைவராலும் வணங்கப்படுபவனே. லட்சுமிதேவியின் தலைவனே.

256. ஸ்ரீ ஶிஷ்டக்ருதே நம:
ஶத்ரு ஶாஸன மாள்ப ‘ஶிஷ்டக்ருத்’ நமோ நினகெ3
ப4க்தரு மாடி3த3 ஸத்கர்மஶிஷ்டவ பூர்ணமாள்பி
ப4க்தப3லிராஜ யக்ஞபூர்த்தி மாடி3ஸித3 வடோ[1]

அந்து3 த3க்ஷக்ருத யக்ஞ ஶிஷ்ட பூர்ண மாடி3ஸிதி3

எதிரிகளை அழிப்பவனே. ஶிஷ்யர்களை காப்பவனே. உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்கள் செய்யும் கர்மங்களின் பலன்களைக் கொடுப்பவனே. பக்தனான பலி சக்ரவர்த்தியின் யக்ஞத்தை பூர்த்தி செய்த வடு வாமனனே. அன்று தக்ஷன் செய்த யாகத்தையும் நீ பூர்ணம் ஆக்கினாய்.

257. ஸ்ரீ ஶுசயே நம:
நிர்து3ஷ்டக்3ஞான ப4க்தியுக் ஸ்தோத்ரத3 விஷய 'ஶுசி'
ஆத3ரதி3 நமோ எம்பெ3 கமலஜ ஸம்ஸ்துதனெ
வேத3த்3ருஷ்டா ஆதி3மனு ப்ரஹ்லாத3 த்3ருவாதி3க3ளு
ருத்3ரப்ரசேதஸக3ள போ4தி4ஸித்3த3 த்வத்பர ஸ்தோத்ர

யதார்த்த ஞான, பக்தி, ஸ்தோத்திரங்களின் விஷயனே. ஶுசியே உனக்கு பக்தியுடன் நமஸ்காரங்களை செய்கிறேன். பிரம்மனால் வணங்கப்படுபவனே. வேதங்களால் அறியப்படுபவனே. ஆதி மனுவான ஸ்வாயம்புவ, பிரகலாத, த்ருவ, தேவர்கள் ஆகியோர் உன்னை புகழ்ந்தனர்.

258. ஸ்ரீ ஸித்3தா4ர்த்தா2ய நம:
அனாதி3ஸித்3தி3 நித்யவேத3வாக்யக3ள் ஹேளுவந்தெ
ஹிந்தி3ன முந்தி3ன இந்தி3ன கால ப்ராணிக3ளிகெ3
அனன்யாதீ4ன ஸ்வாமியாகி3ஹ 'ஸித்3தா4ர்த்த2னெ' நமோ
பூர்ண ஆப்தகாம நீனு ப4க்தேஷ்டஸித்3தி4 ப்ரதா3தா

அனாதியான நித்யமான வேத வக்கியங்கள் சொல்வதைப் போல, முக்காலங்களிலும் இருக்கும் ஜீவர்களுக்கு, அன்னம் ஆகியவற்றைக் கொடுக்கும் ஸ்வாமியாக இருப்பவனே. ஸித்தார்த்தனே. உனக்கு என் நமஸ்காரங்கள். நெருங்கிய நண்பன் நீயே. பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவன் நீயே.

259. ஸ்ரீ ஸித்3த4ஸங்கல்பாய நம:
த்ரிகாலஸித்3த4 ஸக்ஞானி பு3த்3தி4 கௌஶல்யதி3ந்த3லி
ஏகசித்த ஸுவிசார நிஶ்சித 'ஸித்3தி4 ஸங்கல்ப'
ஸ்ரீகரனே நமோ நின்னலி கொடு3 நிஶ்சித பு3த்3தி4
ஸ்ரீகஞ்சஜாதி3னுத ஸத்யகாம ஸத்ய ஸங்கல்ப

கடந்த, நிகழ், இறந்த என மூன்று காலங்களிலும் இருப்பவனே. ஸர்வக்ஞனே. ஞானம், வலிமை ஆகியவற்றில் சிறந்தவனே. நல்லறிவைக் கொடுப்பவனே. யதார்த்த ஞானத்தை கொடுப்பவனே. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. உன்னை வணங்குகிறேன். உன்னில் எனக்கு நிச்சய ஞானத்தைக் கொடுப்பாயாக. லட்சுமிதேவி மற்றும் பிரம்மதேவர் ஆகியோரால் வணங்கப்படுபவனே. விரும்பியவற்றை செய்பவனே. நிச்சயித்தபடியே அனைத்தையும் செய்பவனே.

260. ஸ்ரீ ஸித்3தி4தா3ய நம:
ஸக்ஞானிப4க்தரு ரிஷிக3ளு ஸ்தோத்ரமாள்புத3லி
'அஞ்சஸா அஹம்பூர்வ அஹம்பூர்வம்ரூப யுத்3த4வ'
கஞ்ஜ நயனனெ நீனு மாடி3ஸுவி 'ஸித்3தி4த3னே'
அஞ்ஜலீப3த்3த4னாகி3 நமோ எம்பெ3 ஸித்3தி4ப்ரதா3த

ஞானி பக்தர்கள், ரிஷிகள் ஆகியோர் உன்னை வணங்கினால், தாமரைக் கண்ணனே நீயே அவர்களுக்கு அருள்கிறாய். இரு கரம் குவித்து உன்னை வணங்குகிறேன். விருப்பங்களை நிறைவேற்றுபவனே.

261. ஸ்ரீ ஸித்3தி4ஸாத4னாய நம:
ஞானவந்த ப4க்த மாடு3வ ஸ்தோத்ர ரூப ஸாத4ன
வன்னு ஒப்பி ப4க்த ஸாத3னக்கெ தக்க ப2லவன்ன

நீனு கொடு3வியோ 'ஸித்3தி4 ஸாத4ன' நமோ நினகெ3
ஞானிக3ம்ய வாஸுதே3வ மோக்ஷவெம்ப3 ப2லதா3த

ஞானத்துடன் பக்தர்கள் செய்யும் ஸ்தோத்திர ரூபமான ஸாதனைகளை ஏற்றுக் கொண்டு, அதற்கு தக்க பலன்களை நீ கொடுக்கிறாயே. உன்னை நான் வணங்குகிறேன். ஞானிகளால் அறியப்படுபவனே. வாசுதேவனே. மோட்சத்தை கொடுப்பவனே.

262. ஸ்ரீ வ்ருஷாஹிணே நம:
வேதோ3க்த ஸ்தோத்ரக3ணதி3ம் ஸம்ருத்த நித்ய ஆனந்த3
உத்3ரேக நிதய் ப்ரவ்ருத்த 'வ்ருஷாஹி' நமோ நினகெ3
வேத3த4ர்ம பரிபால த4ர்மப்ரவர்த்தக ஸ்வாமி
ஸதா3ஸுமங்க3ள நின்ன த3ர்ஷானந்த3 ஏனெம்பெ3

வேத மந்திரங்களால் அறியப்படுபவனே. நித்யானந்தனே. வ்ருஷாஹிணே உனக்கு என் நமஸ்காரங்கள். வேதங்களை, தர்மங்களை காப்பவனே. தர்மங்களை நியமித்தவனே. ஸ்வாமியே. எப்போதும் மங்களகரமாக இருப்பதான உன்னை தரிசனம் செய்யும் ஆனந்தத்தை நான் என்னவென்று சொல்வேன்?.

263. ஸ்ரீ வ்ருஷபா4ய நம:
ஸோமரஸ ப்4ரண காரண 'வ்ருஷப4னே' நமோ
த4ர்மமய நின்ன ஆராதி4ஸுவ ப4க்தருக3ள
ஆமய ஸம்ஶய ஞான களெது3 ஹ்ருத3யாப்3ஜதி3
ஸோம ரவி தட்டித்தாரா அந்த3தி3 ப்ரகாஶிஸுவி

அமிர்தம் வெளி வருவதற்கு காரணம் ஆனவனே. வ்ருஷபனே உனக்கு என் நமஸ்காரங்கள். தர்மமயனே. உன்னை ஆராதிக்கும் பக்தர்களின் மன நோய்களை, சந்தேகங்களை களைந்து, அவர்களின் இதயங்களில், சந்திரன், சூரியன், நட்சத்திரங்களைப் போல ஒளிர்கிறாய்.

264. ஸ்ரீ விஷ்ணவே நம:
ஸுஶ்ரேஷ்ட ப3லசேஷ்டாதி3கு3 புருஷார்த்த2க3ள்கு3 நீ
காரணனு 'விஷ்ணு' நமோ ஸ்ரீபதியே வாய்வந்தஸ்த2
உருப3ல சேஷ்டகத்வாதி3 ஸுபூர்ணரூப நீனு
ஸுர நராதி3க3ளிகெ3 ப3லாதி3ப்ரத3 தீ4ஜனக

மிகச் சிறந்ததான அனைத்து செயல்களுக்கும், புருஷார்த்தங்கள் கிடைப்பதற்கும் நீயே காரணன் ஆகிறாய். விஷ்ணுவே உனக்கு நமஸ்காரங்கள். ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. வாயுதேவரின் அந்தர்யாமியானவனே. அபாரமான செயல்களை செய்பவனே. பூர்ண ரூபனே. ஸுர, நரர்களுக்கு வலிமை முதலான அனைத்தையும் அருள்பவனே. ஞானத்தை அருள்பவனே.

265. ஸ்ரீ வ்ருஷபர்வணே நம:
ஶ்ரேஷ்ட ஸ்தோத்ர ரூப ஸாத4னக3ளன்ன பூரெயிஸுவ
ஶ்ரேஷ்ட த4னப2லாதி3க3ளிந்த3 'வ்ருஷபர்வா' நமோ
ப்3ரஷ்டதனவில்லதா3சாரவந்த க்ருதபுண்ய
ஶ்ரேஷ்டஸாத4ன ப2லவன்னீவ கருணாகரனு

சிறந்ததான ஸ்தோத்ர ரூப ஸாதனைகளை, சிறந்த தனம், வலிமை ஆகியவற்றை அருளி நிறைவேற்றுபவனே. வ்ருஷபர்வனே உனக்கு என் நமஸ்காரங்கள். குறைவில்லாத புண்ணியங்களை, சிறந்த ஸாதனைகளுக்கான பலன்களை அருள்பவனே. கருணைக்கடலே.

266. ஸ்ரீ வ்ருஷோத3ராய நம:
ஶ்ரேஷ்டாஸ்மதீ3யரிந்த3 ஶ்ரேஷ்ட பரகீயரக3ள

இஷ்ட பரஸ்பரதி3 ஸங்க3ம மாடி3ஸுவந்த2
'வ்ருஷோத3ர' நமோ புண்யோத3ர ப்ரிய க3ங்கா3பித
புஷ்பப4வ பூஜித த்ரிவிக்ரம ஜயஜயது

சிறந்த அறிஞர்களை சிறந்த கற்றறிந்தவர்களுடன் ஒருவருக்கொருவர் ஸங்கத்தை செய்பவனான 'வ்ருஷோதரனே' உனக்கு என் நமஸ்காரங்கள். கங்கையின் பிதனே. புஷ்பங்களால் பூஜிக்கப்படுபவனே. த்ரிவிக்ரமனே. உனக்கு மங்களம் உண்டாகட்டும்.

267. ஸ்ரீ வர்த்3த4னாய நம:
ப4க்தஸஜ்ஜன ஸுக2தா3த ஶத்ருஸுக2 நாஶக
'வர்த்3த4ன' நமோ எம்பெ3 நினகெ3 வர்த்த4யதி ஸ்வீயான்
ஸ்ரீவ நீ ப4க்தரிகெ3 த4னதா4ன்யாதி3க3ளன்னீவி
தத்3மத3 தூ3ரமாடி3 ஹெச்சிஸுவி ஞானத4னவ

பக்தர்களுக்கு, ஸஜ்ஜனர்களுக்கு சுகத்தை அருள்பவனே. எதிரிகளின் சுகத்தினை அழிப்பவனே. வர்த்தனனே உனக்கு என் நமஸ்காரங்கள். நீ உன் பக்தர்களுக்கு தன, தான்யாதிகளை கொடுத்து அருள்கிறாய். அவர்களின் கர்வத்தினை விலக்கி, ஞானத்தினை அதிகரிக்கிறாய்.

268. ஸ்ரீ வர்த்த4மானாய நம:
ஸ்தோத்ர தன்னல்லி யோஜனமாள்ப 'வர்த்த4மான' நமோ
நித்யப்ரவ்ருத்தனு ஸம்பூர்ண கு3ணக3ணார்ணவனு
நித்யஸம்ருத்3த4 மஹா ஐஷ்வர்யபூர்ண ஸர்வேஶனு
'நித்யோ நித்யானாம் சேதன சேதனானாம்' எந்து3 ஸ்ருதி

தனக்கு ஸ்தோத்திரம் செய்பவர்களை அருள்பவனே. வர்த்தமானனே உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து காலங்களிலும் இருப்பவனே. முழுமையாக குணங்கள் அனைத்தையும் கொண்டவனே. எப்போதும் திருப்தி உள்ளவனே. மஹா ஐஶ்வர்ய பூர்ணனே. ஸர்வேஶனே.

269. ஸ்ரீ விவிக்தாய நம:
பாபாதி3 தோ3ஷ வியோக3வுள்ளவனு 'விவிக்தனெ'
ஸ்ரீப நமோ ஸர்வதோ3ஷக3ந்தா4தி3தூ3ரனு ஷு3த்3த4
அபஹதபாப்மனு அபிபாஸ ஆனந்த3மய
ஸுபவித்ர கேவல ஏகாந்தப4க்த பரமேஷ்ட

பாவம் முதலான தோஷங்கள் அற்றவனே. விவிக்தனே உனக்கு என் நமஸ்காரங்கள். லட்சுமிதேவியின் தலைவனே. எவ்வித தோஷங்களும் இல்லாதவனே. குற்றம், குறைகள் இல்லாதவனே. ஆனந்தமயனே. பவித்ரமானவனே. ஏகாந்த பக்தர்களுக்கு அருள்பவனே.

270. ஸ்ரீ ஶ்ருதிஸாக3ராய நம:
ஸ்தோத்ரக3ளிந்த3 ஸதா3 ஸம்பூர்ண ஸாக3ரவத் நீனு
'ஶ்ருதிஸாக3ரனே' நமோ 'நாராயணபராவேதா3:
வேதே3 ராமாயணேசைவ புராணே பா4ரதேதத2
ஆதா3வந்தேச மத்4யேச விஷ்ணு: ஸர்வத்ர கீ3யதே'

ஸ்தோத்ரங்களால் வணங்கத்தக்கவனே. முழுமையாக ஸாகரம் போன்றவனே. ஶ்ருதிஸாகரனே உனக்கு என் நமஸ்காரங்கள். வேதங்கள், ராமாயணத்தில், புராணங்களில், பாரதத்தில் என அனைத்திலும் - துவக்கத்தில், நடுவில், முடிவில் என விஷ்ணு அனைத்து இடங்களிலும் இருக்கிறான் என்று ஸ்ருதியால் புகழப்படுபவனே.

271. ஸ்ரீ ஸுபு4ஜாய நம:
ப்ரக்ருதேபர: நீனு அப்ராக்ருதவாகி3ருவ

அகளங்க ஸம்பூர்ணானந்த3 விஶேஷானுப4வி
ஸுக2பு4க் 'ஸுபு4ஜ' நமோ ஸுப4க்த ஸாது4ஜனகெ
ஸுகா2னுப4வவீவி ஸுபு4ஜ ஸர்வதா4ரகனு

அனைத்து இடங்களிலும் வியாபித்திருப்பவன் நீயே. அப்ராக்ருதமான தேகத்தை கொண்டவனே. களங்கங்கள் அற்றவனே. முழுமையான ஆனந்தமயனே. ஸஜ்ஜனர்களுக்கு விஶேஷமான அனுபவங்களை (முக்தியை) கொடுப்பவனே. அனைத்தையும் தன் தேகத்தில் தரித்திருப்பவனே.

272. ஸ்ரீ து3ர்த4ராய நம:
ஶத்ருக3ளிந்த4ரிஸல்கெ அஷக்ய 'து3ர்த4ர' நமோ
உரத3லப்பிகொண்ட3 பூதனி த4ரிஸலாக3தெ3
ஹீரி நீ அவளன்ன கெளகெ3 பீ3ளிஸிதி3 ஹாகே3
பி3ருகா3ளி அஸுர நின்ன ப3லதாளதெ3 பி3த்3த3

எதிரிகளால் வெல்லப்பட முடியாதவனே. 'துர்தரனே' உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னை கட்டிக் கொண்ட பூதனி, உன்னை விலக்க முடியாதவாறு செய்து, அவளை கீழே தள்ளினாயே. அப்படியே சூறாவளியாக வந்த அசுரன், உன்னுடைய வலிமையை தாங்க முடியாமல் கீழே விழுந்தான்.

273. ஸ்ரீ வாக்3மினே நம:
வேதா3தி3ரூப வாக்3விஶ்ரேஷ்ட 'வாக்3மீ' நமோ நினகெ3
மது4ரதர க3ம்பீ4ரபா4ஷி நீனெந்து3 ப்ரக்2யாத
ஸ்ரீத3 நின்னய வேத3 உச்சாரணவே கா3யனவு
சேதனா சேதன ஸம்ரக்ஷணெ த்ராண நீ கா3யத்ரி

வேதங்களால் போற்றப்படுபவனே. சிறந்த வாக்வலிமையை கொண்டவனே. வாக்மினே உனக்கு என் நமஸ்காரங்கள். இனிமையாக, கம்பீரமான பேசுபவன் என்று நீ புகழ் பெற்றிருக்கிறாய். ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. வேத உச்சாரணை என்பது உன்னுடைய புகழை பாடுவதே ஆகும். சேதன அசேதன என அனைவரையும் காப்பவனே. அனைவருக்கும் நீயே இருப்பிடமாக இருக்கிறாய். காயத்ரி மந்த்ர பிரதிபாத்யனே.

274. ஸ்ரீ மஹேந்த்3ராய நம:
ப3ஹுவ்யாப்திவுள்ளவனு பூ4மிய கொடு3வவனு
'மஹேந்த்3ரனே' ஸர்வதா3 நமோ எம்பெ3 நினகெ3 ஸ்ரீஶ
மஹேஶ்வர்யவந்த மஹோஜ்வல ஸ்வகாந்திமந்த
மஹீதா3ன கொட்ட பரஶுராம பூ4வராஹ

அனைத்து இடங்களிலும் வ்யாப்தி உள்ளவன். அனைவருக்கும் அருள்பவனே. மஹேந்த்ரனே உனக்கு என்னுடைய நமஸ்காரங்கள். ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. மிகப்பெரிய ஐஶ்வர்யங்களைக் கொண்டவனே. மிகச் சிறந்த ஒளி பொருந்தியவனே. தானாகவே ஒளி கொண்டவனே. பரஶுராமனே. பூவராகனே.

275. ஸ்ரீ வஸுதா3ய நம:
த4னவன்ன கொடு3வவ 'வஸுத3னே' நமோ எம்பெ3
த4னமணி மொத3லாத3வ ஸுரப யக்ஷபக3ள
இன்னு ஸுதா4மாதி3 ப4க்தரிகெ3 பாலிஸிதி3
நின்னன்ன கு3ருத்3வார ப4ஜிபர்க்கெ3 த4ன ஸம்ருத்3தி3

செல்வங்களைக் கொடுப்பவனே. வஸுதனே உனக்கு என் நமஸ்காரங்கள். தேவர்களுக்கும், அஸுரர்களுக்கும், மேலும் ஸுதாமா முதலான பக்தர்களுக்கு செல்வம் ஆகியவற்றை (அவரவர்களின்

யோக்யதைக்கேற்ப) கொடுத்து அவர்களை அருளினாய். ஒரு தக்க குருவின் மூலம் உன்னை வணங்குபவர்களுக்கு அபாரமான செல்வம் (ஞானம்) கிடைக்கிறது.

276. ஸ்ரீ வஸவே நம:

த்^{3}ரவ்யக்கெ ஸ்வாமி நீனு 'வஸு' நமோ நமோ நினகெ^{3}
ஸர்வவ்யாபி 'வாஸிதந்தெ ஜக^{3}த்ரயம் வாஸுதே^{3}வ'
ஜீவாச்சாத^{3}ன பரமாச்சாத^{3}ன கர்தனாகி^{3}ஹி
த்^{3}ரவ்ய ஸர்வதொ^{3}ளிருவி ஏக ஏவ பரமாத்ம

த்ரவ்யங்களைக் கொடுப்பதில் நீயே 'வஸு' வாக இருக்கிறாய். உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து இடங்களிலும் வ்யாப்தனாக இருக்கிறாய். மூன்று உலகங்களிலும் இருப்பதால் உனக்கு வாஸுதேவ என்று பெயர். ஜீவாச்சாதன, பரமாச்சாதன என்னும் இரு உறைகளை விலக்குபவனாக நீ அனைவரிலும் இருக்கிறாய். நீ ஒருவனே பரமாத்மன். ஸர்வோத்தமன்.

277. ஸ்ரீ நைகரூபாய நம:

ப^{3}ஹு அஸ்வக^{3}ள மேலெ கொடு^{3}வந்த^2 'நைகரூப'
அஹர்நிஶி நமோ எம்பெ^{3} அஶ்வோத்பாத^{3}க அஶ்வேஷ
பி^{3}ரம்ம ஶிவ வந்தி^{3}த அனந்தரூப ஶ்ருதிக்ஞேய
ப^{3}ஹுத^{3}ஶ ஸஹஸ்ரானந்த விஶ்வரூப ஏகாத்மா

பற்பல குதிரைகளை (செல்வங்களை) அருள்பவனான 'நைகரூபனே' உனக்கு இரவும் பகலுமாக நமஸ்காரம் செய்கிறேன். செல்வங்களை உருவாக்குபவனே. செல்வங்களின் நாயகனே. பிரம்ம ருத்ரர்களால் வணங்கப்படுபவனே. அனந்த ரூபம் கொண்டவனே. ஶ்ருதிகளால் வணங்கப்படுபவனே. பத்து, ஆயிரம், விஶ்வரூப என பற்பல விதமான ரூபங்களைக் கொண்டவனே. ஏகாத்மனே.

278. ஸ்ரீ ப்^{3}ருஹத்^{3}ரூபாய நம:

கு^{3}ணவுள்ள ஸோமரஸ ப்ராபகனு 'ப்^{3}ருஹத்ரூப'
ஆ நமோ சராசர ஸமஸ்தவாத^3 பூ^{4} க^{3}க^{3}ன
கு^{3}ணதே^{3}ஶ காலவஸ்து வ்யாப்தனு பரிச்சேத^3
நினகி^{3}ல்ல நீ அணோரணீயான் மஹிதொமஹீயான்

ஸோமரஸத்தினை வரவழைத்தவனே 'ப்ருஹத்ரூபனே' உனக்கு என் நமஸ்காரங்கள். சராசரமான அனைத்து ஜீவர்களிலும் - பூமியில், வானில் இருக்கும் அனைத்து ஜீவர்களிலும் - குண, தேஶ காலங்களால் அவற்றில் நிறைந்திருப்பவனே. உனக்கு எவ்வித மாற்றங்களும் இல்லை. நீ அணுவை விட சிறியவனாகவும், பெரியதைவிட பெரியதாகவும் இருக்கிறாய்.

279. ஸ்ரீ ஶிபிவிஷ்டா^{2}ய நம:

ஶிபிவிஷ்ட^2 நீ ஹவிஸ்ஸலி ப்ரவேஶ மாள்பி நமோ
ஶிபி எம்ப^3 காஷ்ட^{2}ஸ்த^2 அக்^{3}ன்யந்தர்யாமி 'ஶிபிவிஷ்ட^2'
ஶிபி எம்ப பஶு ஆவிஷ்ட^2 அந்தராத்ம ஶிபிவிஷ்ட^2
ஶிபிவிஷ்ட^2 ஸர்வஸ்த^2 பஶ்வாதி^{3} யக்ஞவஸ்த்வந்தஸ்த^2

ஶிபிவிஷ்டனே நீ - யாகங்களிலும் போடும் ஹவிஸ்ஸில் பிரவேசம் செய்கிறாய். உனக்கு என் நமஸ்காரங்கள். ஶிபி என்னும் காஷ்டத்தில் இருக்கும் அக்னியின் அந்தர்யாமியாக இருக்கிறாய். ஶிபி என்று பசுக்களில் இருக்கிறாய். அந்தராத்மத்திலும் இருக்கிறாய். பசுக்களில், யக்ஞங்களில் நீயே இருக்கிறாய்.

280. ஸ்ரீ ப்ரகாஶனாய நம:

யக்ஞகர்த்ரு கொடு^{3}வ த^{3}க்ஷிணெய ப்ரகாஶமாள்ப
'ப்ரகாஶனே' நமோ ஸூர்ய ஸோமாதி^{3}க^{3}ள பா^{4}ஸகனே

ப்ரகர்ஷேண ஸுக2 அனுப4வ மாள்பானந்த3மய
ப4க்தர ஹ்ருத் பத்3மதி3ம் ஜ்வலிஸுவ ஆகாஶ நாம

யக்ஞுங்களை செய்பவர் கொடுக்கும் தக்ஷிணையினை ஒளிர்விப்பவனே 'ப்ரகாஶனே' உனக்கு என் நமஸ்காரங்கள். சூர்ய சந்திரர்களை ஒளிர்விப்பவனே. உன்னை வணங்கும் பக்தர்களின் மனதில் இருந்துகொண்டு ஆனந்தத்தைக் கொடுத்து ஒளிர்விப்பவனே. ஆகாஶநாமகனே.

281. ஸ்ரீ ஓஜஸ்தேஜோத்3யுதி1 த4ராய நம:
ஓஜஸ்தேஜஸ்ஸு ப்ரகாஶகத்வ த4ர்மவுள்ளவ
'ஓஜஸ்தேஜோத்3யுதி த4ரனே' நமோ எம்பெ3 நினகெ3
ஓஜஸ் ஸாமர்த்4யப3ல தேஜஸ்காந்தி யஶஸ்த்3ருதி
வாக் முதலான இந்திரியாபிமானி தேவதைகளுக்கு உன் தொண்டை (தாடை) முதலான இடங்களை கொடுத்திருக்கிறாய். நீயே ஸ்தானத. உன்னை நான் வணங்குகிறேன். உன் இந்திரியங்களிலிருந்து அவரவர்கள் உற்பத்தி அடைந்து, கடைசியில் அந்த இந்திரியங்களிலேயே அவர்கள் லயம் அடைகின்றனர்.

394. ஶ்ரீ த்4ருவாய நம:

நிஶ்சலனாத3வ நீனு 'த்4ருவனெந்தெ3னிபி' நமோ
நீ சலிஸதெ3 ஸர்வதே3ஶகாலதி3 வ்யாபிஸிஹி
குஜல தேஜவாயு க2ம் மன அஹம் மஹதா3தி3
அசர அசரத3லி ஸ்தி2ரஸ்தா2யி ஸத்தாதி3தா3த

சஞ்சலம் அற்றவன் நீ. த்ருவனே. நீ அனைத்து காலங்களிலும், வ்யாபித்திருக்கிறாய். தண்ணீர், நெருப்பு, வாயு, மஹதாதி அனைத்து இடங்களிலும் நீ வ்யாபித்திருக்கிறாய். அனைவருக்கும் ஸத் ஆகிய அனைத்தையும் அருள்கிறாய்.

395. ஶ்ரீ பரர்த்3த4யே நம:

கோ3குது3ரெ மொத3லாது3வுக3ள ஸம்ருத்3தி4 ஈவி
ஶ்ரீகர 'பரர்த்3தி4' நமோ நமோ எம்பெ3 ஸதா3பூர்ண
பே3கா3த்3த3வக3ளனு கொட்டு வ்ருத்3தி4மாடி3ஸுவி நீ
அகி2ளேஷ மஹேஶ்வர்ய பூர்ண நீ ஸௌபா4க்3யதா3த

பசு, குதிரை முதலானவற்றை உற்பத்தி செய்கிறாய். ஶ்ரீகரனே. பரர்த்திதனே உனக்கு என் நமஸ்காரங்கள். எப்போதும் பூர்ணமானவனே. அனைவருக்கும் தேவையானவற்றைக் கொடுத்து, அனைத்தையும் / அனைவரையும் நீ வளர்க்கிறாய். மஹைஶ்வர்ய பூர்ணனே. நீ அனைவருக்கும் நலன்களையே கொடுக்கிறாய்.

396. ஶ்ரீ பரமாய நம:

ஜராதி3ரஹிதராகி3ஹ நின்ன ஸ்வரூப ஞான
இருவ நீ 'பரம' நமோ எம்பெ3 ஸதா3 தோ3ஷரஹித
த4ரணீதே3வி ஸம்பா4ஷிஸித கொரவஞ்சிரூப
ஜராயுத1வல்ல லோகவிட3ம்ப3ன சின்மாத்ரவு

பிறப்பு, இறப்பு, முதுமை ஆகிய எதுவும் அற்றவனே. உன்னுடைய ஸ்வரூப ஞானத்தை கொண்டவனே. பரமனே. உனக்கு என் நமஸ்காரங்கள். எப்போதும் நீ தோஷ ரஹிதன். உன் திருமணத்திற்காக கொரவஞ்சி ரூபம் அணிந்து தரணிதேவியிடம் பேசியவனே.

397. ஶ்ரீ ஸ்பஷ்டாய நம:

யக்3ஞதி3 அபி4வ்யக்தனாகு3வ 'ஸ்பஷ்ட' நமோ எம்பெ3
யக்ஞபூஜா ஸ்தோத்ர ஸவைராக்3ய ஞானயுக் ப4க்தி
சர்யக்கெ மெச்சி ஸ்வேச்செயலி வ்யக்தவாகு3வி மனு
யக்ஞ நாம ஈஶன்ன ஸ்துஸிஸெ ப3ந்து3 ரக்ஷிஸித3

யக்ஞத்தினால் (நித்ய கர்மானுஷ்டங்களால்) மகிழ்ந்து அருள்பவனே. ஸ்பஷ்டனே உனக்கு என் நமஸ்காரங்கள். யக்ஞ, பூஜை, ஸ்தோத்திரம், சிறந்த வைராக்கியம், ஞானத்துடன் கூடிய பக்தி, ஆகிய இவற்றிற்கு மெச்சி, உன் இஷ்டப்படியே நீ பக்தனுக்கு தரிசனம் அளிப்பாய். ஸ்வாயம்புவ மனு, யக்ஞ நாமகனான உன்னை வணங்கியதால் நீ வந்து அவனை காத்தாய்.

398. ஶ்ரீ துஷ்டாய நம:

ஸர்வதா3 ஆனந்த3 அனுப4வஶாலி 'துஷ்ட' நமோ
நிர்வ்யாஜ ப4க்தியலி ஸ்துதிஸி பூஜிதரல்லி
தே3வ நீ ஸந்தோஷனாகி3 அனுக்3ரஹ ஒத3கு3வி
ஸேவெ ப4க்திய மெச்சி ஹனுமகா3லிங்க3ன இத்தி

எப்போதும் ஆனந்தத்தையே அனுபவிப்பவனே. துஷ்டனே உனக்கு என் நமஸ்காரங்கள். எந்த வித பலன்களையும் எதிர்பார்க்காமல் பக்தியுடன் உன்னை வணங்குபவர்களில் ஸ்வாமியே நீ மகிழ்ந்து

அருள்கிறாய். ஹனுமந்தனுக்கு அவரின் இப்படிப்பட்ட பக்தியை மெச்சி, ஆலிங்கனத்தை (ஸஹபோகத்தை) அளித்தவனே.

399. ஸ்ரீ புஷ்டாய நம:
ப³லாதி³க³ளிந்த³ பூர்ணஸ்வரூப நீ 'புஷ்ட' நமோ
ப³லானந்தா³தி³க³ள் புஷ்டி ஸர்வாவதாரதி³ ஸமா
ஜ்வலிஸுதி ஸூர்யமண்ட³ல மத்⁴யெ ஸ்ரீ நாராயண
ப³லமூர்த்தி வாயு ஸரஸ்வதியிந்த³ ஸம்ஸ்துத்யனு

பலம் (வலிமை) ஆகியவற்றை பூர்ண ஸ்வரூபனாக இருப்பவனே. புஷ்டனே உனக்கு என் நமஸ்காரங்கள். பல, ஆனந்த ஆகியவற்றை முழுமையாகக் கொண்டவனே. அனைத்து அவதாரங்களிலும் சமமானவனே. சூர்ய மண்டலத்தின் நடுவில் இருந்து ஜொலிப்பவனே. ஸ்ரீ நாராயணனே. பிரம்மா, வாயு, சரஸ்வதி என அனைவராலும் வணங்கப்படுபவனே.

400. ஸ்ரீ ஶுபே⁴க்ஷணாய நம:
தே³வாதி³க³ளல்லியு ப்ரதிஹதவாக³த³ ஆக்ஞெ
யாவாக³லுவுள்ள 'ஶுபே⁴க்ஷண' நமோ நமோ எம்பெ³
ஐஷ்வர்யஶீல கமலாயதேக்ஷண ஸுஶுப⁴தா³
ஸர்வஸௌபா⁴க்³ய ஆயுராரோக்³ய ப⁴க்த்யாதி³க³ளீவி

அனைத்து தேவர்களிலும்கூட விட்டுவிடாமல் நீ இருந்து, அவர்களுக்கு ஆணையிடுகிறாய். ஶுபேக்ஷணனே உனக்கு என் நமஸ்காரங்கள். அபாரமான செல்வ சம்பத்தினை கொண்டிருப்பவனே. தாமரைக் கண்ணனே. அனைத்து நலன்களையும் அருள்பவனே. அனைத்து சௌபாக்கியங்களையும், ஆயுள், ஆரோக்யம் ஆகியவற்றை உன் பக்தர்களுக்கு நீ அருள்கிறாய்.

கு³ருக³ மத்⁴வக³ ஸரஸிஜாஸனபித ஸ்ரீஶ
விரஜ கல்யாணதம ஸுகு³ணாப்³தி⁴ ஸர்வகர்த்த
'ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ' ஸஹஸ்ர நாமனே நமோ
நீ ரசிஸி நுடிஸித்³து³ அர்ப்பிதவு ப்ரீதனாகோ³ ||ப

|| ஐந்தாம் ஸந்தி முடிந்தது ||
||ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து||

***

ஆறாம் ஸந்தி

கல்யாணதம ரூப அனக⁴ ஸுகு³ணார்ணவனெ
மாலக்ஷ்மிபதி பி³ரம்ம விஶ்வாக்²ய விஷ்ணு வஷட்கார
ஶீல ஜீவோத்தம வர வாயு பி³ரம்மதா⁴மன ஹ்ருத்
கீலாலஜாந்தஸ்ய பரமாத்ம கேஶவ நமஸ்தே ||ப

401. ஸ்ரீ ராமாய நம:
அமித ப³லரூபனெ 'ராம' நமோ நமோ எம்பெ³
ரமாதே³வி ஸீதாரமண ஸ்ரீராம ப⁴த்³ர பாஹி
அமல பூர்ணானந்த³ லோகரமண ராமசந்த்ர
ரமதீ ரமயதீ ஹனுமதா³தி³ ப⁴க்தஸேவ்ய

எல்லையற்ற பல ரூபத்தைக் கொண்டவனே. ஸ்ரீராமனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ரமாதேவி, ஸீதாதேவியின் ரமணனே. ஸ்ரீராமபத்ரனே எங்களை அருள்வாயாக. களங்கமற்ற பூர்ணானந்தனே. உலகைக்

காப்பவனே. ஸ்ரீராமசந்திரனே. ஸ்ரீலட்சுமிதேவி, பிரம்மன், வாயுதேவர் ஆகிய அனைத்து பக்தர்களாலும் வணங்கப்படுபவனே.

402. ஸ்ரீ விராமாய நம:

ஶ்ரேஷ்ட அக்3ன்யாதி3 தே3வஸ்வாமியே 'விராம' நமோ
ஶ்ரேஷ்டதம ஸர்வக்ஞ ஸுக2பூர்ண அனக4 ரமா
ஆஶ்லிஷ்டனு நீ ப3லானந்த3 ஸக்ஞான பூர்ணராம
கட்டிஸி ஸேதுவ யுத்3த4 மாடி3 ராவணனன்ன கொந்தி3

மிகச் சிறந்தவனே, ஸர்வோத்தமனே, ஸ்வாமியே. விராமனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸர்வக்ஞனே. சுகபூர்ணனே. அழிவில்லாதவனே. ஸ்ரீரமாதேவியுடன் எப்போதும் இருப்பவனே. பல, ஆனந்த, சுக, ஞான பூர்ணனாக இருக்கிறாய். கடலில் ஸேதுவை கட்டி, ராவணனுடன் போர் புரிந்து, அவனை கொன்றாய்.

403. ஸ்ரீ விரஜாய நம:

நிஷ்பாப நிர்தோ3ஷ 'விரஜ' நமோ நமோ நினகெ3
ப்ராக்ருத கு3ணத்ரயக3ளிந்3த நீனு நிஸ்ப்ருஹனு
ஸுபவித்ர விக்ஞான ஐஶ்வர்ய உத்தமத்வதி3 'வி'
ஸுபூர்ண ப3லானந்த3த்வ 'ர' அனக4த்வதி3ம் 'ஜ'

பாவங்கள் அற்றவனே. தோஷங்கள் அற்றவனே. விரஜனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ப்ராக்ருத குணங்களான ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களுக்கு நீ அப்பாற்பட்டவன். பவித்ரமானவனே. யதார்த்த ஞானம் கொண்டவனே. அபாரமான செல்வங்களை கொண்டவனே ஸர்வோத்தமனே (ஆகையால் வி). பல, ஆனந்த ஆகியவற்றை முழுமையாகக் கொண்டவனே. (ஆகையால் ர). அழிவற்றவனே (ஆகையால் ஜ).

404. ஸ்ரீ மார்க்கா3ய நம:

ப்ரதிபாத்3யனாகி3ருவி ஶோத்4யவேத3க3ளிம் 'மார்க்க3'
ஸதா3 நமோ ஜ்யோதிர்மய ஸுத3ர்ஶன சக்ரதா4ரி
மோத3ப3ல சித்3ரூப ஸிம்ஹவத் முக2ப்ரகட
ஸாது4ப4க்தஜன பால தே3வரிஷி ஸுரஸ்துத்ய

அனைத்து வேதங்களால் நீ ப்ரதிபாத்யனாக இருக்கிறாய். ஜோதிர்மயனே. மார்க்கனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸுதர்சன சக்ரத்தை தரித்தவனே. சித் ரூபனே. ஸிம்மத்தைப் போன்ற முகத்தைக் கொண்டு, உன் பக்தர்களை காப்பவனே. தேவர்கள், ரிஷிகள் என அனைவராலும் புகழப்படுபவனே.

405. ஸ்ரீ நீயாய நம:

ஸாது4ப4க்த ஜனருக3ளிம் ப்ராப்தனாகு3வ 'நீனு'
ஸதா3 நமோ தே3வரிஷி மனுஷோத்தமாதி3 வந்த்3ய
முக்தி யோக்3ய ஸஜ்ஜனர ஸமூஹக்கெ ஸாது4க்3ஞான
போ4தி4ஸி கைவல்யபத3 தோர்வ ஸ்ரீவாஸாதி3ரூப

உன் பக்தர்களால் நீ அடையப்படுகிறாய். தேவர்கள், ரிஷிகள், மனுஷ்யோத்தமர்களால் நீ எப்போதும் வணங்கப்படுகிறாய். முக்தி யோக்யமான ஸஜ்ஜனர்களின் சமூகங்களுக்கு நீ யதார்த்தமான ஞானத்தை போதித்து, முக்திக்கான மார்க்கத்தை காட்டுகிறாய். லட்சுமிதேவி வசிக்கும் ரூபத்தைக் கொண்டவனே.

406. ஸ்ரீ நயாய நம:

த்3ரவ்யத4ன ப்ராப்திமாள்ப ஔதா3ர்ய கு3ண நிதி4யே
'நய' நமோ வித்த ஞானப4க்தி ஆயுராரோக்3யதா3
த்3ரவ்யத4ன மதா3ந்த4னாக3தெ3 என்னிம் ஸத்ஸாத4ன

த³யதி³ மாடி³ஸி ப்ரீதனாகோ³ வாய்வந்தஸ்த² ஸ்ரீஶ

த்ரவிய, தனங்களை பக்தர்களுக்கு அருளும் கருணை உள்ளம் கொண்டவனே. நயனே. உனக்கு என் நமஸ்காரங்கள். நீ எனக்கு அருளும், ஞான, பக்தி, ஆயுள், ஆரோக்ய, த்ரவ்ய, தன ஆகியவற்றால் மதம் கொள்ளாமல், என் மூலமாக ஸத் ஸாதனங்களை செய்வித்து அருள்வாயாக. அதன் மூலம் நீ மகிழ்வாயாக. பாரதி ரமண முக்யபிராணாந்தர்கதனே. லட்சுமிதேவியின் தலைவனே.

407. ஸ்ரீ அனயாய நம:

‘அனயனெந்தெ³னிஸுவி’ நீ சேஷ்டாப்ராபக நமோ
அன்யராரிந்த³லு சேஷ்டிதனல்ல நீனே ஸ்வதந்த்ரனு
அன எந்தெ³னிஸுவ வாயு நியம்யனு நின்னிந்த³
ஆனந்தோ³த்³ரேகதி³ மாடி³ஸுவி ஸர்வஜகச்சேஷ்டா

அனைத்து செயல்களையும் செய்யத் தூண்டுபவனே. அனயனே. உனக்கு என் நமஸ்காரங்கள். வேறு யாராலும் நீ செலுத்தப்படுபவன் இல்லை. நீ ஸ்வதந்த்ரன். அன எனப்படும் வாயுவை நீ நியந்த்ரணம் செய்கிறாய். அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுக்கிறாய். அனைத்து உலகத்தையும் நீயே நியமனம் செய்கிறாய்.

408. ஸ்ரீ வீராய நம:

ஜக³த்ஸர்வவ காபாடு³வுத³ரல்லி ஸமரஹித
ஏகோத்தம நீ ‘வீர’ ஸ்ரீபதியே நமோ நினகெ³
ரக்கஸ பன்னக³ க³ருட³ தை³த்யவாரண ஸிம்ஹ
உக்³ரப³ல வீரராக⁴வ நாரஸிம்ஹ மாம் பாஹி

உலகம் முழுவதையும் காப்பாற்றுவதில் உனக்கு சமம் என்று யாருமே இல்லை. வீரனே. ஸ்ரீபதியே. உனக்கு என் நமஸ்காரங்கள். அசுரர்களை அழிப்பவனே. ஶேஶ சயனனே. கருட வாகனனே. சிம்மத்தைப் போன்ற உக்ர பலத்தை கொண்டவனே. வீரராகவனே. நாரசிம்மனே. என்னை அருள்வாயாக.

409. ஸ்ரீ ஶக்திமதாம் ஶ்ரேஷ்டாய நம:

ஸ்த²வனாதி³ ஶக்திமந்தரலி ஶ்ரேஷ்டதம நீனு
ஸர்வேஶ ‘ஶக்திமதாம் ஶ்ரேஷ்டனே’ நமோ நமஸ்துப்⁴யம்
ஸர்வஸச்சக்தி பூர்ண நீ ‘தத்ர தத்ர ஸ்தி²தோ விஷ்ணு:
ஶத்தச்சக்தி ப்ரபோ⁴த⁴யன்’ எந்து³ நிர்ணய இஹுது³

ஸ்தோத்திரங்களில், மந்திரங்களில் போற்றப்படும் உத்தமன் நீயே. ஸர்வேஶனே. ஶக்திமதாம் ஶ்ரேஷ்டனே. உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து நற்சக்திகளையும் கொண்டவன் நீயே. நிர்ணயத்தில் உன்னைப் பற்றி இவ்வாறு புகழப்பட்டுள்ளது.

410. ஸ்ரீ த⁴ர்மாய நம:

த⁴ன ரத்னாதி³க³ளன்னு யஜமானனல்லி இட்டு
நீனு ஒத³கு³வி ‘த⁴ர்மனே’ நமோ எம்பெ³ நினகெ³
நீனேவெ ஸர்வதா⁴ரகனாகி³ருவுத³ரிம் த⁴ர்ம
நெந்தெ³னிபி மனன தா⁴ரண ஶீலக³ள ஒலிவி

செல்வம், ரத்னம் ஆகியவற்றை உன் பக்தர்களுக்கு அருளி நீ அருள்கிறாய். தர்மனே. உனக்கு என் நமஸ்காரங்கள். நீயே ஸர்வ ஆதாரகனாக இருக்கிறாய். ஆகையால் தர்ம எனப்படுகிறாய். நினைவுத் திறனை, புகழினை நீ அருள்கிறாய்.

411. ஸ்ரீ த4ர்மவிவே நம:

ப3ஹுப3ஹு அபீ4ஷ்டவ ஒத3கி3ஸுவி த4ர்மவித்
அஹர்னிஶி நமோ நினகெ3 உதா3ர ஸ்ரீநிதி4யே
மஹார்ஹ நீ ஸர்வவேத3 த4ர்மபூர்ண திளித3வ
மஹாப4க்த த4ர்மசாரிகொ3லிது3 த4ர்ஶனவீவி

பற்பல அபீஷ்டங்களை உன் பக்தர்களுக்கு எப்போதும் அருள்பவனே, தர்மவித் - உனக்கு என் நமஸ்காரங்கள். கருணாபூர்ணமான ஸ்ரீநிதியே. சிறந்தவனே. அனைத்து வேதங்களையும், தர்மங்களையும் முழுமையாக அறிந்தவனே. உன்னுடைய சிறந்த பக்தனுக்கு, தர்மங்களை சரியாக பின்பற்றுபவனுக்கு நீ தரிசனம் அளிப்பாய்.

412. ஸ்ரீ உத்தமாய நம:

உத்க்ருஷ்டதமனாத்3த4ரிந்த3 'உத்தமனு' எந்தெ3னிபி
முகி3து3 கர நமோ எம்பெ3 ஸ்ரீகர நாராயண
ஶக்ராதி3கு3த்தமனு ஶிவ ஶிவகு3த்தம வாயு
வாயுகு3த்தம ஸ்ரீ ஸ்ரீபதிகெ3 உத்தமரு இல்ல

அனைத்திலும் சிறந்தவன் ஆகையால், உத்தமன் என்று அழைக்கப்படுகிறாய். கைகளை வணங்கி உன்னை நமஸ்காரம் செய்கிறேன். ஸ்ரீகர நாராயணனே. இந்திரனுக்கு உத்தமன் சிவன். சிவனுக்கு உத்தமன் வாயு. வாயுவிற்கு உத்தமள் ஸ்ரீ. ஆனால், ஸ்ரீபதியைவிட உத்தமர் என்று யாரும் இல்லை.

413. ஸ்ரீ வைகுண்டா2ய நம:

யாவ ப்ரகாரத3லு விக்4னப்ரதிப3ந்த4கக3ளு
யாவாக3லு எல்லு இல்லத3 க3தி உள்ளவ நீனு
ஸ்ரீவரனே 'வைகுண்ட2னே' நமோ நினகெ3 விகுண்ட2
தே3விஸுத நிர்தோ3ஷ நித்ய ஆனந்த3 நிலயனு

எந்த வழியிலும், எவ்விதமான தடைகளும், பிரச்னைகளும் எப்போதும் வராதவன் நீ. ஸ்ரீவரனே. வைகுண்டனே. உனக்கு என் நமஸ்காரங்கள். விகுண்ட என்னும் தேவியின் மகனே. நிர்தோஷனே. நித்யானந்த நிலயனே.

414. ஸ்ரீ புருஷாய நம:

ஸோமரஸ ப3ஹுவாகி3 அர்ப்பிதவ ஹொந்து3வவ
ஸ்ரீ மனோஹர 'புருஷ' நமோ ஸம்பூர்ண ஐஶ்வர்ய
க்ஷேமபாத்ருத்வதி3 'பு' ஆனந்த பூர்ணவத்வதி3 'ரு'
ஷட்3மஹா ஐஶ்வர்யத்வதி3 'ஷ' எந்து3 நீ பிரஸித்3த4

ஸோமரஸங்களை அதிகமாக சமர்ப்பிப்பவனால் நீ அடையப்படுகிறாய். ஸ்ரீமனோகரனே. புருஷனே. உனக்கு என் நமஸ்காரங்கள். முழுமையான செல்வங்களை கொண்டவன் ஆகையால் 'பு' . ஆனந்த பூர்ணமாக இருப்பதால் 'ரு' . ஆறு வகையாக செல்வங்களை கொண்டவன் ஆகையால் 'ஷ' ஆகவே புருஷ என்று பெயர் பெற்றாய்.

415. ஸ்ரீ ப்ராணாய நம:

ஶத்ருப்ராண அபஹர மாடு3வியோ 'ப்ராண' நமோ
ஸூத்ராத நீனெந்து3 ருத்3ராதி3 தே3வர்க3ளு பே3ட3லு
க்ஷிப்ரத3லேவெ ஶத்ருப்ராணக3ளன்ன கொள்ளுவி நீ
முக்தாமுக்தர ப்ரக்ருஷ்ட சேஷ்டகனு ப்ராண நாம

எதிரிகளின் பிராணனை நீ அழிக்கிறாய். ப்ராணனே உனக்கு என் நமஸ்காரங்கள். எதிரிகளை அழிக்க முடியாத ருத்ர முதலான தேவர்கள், உன்னை வேண்டிக் கொள்ள, நொடிப் பொழுதிலேயே, எதிரிகளின்

பிராணங்களை நீ அழிக்கிறாய். முக்தாமுக்தர்களின் செயல்களை நீயே உள்ளிருந்து செய்விக்கிறாய். ப்ராண நாமகனே.

416. ஸ்ரீப்ராணதா^{3}ய நம:

விவித^{3}வாகி^{3}ஹ ஜன்ம நிவாரக 'ப்ராணத^{3}னே'
ஸர்வதா^{3} நமோ நினகெ^{3} ஶோகாதி^{3} கஷ்டனாஶகனே
ஸர்வதா^{3} ஸம்பூர்ண ஞான ஆனந்தா^{3}தி^{3} ப்ரக்ருஷ்ட நீ
ஸர்வப^{4}க்தருக^{3}ளிகெ^{3} ப்ராணகொட்டு ஸந்தெயிஸுவி

பற்பல வகையிலான பிராணங்களை நிவாரணம் செய்பவனான ப்ராணதனே. உனக்கு எப்போதும் என் நமஸ்காரங்கள். அனைத்து வித கஷ்டங்களையும் பரிகரிப்பவனே. எப்போதும் முழுமையான ஞான, ஆனந்தாதி செல்வங்களைக் கொண்டவனே. அனைத்து பக்தர்களுக்கும் ப்ராணனைக் கொடுத்து நீயே அருள்கிறாய்.

417. ஸ்ரீ ப்ரணவாய நம:

ப்ரக்ருஷ்ட ப^{3}லானந்தோ^{3}த்பாத^{3}கனே 'ப்ரணவ' நமோ
ப்ரக்ருஷ்டத்வதி^{3}ம் 'ப்ர' ஸுக^{2}ப^{3}லசேஷ்டகத்வதி^{3}ம் 'ண'
உத்க்ருஷ்ட நிர்தோ^{3}ஷ ஞானபூர்ணத்வதி^{3}ந்த^{3}லி 'வ'
ஈ ரீதி அஶேஷ கு^{3}ணதா^{4}ர ப்ரணவனு ஸ்ரீஶ

மிகச் சிறந்த வலிமை, ஆனந்தம் ஆகியவற்றை உருவாக்குபவனே. ப்ரணவனே உனக்கு என் நமஸ்காரங்கள். மிகச் சிறந்தவன் ஆகவே 'ப்ர' . சுக, வலிமை ஆகியவற்றை கொண்டிருப்பவன் ஆகவே 'ண' . மிகச்சிறந்த, தோஷங்கள் அற்ற, ஞானத்தை முழுமையாக கொண்டிருப்பதால் 'வ' - இவ்வாறாக அனேக குணங்களைக் கொண்டிருப்பவனே. லட்சுமிதேவியின் தலைவனே.

418. ஸ்ரீ ப்ருத^{2}வே நம:

ப^{4}க்த அர்பித ஹவிஸ்ஸலி ப்ரஸன்ன மன
ஸந்த்ருப்த 'ப்ருது' நமோ ஈ ஸ்தோத்ர ஸ்வீகரிஸோ நீனு
ப^{4}க்தக்ருத த்வத்ப்ரிய ஸ்துதி பூஜா யக்ஞ ஹவிஸ
ஹிததி^{3} நீ கொண்டொ^{3}லிவி ப்ரக^{2}யாத கருணாம்பு^{3}தே^{4}

பக்தர்களின் சமர்ப்பிக்கும் ஹவிஸ்ஸினை மிகவும் மகிழ்ந்து ஏற்றுக் கொள்பவனே. ப்ருதுவே உனக்கு என் நமஸ்காரங்கள். இந்த ஸ்தோத்திரத்தினையும் ஏற்றுக் கொள்வாயாக. பக்தர்களால் செய்யப்படும் ஸ்துதி, பூஜை, யக்ஞ, ஹவிஸ் ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறாய். புகழ் பெற்றவனே. கருணைக்கடலே.

419. ஸ்ரீ ஹிரண்யக^{3}ர்ப்பா^{4}ய நம:

ஹிதரூப மொத^{3}லாத^3 விஷயக^{3}ள க்^{3}ரஹிப
நேத்ராதீ^{3}ந்த்^{3}ரியதா^{3}த 'ஹிரண்யக^{3}ர்ப்ப^{4}னே' நமோ எம்பெ^{3}
ஜாதரூபாத்மகவு பி^{3}ரம்மாண்டக^{3}ர்ப^{4}னு நீனு
ஹிதகர ஸுரமணீய ஸௌந்தர்யஸார சார்வாங்க^3

அனைத்து நல்ல விஷயங்களையும் கிரகிக்கும் கண் முதலான இந்திரியங்களின் தந்தையே ஹிரண்யகர்ப்பனே உனக்கு என் நமஸ்காரங்கள். இந்த பிரம்மாண்டத்தை உன் கர்ப்பத்தில் (உதரத்தில்) வைத்திருப்பவன் நீ. அனைவருக்கும் நலன்களை கொடுப்பவனே. அழகான உருவம் கொண்டவனே.

420. ஸ்ரீ ஶத்ருக^{4}னாய நம:

ஶ்ரேயஸ்ஸாத^{3}னவாகி^{3} உபயோக^3 மாட^{3}லு அர்ஹ
த்^{3}ரவ்யாதி^{3}க^{3}ளொத^{3}கி^{3}ஸுவ 'ஶத்ருக^{4}ன' நமோ எம்பெ^{3}
தோயஜாக்ஷ ஶத்ருக^{4}ன தா^{3}ரித்^{3}ராதி^{3} நாஶகனெ

காயீந்த்3ரிய தோ3ஷ பரிஹரிஸி ஸாத4னகெ3யிஸோ

பயன்படுத்த தகுதியான சிறந்ததான திரவியங்களை அருள்பவனே. ஶத்ருக்னனே உனக்கு என் நமஸ்காரங்கள். சூரிய கிரணங்களைப் போல கஷ்டங்களை பரிகரிப்பவனே. தேகத்தின் தோஷங்களை பரிகாரம் செய்து, ஸாதனைகளை செய்விப்பாயாக.

421. ஸ்ரீ வ்யாப்தாய நம:
வ்யாப்தனாகி3ருவி ஜக3த்3ரக்ஷணெ மாட3லிகெ நீ
'வ்யாப்தனெம்ப3' நாமதி3 கரெஸிகொம்பி3 விஷ்ணோ நமோ
வ்யாப்தனாகி3ருவி ஜக3த்3தா4ரண மாட3லிக்காகி3
ஆப்தகாம நிரபேக்ஷ நிர்லிப்த அவிகாரனு

உலகினை காப்பவனே. அனைத்து இடங்களிலும் நீ வ்யாப்தனாக இருக்கிறாய். வ்யாப்தன் என்று அழைக்கப்படுகிறாய். விஷ்ணுவே உனக்கு என் நமஸ்காரங்கள். உலகை காப்பதற்காக நீ இருக்கிறாய். எதையும் எதிர்பார்க்காதவன். விலகியிருப்பவன். எவ்வித தேக மாற்றங்களும் இல்லாதவன்.

422. ஸ்ரீ வாயுவே நம:
ஜக3த்3ம்ஸ்தி2தனாகி3 ஆனந்த3 ஒத3கி3ஸுவி
ஜக3த்ரக்ஷண மாள்ப 'வாயு' நமோ நமோ நினகெ3
அக3ம்ய ஸ்ரேஷ்டப3ல ஞானாதி3 கு3ண நிதி4யே நீ
ஜக3த்ராண மோக்ஷப்ரத3 பிரப4ஞ்சனாந்தஸ்த2 ஸ்ரீஶ

அனைத்து இடங்களிலும் வ்யாபித்து, மகிழ்ச்சியை கொடுக்கிறாய். உலகை காப்பவனே. வாயுவே உனக்கு என் நமஸ்காரங்கள். எல்லையற்ற சிறந்த வலிமைகளை, ஞானாதி குணங்களைக் கொண்டவனே. நீயே மோட்சத்தை அருள்பவன். பிரபஞ்சத்தில் நிறைந்திருப்பவன். லட்சுமிதேவியின் தலைவன்.

423. ஸ்ரீ அதோ4க்ஷஜாய நம:
ப4க்ஷனீய ஜக3த்தன்னு அத4:ஸ்தா2பன மாள்பி நீ
அக்ஷரனு அன்னாதி3 ஜயஶீல ஸ்ரீ 'அதோ4க்ஷஜ'
ரக்ஷிஸுதி ஸர்வதா3 நமோ எம்பெ3 க்ருதக்3ஞதெயிம்
அக்ஷய ஸஞ்ஞாத்யகி2ள கு3ணநிதி4 அனக4

பிரளய காலத்தில் உண்ட இந்த உலகினை, நீ மறுபடி அதே இடத்தில் ஸ்தாபனை செய்கிறாய். அக்ஷரனே. அன்னாதி அனைத்து செல்வங்களையும் அருள்பவனே. அதோக்ஷஜனே. அனைவரையும் நீ காக்கிறாய். உனக்கு என் நன்றியுடன் கூடிய நமஸ்காரங்கள். எல்லையற்ற சுக்ஞானத்தின் குணநிதியே.

424. ஸ்ரீ ருதவே நம:
அன்ய ப்ரேரக புருஷ யாரு இல்லவு எம்பு3வ
ஞானக்கெ விஷயவாகு3வ நீ 'ருது' நமஸ்துப்4யம்
ஞானிக3ள மோக்ஷ ஸாத4னத்வதி3ம் ருது எம்போ3து3
நீனே ஸ்வதந்த்ர ஸர்வவஶியு ஞானதா3 ஸர்வக்ஞ

உன்னை ப்ரேரணை செய்பவர்கள் யாரும் இல்லை. இத்தகைய ஞானத்திற்கு நீயே விஷயமாக இருக்கிறாய். ருதுவே உனக்கு என் நமஸ்காரங்கள். ஞானிகளின் மோட்ச சாதனத்திற்கு காரணனே. ஸ்வதந்த்ரனே. ஸர்வ ஞானத்தைக் கொண்டவனே. ஸர்வக்ஞனே.

425. ஸ்ரீ ஸுத3ர்ஷனாய நம:
உத்தம ஞானத3 யோக்3யாதி4காரிகெ3 ஈவவ நீனு
'ஸுத3ர்ஶன' நமோ ஸுஷ்டப்ரிய த4ர்ஶனனு நீனு

ஸுத3ர்ஶன ஶோப4ன த3ர்ஶன சக்ர அஸிதா4ரி
த3த்த கபில நரஸிம்ஹ ஹயாஸ்ய வ்யாஸ ஸ்ரீஶ

யோக்ய அதிகாரிகளுக்கு உத்தம ஞானத்தை அளிப்பவனே. ஸுதர்ஶனனே. உனக்கு என் நமஸ்காரங்கள். மிகவும் விரும்பி தரிசனம் பெற வேண்டிய விஷயம் நீ. சுதர்சன சக்கரத்தை கொண்டவனே. தத்தனே. கபிலனே. நரசிம்மனே. ஹயவதனனே. வ்யாஸனே. லட்சுமிதேவியின் தலைவனே.

426. ஸ்ரீ காலாய நம:
அப4க்தருக3ள த4ன அஶ்வ மொத3லாகி3ருவ
ஸம்பத்து ச்சேதிஸுவவனு ‘கால’ நமோ நினகெ3
நீ ப3ந்தி4ஸுவி ச்சேதி3ஸுவி து3ஷ்டர ஞான ஸம்பத்
நீ ப4க்தரிகெ3 ஞான ஸுக2வன்னு ஈவி த3யதி3

உன்னை வணங்காதவர்களை (எதிரிகளை) அவர்களின் குதிரை, ஆகிய அனைத்து செல்வங்களையும் அழிப்பவனே. காலனே. உனக்கு என் நமஸ்காரங்கள். துஷ்டர்களின் ஞான, செல்வங்களை நீ அழிக்கிறாய். பக்தர்களுக்கு ஞான, சுகங்களை அளிக்கிறாய்.

427. ஸ்ரீ பரமேஷ்டி2னே நம:
நின்ன ப4க்தரு ஞானிக3ள மனெக3ளல்லிருவி
ஞான ப4க்தியுத த3த்4யாதி3க3ளன்னு ஸ்வீகரிஸெ
ஞான ப4க்தர ஹ்ருத3யத3ல்லி தத் ஆகாரத3லி
நீனித்3து3 ஸ்வீகரிஸுவி ‘பரமேஷ்டி2’ நமோ எம்பெ3

உன்னுடைய பக்தர்களின் ஞானிகளின் வீடுகளில் நீ இருக்கிறாய். ஞான, பக்தி உடன் சமர்ப்பிக்கப்பட்ட பால் போன்ற நைவேத்தியங்களை ஏற்றுக் கொள்கிறாய். அத்தகைய ஞானத்தை கொண்டவர்களான பக்தர்களின் இதயத்தில், அந்த ஆகாரத்தில் நீ இருந்து, அதனை ஏற்றுக் கொள்கிறாய். பரமேஷ்டியே. உனக்கு என் நமஸ்காரங்கள்.

428. ஸ்ரீ பரிக்3ரஹாய நம:
நின்ன ப4க்தருக3ளன்னு மாத்ர நீ ஸ்வீகரிஸுவி
க4ன த3யாளுவே ‘பரிக்3ரஹனே’ நமோ நினகெ3
நின்ன ஸ்வாமித்வாதி3 மஹாத்ம்ய அரிது நிரந்தர
மன முட்டி ப4ஜிஸுவவரிகெ3 மாத்ர காணுவி

உன் பக்தர்களை மட்டும் நீ அருள்கிறாய். அபாரமான தயாளுவே. பரிக்ரஹனே உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னுடைய ஸர்வோத்தமத்வத்தை அறிந்து மகிமைகளை அறிந்து நிரந்தரமாக உன்னை வணங்குபவர்களை மட்டும் நீ பார்க்கிறாய்.

429. ஸ்ரீ உக்3ராய நம:
ப4க்தர ஸுவாக்யக3ள ஸ்தோத்ரக3ள மேலனகெ
ஸுஸ்தா2ன ரூபனாகி3ஹ ‘உக்3ர’ நமோ நமோ எம்பெ3
ப4க்தரலி உச்சராகி3ஹ பி3ரம்ம ஈஷானாத்3யர்கெ3
முத3வீவி உக்3ர நமோ உத்தமானந்த3மயனே

பக்தர்களின் பிரார்த்தனைகளின், ஸ்தோத்திரங்களின் ரூபமாக இருப்பவனே உக்ரனே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்களில் சிறந்தவர்களான பிரம்ம, ருத்ரர்களுக்கு நீ மகிழ்ச்சியை கொடுக்கிறாய். உக்ரனே. மிகச் சிறந்த ஆனந்தத்தைக் கொண்டவனே.

430. ஸ்ரீ ஸம்வத்ஸராய நம:

ப்ரீதியோக்3யஸுதனந்தெ ப்ரீதி பாத்ர ப4க்தரிகெ3
நதி3 ஸிந்து4 ஸம்யோஜனத3ந்தெ ஸுக2காரி நீனு
ஆது3த3ரிம் 'ஸம்வத்ஸர' எந்தெ3னிபி நமோ எம்பெ3
வேதா3தி3ப்ராப்ய ஸுக2தா3 கால ஸம்வத்ஸர நியந்தா

அன்பிற்கு பாத்திரரான மகனைப் போல, உன் பக்தர்களுக்கு கங்கையைப் போல அபாரமான சுகத்தை கொடுப்பவன் நீ. ஆகையால் 'ஸம்வத்ஸர' எனப்படுகிறாய். உனக்கு என் நமஸ்காரங்கள். வேதாதிகளால் அறியப்படுபவனே. காலனே. ஸம்வத்ஸரங்களை நியமிப்பவனே.

431. ஸ்ரீ த3க்ஷாய நம:

உத்தமத்3ருட4வாத3 ஶர ருஜீகாத3ந்திருவ
அதித்3ருட4னு நீ 'த3க்ஷனெந்தெ3னிபி' நமோ எம்பெ3
அதிபராக்ரமி நீனு க்ஷோணியலி த3ஸ்யுக3ள
வதெ4 மாள்பி ஶீக்4ரதி3 ஜனார்த்3த4ன து3ர்கே3ஶ கல்கி

உத்தமமான, திடமான இருப்பவன் நீ. தக்ஷனே. உனக்கு என் நமஸ்காரங்கள். நீ மிகவும் பராக்ரமி. நொடிப்பொழுதில் எதிரிகளை நீ சீக்கிரமாக அழிக்கிறாய். ஜனார்த்தனனே. துர்க்கையின் தலைவனே. கல்கியே.

432. ஸ்ரீ விஶ்ராமாய நம:

ப3லஶாலி ஶத்ருக3ள ஹிம்ஸக 'விஶ்ராம' நமோ
எல்லோனு எந்தி3கு3 லேஶவு ஶ்ரம நினகெ3 இல்ல
ஶீ3ல ப4க்தரிகெ3 ஶ்ரம பா3ரதெ3 மாடு3வி நீனு
கலுஷ ஶைவக3ள பா3தெ4 களெவி ஸுக்ஞானவீவி

வலிமையான எதிரிகளை அழிப்பவனே. விஶ்ராமனே உனக்கு என் நமஸ்காரங்கள். உனக்கு எப்போதும் எப்படியும் சிரமம் என்பதே இல்லை. உன்னுடைய பக்தர்களுக்கு என்றும் சிரமமே வராமல் நீ செய்விக்கிறாய். அனைத்து கஷ்டங்களையும், துக்கங்களையும் நீ பரிகரிக்கிறாய். உண்மையான ஞானத்தை அருள்கிறாய்.

433. ஸ்ரீ விஶ்வத3க்ஷிணாய நம:

தே3வாதி3க3ளல்லி ஸ்வேச்செயிந்த3 ப்ரகடனாகு3வி
'விஶ்வத3க்ஷிண' நமோ ஜக3த்ஸ்ருஷ்ட்யாதி3 ஸர்வத3லி
தே3வ நீ ஸமர்த்த2 நினகெ3 ஸமரு அதி4கரு
யாவ கால தே3ஶத3ல்லு இல்ல ஸ்ரீபதி ஸர்வேஶ

தேவர்களில் நீ உன் இஷ்டப்படியே வெளிப்படுகிறாய். விஶ்வ தக்ஷிணனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஜகத் ஸ்ருஷ்ட்யாதி அனைத்து செயல்களிலும் நீயே ஸமர்த்தன். தேவனே. உனக்கு சமமானவர்கள், அதிகமானவர்கள் என எந்த காலத்திலும், எந்த தேசத்திலும் யாரும் இல்லை. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. சர்வேஶனே.

434. ஸ்ரீ விஸ்தாராய நம:

விஸ்த்ருதவாகி3ருவ ப3ர்ஹிக3ள் யக்ஞத3லி வுள்ள
'விஸ்தார' நமோ எம்பெ3 யக்ஞ ஸாத4னஸ்வாமி யக்3ஞ
விஸ்த்ருதவாகி3ஹவு நின்னய யஶஸ் லோகத3ல்லி
ஸாது4 ப4க்தபரிபால தை3த்ய கலிஜன ஹந்தா

தர்ப்பைகளில், யக்ஞங்களில் அபாரமாக இருப்பவனே. விஸ்தாரனே. உனக்கு என் நமஸ்காரங்கள். யக்ஞத்திற்கான ஸாதனனே. யக்ஞங்கள் சிறப்பாக முடிய, உன்னுடைய புகழ் உலகத்தில் அதிகமாக பரவுகின்றன. ஸாதுக்களை, பக்தர்களை காப்பவனே. தைத்ய ஜனர்களை அழிப்பவனே.

435. ஸ்ரீ ஸ்தா^{2}வராய நம:
யுத்^{3}த^4 ப்ரஸக்த ப^{4}க்தரிகெ^{3} ப^{3}லாதி^{3}க^{3}ள ஈவு
த்ராதா 'ஸ்தா^{2}வர' நமோ ப^{3}ல வீர்ய தேஜாதி^{3}பூர்ண
பத்மஜாண்ட^{3}வ நிர்மிஸி தத^{3}ந்தஸ்த^2 வஸ்துக^{3}ள
உத்பாதி^{3}ஸி ஆதா^{4}ரனாகி^{3}ருவி ஸத்தாதி^{3} தா^{3}தா

தகுதியான பக்தர்களுக்கு தக்க பலன்களை அருள்பவனே. ஸ்தாவரனே. உனக்கு என் நமஸ்காரங்கள். பல, வீர்ய, தேஜஸ் ஆகியவற்றை முழுமையாகக் கொண்டவனே. இந்த பிரம்மாண்டத்தை நிறுவி, அனைத்து வஸ்துக்களையும் படைத்து, அவை அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கிறாய். அவை அனைத்திற்கும் சக்தியை கொடுப்பவனே.

436. ஸ்ரீ ஸ்தா^{2}ணவே நம:
ப^{4}க்தரிகெ^{3} ப^{3}லாதி^{3}க^{3}ளன்ன கொட்டு ப^{4}க்தர்க^{3}ள
ப^{3}தியல்லி இருவி நீ 'ஸ்தா^{2}ணு' நமோ நமோ எம்பெ^{3}
ப^{4}க்தவர ருத்^{3}ராந்தர்யாமித்வதி^{3} ஸஹ நீ ஸ்தா^{2}ணு
எந்து^{3} ஹேளுவரு ஸ்தா^{2}ணு முக்^{2}யவாச்ய நீனே

பக்தர்களுக்கு பலன்களைக் கொடுத்து, அவர்களின் அருகிலேயே இருக்கிறாய். ஸ்தாணுவே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்களில் சிறந்தவரான ருத்ரனில் நீ அந்தர்யாமியாக இருப்பதாலும், ஸ்தாணு என்று அழைக்கப்படுகிறாய். ஸ்தாணு என்றால் உண்மையான / முதன்மையான அர்த்தம் நீயே.

437. ஸ்ரீ ப்ரமாணாய நம:
ஶத்ருக^{3}ளிகெ^{3} ப^{3}ஹு ஹெச்சு து^{3}க்க^{2}ப்ரத^3 'ப்ரமாணம்'
ஶிர பா^{3}கி^{3} நமோ எம்பெ^{3} முர நரகாதி^{3} ஹந்தா
க்ரூர ஆதி^{3} ஹிரண்யாக்ஷ மது^{4} கைடபாதி^{3}க^{3}ள
தரிதி^{3} பூ^{4}த^{4}ர ஹயாஸ்யாதி^{3}ரூப ப^{4}க்தபால

எதிரிகளுக்கு அதிகமான துக்கத்தை கொடுப்பவனே. ப்ரமாணனே. உனக்கு தலை வணங்கி நமஸ்காரம் செய்கிறேன். முர, நர ஆகிய தைத்யர்களை கொன்றவனே. ஆதி ஹிரண்யாக்ஷ, மது கைடப ஆகிய தைத்யர்களை கொன்றாய். ஹயவதனனே. பக்தர்களை அருள்பவனே.

438. ஸ்ரீ பீ^{3}ஜாய நம:
விஶேஷ தி^{3} ப^{4}க்தரிகெ^{3} ஸுக^{2}வீவி 'பீ^{4}ஜம்' நமோ
மத்ஸ்யாதி^{3} ரூபதி^{3}ம் ஸத்யவ்ரத ஸூரவ்ருந்த^{3}மனு
கிஶோர கஷ்யப ஜாயா பி^{3}ராம்ஹணரு விபீ^{4}ஷண
யஶோத^3 பாண்ட^{3}வ ஸத்^{3}ப^{4}க்த த^{4}ர்ம ஸுக^{2}காரண

உன் பக்தர்களுக்கு விசேஷமான சுகத்தை (முக்தியை) கொடுப்பவனே. பீஜனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸத்ய வ்ரத ராஜனுக்கு மத்ஸ்ய ரூபத்தினால் அருளியவனே. மனுவிற்கு, கஷ்யப ரிஷிகளுக்கு, விபீஷணனுக்கு, யசோதைக்கு, பாண்டவர்களுக்கு என உன் சத் பக்தர்களின் சுகத்திற்கு காரணம் ஆனவனே.

439. ஸ்ரீ அவ்யயாய நம:
நம்ம ரத^{2}க^{3}ளன்ன கஷ்டவில்லதெ^{3} ஶத்ருக^{3}ள
ஸமூஹ முந்தெ^{3} நடெ^{3}ஸுவ 'அவ்யயம்' நமோ எம்பெ^{3}
நம்ம தே^{3}ஹரதா^{2}ந்தஸ்த^{2}னு விஷய ரூப ஶத்ரு

நம்மன்ன பா3தி4ஸதெ3 காய்வ பார்த்த2ஸாரதி2 கிருஷ்ண

நம் தேகம் என்னும் ரதத்தினை எதிரிகளின் முன்னே எவ்வித கஷ்டமும் இல்லாமல் நடத்துபவனே. அவ்யயனே. உனக்கு என் நமஸ்காரங்கள். நம் தேகம் என்னும் ரதத்தில் இருப்பவனே. விஷய ரூபனே. எதிரிகள் நம்மை தாக்காமல், காப்பவனே. ஸ்ரீபார்த்தசாரதியே ஸ்ரீகிருஷ்ணனே.

440. ஸ்ரீ அர்த்தா2ய நம:
ஹரித்3வேஷிக3ள ஸங்க3ப4ய நிவாரிப 'அர்த்த2'
ஶரணு நமோ ஶரணு ப4க்தரன்ன போஷிஸுவி
பொரெதி3 விபீ4ஷணனன்ன ராவண ஸங்க3தி3ந்த3
ஸுரரன்ன பிரஹ்லாத3ன்ன ஹரித்3வேஷி தை3த்யனிந்த3

ஹரி த்வேஷிகளின் சங்கம் என்னும் பயத்தினை போக்குபவனே. அர்த்தனே. உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னை சரணடைந்த பக்தர்களை நீ காக்கிறாய். விபீஷணனை, ராவணனின் சங்கத்திலிருந்து காத்தாய். பிரகலாதனை ஹரித்வேஷியான ஹிரண்யகசிபுவிடமிருந்து காத்தாய்.

441. ஸ்ரீ அனர்த்தா2ய நம:
ப்ராணக3ளல்லி ஆத3ரதி3 விஹாரமாள்ப முக்2ய
ப்ராணனன்ன ஞான அன்னாதி3யல்லி ப்ரவர்த்திஸுவ
'அனர்த்த2' நமோ வாயுதே3வர அஷ்ட அர்த்த2 நீனே
நீ அப4க்தரிகெ3 அர்த்த2ப்ரத3னல்ல ப4க்தேஷ்டதா3

அனைத்து பிராணர்களிலும் இருந்து செயல்களை செய்விக்கிறாய். முக்யபிராணரை, ஞான, அன்னம் ஆகியவற்றில் இருக்குமாறு செய்கிறாய். அனர்த்தனே உனக்கு என் நமஸ்காரங்கள். அஷ்ட கர்த்ருத்வங்களை செய்பவன் நீயே. உன்னை வணங்காதவர்களுக்கு (அபக்தர்களுக்கு) நீ அவர்களின் இஷ்டங்களை வழங்குவதில்லை. பக்தர்களுக்கு அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுகிறாய்.

442. ஸ்ரீ மஹாகோஷாய நம:
மஹாத4ன ஸமூஹபூர்ண 'மஹாகோஷனே' நமோ
மஹா ஜ்யோதிர்மய ஆனந்த3 ப3லாதி3 பூர்ண
மஹாலக்ஷ்மி மாயா ஜயாக்ருதி ஶாந்திதே3வி ஸேவ்ய
மஹான் அன்னமயாதி3 ரூப 'ஸத்யம் ஞானம் அனந்தம்'

மஹா தனங்களின் சமூகங்களை முழுமையாக கொண்டவனே மஹாகோஷனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஜ்யோதிர்மயனே. ஆனந்த பலாதிபூர்ணனே. மஹாலட்சுமி, மாயா, ஜயா, க்ருதி, ஶாந்திதேவி ஆகியோரால் வணங்கப்படுபவனே. அன்னமயாதி அனைத்து கோஷங்களிலும் இருப்பவனே. ஸத்யம் ஞானம் அனந்தம் பிரம்ம என்று அழைகப்படுபவனே.

443. ஸ்ரீ மஹாபோ4கா3ய நம:
விபுல ஆனந்த3மய ஸ்வரூப நீ ஸோமபான
தி3ம் புட்டுவ மஹாஸுக2போ4க3 லீலானுப4விப
ஸ்ரீபதே 'மஹாஸுக2போ3க3' நாம்னனே நமோ எம்பெ3
ஸுபூர்ணானந்த3த்வதி3ந்த3 மஹாபோ4க3னு நீனேவெ

எப்போதும் ஆனந்தமய ஸ்வரூபனாக இருப்பவனே. ஸோமபானத்தினால் பிறக்கும் மஹா சுகபோகத்தினை அருள்பவனே. அனைத்தையும் உன் லீலைகளால் அனுபவிப்பவனே. ஸ்ரீபதியே. மஹாஸுகபோக என்னும் பெயர் கொண்டவனே உனக்கு என் நமஸ்காரங்கள். பூர்ணானந்தத்தைக் கொண்டிருப்பதால் – மஹாபோகன் நீயே ஆகிறாய்.

444. ஸ்ரீ மஹாத4னாய நம:
உரு உதா3ர த4னதா3தா 'மஹாத4ன' நமஸ்தே
வர ப4க்தரிகெ3 தெ3ய்வி ஸம்பத்ப்ரதா3தனு புண்ய
ஜாரிகெ3 பஶு புத்ர தா3ரா தா4ன்ய த்3ரவ்யாதி3க3ள
ஹரி ப்ரீதி ஸாத4னோபியோக3 த்4னவன்ன ஈவி

மிகச் சிறந்த கருணாமயி, செல்வங்களை அளிப்பவனே. மஹாதனனே உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னுடைய பக்தர்களுக்கு அற்புத செல்வங்களை வழங்குபவனே. புண்யவந்தர்களுக்கு, பசு, புத்திரர்களை வழங்குபவனே. தானிய, திரவ்யாதிகளை ஹரி ப்ரீதிக்கான ஸாதனங்கள் என்று நினைத்து பயன்படுத்துபவர்களுக்கு செல்வங்களை அளிப்பவனே.

445. ஸ்ரீ அனிர்விண்ணாய நம:
தோ3ஷோஜ்யுத ஸதா3 நீ தோ3ஷக3ந்த4லேஶவு இல்ல
ஈஷத்3பி ந்யூனதெ இல்லத3 ஸர்வாங்க3 ஸுந்த3ர
புஷ்கல சின்மய ஸாக்ஷாத் மன்மத2 மன்மத2: நீனு
அஷோக ஷுக்ர 'அனிர்விண்ண' பூர்ணானந்த3 நமஸ்தே

தோஷங்கள் அற்றவனே. உனக்கு தோஷங்கள் சிறிதும் இல்லை. சிறிதும் குறைவு அற்றவனே. ஸர்வாங்கனே. ஸுந்தரனே. அபாரமானவனே. சின்மயனே. மன்மதனைவிட மன்மதன் நீயே. சோகங்கள் அற்றவனே. அனிர்விண்ணனே. பூர்ணானந்தமயனே. உனக்கு என் நமஸ்காரங்கள்.

446. ஸ்ரீ ஸ்த2விஷ்டாய நம:
உத்தமோத்தமகு3த்தமனிகெ3 உத்தமனு ஸர்வேஶ
அதிஸ்தூ2ல அப்ராக்ருத 'ஸ்த2விஷ்டனே' நமோ எம்பெ3
சதுர்த3ஶ பு4வன அந்தர்ப3ஹிர்வ்யாப்த ஈஶனே
வந்தே3 ஸ்ரீகூர்ம ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீஶிம்ஶுமார புருஷ

ஸர்வோத்தமனே. ஸர்வேஶனே. திடமானவனே. அப்ராக்ருதமானே. ஸ்தவிஷ்டனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஈரேழு பதினான்கு உலகங்களிலும், உள்ளும் வெளியுமாக அனைத்து இடங்களிலும் வ்யாப்தனே. ஈஶனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீகூர்மனே, ஸ்ரீவிஷ்ணுவே. ஸ்ரீஶிம்ஶுமாரனே புருஷனே.

447. ஸ்ரீ பு4வே நம:
ஸ்ரீ மனோஹர பரம ஏக ஈஶ ஸ்வதந்த்ரனு நீ
அமல உரு ஸச்சக்தி ஸத்தாவந்த 'பூ4:' நமஸ்தே
ஸ்ரீ மத்து பி3ரம்மஶிவாதி3 ஸர்வரு நின்னாதீ4னரு
கூர்ம விஷ்ணு ஶிம்ஶுமார ஸர்வாதா4ர ஶாஸ்வத்பூர்ண

ஸ்ரீமனோஹரனே. ஸர்வோத்தமனே. ஸ்வதந்த்ரனே. அபாரமான சிறந்த சக்தியை கொண்டவனே. புவே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீலட்சுமிதேவி, பிரம்ம, சிவன் ஆகிய அனைவரும் உன்னுடைய அதீனர்களே ஆவர். கூர்மனே. விஷ்ணுவே. ஶிம்ஶுமாரனே. அனைவருக்கும் / அனைத்திற்கும் ஆதாரகனே. நிரந்தரமான. பூர்ணனே.

448. ஸ்ரீ த4ர்மயூபாய நம:
ஸோம ஸம்ஸர்க்க3தி3ம் ஸ்வீகரிஸி பானமாள்பி யோக3
க்ஷேமாதி3 ஸம்ரக்ஷணெ மாள்ப 'த4ர்மயூப' நமஸ்தே
த4ர்மஸ்தா2பக தா4ரக ப4க்தமனத3ல்லி நிந்து
த4ர்மஸாத4ன கெ3யிஸி யக்ஞபூஜெ கொம்பெ3 ப2லதா3

ஸோம ரஸத்தினை ஏற்றுக் கொள்பவனே. பக்தர்களின் நலன்களை காப்பவனே. தர்மயூபனே. உனக்கு என் நமஸ்காரங்கள். தர்மத்தை நிறுவுபவனே. அனைவருக்கும் ஆதாரகனே. பக்தர்களின் மனதில் நின்று, தர்ம ஸாதனைகளை செய்வித்து, யக்ஞங்கள், பூஜைகள் ஆகியவற்றை செய்து கொண்டு, தக்க பலன்களை கொடுப்பவனே.

கு3ருக3 மத்4வக3 ஸரஸிஜாஸனபித ஸ்ரீஶ
விரஜ கல்யாணதம ஸுகு3ணாப்3தி4 ஸர்வகர்த்த
'ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ' ஸஹஸ்ர நாமனே நமோ
நீ ரசிஸி நுடிஸித்3து3 அர்ப்பிதவு ப்ரீதனாகோ3 ||ப

|| ஆறாம் ஸந்தி முடிந்தது ||
|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து||

***

ஏழாம் ஸந்தி

கல்யாணதம ரூப அனக4 ஸுகு3ணார்ணவனெ
மாலக்ஷ்மிபதி பி3ரம்ம விஶ்வாக்2ய விஷ்ணு வஷட்கார
ஶீல ஜீவோத்தம வர வாயு பி3ரம்மதா4மன ஹ்ருத்
கீலாலஜாந்தஸ்ய பரமாத்ம கேஶவ நமஸ்தே ||ப

449. ஸ்ரீ மஹாமகா2ய நம:
மஹாஹிம்ஸெ மாடு3வவர்க3ளன்னு ஸீளுவவனு
'மஹாமக2' நமோ எம்பெ3 த4ர்மக்கு யக்ஞக்கு ஸ்வாமி
மஹாமுனி யக்ஞஹிம்ஸக தாடக ஸுபா3ஹுவ
மஹா அஸுர கேஶி பகாதி3க3ளன்ன முரிதி3

பிறரை துன்புறுத்துபவர்களை கொல்பவனே. மஹமகனே. உனக்கு என் நமஸ்காரங்கள். தர்மங்களுக்கும், யக்ஞங்களுக்கும் நீயே ஸ்வாமியாக இருக்கிறாய். மஹாமுனிவனே. யக்ஞத்தை தடை செய்தவர்களான தாடக, ஸுபாஹு, கேஶி, பக ஆகிய மஹா அஸுரர்களை கொன்றவனே.

450. ஸ்ரீ நக்ஷத்ரனேமினே நம:
நக்ஷத்ர எந்த3ரெ அனஷ்வர அனஷ்வரகர்மா
'நக்ஷத்ரனேமி' நீ மாடு3வி நமோ எம்பெ3 நினகெ3
நக்ஷத்ர ஜ்யோதிஸ்சக்ர ஆதா4ர ஈஷ ஶிம்ஶுமார
நக்ஷத்ர நாஶரஹித ப4க்தர்க்கெ3 ஸ்வாமி ஆதா4ர

நக்ஷத்ர என்றால் நிரந்தரமானவன். நிரந்தரமான செயல்களை செய்பவன். நக்ஷ்த்ரநேமி. நீயே இத்தகைய செயல்களை செய்கிறாய். உனக்கு என் நமஸ்காரங்கள். ஜ்யோதிஷ் சக்ரத்திற்கு ஆதாரகனே. ஈஶனே. ஶிம்ஶுமாரனே. அழிவில்லாதவனே. பக்தர்களுக்கு ஸ்வாமியே நீயே ஆதாரமானவன்.

451. ஸ்ரீ நக்ஷத்ரிணே நம:
ஆபா3தி4த கர்மவுள்ள 'நக்ஷத்ரீ' நமோ நினகெ3
பாபபுண்ய கர்மகாரி பூ4ஜனர வோலு அல்ல
ஸ்ரீப நீ ஸத்யஸங்கல்ப ஆபா3தி4த ஸர்வகர்தா
தீ3ப்த ரவி ஸோம தாராதி3க3ளிகெ3 ஆஶ்ரயனு

தனக்கு எவ்வித பாதிப்புகளும் இல்லாத கர்மங்களை செய்பவனே. நக்ஷத்ரிணே உனக்கு என் நமஸ்காரங்கள். பாப, புண்ய கர்மங்களை மக்கள் மூலமாக செய்விப்பவனே. ஸ்ரீலட்சுமிதேவியின்

தலைவனே. நீ ஸத்யஸங்கல்பன். அனைத்து வித கர்மங்களை செய்பவன். ஒளி பொருந்தியவனே. சூரியன், சந்திரன், நட்சத்திரங்களுக்கு ஒளி கொடுப்பவனே, ஆதரவு அளிப்பவனே.

452. ஸ்ரீ க்ஷமாய நம:
ஸமர்த்த2னாகி3ருவி நீ 'க்ஷம' நமோ நமோ எம்பெ3
ஸமரு அதி4கரு எல்லு எந்தி3கு3 இல்லவந்தா2
ஸமர்த்த2 நீனேவெ ஸர்வகார்ய த3க்ஷனாகி3ருவி
ஸம்யக் பூர்ண ஐஶ்வர்ய ஸ்ரீயஶஸ் வைராக்3ய ஞான வீர்ய

அனைத்து வித கர்மங்களையும் செய்யும் சமர்த்தனாக இருக்கிறாய். நீ க்ஷம எனப்படுகிறாய். உனக்கு என் நமஸ்காரங்கள். உனக்கு சமமானவர்களோ, அதிகமானவர்களோ என்றும் இல்லை. நீயே ஸாமர்த்தியம் கொண்டவன். அனைத்து காரியங்களையும் செய்வித்து, அதனை பார்ப்பவன் நீயே. பூர்ணமானவனே. செல்வம், புகழ், வைராக்கியம், ஞானம், வீரியம் ஆகியவற்றை அளிப்பவனே.

453. ஸ்ரீ க்ஷாமாய நம:
கோ3 நிரோத4ன சே2தி3ஸுவவனு நீ 'க்ஷாம' நமோ
ஸ்வர்ணாக்ஷ ஆதி3தை3த்யன்ன கொந்தி3 பூ4மி உத்3த4ரனே
க்ஷோணிதா3னி நீ ப3லிய நூகி நாக ஶக்ரகி3த்தி
கிருஷ்ண வராஹ வடு வேதோ3த்3த4ர மத்ஸ்ய ஹயாஸ்ய

பசுக்களை காப்பவனே. நீ க்ஷாம எனப்படுகிறாய். உனக்கு என் நமஸ்காரங்கள். ஹிரண்யாக்ஷ என்னும் ஆதி தைத்யனை நீ கொன்றாய். பூமியை காத்தவனே. அசுரனான பலியை நீ மிதித்து, பாதாள லோகத்திற்கு அனுப்பினாய். கிருஷ்ணனே. வராகனே. வாமனனே. வேதங்களை காத்தவனான மத்ஸ்யனே. ஹயக்ரீவனே.

454. ஸ்ரீ ஸமீஹனாய நம:
செந்தா3கி3 ப4க்தர அபீ4ஷ்ட பூர்ண மாடு3வ சேஷ்டா
வந்தனு 'ஸமீஹன' நமோ நமோ எம்பெ3 நினகெ3
சேதனாசேதன ஸர்வத்ர இத்து க்ருதிமாடி3ஸி
ப4க்தக்ருத் பூஜெகொ3லிது3 மோக்ஷஸ்தா2னக்கெ வொய்யுவி

பக்தர்களின் விருப்பங்களை நன்றாக நிறைவேற்றுபவனே. அனைத்து செயல்களையும் செய்பவனே. ஸமீஹனனே. உனக்கு என் நமஸ்காரங்கள். சேதன, அசேதன ஆகிய அனைத்திலும் இருந்து, செயல்களை செய்விப்பவனே. பக்தர்கள் செய்யும் பூஜைக்கு மகிழ்ந்து தரிசனம் அளிப்பவனே. அவர்களை மோட்சத்திற்கு அனுப்புபவனே.

455. ஸ்ரீ யக்ஞ இஜ்யாய நம:
யக்3ஞத3லி பூஜ்ய நீனு 'யக்3ஞ இஜ்ய' நமோ எம்பெ3
யக்3ஞபோ4க்தா ஆது3த3ரிம் யக்3ஞ நீனு யக்3ஞத3லி
பூஜ்யனாது3த3ரிம் இஜ்ய நீனு யஜனீய
யக்3ஞகர்தா யக்3ஞகாரக நின்ன ப்ரீதிகெ3 யக்3ஞ

யக்ஞத்தில் நீயே பூஜ்யனாக இருக்கிறாய். யக்ஞ இஜ்யனே உனக்கு என் நமஸ்காரங்கள். யக்ஞத்தை ஏற்றுக் கொள்பவனே. ஆகையாலேயே, யக்ஞ இஜ்ய என்று அழைக்கப்படுகிறாய். யக்ஞத்தை செய்விப்பவன். யக்ஞத்தை செய்பவன். உன் ப்ரீதிக்காகவே யக்ஞங்கள் செய்யப்படுகின்றன.

456. ஸ்ரீ மஹேஜ்யாய நம:
ப4க்தரனு மஹாபராதி4யாத3ரு காபாடு3வ
மத்து அபராதி4 அப4க்தரன்னு நீ த்யஜிஸுவி
ப4க்தேஷ்ட 'மஹேஜ்ய' நமோ ஸ்ரீ மத்து பி3ரம்மாதி3 பூஜ்ய

பூ4தே3வி ஸ்ரீதே3வி ஸமேத நாராயண வராஹ

பக்தர்கள், அவர்கள் தவறுகளை செய்தாலும் காப்பாற்றுபவனே / அருள்பவனே. பக்தர்கள் அல்லாதவர்களின் தவறுகளை தண்டிப்பவனே. மஹேஜ்யனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீலட்சுமிதேவி, பிரம்மா முதலானவர்களால் வணங்கப்படுபவனே. ஸ்ரீதேவி, பூதேவி சமேத நாராயணனே. வராகனே.

457. ஸ்ரீ க்ரதவே நம:
ப4க்தரிகெ3 ஸுக2 ஒத3கி3ஸுவ 'க்ரதவே' நமோ
ஜக3த்ஸ்ருஷ்டி பாலனாதி3க3ள கர்தா சேஷ்டகனு
ஸ்ரீகரனெ நீ பூர்ணக்ஞானாத்மா ஆது3த3ரிம் க்ரது
அகளங்க ஸுக2சித் ப்ரகாஶமய ப4க்தத்ராதா

பக்தர்களுக்கு சுகத்தை கொடுப்பவனே. க்ரதவே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஜகத் ஸ்ருஷ்டி, காத்தல் ஆகிய செயல்களை செய்பவனே. ஸ்ரீகரனே. நீ பூர்ணஞானத்தைக் கொண்டிருப்பதால், எவ்வித களங்கங்களும் இல்லாதவன். சுக சித் மற்றும் ஒளிமயமானனே. பக்தர்களை காப்பவனே.

458. ஸ்ரீ ஸத்ராய நம:
பூர்ணாயுஷ்யவ ஒத3கி3ஸி ஈவ 'ஸத்ராம்' நமோ
ஹனும மார்க்கண்டே3ய ப3லி விபீ4ஷணாஷ்வத்தா2ம
இன்னு ப3ஹு மஹாத்மரிகெ3 சிரமாயுஷ்யவித்தி
நின்ன ப4க்தர்கெ3 ஆயுஷ்யவ்ருத்3தி4 மாள்பி கருணாளோ

முழுமையான ஆயுளை அருள்பவனே. ஸத்ராயா. உனக்கு என் நமஸ்காரங்கள். ஹனும, மார்க்கண்டேய, பலி, விபீஷண, அஷ்வத்தாம என இன்னும் பல மஹாத்மர்களை சிரஞ்சீவி ஆக்கியவனே. உன் பக்தர்களுக்கும் அவர்களின் ஆயுளை அதிகரிப்பாயாக. கருணாமூர்த்தியே.

459. ஸ்ரீ ஸதாங்க3தயே நம:
ஸாது4 ஸஜ்ஜனரிகெ3 தா3ன கொடுவுத3ரல்லி நீ
பு3த்3தி4வுள்ளவ 'ஸதாங்க3தி' நமோ நமோ நினகெ3
ஹே த3யாநிதே4 மாத4வனே நீ ஞானிப4க்த ப்ராப்ய
ஸதா3க3ம ஹொக3ளுத்தெ ஸூரிப்ராப்ய ஸூர்யனெந்து3

ஸாது ஸஜ்ஜனர்களுக்கு தானம் கொடுப்பதில் (அருள்வதில்) நீ அறிவாளி. ஸதாங்கனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஹே கருணைக்கடலே. மாதவனே. நீ ஞானிகளால், பக்தர்களால் அறியப்படுபவன். ஞானிகளால் அறியப்படும் சூரியன் நீ என்று வேதங்கள் உன்னை போற்றுகின்றன.

460. ஸ்ரீ ஸர்வத3ர்ஶினே நம:
ப4க்தருக3ளிகெ3 தா3னகொடு3வத3க்கோஸ்கர நீ
ஸர்வத்3ரவ்ய இட்டுகொண்டி3ருவி 'ஸர்வத3ர்ஶி' நமோ
இந்து3 ரவி ஶங்க2நிதி4 பத்3மநிதி4 த்3ரவ்யத4ன
ப்ரத3 கைக3ளுள்ளவ ஸ்ரீ ஹ்ரீ யுக் ஸ்ரீகர விபஸ்த2

பக்தர்களுக்கு அருள்வதற்காகவே, நீ அனைத்து த்ரவ்யங்களையும் உன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறாய். ஸர்வதர்ஶியே. உனக்கு என் நமஸ்காரங்கள். சூரிய சந்திரனே. சங்கு, பத்ம, த்ரவ்ய, செல்வம் ஆகியவற்றை அருளும் கைகளைக் கொண்டவனே. ஸ்ரீகரனே.

461. ஸ்ரீ விமுக்தாத்மனே நம:
விஶேஷ லாப4யுக் த்3ரவ்யப்ரத3 'விமுக்தாத்மா' நமோ
ஸ்ரீஶன பூஜாதி3 ஸேவெகு3 ஹரிப4க்த ஸேவெகு3

விஶேஷதி3 உபயோக3 லாப4 மோக்ஷ ஸாத4னவு
விஶேஷஸுக2 முக்தரிகெ3 ஸ்வாமியு விமுக்தாத்மா

விசேஷமான லாபங்களை கொடுக்கும் த்ரவ்யங்களை கொடுப்பவனே. விமுக்தாத்மனே. உனக்கு என் நமஸ்காரங்கள். பூஜை, ஹரிபக்த சேவை ஆகியவற்றிற்கு மோட்சத்தையே அளிப்பவனே. முக்தர்களுக்கு ஸ்வாமியே. விமுக்தாத்மனே.

462. ஸ்ரீ ஸர்வக்3ஞாய நம:
ஸர்வக்3ஞானவுள்ளந்தா2 'ஸர்வக்3ஞ' நமோ நமோ எம்பெ3
ஸர்வகால ஸர்வதே3ஶ ஸர்வ விஷய ஞானவு
ஸர்வஸம்பூர்ணதி3 அனாலோசனெயு நினகு3ண்டு
ஸ்வதந்த்ரதி3 ஞானியு க்ஞ ஸர்வவஸ்துக்ஞ ஸர்வக்ஞ

அனைத்திலும் ஞானம் உள்ளவனே. ஸர்வக்ஞனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸர்வ காலத்தைப் பற்றியும், ஸர்வ தேசத்தைப் பற்றியும், ஸர்வ விஷயங்களைப் பற்றியும் ஞானத்தைக் கொண்டவனே. அனைத்திலும், முழுமையான ஞானம் உனக்கு உண்டு. ஸ்வதந்த்ரனே. ஞானியே. அனைத்து வஸ்துகளைப் பற்றியும் ஞானம் உள்ளவனே. ஸர்வக்ஞனே.

463. ஸ்ரீ ஞானாய நம:
ஸர்வக்3ஞராத3 பி3ரம்மாதி3க3ள சேஷ்டகனு 'ஞானம்'
ஸர்வதா3 நமோ நினகெ3 ஸக்ஞானாதி3க3ள் தே3ஹிமே
ஸ்ரவணாதி3ஜ ஞானவொத3கி3 அபரோக்ஷ்வித்து
ஸர்வத3லி நீ இஷ்டஞான ஜ்வலிஸி பாலிஸுவி

ஸர்வக்ஞர்களான பிரம்மாதிகளை செயல்களை செய்விப்பவனே. ஞானனே. உனக்கு என் நமஸ்காரங்கள். எனக்கு யதார்த்த ஞானத்தை அருள்வாயாக. ஸ்ரவணங்களால் ஞானத்தை அருளி, அபரோக்ஷத்தை அளிப்பவனே. அனைத்திலும் நீ உன் இஷ்டப்படியே இருந்து அனைவரையும் காக்கிறாய்.

464. ஸ்ரீ உத்தமாய நம:
உத்க்ருஷ்டஸ்ரேயஸ்ஸு ஒத3கி3ஸி கொடு3வந்தவனு
'உத்தமம்' நமோ நமோ நமோ எம்பெ3 ஸ்ரீ ஸ்ரீனிவாஸ
ப4க்தரிகெ3 இஹபரத3ல்லி ஸுக2வொத3கி3ஸி
முக்தரிகெ3 நீ அதிஶயானந்த3 ஒத3கி3ஸுவி

மிகச்சிறந்த புகழினை அருள்பவனே. உத்தமனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீனிவாஸனே, உன் பக்தர்களுக்கு இஹ பரங்களில் சுகத்தை அருள்பவனே. முக்தர்களுக்கு நீ மிகச்சிறந்த ஆனந்தத்தை அருள்கிறாய்.

465. ஸ்ரீ ஸுவ்ரதாய நம:
யாவதோ3ஷவு இல்லத3 ஸுந்த3ர ஶுப4கர்மக3ள்
'ஸுவ்ரத' நீ மாடு3வி நமோ எம்பெ3 ஸதா3 நினகெ3
தி3வ்யஶோப4னவு ஜக3த் ஸம்ரக்ஷணாதி3 கர்மவு
வ்ரதவு தத் கர்தா ஸுவ்ரத ஶோப4னகர்த நீனு

நீ செய்யும் செயல்களில் எவ்வித தோஷங்களும் இருப்பதில்லை. ஸுவ்ரதனே. உனக்கு என் நமஸ்காரங்கள். உலகத்தை காப்பதான செயல்களை நீ செய்கிறாய். அதுவே உன் விரதம். அனைத்து மங்களங்களையும் அருள்பவனே.

466. ஸ்ரீ ஸுமுகா2ய நம:

ஒள்ளே குது3ரெயு மொத3லாத3 யோக்3ய போக்3யவஸ்து
க3ளன்னு தாராளவகி3 கொடு3வ 'ஸுமுக2' நமோ
கலங்கவில்லத3 ஸுந்த3ரதம முக2லாவண்ய
மாலோல நீ ப4க்தரலி க்ருபாத்3ருஷ்டி பீ3ருவெயோ

குதிரை முதலான யோக்ய வஸ்துகளை தாராளமாக அருள்பவனே. ஸுமுகனே. உனக்கு என் நமஸ்காரங்கள். களங்கம் இல்லாத அழகான முகத்தை கொண்டவனே. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. பக்தர்களில் உன்னுடைய கருணைப் பார்வையை வீசுவாயாக.

467. ஸ்ரீ ஸூக்ஷ்மாய நம:

உத்க்ருஷ்ட வேகா3தி3 மங்க3ள லக்ஷணவுள்ள ஒள்ளே
ஜாதி குது3ரெ ஒடெ3யனெ 'ஸூக்ஷ்மனே' நமோ எம்பெ3
குது3ரெக3ளல்லி நால்கு ஜாதி ஹய வாஜி ஆர்வ
சதுர்த்த2 அஶ்வவு அஶ்வக்கெ அதிஶயவேக3

மிகவும் வேகம் கொண்ட, நல்ல லட்சணங்களைக் கொண்ட, குதிரைகளை கொண்டவனே. ஸூக்ஷ்மனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஹய, வாஜி, ஆர்வ மற்றும் அஶ்வ. இதில் அஶ்வ என்பது அதிசமான வேகத்தை கொண்டதாகும்.

468. ஸ்ரீ ஸுகோ4ஷாய நம:

காம்யயக்ஞ ஸோமரஸவுள்ளவ 'ஸுகோ4ஷ' நமோ
காமரஹித பூஜெயக்ஞ ஸ்தோத்ராதி3 அர்ப்பிதவ
ப்ரேமதி3ந்த3 ஸ்வீகரிஸுவி ஸகாமதி3 அர்ப்பித
ஸோமரஸவ ப்ரீதி இல்லதெ3 நீனு இட்டுகொம்பி

ஸோமரஸத்தை கொண்டவனே. ஸுகோஷனே உனக்கு என் நமஸ்காரங்கள். எவ்வித விருப்பமும் இல்லாமல் செய்யப்படும் பூஜை, யக்ஞ, ஸ்தோத்திரங்களை அன்புடன் ஏற்றுக் கொள்பவனே. பிரதிபலனை எதிர்ப்பார்த்து செய்யப்படும் செயல்களை நீ அன்பு இல்லாமல் ஏற்றுக் கொள்கிறாய்.

469. ஸ்ரீ ஸுஹ்ருதா3ய நம:

ஸுக2பூர்ண ஹ்ருத3யவுள்ள 'ஸுஹ்ருத3' நமோ எம்பெ3
ஸுக2ஸாத4ன வேதா3தி3க3ள கோ4ஷ மாள்ப ப4க்த
ஸுக2ப்ரத3 உதா3ரமனஸ்ஸுள்ள ஸுஹ்ருத3 நீனு
ஸுபூர்ண ஸுக2ரூப நிர்தோ3ஷனு ஸு2கப்ரதா3த

சுகமயமான இதயத்தைக் கொண்டவனே. ஸுஹ்ருதயனே உனக்கு என் நமஸ்காரங்கள். மோட்சத்திற்கான சாதனான வேதங்களை சொல்லும் பக்தர்களுக்கு, மோட்சத்தை அருளும் கருணை உள்ளம் கொண்டவன் நீ. பூர்ணனே. ஸுக ரூபனே. நிர்தோஷனே. சுகத்தை கொடுப்பவனே.

470. ஸ்ரீ ஸுஹ்ருதே3 நம:

ஸம்பூர்ண க்3ரஹிஸுவனு ப4க்தக்ருத ஸ்துதியன்ன
ஸ்ரீப 'ஸுஹ்ருத்' நமோ நினகெ3 ஈ ஸ்தோத்ர ஸ்வீகரிஸோ
ஶோப4னஸுபூர்ண மனஸ்ஸுள்ளவனு ஸுஹ்ருத் நீனு
ஸ்வப4க்த க்ருதஸேவெ ஸ்வீகரிஸி ஶோப4னவீவி

பக்தர்கள் செய்யும் ஸ்துதிகளை முழுமையாக ஏற்றுக் கொள்பவனே. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே. ஸுஹ்ருதனே உனக்கு என் நமஸ்காரங்கள். இந்த ஸ்தோத்திரத்தையும் ஏற்றுக் கொள். மங்களகரமானவனே. பூர்ணமான மனஸ் உள்ளவனே. பக்தர்கள் செய்யும் சேவைகளை ஏற்றுக் கொண்டு, அவர்களை அருள்பவனே.

471. ஸ்ரீ மனோஹராய நம:
ஸோமப்ராஶன மாடு3வ 'மனோஹர' நமோ நமோ
ப்ரேமதி3ந்த3 ப4க்தரு அர்ப்பிஸுவ பூஜாத்3ரவ்ய
ஸுபவித்ர நைவேத்3ய வஸ்துக3ள ஸ்வீகரிஸுவி
கோ3பிகாதி3 ப4க்தமன நின்னல்லி நெலஸிகொண்டி3

ஸோமரஸத்தினை ஏற்றுக் கொள்ளும் மனோஹரனே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்கள் அர்ப்பிக்கும் பூஜா த்ரவியங்களை, பவித்ரமான நைவேத்ய பொருட்களை அன்புடன் ஏற்றுக் கொள்கிறாய். கோபிகையர்கள் முதலான பக்தர்களின் மனம் உன்னில் நிலைத்திருக்கிறது.

472. ஸ்ரீ ஜிதக்ரோதா4ய நம:
ஸோமகா4தக பக்ஷியனு ஜயிஸுவ ஶ்யேன
எம்ப3 பக்ஷியுள்ள 'ஜிதக்ரோத4னே' நமோ நினகெ3
ப்ரேமதி3 ப4க்தரு அர்ப்பிப பூஜா கா4தக தை3த்ய
ஸமூஹவ பராஜய மாள்ப ப்4ருத்யருள்ளவனு

ஸோம காதக என்னும் பறவையை வெல்வதான கருடனைக் கொண்டிருப்பவனே. ஜிதக்ரோதனே. உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தியுடன், அன்புடன் பக்தர்கள் அர்ப்பணம் செய்யும் த்ரவ்யங்களை ஏற்றுக் கொள்பவனே. தைத்ய சமூகத்தினை வெல்பவனே. பக்தவத்ஸலனே.

473. ஸ்ரீ வீரபா3ஹவே நம:
அதி உத்தம வேத3 அபி4மந்த்ரித ஸோமரஸ
ஹிததி3 ஸ்வீகரிஸுவ 'வீரபா3ஹு' நமோ எம்பெ3
க்ஷத்ரியோத்தம ராஜருக3ளந்தஸ்த2னாகி3 நீனு
க்ஷிதிய பாலிஸுவி ராஜராஜேஷ்வரனே ஸ்வராட்

மிகச் சிறந்ததான, வேதங்களால் அபிமந்த்ரணம் செய்யப்பட்ட, ஸோமரஸத்தினை அன்புடன் ஏற்றுக் கொள்பவனே. வீரபாஹுவே. உனக்கு என் நமஸ்காரங்கள். க்ஷத்ரியர்களில் உத்தமரான அரசர்களில் அந்தர்யாமியாக இருந்து நீ உலகத்தை காக்கிறாய். ராஜராஜேஷ்வரனே. விஸ்வரூபனே.

474. ஸ்ரீ விதா3ரணாய நம:
அஹிம்ஸ்யனு 'விதா3ரண' நமோ எம்பெ3 ப3லபூர்ண
மஹானந்த3ப்ரசுர நீ மஹிஷீயரிகு3 கோ3பீ
மஹாப4க்த ஞானிஸமூஹக்கெ 'ணம்' ஸுக2ப்ரதா3தா
மஹாதை3த்ய ஹிரண்யகஶிபுன ஸீள்தி3 ந்ருஹரே

அஹிம்ஸ்யனே. விதாரணனே உனக்கு என் நமஸ்காரங்கள். பலபூர்ணனே. ஆனந்தமயனே. உன் மனைவிகளுக்கும், மஹா பக்தர்களான கோபிகை முதலான பக்தர்களுக்கும் சுகத்தை கொடுப்பவனே. மஹா தைத்யனான ஹிரண்யகசிபுவை கொன்றவனான ஸ்ரீநரசிம்மனே.

475. ஸ்ரீ ஸ்தா2பனாய நம:
ப4க்தரிகெ3 ஸுக2வொத3கி3ஸுவ 'ஸ்தா2பன' நமோ
ப4க்தரிகெ3 ஆனந்த3 நித்3ரா ப்ரவர்த்தகனு நீனு
அதி உத்தமானந்த3மய ஸ்வப4க்தரிகெ3 ஸுக2
தா3தா ஸுபாலக ஆப ஸர்வவந்த்3ய ஸ்வாமி நீனு

பக்தர்களுக்கு சுகத்தை கொடுக்கும் ஸ்தாபனனே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்களுக்கு ஆனந்த நித்ரையை அருள்பவனே. தன் பக்தர்களுக்கு உத்தமமான ஆனந்தமய சுகத்தை (மோட்சத்தை) அருள்பவனே. அனைவரையும் காப்பவனே. அனைவராலும் வணங்கப்படுபவனே. ஸ்வாமியே.

476. ஶ்ரீ ஸ்வவஶாய நம:

ஸ்வதந்த்ரனு 'ஸ்வவஶ' நமோ அனன்யாதீ3ன நீனு
ஸதா3 ஸ்வேச்சா ப்ரவ்ருத்தனு ஸர்வவன்னு நின்ன வஶ
அதீ3னவாகி3ட்டு கொண்டி3ருவ ஸ்வாமித்வதி3ந்த3 ஸ்வ
உத்தமத்வ வ ஸுக2ரூபத்வ ஶ ஹீகெ3 ஸ்வவஶ

ஸ்வதந்த்ரனே. ஸ்வவஶனே. உனக்கு என் நமஸ்காரங்கள். யாருக்கும் நீ அதீனம் இல்லை. எவ்வித பலனும் இன்றி அனைத்து செயல்களையும் செய்பவன். அனைத்தையும் உன் வசமே / அதீனமே வைத்துக் கொண்டிருப்பவனே. ஸர்வோத்தமனே. ஸுகரூபனே.

477. ஶ்ரீ வ்யாபினே நம:

நானா ரூபவந்த பூர்ணைஶ்வர்ய 'வ்யாபீ' நமோ எம்பெ3
ஆனந்த3ரூபனு நீனு நின்ன ஈ ஶக்தியிந்த3
அனந்த ஜீவரொளு ஸர்வவஸ்துக3ளொளித்3து3
நீனு தத்ஸத்தா ஶக்தி ப்ரவ்ருத்யாதி3க3ளன்னீவி

பற்பல ரூபங்களை கொண்டவனே. முழுமையான செல்வங்களை கொண்டவனே. வ்யாபினே உனக்கு என் நமஸ்காரங்கள். ஆனந்தரூபனே. உன்னுடைய இந்த சக்தியினால் நீ அனைத்து ஜீவர்களிலும், அனைத்து பொருட்களிலும் இருந்து, அந்தந்த ஜீவர்களுக்கும் / பொருட்களுக்கும், சக்தியினை கொடுக்கிறாய்.

478. ஶ்ரீ நைகாத்மனே நம:

ப்ரத்யுபகார மாடு3வரு இல்லவந்த2வ 'நைகாத்ம'
ஸதா3 நமோ ஸம்பூர்ணைஶ்வர்ய ஆனந்தா3தி3 ஸ்வரூப
ஆப்தகாமா ஸ்வப்ரயோஜன விவர்ஜித அனந்த
அத்பு4தமஹிமனு ஸ்வரத ஸ்வதந்த்ர ஶ்ரீரமண

எதையும் பிரதிபலன் பார்க்காமல் உதவி செய்பவனே. நைகாத்மனே. உனக்கு என் நமஸ்காரங்கள். முழுமையான ஐஸ்வர்யங்களை ஆனந்தாதி ஸ்வரூபத்தினை கொண்டவனே. ஆப்தகாமனே. உன் செயல்களால் உனக்கு எவ்வித பிரயோஜனங்களும் இல்லை. அனந்தமான, அற்புதமான மகிமைகளை கொண்டவன். ஸ்வதந்த்ரனே. ஶ்ரீரமணனே.

479. ஶ்ரீ அனேக கர்மக்ருதே நம:

நின்ன ப4க்தர பித்ராதி3க3ள்கெ3 ஸுக2வாஸதா3தா
'அனேக கர்மக்ருத்' நமோ ஸ்ருஷ்ட்யாதி3கர்த நீனு
நின்ன ப4க்த ப்ரஹ்லாத3ன பித்ராதி3க3ள்கெ3 ஸத்க3தி
ஸுக2ஸ்தா2ன வித்தி வர தா3னாதி3 கர்மக்ருத் நீனு

உன் பக்தர்களின் பித்ரு வரிசைகளுக்கு சுகமான இருப்பிடத்தை தருபவனே. அனேக கர்மக்ருதே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ருஷ்ட்யாதி அனைத்து செயல்களையும் செய்பவனே. உன் பக்த பிரகலாதனின் பித்ருகளுக்கு ஸத்கதியை அளித்தவனே. அனைத்து செயல்களையும் செய்பவனே.

480. ஶ்ரீ வத்ஸராய நம:

நீனு எல்லு ஸமவாகி3 இருவி 'வத்ஸர' நமோ
ஸ்தா2னபே4த3தி3 நின்னய பூர்ணத்வக்கெ பே4த4வில்ல
கிருஷ்ண நின்ன காருண்ய ஏனெம்பெ3 வத்ஸக3ள காய்தி3
விஷ்ணுராதன்ன பொரெதி3 அஸுர வத்ஸன்ன ஸீள்தி3

அனைத்து இடங்களிலும், அனைவரிலும் நீ பாரபட்சம் இன்றி இருக்கிறாய். வத்ஸரனே உனக்கு என் நமஸ்காரங்கள். உன் அவதார, ரூபங்களிடையே பூர்ணத்வத்திற்கு பேதம் இல்லை. கிருஷ்ணனே உன்

காருண்யத்தை நான் என்னவென்று புகழ்வேன்?. பசுக்களை காத்தவனே. அபிமன்யுவின் மகனான பரிக்ஷித்தை (விஷ்ணுராத) காத்தாய். அசுரர்களை அழித்தாய்.

481. ஸ்ரீ வத்ஸலாய நம:
கா3யத்ரி ஸோமாதி3க3ள ஸ்வீகரிஸுவ 'வத்ஸலா'
தோயஜாக்ஷனே நமோ கா3னத்ராணகர்த கோ3பால
காயவாங்மனதி3ந்த3 ப4க்தி பெ3ளஸுவவரிகெ3
த3யவ பாலிஸி இஹபரதி3 ஸுக2கொடு3வி

காயத்ரி மந்திரங்களை, ஸோமரஸங்களை ஏற்றுக் கொள்பவனே. வத்ஸலனே. உனக்கு என் நமஸ்காரங்கள். தாமரைக் கண்ணனே. உலகத்தை காப்பவனே. கோபாலனே. உடல், வாக்கு, மனஸ் ஆகியவற்றால் பக்தியை வளர்ப்பவர்களுக்கு அருள் புரிந்து, இஹ பரங்களில் சுகத்தை கொடுப்பவனே.

482. ஸ்ரீ வத்ஸினே நம:
ஸுதா1தி3 பரிவாரவந்தனு 'வத்ஸீ' நமோ எம்பெ3
பத்மப4வ வாயு ஶிவ ப்ரத்3யும்னாதி3 ஸுத2 ஸேவ்ய
வத்ஸி எந்தெ3னிஸுவி ஸ்ரீவத்ஸத4ரனாது3த3ரிம்
வத்ஸக3ளன்ன ஸதா3 ஸம்ரக்ஷிஸுதி கோ3பால

மகன் ஆகியோர்களைக் கொண்ட பரிவாரத்தை கொண்டவனே. வத்ஸினே உனக்கு என் நமஸ்காரங்கள். பிரம்மா, வாயு, ருத்ரர், பிரத்யும்னன் முதலான மகன்களால் வணங்கப்படுபவனே. வத்ஸி எனப்படுபவனே. ஸ்ரீவத்ஸதரன் ஆகையால், பசுக்களை எப்போதும் காப்பவனே. கோபாலனே.

483. ஸ்ரீ ரத்னக3ர்ப்பா4ய நம:
ப4க்தரிகெ3 இச்சிதவ ஈவ மனஸ்ஸுள்ளவனு
'ரத்னக3ர்ப்ப4னே' நமோ ஸ்ரீகர நாராயண ஹ்ரீ ஸ்ரீ
யுக்த நீ க3ருடோ3பரி குளிது கைக3ளிம் சாசி
ரத்ன த4னத்3ரவ்ய கொடு3வி ப4க்தரிகெ3 க்ருபெயிம்

பக்தர்கள் விரும்புவதை அளிக்கும் மனம் கொண்டவனே. ரத்னகர்ப்பனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீகர நாராயணனே. நீ கருடனில் அமர்ந்து, உன் திருக்கரங்களால் ரத்ன, செல்வங்களை உன் பக்தர்களுக்கு கருணையுடன் அருள்கிறாய்.

484. ஸ்ரீ த4னேஷ்வராய நம:
த4னாதி3பதியாகி3 க்ருத்ஸாதி3 ரிஷிக3ள மாள்பி
த4னேஶ்வர நமோ த4னநியாமக த4ன ஸ்வாமி
த4னாதி3க3ள நீ நிர்வ்யாஜ ப4க்தரிகெ3 தே3வஶர்ம
ஞானிரைக்வ ஸுதா4மாதி3க3ளிகி3த்தி நீனாகி3யே

க்ருத்ஸ முதலான ரிஷிகளை தனாதிபதியாக ஆக்கினாய். தனேஶ்வரனே உனக்கு என் நமஸ்காரங்கள். செல்வங்களை நியமனம் செய்பவனே. நிர்வ்யாஜ பக்தர்களுக்கு செல்வங்களை அளிப்பவனே. தேவஶர்மா, சுதாமா ஆகிய பக்தர்களுக்கு நீ அருளினாய்.

485. ஸ்ரீ த4ர்மக்ருதே நம:
ஸந்தி4 ஸம்ப3ந்த4 மாடு3வவ த4ர்மக்ருத் நமோ எம்பெ3
ஸாது4 ஸஜ்ஜனர ஸம்ப3ந்த4 மாடி3ஸி ஹரிப4க்தி
வ்ருத்3தி4யாகி3 த்வத்ப்ரஸாத3 இத்து ஸலஹுவியோ நீ
ஸாது4 ப4க்த வாஞ்சிதவ பூரெயிஸுவியோ ஸ்ரீஶ

நல்ல ஸம்பந்தங்களை செய்பவனே. தர்மக்ருதே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸாது ஸஜ்ஜனர்களின் சம்பந்தத்தினை செய்து, ஹரிபக்தியை வளர்த்து, உன்னுடைய பிரசாதங்களை கொடுத்து, அருள்கிறாய். அனைத்து பக்தர்களின் விருப்பங்களை நீ நிறைவேற்றுவாய். ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே.

486. ஸ்ரீ த4ர்மகு3பே நம:

ப4க்த ரக்ஷக நீனு 'த4ர்மகு3ப்' நமோ நமோ எம்பெ3
வேத3 த4ர்ம ஆசரிஸுவ ஸுஜனபோஷக நீனு
யுதி3ஷ்டிராதி3 பாண்ட3வர ஸம்ரக்ஷிஸிதி3 மத்து
விது3ரோத்3த4வாதி3 ப3ஹுப3ஹு ப4க்தஸம்ரக்ஷக

பக்தர்களை காப்பவனே. தர்மகுபே உனக்கு என் நமஸ்காரங்கள். வேத, தர்மங்களை பின்பற்றும் ஸஜ்ஜனர்களை காப்பவன் நீ. யுதிஷ்டிரன் முதலான பாண்டவர்களை காத்தாய். மற்றும், விதுர, உத்தவ ஆகிய பற்பல பக்தர்களை காத்தாய்.

487. ஸ்ரீ த4ர்மிணே நம:

மஹாத்ம்யவந்த நீனு த4ர்மீ நமோ எம்பெ3 நினகெ3
மஹா நின்னய நிர்தோ3ஷகு3ண க்ரியாதி3க3ளெல்ல
மஹாத்மவு ஸ்வரூப த4ர்ம அனந்தவாகி3ஹவு
மஹாத4ர்மக3ளு நின்ன அதீ4னவு ஸர்வத3லு

பெரும் மகிமைகளை கொண்டவன் நீ. தர்மிணே உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னுடைய நிர்தோஷ குணங்கள், செயல்கள் அற்புதமானவை. உன்னுடைய ஸ்வரூப தர்மம் அனந்தமானது. அனைத்து மஹா தர்மங்களும் உன் அதீனமானவையே.

488. ஸ்ரீ ஸத3ஸக்ஷராய நம:

யக்ஞஷாலாத3ல்லித்3 ஸோம முத3தி3ந்த ஸ்வீகாரா
யக்ஞபு4க் நீ மாள்பி ஸத3ஸக்ஷர நமோ நமோ நினகெ3
ஸர்வக்3ஞ நீ மூர்தா1மூர்த்தக3ள ஸ்ருஷ்டிஸ்தி2திலய
முக்2யகாரணனு ஸத3ஸக்ஷர எந்தெ3னிஸுவி

யக்ஞசாலையிலிருந்து உன்னுடைய பங்கினை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்பவனே. யக்ஞங்களை நீயே செய்விக்கிறாய். ஸதஸக்ஷரனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸர்வக்ஞனே. உருவம் / அருவம் என அனைத்தையும் நீயே படைத்தாய். நீயே அனைத்திற்கும் முக்கிய காரணன். ஆகையால் ஸதஸக் ஷர எனப்படுகிறாய்.

489. ஸ்ரீ அக்ஷராய நம:

ப4க்தக்ருதஸ்தோத்ர அங்கீ3கரிஸுவவ 'அக்ஷரம்'
ஸதா3 நமோ என்ன ஹொரஒளகித்3து3 மாடி3ஸுவ
ஸ்தோத்ரக்3ரந்தக3ள நீ த3யதி3ந்த3 அங்கீ3கரிஸோ
ஸதா3க3ம ப்ரதிபாத்3ய நித்ய நிர்தோ3ஷ ஸுகு3ண

பக்தர்கள் செய்யும் ஸ்தோத்திரத்தை அங்கீகரிக்கும் அக்ஷரனே உனக்கு என் நமஸ்காரங்கள். எனக்கு உள்ளே / வெளியே என இருந்து நீ செய்விக்கும் இந்த ஸ்தோத்திர கிரந்தங்களை அங்கீகரிப்பாயாக. வேதங்களால் போற்றப்படுபவனே. நிர்தோஷனே. ஸுகுணனே.

490. ஸ்ரீ அவிக்ஞாதே நம:

அக்3னிகோ3க்ஷீராதி3யிம் ஸுஶோபி4த ஸோமரஸவ
நிக்3ரஹிஸுவி 'அவிக்ஞாதா' நமோ நமோ நினகெ3
நீ க3ணனெ மாட3லாரி ப்ரஸன்ன ப4க்தரபரா
த4க3ள க்ருபதி3 கொம்பி3 ஸுபவித்ர பூஜா த்3ரவ்ய

அக்னி, கோக்ஷீர ஆகியற்றால் ஒளிர்வதான ஸோம-ரஸத்தை நீ புறக்கணிக்கிறாய். அவிக்ஞாதனே உனக்கு என் நமஸ்காரங்கள். உன் பிரியமான பக்தர்களின் தவறுகளை நீ மன்னிக்கிறாய். அவர்கள் அளிக்கும் பவித்ரமான பூஜா திரவியங்களை நீ ஏற்றுக் கொள்கிறாய்.

491. ஸ்ரீ ஸஹஸ்ராம்ஶவே நம:

ப்ரக்^{2}யாத த்^{3}யாவப்ருது^{2}வி வ்யாபகனெ ‘ஸஹஸ்ராம்ஶு’

ப^{4}க^{3}வான் நமோ ஞான தேஜஸ்புஞ்ச அமிதாம்ஶு

ஜகி^{3}ஜகி^{3}ப ஜ்யோதிர்மய ஸுத^{3}ர்ஶனதா^{4}ரியே

அகளங்க ஸுக்ஞானி ப^{4}க்தரலி ப்ரஜ்வலிஸுதி

அனைத்து உலகங்களிலும் வ்யாபித்திருப்பவனே. ஸஹஸ்ராம்ஶனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஞான, தேஜஸ்ஸினை அபாரமான கொண்டிருப்பவனே. ஒளிர்பவனே. ஸுதர்சன சக்கரத்தை தாங்கியவனே. களங்கமற்றவனே. ஸுக்ஞானியே. பக்தர்களில் நீ ஒளிர்கிறாய்.

492. ஸ்ரீ விதா^{4}த்ரே நம:

விஶேஷேண ஸோமபான மாடு^{3}வ ‘விதா^{4}தா’ நமோ

விஶேஷேண தா^{4}ரகனு நீ ஆது^{3}த^{3}ரிம் விதா^{4}தா

ஹ்ரீ ஸ்ரீ ஸமேத க^{3}ருடோ^{3}பரி குளிதிருவி நீ

வஸுத்^{3}ரவ்ய ரத்னாதி^{3}க^{3}ள ப^{4}க்தரிகெ^{3} கொடு^{3}வி

ஸோமபானத்தை செய்பவனே. விதாத்ரே உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்தையும் தரித்திருப்பவனே. ஆகையால் நீ விதாதா எனப்படுகிறாய். லட்சுமிதேவியுடன் நீ கருடனில் அமர்ந்திருக்கிறாய். உன் பக்தர்களுக்கு நீ த்ரவ்ய, ரத்ன ஆகியவற்றை அருள்கிறாய்.

493. ஸ்ரீ க்ருதலக்ஷ்மணாய நம:

யதா^{2}யோக்^{3}ய நியமேன ஸர்வரிந்த^{3} ப்ரார்த்த^{2}னீய

‘க்ருதலக்ஷண’ நமோ ஸர்வ தே^{3}வ நராதி^{3} ஸ்வாமி

ஜக^{3}த்ஸ்ருஷ்டி ஸ்தி^{2}திலய நியதி ஞான அஞ்ஞான

ப^{3}ந்தமோக்ஷ கர்த்ருத்வ லக்ஷணவான் ஸர்வேஶ ஸ்ரீஶ

அனைவராலும் அவரவர் யோக்யதைக்கேற்ப பிரார்த்தனை செய்யப்படுபவனே. க்ருதலக்ஷ்மணனே உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து தேவ, நரர்களுக்கும் ஸ்வாமியே. ஜகத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, ஞான, அஞ்ஞான, பந்த, மோக்ஷ ஆகிய அஷ்ட கர்த்ருத்வங்களையும் செய்பவனே. ஸர்வேசனே. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே.

494. ஸ்ரீ க^{3}ப^{3}ஸ்தி^{2}நேமியே நம:

ஸுக^{2}ப்ராப்தி மாடு^{3}வவ ‘க^{3}ப^{3}ஸ்தி^{2}நேமியே’ நமோ

ஸுக^{2}ஞான ஹிதகர தேஜ:ப்ரவர்த்தக நீனு

ப்ரகாஶிஸுவ தேஜ:புஞ்ச சக்ர ஹிடிதி^{3}ருவி

ஆர்கேந்து பா^{4}ஸகனு ஆஶ்ரயனு ஜ்யோதிர்மயனு

ஸுக ப்ராப்தியை கொடுப்பவனே. கபஸ்திநேமியே உனக்கு என் நமஸ்காரங்கள். சுகத்தை, ஞானத்தை, தேஜஸ்ஸினை கொடுப்பவன் நீ. ஒளிர்வதான தேஜஸ் கொண்ட சக்கரத்தை பிடித்திருப்பவன் நீ. சந்திர, சூரிய, நட்சத்திரங்களுக்கு நீயே ஒளியை கொடுக்கிறாய். ஜோதிர்மயனே.

495. ஸ்ரீ ஸத்வஸ்தாய நம:

ப^{4}க்தர மனஸலி இருவவனு ‘ஸத்வஸ்த^{2}னே’

ஸதா^{3} நமோ ப^{4}க்திவர்த்திஸி ராஜிஸுவி ஹ்ருஜ்யோதி

நிர்தோ^{3}ஷ கல்யாண கு^{3}ண நிதி^{4}யே நிகூட^{4}னாகி^{3}

ஸதா^{3} அந்தர்யாமியாகி^{3}ருதியோ நீ ஸ்ரீஸமேத

பக்தர்களின் மனதில் இருப்பவனே. ஸத்வஸ்தனே. உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்களில் பக்தியை வளர்த்து அங்கு நீ இருப்பாய். நிர்தோஷனே. கல்யாண குணநிதியே. ஸ்ரீலட்சுமிதேவி சமேதனாக நீ எப்போதும் அனைவரிலும் அந்தர்யாமியாக இருக்கிறாய்.

496. ஸ்ரீ ஸிம்ஹாய நம:
ரத²ஸங்க³தவாத³ அனேக அஶ்வவந்த 'ஸிம்ஹ'
ஸதா³ நமோ நமோ நினகெ³ ஹ்ருஷிகேஶ ஸர்வேஶ
மாத⁴வனே நீ ஸ்ரேஷ்ட நினகெ³ ஸம ஸ்ரேஷ்டரில்ல
மோத³மய ஸாராத்மா நிர்தோ³ஷ கு³ணபூர்ண ஸிம்ஹ

பற்பல குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தை கொண்டவனே. ஸிம்ஹனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஹ்ருஷிகேஶனே. ஸர்வேஶனே. மாதவனே. நீயே சிறந்தவன். உனக்கு சமமோ, சிறந்தவரோ வேறு யாரும் இல்லை. ஆனந்தமயனே. ஸாராத்மனே. நிர்தோஷனே. குண பூர்ணனே. ஸிம்ஹனே.

497. ஸ்ரீ பூ⁴தமஹேஶ்வராய நம:
அஶ்வோத்தம ரத²கெ ஈஶ்வர 'பூ⁴தமஹேஶ்வர'
நா ஸதா³ நமோ எம்பெ³ தே³ஹாக்ய ரதே²ஶ்வர ப்ராண
ஈ ஸுநாமதி³ நீ ஸ்ரீ ஹ்ரீ ஸமேத குளிதிருவி
ஹே ஸர்வபூ⁴த மஹேஶ்வரனே நமோ வாயுஸேவ்ய

மிகச் சிறந்த குதிரைகள் கொண்ட ரதத்தை கொண்டவனே. பூதமஹேஶ்வரனே உனக்கு என் நமஸ்காரங்கள். தேகம் என்னும் இந்த ரதத்தில், லட்சுமிதேவி சகிதமான ப்ராண என்னும் பெயரில் நீ அமர்ந்திருக்கிறாய். ஸர்வபூத மஹேஶ்வரனே. வாயுதேவரால் வணங்கப்படுபவனே.

498. ஸ்ரீ ஆதி³தே³வாய நம:
ப்ராத²மிகவாகி³ ஸோமபான மாள்ப 'ஆதி³தே³வ'
ஸதா³ நமோ யக்ஞபூஜா ஸேவா நைவேத்³யக³ளன்ன
மொத³லு அர்ப்பிஸல்பட்டு ஸ்வீகரிஸுவி ராஜஸூ
யாதி³ மொத³ல பூஜெய கொண்ட³த்³து³ லோகப்ரஸித்³த³

முதன்முதலில் அமிர்தத்தை படைத்தவனே. ஆதிதேவனே. உனக்கு என் நமஸ்காரங்கள். யக்ஞங்கள், பூஜைகள், ஸேவைகள், நைவேத்ய அன்ன, ஆகியவை அர்ப்பிக்கப்பட்டு அதனை நீ ஏற்றுக் கொள்கிறாய். ராஜஸூயாதி யாகங்களை நீ ஏற்றுக் கொண்டது, உலகப் புகழ்பெற்ற செய்தியாக இருக்கிறது.

499. ஸ்ரீ மஹாதே³வாய நம:
ப³ஹுகர்மகர்த 'மஹாதே³வ' நமோ நமோ எம்பெ³
மஹதா³தி³ ஸர்வபூ⁴த ஸ்ருஷ்டி மொத³லாத³ கர்ம
மஹானந்த³ லீலெயா ஸ்வதந்த்ரதி³ மாடு³வி நீனு
மஹி ஸ்ரீஶ ஸர்வமுக்தாமுக்த நியந்த்ரு ஸர்வேஶ

பற்பல செயல்களை செய்பவனே. மஹாதேவனே. உனக்கு என் நமஸ்காரங்கள். மஹதாதி அனைத்து தத்வங்களை படைத்தவனே. இந்த செயல்களை உன் லீலையினால், ஸ்வதந்த்ரமாக செய்பவனே. லட்சுமிதேவியின் தலைவனே. அனைத்து முக்தர்கள், அமுக்தர்களுக்கும் நியமனம் செய்பவனே. ஸர்வேஶனே.

500. ஸ்ரீ தே³வேஶாய நம:
ஶத்ருக³ள ஸோலிஸுவ இச்செயுள்ளவனு நீனு
ஸ்தோத்ர ஸ்வாமியு 'தே³வேஶ' நமோ எம்பெ³ சதுராத்ம
ஒந்தொ³ந்து³ அக்ஷரதொ³ளிஹவு கு³ணக்ரியாரூப

ஹே தே3வதெக3ள ஈஶனே ஶரனு ஶரணெம்பெ3

எதிரிகளை வெல்லும் விருப்பம் கொண்டவன் நீ. ஸ்தோத்திரம் செய்யப்படுபவனே. தேவேஶனே. உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து அக்ஷரங்களிலும் நீ இருக்கிறாய். குண, க்ரியா ரூபனாக இருப்பவனே. தேவதைகளின் ஈஶனே. உன்னை நான் வணங்குகிறேன்.

501. ஸ்ரீ தே3வப்4ருதே நம:

த்3யுதி ப3லாதி3க3ள ஸம்பூர்ண நிதி4 தா4ரகனு
மாத4வனே 'தே3வப்4ருத்' நமோ நமோ எம்பெ3
நீனு தே3வதெக3ள தா4ரகனு அவருக3ள
த்3யுதிப3லாதி3க3ள ப்ரவர்த்தகனு ஆஶ்ரயனு

தேஜஸ், வலிமைகளின் முழுமையான நிதியே; அவற்றை அளிப்பவனே. மாதவனே. தேவப்ருதே உனக்கு என் நமஸ்காரங்கள். நீ தேவதைகளின் தலைவனே. அவர்களின் தேஜஸ், வலிமைகளை வழங்குபவன் நீயே.

502. ஸ்ரீ கு3ரவே நம:

ஶிஷ்யோபதே3ஶகனே 'கு3ரவே' நமோ நினகெ3
தோயஜாஸன ஆதி3கவிகெ மொத3லுபதே3ஶ
ஸவ்யஸாசிகெ3 கீ3தெ உபதே3ஶ மாடி3தி3 ஹாகு3
ஶிஷ்ய ஸர்வர்கு3 அனிமித்த முக்2ய கு3ரு நீனேவெ

சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்பவனே. குருவே உனக்கு என் நமஸ்காரங்கள். ஆதிகவியான பிரம்மதேவருக்கு முதலில் உபதேசம் செய்தவனே. அர்ஜுனனுக்கு கீதை உபதேசம் செய்தாய். மற்றும் சிஷ்யர்கள் அனைவருக்கும் எதையும் எதிர்பார்க்காத முக்கிய குரு நீயே.

503. ஸ்ரீ உத்தராய நம:

ஸம்ஸாரோத்தாரகனு 'உத்தர' நமோ நமோ எம்பெ3
ஸம்ஸாரனீகி3ஸி ஸுமோக்ஷவன்னீவி நீ முகுந்த3
அஸம ஸம்பூர்ண கு3ணக3ணார்ணவ அனக4னு
ஸ்ரீஶ ஸர்வோத்தம ஞான ப4க்தி விஷய உபாஸ்ய

சம்சார சுழற்சியை நீக்குபவன் நீயே. உத்தரனே உனக்கு என் நமஸ்காரங்கள். சம்சாரத்தை நீக்கி மோட்சத்தை அருள்பவன் நீயே. முகுந்தனே. சமமற்ற, முழுமையான, குணங்களின் கடலே. லட்சுமிதேவியின் தலைவனே. ஸர்வோத்தமனே. ஞான பக்திகளால் வணங்கப்படுபவனே.

504. ஸ்ரீ கோ3பதயே நம:

வே3தவாக்யக3ளிகெ3 ஸ்வாமி 'கோ3பதி' நமோ எம்பெ3
ஸ்ரீத4ரா து3ர்கா3தி3 நாமளு ரமாபதியு நீனு
ஸீதாயுக் ஸ்ரீராம கிருஷ்ண ப்ருது2 ராஜராஜேஶ்வர
க்ஷிதி நாக1 தே4னுக3ள பதியு கோ3பதி நீனு

வேத வாக்கியங்களால் போற்றப்படுபவனே. கோபதயே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீதரனே. துர்கா முதலான பெயர்களைக் கொண்ட ரமாதேவியின் தலைவன் நீயே. சீதையுடனான ஸ்ரீராமனே. கிருஷ்ணனே. ராஜராஜேஶ்வரனே. பூமியில் உள்ள அனைத்து பசுக்களின் தலைவன் நீயே.

505. ஸ்ரீ கோ3ப்த்ரே நம:

ரிஷிக3ள ஸம்ரக்ஷிஸுவ 'கோ3ப்தா' நமோ நினகெ3
ரக்ஷண கர்த்ருத்வமுக்2யவாகி3 நின்னதே3வே ஸ்வாமி
ரக்ஷிஸுவி ப்ராணிக3ள ஸர்வ அவஸ்தெ2க3ளல்லி
ரக்ஷகனு ஸர்வ முக்தாமுக்த ஆஸ்ரயனு ஸ்ரீஶ

ரிஷி முனிவர்களை காப்பவனே கோப்த்ரனே உனக்கு என் நமஸ்காரங்கள். அனைவரையும் காப்பவன் நீயே ஸ்வாமி. அனைத்து ப்ராணிகளையும் அனைத்து நிலைகளிலும் நீ காப்பாயாக. முக்தர்கள், அமுக்தர்கள் என அனைவருக்கும் நீயே ஆதரவாக இருக்கிறாய்.

506. ஸ்ரீ ஞானக^{3}ம்யாய நம:

ஞானாதி^{3} மஹாத்ம்ய பூர்ண நிதி^{4}யாகி^{3}ருவவனு
'ஞானக^{3}ம்யனு' நீனு நமோ எம்பெ^{3} ஸதா^{3} நினகெ^{3}
ஞானிப^{4}க்தருக^{3}ள்கெ^{3} நீ ப்ராப்யனாகி^{3}ருவி 'மித்^{2}யா
ஞானேனச தமோஞானேனைவ பரம்பத^{3}ம்க^{3}ம்ய'

ஞானாதி அனைத்து நற்குணங்களையும் முழுமையாகக் கொண்டிருப்பவன் நீயே. ஞானகம்யனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஞானிகளுக்கு, பக்தர்களுக்கு நீ அடையத் தக்கவனாக இருக்கிறாய்.

507. ஸ்ரீ புராதனாய நம:

பரம முக்^{2}யஸுக^2 விஸ்தாரக 'புராதன' நமோ
புரஶ்ரேஷ்ட வைகுண்டாதி^{3} ஸ்தா^{2}னதி^{3} ஸுக^{2}விஸ்தாரா
ஸ்ரீ ரமாபதி நீனு மாடி^{3} ப^{4}க்தரிகொ^{3}த^{3}கு^{3}வி
பரம ப்ராசீன முக்^{2}யஸ்வாமி ஸனாதன ஸ்வதந்த்ர

முக்கிய சுகமான மோட்சத்தை கொடுப்பவனே. புராதனனே. உனக்கு என் நமஸ்காரங்கள். வைகுண்டாதி அனைத்து சுக ஸ்தானங்களிலும் இருப்பவனே. ரமாபதியே. நீயே பக்தர்களுக்கு அருள்கிறாய். அனைத்திற்கும் முதல்வன் நீயே. ஸனாதனனே. ஸ்வதந்த்ரனே.

508. ஸ்ரீ ஶரீரிணே நம:

ஆஶ்ரய நியாமகனு ஸர்வலோகதா^{3}னந்த^{3}க்கெ
'ஶரீரி' எந்தெ^{3}னிஸுவியோ நமோ ஸர்வ அந்தஸ்த^2
சராசர ஸர்வத்ரதொ^{3}ளிப்ப சேஷ்டகனு நீனு
ஶரீரஸ்த^2 க்ருத்திவாஸ ப்ரக்ருதே: பர: சின்மாத்ரா

அனைத்து உலகங்களின் ஆனந்தத்திற்கு நீயே கதியாக இருக்கிறாய். ஶரீரிணே என்று அழைக்கப்படுகிறாய். உனக்கு என் நமஸ்காரங்கள். அனைவரிலும் அந்தர்யாமியாக இருப்பவனே. அனைத்து செயல்களையும் அனைவரின் மூலம் செய்விப்பவனே. சின்மயனே.

509. ஸ்ரீ பூ^{4}தக்ருதே நம:

அனாதிஞான வ்யக்தமாள்ப 'பூ^{4}தக்ருத்' நமோ எம்பெ^{3}
அனாதி^{3} ஸ்வரூப பூ^{4}தக்ஞான ஸ்வாமி நின்னிச்செயிம்
நீனே ப்ரக்ருதி ஸம்ப^{3}ந்த^{4}தி^{3}ம் மரெயாத^3 ஞானவ
க^{4}னத^{3}யதி^{3} வ்யக்தமாடு^{3}வி ப^{4}க்திஸாதகர்கெ^{3}

அனாதி ஞானத்தை கொடுப்பவனே. பூதக்ருதே உனக்கு என் நமஸ்காரங்கள். அனாதி ஸ்வரூப பூதஞானனே. ஸ்வாமியே. உன் இஷ்டத்தினாலேயே, நீயே ப்ரக்ருதியின் சம்பந்தத்தினால் மறைந்த ஞானத்தை மறுபடி வெளிப்படுத்தி, பக்தியை செலுத்துபவர்களுக்கு கொடுப்பாய்.

510. ஸ்ரீ போ^{4}க்த்ரே நம:

ஸமுத்^{3}ர பூரணாதி^{3} நின்ன ஸ்வமஹிமெ பாலக
ஸமஹார்ஹ 'போ^{4}க்த' நமோ நமோ என்னுவெ நினகெ^{3}
அமித ஆனந்த^3 ஸுப்ரசுர நீ நின்ன ஸ்வரூப
ஸுமஹிமெக^{3}ள நித்ய அனுப^{4}விபி அனக^4

கடல் போல பூரணமான மகிமைகளைக் கொண்டவனே. போக்த்ரனே உனக்கு என் நமஸ்காரங்கள். அற்புத ஆனந்தத்தை வெளிப்படுத்துபவனே. உன் ஸ்வரூப மகிமைகளை தினமும் (எப்போதும்) அனுபவிக்கிறாய். அழிவில்லாதவனே.

511. ஸ்ரீ கபீந்த்ராய நம:
ஸுக2 த்3ரவிணவந்த நீ ஸ்துதிஸாமர்த்2ய ஈவியோ
'ஸ்ரீகபீந்த்ரனே' நமோ ஸுபூர்ணைஶ்வர்ய லக்ஷ்மீபதே
ஸுக்3ரீவ ஹனுமதா3தி3க3ளிகெ3 இந்த்3ர ஸ்ரீராம நீ
ஸுகா2தை3ஶ்வர்ய முக்தாமுக்தரிகீ3வி யதாயோக்3ய

அபாரமான சுகத்தை கொண்டவனே. ஸ்துதிகளை படிக்கும் சாமர்த்தியத்தை அருள்வாயாக. ஸ்ரீகபீந்த்ரனே. உனக்கு என் நமஸ்காரங்கள். அபாரமான செல்வங்களை கொண்டவனே. லட்சுமிபதியே. சுக்ரீவ, ஹனுமன் ஆகியோருக்கு தலைவனே. ஸ்ரீராமனே. முக்தர்கள், அமுக்தர்கள் என அனைவருக்கும் சுகாதி அனைத்து செல்வங்களையும், அவரவர் யோக்யதைக்கேற்ப வழங்குபவனே.

512. ஸ்ரீ பூ4ரித3க்ஷிணாய நம:
மஹா ஸ்வச்சந்தானுவர்த்தியே 'பூ4ரித3க்ஷிண' நமோ
ப3ஹு அஶ்வமேதா4தி3 யக்3ஞக3ள நீ ஆசரிஸி
ப3ஹள த3க்ஷிணெய கொட்டி லோக ஶிக்ஷணெ க்ஷேமக்கெ
மஹா ஸாமர்த்யபூர்ண ஸ்வதந்த்ர பூ4ரித3க்ஷிணனு

யாருடைய உதவியும் இன்றி அனைத்து செயல்களையும் செய்பவனே. பூரிதக்ஷிணனே உனக்கு என் நமஸ்காரங்கள். பற்பல அஶ்வமேத யாகங்களை நீ செய்து, அபாரமான தக்ஷிணைகளை கொடுத்தாய். உலக நன்மைக்காக அற்புத சாமர்த்தியத்தை கொண்டவனே. ஸ்வதந்த்ரனே. பூரிதக்ஷிணனே.

513. ஸ்ரீ ஸோமபாய நம:
முக்2யவாயு தே3வதெக3ள மனுக3ளு மனுஷ்யரு
அரியத3 மஹாத்ம்யவந்த 'ஸோமப' நமோ எம்பெ3
நீ யக்3ஞத3லி ஸோமரஸவன்ன பானமாடு3வி
உமாயுக் ருத்3ரன்ன பரிபாலிஸுதி ஸ்வாமி நீனு

முக்யபிராணர், தேவதைகள், மனுகள், மனிதர்கள் என யாருமே முழுமையாக அறியப்பட முடியாத மகிமைகளை கொண்டவனே. ஸோமபனே உனக்கு என் நமஸ்காரங்கள். செய்யப்படும் யக்ஞங்களில் அதன் ரஸத்தினை நீ ஏற்றுக் கொள்கிறாய். உமாதேவி, ருத்ரர் ஆகியோரை காத்தாயே ஸ்வாமி.

514. ஸ்ரீ அம்ருதபாய நம:
ஸ்தோத்ரக3ள ஶ்ரவணமாடு3வி 'அம்ருதப' நமோ
ப4க்திபூர்வக ஸ்துதி அம்ருதவாக்யக3ள மெச்சி
ஹிததி3 நீ கிவிகொ3ட்டு ஆலிஸி ஸ்வீகரிஸி
ப4க்தக்ருத ஸ்தோத்ர படன ஶ்ரவண ப2லவீவி

நாம் செய்யும் ஸ்தோத்திரங்களை கேட்பவனே. அம்ருதபனே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தியுடன் செய்வதான ஸ்ருதி வாக்கியங்களை மெச்சி, கருணையுடன் நீ அதனை கேட்டு, ஏற்றுக் கொண்டு, அவரவர்களின் யோக்யதைக்கேற்ப பலன்களை கொடுப்பாய்.

515. ஸ்ரீ ஸோமாய நம:
ரமா ஸமேத ஹரி ப்ரதிபாதி3தனாகி3ருவ
ஆம்னாய வாக் ஸஹவர்த்தமான 'ஸோம' நமோ எம்பெ3
ஸுமனோஹர ஸௌந்த3ர்யஸார ஹிதகர ரூப
அமல உத்க்ருஷ்டானந்தா3னுப4வனே ஸ்ரீஶ

ரமா சமேதனாக அனைவரிலும் ப்ரதிபாதிதனாக இருக்கும் ஸ்ரீஹரியே. ஸோமனே உனக்கு என் நமஸ்காரங்கள். மனோஹரனே. மகிழ்ச்சியை கொடுப்பதான ரூபத்தை கொண்டவனே. எல்லையில்லா ஆனந்த அனுபவத்தை கொண்டவனே / கொடுப்பவனே. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே.

516. ஸ்ரீ புருஜிதே நம:

ஸூரிப்ராப்யனு ஶத்ருக3ள ஜயிஸுவவ நீனு
‘புருஜித்’ நமோ நினகெ3ம்பெ3 அக்ஞான திமிரவ
பரிஹரிஸுவி ஞானி ப4க்தர அரிஸம்ஹர்த
ஸரஸிஜாஸனாதி3 த்4யேய தோ3ஷ நிர்லிப்தபூர்ண

அறிஞர்களால் அறியப்படுபவனே. எதிரிகளை வெல்பவன் நீயே. புருஜிதே உனக்கு என் நமஸ்காரங்கள். அஞ்ஞானத்தை நீ பரிகரிக்கிறாய். ஞானி, பக்தர்களின் அரிஷட் வர்க்கங்களை நீ அழிக்கிறாய். பிரம்ம முதலான அனைத்து தேவதைகளால் நீ வணங்கப்படுகிறாய். தோஷரஹிதனே. எதற்கும் சம்பந்தப்படாமல் பூர்ணமாக இருப்பவனே.

517. ஸ்ரீ புருஸத்தமாய நம:

அதி ப3லிஷ்ட வ்ருத்ராஸுரன்ன ஸம்ஹாரகெ3ய்ஸித3
அதிஸாமர்த்2ய ப3லாதி3பூர்ண ‘புருஸத்தமனே’
ஸதா3 நமோ ஸ்வதந்த்ர இருவிகெ உள்ளவ நீனு
ஸத்தா ப்ரவ்ருத்யாதி3க3ளீவி ஸர்வத்ர ஸர்வ ஸ்வாமி

மிகவும் வீரனான வ்ருத்ராசுரனை கொன்றவனே. அற்புத சாமர்த்தியத்தை கொண்டவனே. வலிமை முதலான குணங்களை முழுமையாகக் கொண்டவனே. புருஸத்தமனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்வதந்த்ரனே. அனைத்து இடங்களிலும் இருந்து, அனைவருக்கும் அனைத்தையும் கொடுப்பவனே. ஸ்வாமியே.

518. ஸ்ரீ வினியோஜ்யாய நம:

யாரிந்த3லு ப்ரேர்யனல்ல நீ ‘வினியோஜ்யனே’ நமோ
பராதீ4னனல்ல பரம ஏக ஈஶ ஸ்வதந்த்ர
பரமேஶ்வர நீனு ஜக3ன்னியோஜன நின்னிந்த3
ஸ்ரீ ரமா பி3ரம்ம ஶிவாதி3 ஸர்வஸ்வாமி அஜித

யாராலும் ஆணையிடப்பட முடியாதவனே. வினியோஜ்யனே உனக்கு என் நமஸ்காரங்கள். நீ யாரையும் நம்பி இல்லை. ஸ்வரமணனே. ஸ்வதந்த்ரனே. உலகமே உன்னால் படைக்கப்பட்டு இருக்கிறது. ஸ்ரீ ரமாதேவி, பிரம்ம, ருத்ர என அனைவருக்கும்ம் ஸ்வாமியே. அஜிதனே.

519. ஸ்ரீ ஸத்யஸந்தா4ய நம:

சலனாதி3 ஸஞ்சார மாடு3வ கோ3கூட போஷக
ஸ்ரீ லட்சுமிபதி ‘ஸத்யஸந்த4’ நமோ எம்பெ3 நினகெ3
மாலோல ஸ்ரீ ஸத்யப்ரதிஞாவந்தனு ஸத்யஸந்த4
ப3லு ஸத்யஸங்கல்ப ஸ்ருஷ்டிகர்த ஸத்யநாமா

அனைத்து இடங்களிலும் மேய்வதான பசுக்கூட்டத்திற்கு தலைவனே. ஸ்ரீலட்சுமிபதியே. ஸத்யஸந்தனே உனக்கு என் நமஸ்காரங்கள். லட்சுமிதேவியின் தலைவனே. சொல்வதையே செய்பவனே. ஸத்யஸந்தனே. ஸத்ய ஸங்கல்பனே. ஸ்ருஷ்டி கர்த்தனே. உண்மையான பெயர்களை கொண்டவனே.

520. ஸ்ரீ தா3ஶார்ஹாய நம:

ஸூர்யாதி3க3ளிகெ3 ப்ரகாஶதா3ன மாடு3வத3ரல்லி
ஸாமர்த்2யவுள்ளவனு ‘தா3ஶார்ஹ’ நமோ நமோ எம்பெ3
அமல ப4க்தருக3ளிகெ3 ஸுக2தா3ன மாள்ப

காமிதார்த்த^{2}ப்ரத^3 க்ருஷ்ண நமோ யாத^{3}வ தா^{3}ஶார்ஹ

சூரியர்கள் முதலானோர்களுக்கு ஒளியை கொடுப்பவனே. அத்தகைய சாமர்த்தியம் கொண்டவனே. தாஶார்ஹனே. உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தியை வெளிப்படுத்தும் பக்தர்களுக்கு மோட்சத்தை அருள்பவனே. அவர்களின் இஷ்டார்த்தங்களை அருள்பவனே. கிருஷ்ணனே. தாஸார்ஹனே.

521. ஸ்ரீ ஸாத்வதாம்பதயே நம:
ப^{3}லவான் அதி^{4}பதி நீனு 'ஸாத்வதாம்பதி' நமோ
பாலிஸுவி ஸாத்வவந்த ப^{4}க்தஜனருக^{3}ளன்ன
மாலக்ஷ்மீபதி நீனு ஸாத்வதாம் பாஞ்சராத்ரதி^{3}
ஹேளிருவி இந்தி^{3}ராதி^{3} நவமூர்த்திகா^{3}தி^{3}மூர்த்தி

வலிமையானவனே. தலைவனே. ஸாத்வதாம்பதியே. பக்தர்களை நீ காக்கிறாய். லட்சுமிபதியே. பாஞ்சராத்ரங்கள் உன்னையே புகழ்கின்றன. இந்திராதி அனைத்து தேவதைகளுக்கும் நீயே தலைவன்.

522. ஸ்ரீ ஜீவாய நம:
ப்^{3}ருஹஸ்பதிய ஸ்தோத்ரதிம் கீர்த்திதனு 'ஜீவ' நமோ
பி^{3}ரம்மாண்ட ஒளகு^{3} ஹொரகு^{3} ஸர்வவு திளித^{3}வ
மஹாஸாமர்த்^{2}யவந்தனு சேஷ்டகனு தா^{4}ரகனு
மஹைஶ்வர்யரூபனு ப்ராக்ருத விலக்ஷண நீனு

ப்ருஹஸ்பதியின் ஸ்தோத்திரத்தால் வணங்கப்படுபவனே. ஜீவனே உனக்கு என் நமஸ்காரங்கள். பிரம்மாண்டத்தின் உள்ளேயும் வெளியேயும் இருக்கும் அனைத்தையும் அறிந்தவனே. மகா சாமர்த்தியம் கொண்டவனே. அனைத்து செயல்களை செய்பவனே. மஹா ஐஸ்வர்ய ரூபனே. ப்ராக்ருதத்திலிருந்து வேறுபட்டனே.

523. ஸ்ரீ வினியித்ரே நம:
ப^{4}க்தரிகெ^{3} ஸ்வாத்மவன்னு கொடு^{3}வவ 'வினயிதா'
ஸதா^{3} நமோ நமோ நினகெ^{3} ரக்ஷகனே ஶரணு
அதி^{4}காரி ப^{4}க்த ஆசரிஸுவ ஸாத^{4}கனெ விக்^{4}ன
பா^{3}ரதெ^{3} ரக்ஷிஸி ஸுக்ஞானாதி^{3}க^{3}ளீவி த^{3}யதி^{3}

பக்தர்களுக்கு ஸ்வாத்மத்தை கொடுப்பவனே. வினயித்ரே உனக்கு என் நமஸ்காரங்கள். அனைவரையும் காப்பவனே உன்னை வணங்குகிறேன். அதிகாரியே. பக்தர்கள் அடைவதான ஸாதகனே. எவ்வித தடைகளும் வராமல், அனைத்து வித சுக ஞானங்களை அருள்பவனே.

524. ஸ்ரீ ஸாக்ஷிணே நம:
ப^{3}லவான் நீ 'ஸாக்ஷி' நமோ நமோ நினகெ^{3} நமஸ்தே
ப^{3}லானந்த^3 ஞானாதி^{3}பூர்ண நீ ஸர்வத்ர வ்யாபிஸி
ஒள ஹொர விஶ்வதோமுக^{2}னாகி^{3} ப^{4}க்தருக^{3}ள
ப^{3}லஞான வர்த்தி^{4}ஸி காய்தி^{3} ஸர்வாத்^{4}யக்ஷ ந்ருஸிம்ஹ

வலிமையானவனே. ஸாக்ஷிணே உனக்கு என் நமஸ்காரங்கள். வலிமை, ஆனந்த, ஞான ஆகிய அனைத்தையும் முழுமையாகக் கொண்டவனே. நீ அனைத்து இடங்களிலும் வ்யாபித்து, உள்ளேயும் வெளியேயும் இருந்து, பக்தர்களுக்கு வலிமை, ஞானங்களை கொடுத்து காக்கிறாய். அனைவருக்கும் தலைவனே. நரசிம்மனே.

525. ஸ்ரீ முகுந்தா^{3}ய நம:
முக்தி கொடு^{3}வவ நீனு 'முகுந்த^3' நமோ நினகெ^{3}
ஶ்வேதத்^{3}வீப அனந்தாஸன வைகுண்ட இந்த^2 ஸ்தா^{2}ன

முக்தரிகெ3 இத்து ஸ்வஸ்வரூபானந்த3 போ4க3வனு
ஒத3கி3ஸுவி முக்தரு நின்ன அதீ4னராகி3ஹரு

முக்தியை அருள்பவன் நீயே. முகுந்தனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்வேதத்வீப, வைகுண்ட, அனந்தாஸன இந்த இடங்களை முக்தர்களுக்கு அளித்து, ஸ்வஸ்வரூபானந்த போகத்தினை அவர்களுக்கு கொடுக்கிறாய். முக்தர்களும் உன்னுடைய அதீனராகவே இருக்கின்றனர்.

526. ஸ்ரீ அமித விக்ரமாய நம:
அமித பராக்ரம ‘அமித விக்ரமனே’ நமோ
ஆம்னாயகு1 அமித ஸாகல்யேன அவிக்ஞாதனு
அமல நின்னய கு3ண பராக்ரம விபாரூட4
ஸுமனோஹர ஸுக2ஞானரூப ஜக3தா3தா4ர

அபாரமான வீரத்தை கொண்டவனே. அமித விக்ரமனே உனக்கு என் நமஸ்காரங்கள். வேதங்களாலும் முழுமையாக அறியப்பட முடியாதவனே. உன்னுடைய குணங்கள் அபாரமானவை. வீரனே. கருட வாகனனே. மனோஹரனே. சுக, ஞான ரூபனே. உலகத்திற்கே ஆதாரனே.

527. ஸ்ரீ அம்போ4நித4யே நம:
ஆதா4ரனு நீ ப4க்தரிகெ ‘அம்போ4நிதி4’ நமஸ்தே
ஆதா4ரனு சதுர்த3ஶ பு4வனக்கெ கூர்ம ரூப
ஸிந்து4 இவ கா3ம்பீ4ர்யாதி3 கு3ணவந்த ஸுரவ்ருந்த3
ஆதா4ர ஸ்வப்ரகாஶ அஜர ஆனந்த3 தேஜ:புஞ்ச

பக்தர்களுக்கு நீயே ஆதாரம். அம்போநிதியே உனக்கு என் நமஸ்காரங்கள். ஈரேழு புவனத்திற்கு நீயே ஆதாரமானவன். கூர்ம ரூபனே. அபாரமான குணங்களைக் கொண்டவனே. தேவர்களுக்கும் நீயே ஆதாரம். ஸ்வப்ரகாஶகனே. எல்லையற்ற ஆனந்தத்தைக் கொண்டவனே. தேஜஸ் கொண்டவனே.

528. ஸ்ரீ அனந்தாத்மனே நம:
ப4க்தரலி ரோஷ மாட3லாரி தா3னமாடு3வி நீ
உதா3ர ரக்ஷக ‘அனந்தாத்ம’ நமோ எம்பெ3
வஸ்துகு3ண காலதே3ஶ நிரோத4 பரிச்சேத3வு
எந்த2 ப3ந்த4வு இல்லத3 ஸ்வராட் நீ ப4க்தமுக்தேஶ

பக்தர்களை நீ ஏமாற்ற மாட்டாய். (ஞான பக்தி ஆகியவற்றை) தானம் செய்பவனே. கருணைக்கடலே. அனந்தாத்மனே. உனக்கு என் நமஸ்காரங்கள். யதார்த்த குணங்களை பெற்றவனே. கால, தேசத்திற்கு அப்பாற்பட்டவனே. எந்த பந்தனமும் இல்லாதவன் நீ. பக்தர்களுக்கு முக்தியை கொடுப்பவன் நீயே.

529. ஸ்ரீ மஹோத3தி4ஶயாய நம:
மஹா உத்க்ருஷ்ட ப3ஹள ஸுக2ப்ராபகனு நீனு
‘மஹோத3தி4ஶயனே’ நமோ ஶரணு ஸுக2பூர்ண
ஸுஹோம ப்ராதஸ்த2 த3தி4 அன்ன கையல்லி மொஸரு
ப்3ரம்மனத3 வாமன க்ருஷ்ணாப்3தி4ஶாயி நாராயண

அபாரமான வீரனே. அற்புதமான சுகத்தை கொண்டவனே. மஹோததிஶயனனே. உனக்கு என் நமஸ்காரங்கள். சுகபூர்ணனே. பால் அன்னம், தயிர் ஆகியவற்றை உனக்கு சமர்ப்பிக்கிறேன். பிரம்மனால் வணங்கப்படுபவனே. வாமனனே. பாற்கடலில் படுத்திருப்பவனே. நாராயணனே.

530. ஸ்ரீ அந்தகாய நம:
வாஞ்சிதவ ஸுரிஸுவுது3 மொத3லாத3வுக3ள
நிஸ்சயதி3 மாள்ப ‘அந்தக’ நமோ நமோ ஶரணு

ஸஞ்சிதவு ஸுட்டு ஆகா3மி அண்ட3தெ3 தடெது3 நீ
கொஞ்சமாள்பி ப்ராரப்3த4 ஶத்ருஹர ப4க்தேஷ்டதா3தா

இஷ்டார்த்தங்களை அருள்வது முதலானவற்றை கண்டிப்பாக செய்பவனே. அந்தகனே. உனக்கு என் நமஸ்காரங்கள். முற்பிறவிகளின் கர்மங்களை சுட்டு; இதுவரை செய்த பாவங்களை தடுத்து; நீ ப்ராரப்தத்தை குறைப்பாய். எதிரிகளை அழிப்பவனே. பக்தர்களின் இஷ்டத்தினை நிறைவேற்றுபவனே.

531. ஸ்ரீ அஜாய நம:
நின்னய ரத2கெ அஶ்வக3ளன்னு யோஜனெ மாள்பி
நீ 'அஜ' நமோ நினகெ3 தே3ஹ ரத2 நீ ரதி2க
'அ' எந்த3ரெ பி3ரம்மாக்2ய நிர்தோ3ஷ கு3ணபூர்ண விஷ்ணு
'ஜ' எந்த3ரெ ஹுட்டில்லத3 நீ ஜக3ஜன்மாதி3கர்தா

உன்னுடைய ரதத்திற்கு குதிரைகளை நீயே தேர்ந்தெடுக்கிறாய். ஹே அஜனே, உன்னை நான் வணங்குகிறேன். இந்த தேகம் என்னும் ரதத்திற்கு நீயே ரதிகன் (தேரோட்டி). அ என்றால், பிரம்மாதிகளால் வணங்கப்படும், தோஷங்கள் அற்றவனான, குணபூர்ணனான, விஷ்ணு; ஜ என்றால், பிறப்பு அற்றவனான நீ, உலகில் அனைவரின் பிறப்பிற்கும் காரணம் ஆனவன்.

532. ஸ்ரீ மஹார்ஹாய நம:
க4னஶ்ரேஷ்ட யோக்3யவு ஆகி3ருவ ஸோம எம்ப3
அன்னவான் 'மஹார்ஹ' நமோ நமோ எனுவெ நினகெ3
விஷ்ணு ஸர்வோத்தம யக்ஞ நாம யக்ஞபுக் பூஜ்யனு
நினகெ3 ஸமரில்ல நீனேவெ மஹான் ப்ரதா4னனு

அபாரமான யோக்யதையைக் கொண்டிருப்பவனே, ஸோம எனப்படும் அன்னவான் (அனைவரும் அன்னத்தை அளிப்பவனே), மஹார்ஹனே, உனக்கு என் நமஸ்காரங்கள். விஷ்ணு ஸர்வோத்தம என்னும் யக்ஞத்தில், நீயே யக்ஞபுக், பூஜ்யனாக இருக்கிறாய். உனக்கு சமம் என்று யாரும் இல்லை. நீயே ஸர்வோத்தமன். முக்கியமானவன்.

533. ஸ்ரீ ஸ்வாபா4வ்யாய நம:
ஸ்வத: நின்னிந்த3லே ப்ரவர்த்தித ப்ரேரிதவாகி3ஹ
ரத2வுள்ள 'ஸ்வபா4வ்ய' நமோ எம்பெ3 நினகெ3
இதர ப்ரேரகரு நினகி3ல்ல நித்ய ஸ்வேச்சவான்
ஸ்வதந்த்ர ஸ்வஸ்வாமிபா4வ ஸ்வாபாவி4க நின்னல்லி

உன்னாலேயே தீர்மானம் செய்யப்பட்டு, செலுத்தப்படும் ரதத்தைக் கொண்டவனே (அப்ராக்ருத சரீரத்தை கொண்டவனே), ஸ்வபாவ்யனே, உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னை செலுத்துபவர்கள் வேறு யாரும் இல்லை. தோஷங்கள் அற்றவனே. ஸ்வதந்த்ரனே. ஸ்பாவிகமாகவே, நீயே அனைவருக்கும் ஸ்வாமியாக இருக்கிறாய்.

534. ஸ்ரீ ஜிதாமித்ராய நம:
ஸூர்யவேக3 ஹிந்தெ3 மாடி3 ஜயிஸி முந்தெ3 ஹோகு3வ
ஹயக3ளுள்ளவ 'ஜிதாமித்ர' நமோ நமோ எம்பெ3
ஹேய ப்ராக்ருத கு3ணக3ளன்னு ஶத்ருகூடவன்னு
ஜயிஸுவ நிர்தோ3ஷ அமித பௌருஷ ந்ருஸிம்ஹ

ஸூரியனை விட வேகமாக முன்னேறிச் செல்லும் குதிரைகளைக் கொண்ட 'ஜிதாமித்ரனே' உனக்கு என் நமஸ்காரங்கள். கேவலமான ப்ராக்ருத குணங்களையும், எதிரிகளையும் வெல்பவனே; தோஷங்கள் அற்றவனே, அபாரமான புருஷ ரூபனே, நரஸிம்மனே.

535. ஸ்ரீ ப்ரமோத3னாய நம:

ப்ரக்ருஷ்டானந்த3 நியமிஸுவ 'ப்ரமோத3ன' நமோ
ப்ரக்ருஷ்டானந்த3 ஸுபூர்ணானுப4வ ஸ்வரூப நீனு
ஶ்ரிகு3 வாயுதே3வரிகு3 ஞான ஆனந்தா3தி3யு
ப்ரவர்த்திஸுவி ப்ரக்ருஷ்டா ரமாஸஹ க்ரீடி3ஸுவி

அபாரமான ஆனந்தத்தைக் கொடுப்பவனே, ப்ரமோதனே. உனக்கு என் நமஸ்காரங்கள். நித்யானந்த, பூர்ணானுபவ, ஸ்வரூபன் நீயே. ஸ்ரீலட்சுமிதேவிக்கும், வாயுதேவருக்கும், ஞான ஆனந்தாதிகளை கொடுக்கிறாய். எப்போதும் ஸ்ரீலட்சுமிதேவியுடன் நீ இருக்கிறாய்.

536. ஸ்ரீ ஆனந்தா3ய நம:

ருத்விஜரிம் க்ருத ஸ்தோத்ரக்கெ ஸர்வரீதியலி நீ
ஆதா4ரனாகி3ருவி 'ஆனந்த3' நமோ நமோ நினகெ3
மோத3மய ஆனந்த3 ஆனந்தி3 நீ யக்ஞ பூஜாதி3
ஸாது4கர்மஸ்துதி விஷயனு ஒப்பி முத3வீவி

பிராமணர்கள் செய்யும் / சொல்லும் ஸ்தோத்திரங்களுக்கு அனைத்து விதங்களிலும் நீ ஆதாரனாக இருக்கிறாய் (அவர்களுக்கு அருள்கிறாய்). ஆனந்தனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஆனந்தமயனே. நீ, யக்ஞங்கள், பூஜைகள், ஸாதுக்கள் செய்யும் ஸ்துதிகள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு அருள்பவன்.

537. ஸ்ரீ நந்த3னாய நம:

ஸுக2 ஒத3கி3ஸுவி நீனு 'நந்த3ன' நமோ எம்பெ3
லோக ப்ராணிக3ளிகெ3 ஸுக2 முக்தரிகு3னு ஸ்வஸ்வ
யோக்3ய ஸ்வரூபானந்த3 அனுப4வ ப்ராபகனு
முக்தாமுக்தரிகெ3 ஸுகா2தி3க3ளு நின்ன அதீ4ன

அனைவருக்கும் சுகத்தைக் கொடுப்பவனே. நந்தனனே. உனக்கு என் நமஸ்காரங்கள். உலக பிராணிகளுக்கு சுகத்தையும், முக்தர்களுக்கு அவரவர்களின் யோக்யதைக்கேற்ப ஸ்வரூபானந்த அனுபவத்தை அளிப்பவன் நீயே. முக்தர், அமுக்தர்கள் என அனைவரின் சுகாதிகளும் உன்னுடைய அதீனத்திலேயே இருக்கின்றன.

538. ஸ்ரீ நந்தா3ய நம:

ஸ்தோத்ரதி3ந்த3 ஆனந்த3 ப்ரகடிஸுவி 'நந்த3' நமோ
ப4க்தக்ருத ஶ்ருதி ஸ்ம்ருதி ஸாது4யுக்தி அவிருத்3த4
ஆதா4ரயுக் ஸ்துதிமெச்சி அனுக்3ரஹிஸுவி நந்த3
ஸதா3 பூர்ணகாம ஸம்ருத்3த4 ஆனந்தா3தி3 ஸ்வரூப

உனக்கு செய்யப்படும் ஸ்தோத்திரங்களால் நீ மகிழ்கிறாய். நந்தனே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்கள் சொல்லும் ஸ்தோத்திரங்களில் உள்ள ஸ்ருதி, ஸ்ம்ருதிகளின் ஆதாரங்களை நீ மெச்சி, அவர்களுக்கு அருள்கிறாய். எப்போதும் பூர்ணகாமனாக இருக்கிறாய். ஏராளமான ஆனந்தாதி ஸ்வரூபத்தைக் கொண்டிருக்கிறாய்.

539. ஸ்ரீ ஸத்யத4ர்மாய நம:

ஶ்ரேஷ்டதம அனேகாவதார 'ஸத்யத4ர்ம' நமோ
உத்க்ருஷ்ட ஸத்யம் ஞானம் அனந்தம் பி3ரம்ம நீனு ஸத்ய
ஜக3த்ரக்ஷதா4ரகனு த4ர்ம ஹீகெ3 ஸத்யத4ர்ம
கஷ்ட நீகி3ஸி ஸத்த4ர்மத3லி இட்டு பாலிஸுவி

ஸர்வோத்தமனே. அனேக அவதாரங்களை எடுத்தவனே. ஸத்யதர்மனே உனக்கு என் நமஸ்காரங்கள். சிறந்ததான ஸத்ய, ஞான, அனந்த பிரம்மன் நீயே. ஸத்யமான இந்த உலகினை காப்பவன், ஆதாரகன் நீயே. இதுவே தர்மம் என்று நீ நிர்ணயம் செய்கிறாய். உன் பக்தர்களின் கஷ்டங்களை போக்கி, ஸத்யதர்மங்களை அவர்களில் வைத்து காக்கிறாய்.

540. ஸ்ரீ த்ரிவிக்ரமாய நம:

த்ரிலோகத³லி ஶூர த்ரிவிக்ரம நமோ நினகெ³
த்ரிலோக பாத³விக்ஷேப ப்ரக்²யாத 'த்ரிவிக்ரமனு'
த்ரிலோகதி³ க³ருட³னிந்த³ பாத³விக்ஷேப கர்த
கால கு³ணதே³ஶ ஸுர நராஸுராதி³ ஸர்வேஶ

மூன்று உலகங்களிலும் வலிமையானவனே. த்ரிவிக்ரமனே உனக்கு என் நமஸ்காரங்கள். மூன்று உலகங்களிலும் உன் பாதம் வைத்து அளந்து புகழ் பெற்றவனே, த்ரிவிக்ரமனே. மூன்று உலகங்களிலும் கருடன் மேல் அமர்ந்து செல்பவனே. கால, குண, தேசங்கள் அனைத்திலும், நரர்கள், தேவர்கள் என அனைவராலும் வணங்கப்படுபவனே. சர்வேஸ்வரனே.

541. ஸ்ரீ மஹர்ஷயே நம:

மஹாஞானி நீ 'மஹர்ஷி' நமோ நினகெ³ ஸர்வக்ஞ
மஹான் ரிஷி ஞானி மஹர்ஷியு நீனே அவதார
தே³வஹூதிஸுவ கபில நாமதி³ ப்ரகடிஸி
மஹாஞான தத்வ போ⁴தி³ஸிதி³ மஹர்ஷி கபில

மஹாஞானியே. மஹர்ஷியே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸர்வக்ஞனே. நீயே, மகான், ரிஷி, ஞானி, மஹரிஷி. தேவஹூதியிடம் கபில நாமகனாக அவதரித்து, மஹாஞானங்கள் கொடுக்கத்தக்க தத்வங்களை போதித்தாய். கபில மகரிஷியே.

542. ஸ்ரீ கபிலாசார்யாய நம:

ஸுக²மயனு ஸுக² ப்ராபகனு ஆசரணீய
ஸத்கர்ம ப⁴க்திபூர்வக மாள்ப ஶிஷ்யர மெச்சி
ஸ்வீகரிஸி ஶிஷ்யர ஸேவெ அனுக்³ரஹ மாடு³வ
'கபிலாசார்ய' நமோ அஜ ஶிவர லாலிஸுதி

ஸுகமயனே. ஸுகத்தை அருள்பவனே. செய்யவேண்டிய ஸத்கர்மங்களை பக்தியுடன் செய்யும் சிஷ்யர்களை மெச்சி, அந்த ஸ்தோத்திரங்களை / கர்மங்களை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு அருள்பவனே. கபிலாசார்யனே. உனக்கு என் நமஸ்காரங்கள். பிரம்ம ருத்ரர்களுக்கும் அருள்பவனே.

543. ஸ்ரீ க்ருதக்ஞாய நம:

ஆஹ்வான ஶ்ரவண மாள்ப 'க்ருதக்ஞனே' நமோ எம்பெ³
ஸ்ரீஹரி ப்ரீத்யர்த்த மாள்ப பூஜெயலு யக்³ஞத³லு
ஆஹ்வான ஸ்தோத்ர ஸூக்த கிவிகொ³ட்டு ஆலிஸி அனு
க்³ரஹ மாடு³வி ப⁴க்தக்ருத ஸ்துதிக³ளன்ன மெச்சி

அனைவரும் செய்யும் ஸ்தோத்திரங்களை கேட்கும் 'க்ருதக்ஞனே' உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீஹரியின் ப்ரீத்யர்த்தமாக செய்யப்படும் பூஜையிலும், யக்ஞத்திலும் இருந்து, அந்த ஸ்தோத்திர, ஸூக்தங்களை காது கொடுத்து கேட்டு, அந்த பக்தர்கள் செய்யும் ஸ்துதிகளுக்கு மகிழ்ந்து, அவர்களுக்கு அருள்கிறாய்.

கு³ருக³ மத்⁴வக³ ஸரஸிஜாஸனபித ஸ்ரீஶ
விரஜ கல்யாணதம ஸுகு³ணாப்³தி⁴ ஸர்வகர்த்த
'ஸ்ரீப்ரஸன்ன ஸ்ரீனிவாஸ' ஸஹஸ்ர நாமனே நமோ

நீ ரசிஸி நுடிஸித்3து3 அர்ப்பிதவு ப்ரீதனாகோ3 ||ப

|| ஏழாம் ஸந்தி முடிந்தது ||
|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து||

***

எட்டாம் ஸந்தி

கல்யாணதம ரூப அனக4 ஸுகு3ணார்ணவனெ
மாலக்ஷ்மிபதி பி3ரம்ம விஶ்வாக்2ய விஷ்ணு வஷட்கார
ஶீல ஜீவோத்தம வர வாயு பி3ரம்மதா4மன ஹ்ருத்
கீலாலஜாந்தஸ்ய பரமாத்ம கேஶவ நமஸ்தே ||ப

544. ஸ்ரீ மேதி3னி பதயே நம:
ப4க்தவாஞ்சித வர்ஷண ஶீல மனஸ்ஸுள்ளவனு
'மேதி3னிபதி' நமோ நினகெ3 ராஜராஜேஶ்வர
க்ஷிதீஶாந்தர்க3தனாகி3 ஜனர போஷிஸி மத்து
மேதி3னீஶ ஸ்வயம் ராம நீ ப4க்தேஷ்ட வர்ஷிஸிதி3

பக்தர்ளுக்கு அருளும் அபாரமான, இளகிய, மனம் கொண்டவனே. மேதினிபதியே உனக்கு என் நமஸ்காரங்கள். ராஜராஜேஸ்வரர்கள், அரசர்கள் என இவர்களில் அந்தர்கதனாக இருந்து, மக்களை காத்து, மேலும், உலக நாயகனாக விளங்குபவனே. ஸ்ரீராமனே. நீ பக்தர்களின் இஷ்டார்த்தங்களை முழுமையாக நிறைவேற்றுகிறாய்.

545. ஸ்ரீ த்ரிபதா3ய நம:
அஶ்வரத2கப இந்த2 சின்ஹ 'த்ரிபத3னே' நமோ
ஸஸதி கஶ்யபர ஸபத்யும தே3ஹி ஜீவர
ஈஶ ப்ராணனு த்ரிபத3 கா3யத்ரி ப்ரதிபாத்3யனு
த்ரிஸ்தா2ன த்ரிபாத்3 வைகுண்ட ஶ்வேத த்3வீபானந்தாஸன

குதிரைகளுடனான ரதத்தை சின்னமாக கொண்டவனே. த்ரிபதனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஜீவர்களின் தலைவனே. ப்ராணனே. மூன்று பாதங்களைக் கொண்ட காயத்ரி ப்ரதிபாத்யனே. வைகுண்ட ஸ்வேதத்வீப அனந்தாஸன என்னும் மூன்று இடங்களில் வசிப்பவனே.

546. ஸ்ரீ த்ரித3ஶாத்யக்ஷாய நம:
யாகா3தி4காரிக3ள ஸ்வாமி 'த்ரித3ஶாத்யக்ஷ' நமோ
ஸ்வர்க்க3 ஸ்தி2தி லயாத்3யத்4யக்ஷ ஸர்வத3ஶா ஸ்வாமியு
ஜாக்3ரதாதி3 த்ரையவஸ்தா2த்4யக்ஷ ப்ராபக மாத்4யமூர்த்னே
ஹீகெ3 த்ரித3ஷாயுரத்3யக்ஷ தே3வதெக3ளத்3யக்ஷ

யாகம் செய்யும் அதிகாரிகளின் ஸ்வாமியே. த்ரிதஸாத்யக்ஷனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்வர்க்க, ஸ்திதி, லய ஆகிய அனைத்திற்கும் தலைவனே. எப்போதும் அனைவருக்கும் தலைவனே. ஜாக்ரத, ஸ்வப்ன, நித்ரா என்னும் மூன்று நிலைகளுக்கும் தலைவனே. தேவதைகளின் தலைவனே.

547. ஸ்ரீ மஹாஶ்ருங்கா3ய நம:
மஹாப்ராதா4ன்யவந்த 'மஹாஶ்ருங்க3னே' நமோ எம்பெ3
மஹாஞானாதி3 கல்யாண கு3ணோரு ப்ரதா4னரூப
மஹா அனுபம ஸௌந்த3ர்ய உன்னத நிஜ ஶக்த
மஹாஶ்ருங்க3 சித்ரூப மத்ஸ்ய ஸ்ரீபதி ஸர்வோத்தம

மிகவும் முக்கியமானவனே (ஸர்வோத்தமனே), மஹாஸ்ருங்கனே உனக்கு என் நமஸ்காரங்கள். மஹாஞானம், கல்யாண குணங்களைக் கொண்ட முக்கியமான ரூபத்தைக் கொண்டவனே. மிகச்சிறந்த ரூபத்தை கொண்டவனே. சித்ரூபனே. மத்ஸ்யனே. ஸ்ரீபதியே. ஸர்வோத்தமனே.

548. ஸ்ரீ க்ருதாந்தக்ருதே நம:

ஸித்தா4ந்த நிர்ணயவந்தனு 'க்ருதாந்தக்ருத்' நமஸ்தே
ஸித்தா4ந்த நிர்ணய ப்3ரம்மஸூத்ரக்ருத் வேத3வ்யாஸ
ஸாது4 விருத்3த4 கர்மதி3ம் ப3ந்தி4ஸுவனு
தை3த்ய து3ஷ்கர்மிக3ள ந்ருஸிம்ஹ ப4க்தபாலா

ஸித்தாந்தத்தை நிர்ணயம் செய்தவனே. க்ருதாந்தக்ருதே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸித்தாந்தத்தை நிர்ணயம் செய்யத்தக்க பிரம்மஸூத்ரத்தினை இயற்றிய வேதவ்யாஸரே. உன் பக்தர்களை கர்ம பந்தனத்தினால் கட்டுபவனே. தைத்ய, துஷ்டர்களுக்கு நரசிம்மமாக வந்து அழிப்பவனே. பக்தர்களை காப்பவனே.

549. ஸ்ரீ மஹாவராஹாய நம:

உத்க்ருஷ்ட மஹாத்ம்யவந்தனு நீனு விஷத3தி3
ஸ்துதிஸுவர மனஸு ஸ்தோத்ர விஷயார்த்த2 திளி
த3ந்த2 'மஹாவராஹ' நமோ கோல சின்மயவபு
ஆதி3தை3த்ய அதி நீசன்ன தரித3 த4ரோத்3த4ர

மிகச்சிறந்த சரித்திரங்களைக் கொண்டவன் நீயே. தூய்மையான மனதுடன், உன்னை ஸ்தோத்திரம் செய்பவர்களின் மனதினை, அந்த ஸ்தோத்திரங்களின் விஷயார்த்தங்களின் பக்கம் இழுத்து வருபவனான மஹாவராகனே. உனக்கு என் நமஸ்காரங்கள். அற்புதமான சின்மய ரூபனே. ஆதிதைத்யர்களை, அதி நீசர்களை, கொன்றவனே. உலகத்தை தாங்கிப் பிடித்தவனே.

550. ஸ்ரீ கோ3விந்தா3ய நம:

ப4க்தக்ருத ஸ்தோத்ர மனவிட்டு கேளி ஸ்வீகரிஸி
ப்ரீதனாகு3வ 'கோ3விந்த3' நமோ நமோ வேத3 வேத்3ய
வேத3வன்னு வேதா3ர்த்த2க3ளன்ன பூர்ணதிளித3வ
வேத3வ்யாஸ நீ திளித3ஷ்டு பி3ரம்ம ருத்3ரரரியரு

பக்தர்கள் சொல்லும் ஸ்தோத்திரங்களை மகிழ்ந்து கேட்டு ஏற்றுக் கொள்பவனே, கோவிந்தனே. உனக்கு என் நமஸ்காரங்கள். வேதங்களால் போற்றப்படுபவனே. வேதத்தினை வேதார்த்தங்களை முழுமையாக அறிந்தவனே. வேதவ்யாஸனே. நீ அறிந்த அளவிற்கு, பிரம்ம ருத்ரகளும் கூட அறிய மாட்டார்கள்.

551. ஸ்ரீ ஸுஷேணாய நம:

தன்னல்லி ப4க்தரன்னு ஸம்ஸ்தா2பிப 'ஸுஷேண' நமோ
நின்ன ப4க்தரிகெ3 நீ ஸர்வஸுக2 க்ஷேம ப்ராப்தி
ஸ்தா2னனாகி3ருவி ஸுகா2தி3 தா3ன ஶீல ஶோப4ன
வன்னீவி பூர்ணமஹைஶ்வர்ய ஆனந்த3மய ஸ்ரீஶ

தன் பால் பக்தர்களை இழுப்பவனே ஸுஷேணனே, உனக்கு என் நமஸ்காரங்கள். உன் பக்தர்களுக்கு நீ அனைத்து வித சுகங்களையும், நலன்களையும் அருள்கிறாய். சுகாதி அனைத்து மங்களங்களையும் நீ அருள்கிறாய். பூர்ண மஹைஸ்வர்யத்தை கொண்டவனே. ஆனந்தமயனே. லட்சுமிதேவியின் தலைவனே.

552. ஸ்ரீ கனகாங்க3தி3னே நம:

வேக3வந்த ஶத்ருக3ளன்ன சேதன மாள்ப வஜ்ரவ
கையல்லி த4ரிஸிருவ 'கனகாங்க3தீ3' நமோ

அகளங்க சாமீகரமய அங்க^{3}த^{3}வான் நீனு
ப்ரகாஶிப ஸர்வாப^{4}ரண ஸௌந்த^{3}ர்யஸார ஸ்வதேஜ

எதிரிகளை வேகமாக அழிப்பவனே, கையில் வஜ்ரத்தை (ஆயுதத்தை) தரித்திருப்பவனே. கனகாங்கதினே, உனக்கு என் நமஸ்காரங்கள். தோஷங்கள் அற்றவனே. தங்கமயமான அங்கத்தைக் கொண்டவனே. ஒளிர்வதான, ஸர்வாபரணங்களைக் கொண்ட, தேகத்தை கொண்டவனே.

553. ஸ்ரீ கு^{3}ஹ்யாய நம:
ஆச்சாத^{3}னீய 'கு^{3}ஹ்ய' நமோ அயோக்^{3}யரிக^{3}க^{3}ம்ய
நீசதம த்ரிபுராஸுர ஜினாதி^{3}க^{3}ளிகெ^{3} நீ
ஆச்சாத^{3}க போ^{4}த^{3}வித்தெ நின்ன மரெமாடி^{3}தி^{3}
நீசரிகெ^{3} கு^{3}ஹ்யனாகி^{3} ஸுரர ஷங்கெ களெதி^{3}

ஏற்றுக் கொள்ளத்தக்க குஹ்யனே உனக்கு என் நமஸ்காரங்கள். அயோக்யர்களுக்கு கிடைக்காதவனே. நீசர்களான த்ரிபுராசுரர்கள், ஜினாதிகளுக்கு நீ தெரியாதவாறு உன்னை மறைத்துக் கொண்டாய். நீசர்களுக்கு தெரியாதவாறு இருந்து, தேவதைகளுக்கு அவர்களின் சந்தேகங்களை போக்கினாய்.

554. ஸ்ரீ க^{3}பீ^{4}ராய நம:
அபி^{4}லாஷ ரஸவந்த 'க^{3}பீ^{4}ர' நமோ நமஸ்தே
ஆப்தகாம ஸ்வரமண ஸ்வேச்சா நீ ரமா ஸமேத
க^{3}ம்பீ^{4}ர ஸுகு^{3}ணாப்^{3}தி^{4} ஞானாதி^{3} தீ^{3}ப்திவான் ப^{4}க^{3}வான்
விபாரூட ஸமக்^{3}ரைஶ்வர்ய பூர்ண ஸீதாயுக்ராம

அனைத்து இஷ்டார்த்தங்களையும் போக்குபவனே. கபீரனே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்களுக்கு ப்ரியனே. ஸ்வரமணனே. உன் இஷ்டப்படியே நீ ஸ்ரீலட்சுமிதேவியுடன் இருக்கிறாய். கம்பீரனே. ஸுகுணாப்தி, ஞானாதிகளைக் கொண்டவனே. பகவானே. கருடாரூடனே. அனைத்து செல்வங்களையும் கொண்டனே. ஸீதையுடன் இருப்பவனான ஸ்ரீராமனே.

555. ஸ்ரீ க^{3}ஹனாய நம:
கு^{3}ஹ்ய ப்ராப்தி மாடு^{3}வ 'க^{3}ஹன' நமோ நமோ எம்பெ^{3}
மஹிஸ்ரீ ஸமேத ஸ்ரீமன் நாராயண அப்^{3}தி^{4}கே^{3}ஹ
மஹா உதா^{3}ரகருணி ஸாகல்ய 'ஞாதுமஶக்ய
தே^{3}ஹினாம் அந்த த்^{3}ருவாய அனபலப்^{4}ய வர்த்மனே'

தியானங்களால் அடையப்படுபவனே. கஹனனே, உனக்கு என் நமஸ்காரங்கள். ஸ்ரீலட்சுமிதேவியுடன் ஸ்ரீமன் நாராயணனான பாற்கடலில் படுத்திருப்பவனே. மிகவும் கருணை உள்ளவனே. முழுமையாக புரிந்து கொள்ளப்பட முடியாதவனே.

556. ஸ்ரீ கு^{3}ப்தாய நம:
கு^{3}ப்தரக்ஷக நமோ கூ^{3}ட^{4}ஞானி த்^{4}ருட ப^{4}க்தர
ஆப்தனாகி^{3} ரக்ஷிஸுதி ஶிலெயொளு 'கு^{3}ப்த' ஶீல
பதிவ்ரதெ அஹல்யன்ன ரக்ஷிஸிதி^{3} ராமசந்த்ர
அத^{4}மரு அயோக்^{3}யரிகெ^{3} ஆச்சாதி^{3}தனாகி^{3}ஹி

உன் பக்தர்களை காப்பவனே. உனக்கு என் நமஸ்காரங்கள். அபாரமான ஞானி, த்ருட பக்தர்களின் நண்பனாகி, அவர்களை காக்கிறாய். சிலைகளில் மறைந்திருக்கிறாய். குப்தனே. சிறந்த பதிவிரதைகளான அகலிகையை காத்தவனே, ஸ்ரீராமசந்திரனே. அதமர்கள், அயோக்யர்களுக்கு, மறைந்திருக்கிறாய்.

557. ஶ்ரீ சக்ரக3தாத4ராய நம:
த4னாதி3க3ள கொடு3வவனு ப4க்தேஷ்ட ப்ரஜெக3ள
நீனு போஷிஸுவி ‘சக்ரகதா4த4ர’ நமோ எம்பெ3
இனக3தி4க தேஜஸ்விசக்ர ப3லாட்3யக3தெ3ய
நீனு த4ரிஸிருவி நரகாஸுராத்3யர ஹந்தா

உன் பக்தர்களுக்கு, தனாதி இஷ்டார்த்தங்களை அருள்பவனே. சக்ரகதாதரனே. உனக்கு என் நமஸ்காரங்கள். சூரியனைவிட அதிக ஒளியினை பெற்றிருப்பவனே. சக்ர, பலமான கதை ஆகியவற்றை நீ தரித்திருக்கிறாய். நரகாசுரன் முதலான தைத்யர்களை கொன்றவனே.

558. ஶ்ரீ வேத4ஸே நம:
ப4க்தர மனெகெ3 ஆக3மன மாள்ப ‘வேதா4’ நமோ
விது3ரன மனெகெ3 ஆக3மனமாடி3 பூஜாதி3
ப4க்தியுக் ஸேவெ ஸ்வீகரிஸிதி3 குலால பீ4மன
ஸத3னக்கெ ஆக3மிஸி நித்ய ஸுக2ஞானவித்தி

பக்தர்களின் வீட்டிற்கு (மனதிற்கு) வருபவனே. வேதஸே உனக்கு என் நமஸ்காரங்கள். விதுரனின் வீட்டிற்கு வந்து, பூஜாதி பக்திகளை ஏற்றுக் கொண்டாய். குலால பீமனின் வீட்டிற்கு வந்து, அவனுக்கு ஞானத்தை அளித்து, முக்தியையும் கொடுத்தாய்.

559. ஶ்ரீ ஸ்வாங்கா3ய நம:
கீர்த்தி என்னுவ த4ன ஸ்வத: உள்ளவ ‘ஸ்வாங்க3’ நமோ
‘வேதே3ராமாயணேசைவ புராணே பா4ரதே ததா2
ஆதா3வந்தேச மத்4யேச விஷ்ணு ஸர்வத்ர கீ3யதே
ஸ்வதந்த்ர அங்க3 அங்கா3ங்ய ꞉பி4ன்னனாத3 உருகா3ய’

புகழ் என்பதான செல்வத்தை தானே கொண்டவனே. ஸ்வாங்காயனே உனக்கு என் நமஸ்காரங்கள். வேதங்களில், ராமாயணத்தில், புராணங்களில், பாரதத்தில்கூட, துவக்கத்தில், இறுதியில், நடுவில் என அனைத்து இடங்களிலும் விஷ்ணுவே புகழப்படுகிறார் என்று இந்த ஸ்லோகம் சொல்கிறது. ஸ்வதந்த்ரனே. அங்க அங்காங்களில் வேறுபாடு அற்றவனே. சிறந்த அப்ராக்ருத தேகத்தை கொண்டவனே.

560. ஶ்ரீ அஜிதாய நம:
அபராஜித நீனு ‘அஜித’ நமோ நமோ எம்பெ3
அபே4த்ய அச்சேத்ய அவ்யய அஶோக அனிர்விண்ண
ஸுப3லி நீ ஆதி3தை3த்யாதி3 மஹாஸுத்ரு ஸம்ஹார
அப்3தி4யலி ஆவிர்ப்ப4விஸிதெ3 இந்தி3ராபதியு

யாராலும் வெல்லப்பட முடியாதவனே. அஜிதனே உனக்கு என் நமஸ்காரங்கள். வெல்லப்பட முடியாதவன். காயப்படுத்தப்பட முடியாதவன். அழிவு இல்லாதவனே. சோகம் இல்லாதவனே. துக்கம் இல்லாதவனே. ஆதி தைத்ய முதலான தைத்யர்களை கொன்றவனே. பாற்கடலில் தோன்றியவளான ஶ்ரீலட்சுமிதேவியின் தலைவன் நீயே.

561. ஶ்ரீ கிருஷ்ணாய நம:
ஸஜ்ஜனரிகெ3 மனோஹர ‘க்ருஷ்ணனே’ நமோ எம்பெ3
ப4ஜக ப4க்தரிகெ3 ஸகலேஷ்ட சிந்தாமணியு
ராஜிஸுவ ஹரின்மணி நிப4 ஸௌந்தர்யஸாரனு
ஜக3தேக3வந்த்3யனு பை4ஷ்மிஸத்யாஸமேத ஸர்வேஶ

ஸஜ்ஜனர்களின் ப்ரியனே கிருஷ்ணனே, உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னை வணங்கும் பக்தர்களுக்கு அனைத்து இஷ்டார்த்தங்களையும் நிறைவேற்றும் சிந்தாமணியே. ஒளிரும் மரகதத்தை அணிந்த ஸௌந்தர்யனே. அனைத்து உலகத்தவர்களாலும் வணங்கப்படுபவனே. பைஷ்மி ஸத்யபாமா ஸமேதமாக இருப்பவனே. ஸர்வேசனே.

562. ஸ்ரீ த்3ருடா4ய நம:
ஸ்வப4க்தரனு ப3லிஷ்டராகி3 மாள்ப 'த்3ருட' நமோ
அபரிமித தா3ர்ட்4யப3ல பூர்ண நித்ய ஸ்வதந்த்ர
அப்ராக்ருத ப3லி த்3ருடனு ப்ராக்ருத ஸ்தூ2லனல்ல
ஸுபர்வாணாதி சராசரத3 தா3ர்ட்4ய நின்னாதீ4ன

தன் பக்தர்களை சிறந்தவர்களாக ஆக்குபவனே, த்ருடனே, உனக்கு என் நமஸ்காரங்கள். அபாரமான திடம், வலிமை, நித்யானந்தத்தைக் கொண்டவனே. ஸ்வதந்த்ரனே. அப்ராக்ருத சரீரத்தைக் கொண்டவனே. ப்ராக்ருத, ஸ்தூல தேகம் இல்லாதவனே. புல் முதற்கொண்டு சராசர வஸ்துக்கள் அனைத்தும் உன்னுடைய அதீனமே.

563. ஸ்ரீ ஸங்கர்ஷணாய நம:
ப4க்தது3ரித பரிஹார க்ருத் 'ஸங்கர்ஷண' நமோ
உத்தம ரீதியலி கர்ஷண ஶீலனாகி3ருவி
உத்தமத்வ ஸாரத்வதி3 'ஸம்' தீ3ப்தமத்வதி3ம் 'க'
ஷட்கு3ணைஶ்வர்ய 'ஷம்' ஸுக2ப3லவஶி 'ண' ஜயேஶ

பக்தர்களின் துக்கங்களை பரிகரிப்பவனே. ஸங்கர்ஷணனே. உனக்கு என் நமஸ்காரங்கள். மிகவும் சிறந்த வகையில் பக்தர்களை ஈர்ப்பவனே. சிறந்த முறையில் ஸாரத்வத்தை வகித்ததால் 'ஸம்' ; அபாரமான ஒளியைக் கொண்டிருப்பதால் 'க' ; ஷட்குணைஸ்வர்ய ஸம்பன்னன் ஆகையால் 'ஷம்' ; சுக பலன்களை அளிப்பதால் 'ண' என்று 'ஸங்கர்ஷணன்' ஆனவனே;

564. ஸ்ரீ அச்சுதாய நம:
ஜக3தை3ஶ்வர்யதி3 ச்யுதிரஹித 'அச்யுத' நமோ
அகா4தி3 தோ3ஷதூ3ர ஸ்வதந்த்ர ரூபகு3ணதி3பூர்ண
ஸுக2 சின்மாத்ரவஸு ச்யுதி இல்லத3 ஸார்வங்க3னு
அக3ணித மஹைஶ்வர்ய ஸதா3பூர்ண நாராயண

அபாரமான செல்வங்களைக் கொண்டவனே. அழிவில்லாதவனே. அச்யுதனே. உனக்கு என் நமஸ்காரங்கள். எவ்வித தோஷங்களும் அற்றவனே. ஸ்வதந்த்ரனே. ரூப குணங்களை பூர்ணமாக கொண்டவனே. சுக சின்மயனே. குறை இல்லாத தேகம் கொண்டவனே. கணக்கிடமுடியாத அபாரமான செல்வங்களைக் கொண்டவனே. பூர்ணனே. நாராயணனே.

565. ஸ்ரீ வருணாய நம:
ப4க்தரிந்த3 ஸ்ரத்3தெ4யிம் ப4ஜனீய 'வருண' நமோ
உத்தம வாயுகெ3 ஸ்ரீபனேவே இஷ்டனு வரணீய
ததி3தர ப4க்தரிகெ3 மோக்ஷோத்3தே3ஶதி3 நீ வரணீய
ப4க்தஸாமான்யரிகெ3 ப2லோத்3தே3ஶ வரணீய

பக்தர்களால் சிரத்தையுடன் வணங்கப்படும் வருணனே உனக்கு என் நமஸ்காரங்கள். வாயுதேவருக்கு, ஸ்ரீலட்சுமிதேவிக்கு ப்ரியமானவனே. உன்னை வர்ணிக்கும் பக்தர்களுக்கு மோட்சத்தையே கொடுப்பவனே. மற்ற பக்தர்களுக்கு அவரவர்களின் யோக்யதைக்கேற்ப பலன்களை கொடுப்பவனே.

566. ஸ்ரீ வாருணாய நம:

வரணீய ஹரி ஸமர்ப்பக த4ன த்3ரவ்யதா3த
'வாருண' நமோ பூஜாத்4யான கீர்த்தன ப4ஜனதி3
ஹரி நீ கொட்ட த்3ரவ்யக3ளிம் ப4க்தியுக் அர்ப்பிஸலு
ஸுப்ரீதியிம் யோக3க்ஷேம வஹிஸி ப்ரஸாத3 ஈவி

பூஜிக்கும் பக்தர்களுக்கு தன, த்ரவியங்களை அளிப்பவனே. வாருணனே. உனக்கு என் நமஸ்காரங்கள். பூஜை, தியான, கீர்த்தன, பஜனை ஆகியவற்றை செய்து, நீ கொடுத்த பொருட்களை உனக்கே அர்ப்பணம் செய்தால், மிகவும் மகிழ்ந்து, பக்தர்களின் நலன்களை காத்து, தக்க பிரஸாதத்தை அருள்கிறாய்.

567. ஸ்ரீ வ்ருக்ஷாய நம:

ப4க்தர ஆபத்து பரிஹரிஸுவி 'வ்ருக்ஷ' நமோ
'வ்ரு' எந்த3ரெ பாபஜன்ய ரோக3 பீடா3 ஆபத்துக3ள்
'க்ஷ' எந்த3ரெ ஆகஷ்டக3ள நாஶமாடு3வந்தா2த்3து3
ப4க்தாபீ3ஷ்டப்ரத3 ஸர்வோத்தம கல்பவ்ருக்ஷ ஸ்ரீஶ

பக்தர்களின் ஆபத்துகளை பரிகரிப்பவனே. வ்ருக்ஷனே. உனக்கு என் நமஸ்காரங்கள். 'வ்ரு' என்றால் பாவத்திற்கு காரணமான நோய் / பீடைகள்; 'க்ஷ' என்றால் அந்த கஷ்டங்களை அழிக்கத்தக்கவன் என்று பொருள். பக்தர்களின் அபீஷ்டங்களை நிறைவேற்றுபவனே. ஸர்வோத்தமனே. கல்பவ்ருக்ஷனே. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே.

568. ஸ்ரீ புஷ்கராக்ஷாய நம:

பூர்ண நீ வ்யாப்தனோ 'புஷ்கராக்ஷ' நமோ நமோ எம்பெ3
பூர்ணத்வதி3ம் தே3ஶகால வஸ்து ஸர்வத்ர நீ வ்யாப்த
பூர்ணத்வதி3ம் புஷ்ட துஷ்ட போஷக வனஜேக்ஷண
பூர்ணகாம நீ ஸர்வப்ரகாரதி3 ஸ்வதந்த்ரதி3 பூர்ண

பூர்ணனே. நீ அனைத்து இடங்களிலும் வ்யாப்தன். புஷ்கராக்ஷனே. உனக்கு என் நமஸ்காரங்கள். தேச, கால, வஸ்துக்களில், அனைத்து காலங்களிலும், நீ பூர்ணனாகவே இருக்கிறாய். பக்தர்களை காப்பவனே. பூர்ணகாமனே. நீ அனைத்து விதங்களிலும், ஸ்வதந்த்ரன் மற்றும் பூர்ணன்.

569. ஸ்ரீ மஹாமனஸே நம:

மஹாதொ3ட்ட உதா3ர மன 'மஹாமனஸே' நமோ
மஹா உத்க்ருஷ்டதம ஞானவந்த மஹானுபா4வ
மஹான் லக்ஷ்மிதே3விய வக்ஷத3லி த4ரிஸிருவி
மஹான் பி3ரம்மவாயுக3ளிம் ஸதா3த்4யேய கருணி

மிகப்பெரிய கருணை உள்ளம் கொண்டவனே. மஹாமனஸே. உனக்கு என் நமஸ்காரங்கள். மிகச்சிறந்த ஞானத்தைக் கொண்டவனே. மஹானுபாவனே. ஸ்ரீலட்சுமிதேவியை உன் வக்ஷஸ்தளத்தில் தரித்திருக்கிறாய். பிரம்ம, வாயுகளைவிட உத்தமனே. அனைவராலும் வணங்கப்படுபவனே. கருணை கொண்டவனே.

570. ஸ்ரீ ப4க3வதே நம:

ஐஶ்வர்யாதி3 ஷட்கு3ணவந்த 'ப4க3வான்' நமோ எம்பெ3
ஐஶ்வர்ய ஞான யஶஸ்ஸு வீர்ய ஸ்ரீ வைராக்3ய ஆரு
ஶாஶ்வத ஸுபூர்ண நிர்தோ3ஷ கு3ணக3ளு வுள்ளவ
ப்ரோஜ்வலஸ்வகாந்தி ஜ்யோதிர்மய க3ருடா3ரூட4

ஷட்குணைஸ்வர்களைக் கொண்டவனே. பகவதே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஐஸ்வர்யம், ஞானம், புகழ், வலிமை, செல்வம், வைராக்கியம் ஆகிய ஆறினையும் நிரந்தரமாக, பூர்ணமாக கொண்டவனே. நிர்தோஷனே. நற்குணங்கள் உள்ளவனே. ஒளிமயமானவனே. கருட வாகனனே.

571. ஸ்ரீ ப4க3க்4னே நம:
பராதீ4ன ஶத்ரு நாஶக ப4க: நமோ எம்பெ3
ஶத்ருக3ளு ஸுரத்3விட் தை3த்யருக3ள ப3லாதி3ய
க்ஷிப்ரதி3 நாஶமாடு3வ பராக்ரமவந்தனு
ஸமக்3ரைஶ்வர்ய ஞானாதி3 பூர்ண நிர்தோ3ஷ ப4க3க்4னே

எதிரிகளை அழிப்பவனே. பகக்னே உனக்கு என் நமஸ்காரங்கள். எதிரிகளை, தைத்யர்களை, நொடிப்பொழிதில் அழிக்கத்தக்க வீரம் கொண்டவனே. ஐஸ்வர்ய, ஞானங்களால் பூர்ணனே. நிர்தோஷனே. பகக்னே.

572. ஸ்ரீ ஆனந்தி3னே நம:
ஞானத4னாதி3 ஸம்ருத்3தி4மான் 'ஆனந்தீ3' நமோ எம்பெ3
ஆனந்த3பூர்ண ஸ்வரூபவந்த ஆனந்தி3யு நீனு
ஆனந்தா3னுப4வியு ப4க்தரிகெ3 ஆனந்த3தா3தா
இனஸோம வம்ஶத3லி அவதார கிருஷ்ண

ஞான, செல்வங்களை அபாரமாக கொண்டவனே. ஆனந்தினே உனக்கு என் நமஸ்காரங்கள். ஆனந்தபூர்ண ஸ்வரூபத்தை கொண்டவனே. பக்தர்களுக்கு நிரந்தரமான ஆனந்தத்தை தருபவனே. சந்திர வம்சத்தில் கிருஷ்ணனான அவதாரம் செய்தவனே.

573. ஸ்ரீ வனமாலினே நம:
கீர்த்தனீய ப4ஜனீய கர்ம ஸ்ரேணி ஸ்ரேணியாகி3
கர்தனாகி3 இருவி 'வனமாலி' நமோ நினகெ3
ப4க்தரிம் ஶ்ரோதவ்ய மந்தவ்ய நிதி4 த்3யாஸிதவ்ய நீ
பத்மமாலா ஆபது3த்3தா4ரியே ஸ்ரீயிந்த3 ஸம்ஸேவ்ய

கீர்த்தனை / பஜனை செய்யத்தக்கவனே. தொடர்ச்சியாக கர்மங்களை செய்விக்கும் கர்தனாக இருக்கிறாய். வனமாலினே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்கள் மூலமாக, ஸ்ரவண, மனன, நிதித்யாஸன ஆகியவற்றை செய்து கொள்பவனே. பத்ம மாலா தரித்தவனே. ஆபத்துகளை பரிகரிப்பவனே. ஸ்ரீலட்சுமிதேவியால் வணங்கப்படுபவனே.

574. ஸ்ரீ ஹலாயுதா4ய நம:
ப4க்தரிகெ3 அபீ3ஷ்டயோஜக 'ஹலாயுத4' நமோ
ஶுக்லகேஶ அவதார ஹலாயுத4 த4ரனாத3
ஸங்கர்ஷண ப3லராமனலி ஸதா3 ஆவிஷ்டனு
ப4க்திஹிம்ஸக து3ஷ்டர நிராஸக ஆயுத4வான்

பக்தர்களுக்கு அபீஷ்டங்களை அளிப்பவனே. ஹலாயுதனே உனக்கு என் நமஸ்காரங்கள். சுக்லகேஷ அவதாரனே. ஏர் பிடித்தவனே. ஸங்கர்ஷணனே. பலராமனே. பக்தர்களை துன்புறுத்தும் துஷ்டர்களை அழிப்பவனே. ஆயுதங்களை ஏந்தியவனே.

575. ஸ்ரீ ஆதி3த்யாய நம:
ப3ஹுபோ4க்தானி 'ஆதி3த்யா' நமோ அத்தா சராசர
க்3ருஹணாத் மத்து நீ பு4ஜிஸெ ஸர்வரிகு3 த்ருப்தி
ப்3ருஹதீ ஸஹஸ்ர நீ ஜப்த்ரு ஶுகன ப்3ருஹதீ அன்ன

க்^{3}ரஹிஸி க்^{3}ருஹ ப^{3}ஹிரஸ்த^2 ஜனர த்ருப்திஸிதி^{3}

அனைத்தையும் ஏற்றுக் கொள்பவனே. ஆதித்யனே. உனக்கு என் நமஸ்காரங்கள். சராசரங்கள் அனைத்தையும் நீ உண்கிறாய். இதனால் அனைவருக்கும் திருப்தி ஆகிறது. ப்ருஹதி ஸஹஸ்ரத்தினால் நீ வணங்கப்படுகிறாய். ஸுகனின் அன்னத்தை ஏற்றுக் கொண்டு, அனைவரையும் திருப்திப்படுத்தினாய்.

576. ஸ்ரீ ஜ்யோதிராதி^{3}த்யாய நம:
த்^{3}ருதியுத ஸோமக்கெ மொத^{3}லு உத்திஷ்டனாகி^{3}ஹ
ஜ்யோதிராதி^{3}த்ய நமோ 'ஜ்யோதிஷாம்' ஆதி^{3}ஜ்யோதியாத^3
மார்த்தாண்ட^{3}னல்லி அந்தர்க^{3}தனாகி^{3}ருவவனு நீ
ஜ்யோதி ஶப்^{4}த^{3}தி^{3} வாச்யனு பரஞ்யோதி நாராயண

சந்திரனுக்கு ஒளி கொடுப்பவனான (சந்திரனைவிட ஒளி பொருந்தியவனான) ஜ்யோதிராதித்யனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஆதிஜ்யோதியான, சூரியனில், அந்தர்யாமியாக இருப்பவனே. ஜ்யோதி என்று அழைக்கப்படுகிறாய். பரஞ்சோதியே. நாராயணனே.

577. ஸ்ரீ ஸஹிஷ்ணவே நம:
ஸோமரஸ ப்ராஶன மாள்ப 'ஸஹிஷ்ணு' நமோ எம்பெ^{3}
ப்ரேம வாத்ஸல்யதி^{3}ந்த^3 ப^{4}க்தக்ருத அபராத^{4}வ
வைமனஸ்ஸு மாட^{3}தெ^{3} ஸஹன மாடி^{3}ஸுவி த^{3}யாவந்த
அமல ஔதா^{3}ர்யதி^{3} கு^{3}ணஶீல ஸ்ரீராமசந்த்ர

ஸோமரஸத்தை ஏற்றுக் கொள்பவனே ஸஹிஷ்ணுவே உனக்கு என் நமஸ்காரங்கள். மிகவும் அன்புடன், பாசத்துடன், பக்தர்கள் செய்யும் தவறுகளை பொருட்படுத்தாமல், பொறுத்துக்கொள்கிறாய். கருணைக்கடலே. திடமான கருணை கொண்டவனே. குணஷீலனே. ஸ்ரீராமசந்திரனே.

578. ஸ்ரீ க^{3}திஸத்தமாய நம:
அதிக^{3}திவுள்ளவனு க^{3}திஸத்தம நமஸ்தே
ஶ்ருதி அனேஜதே^{3}கம் மனஸோ ஜவியோ மத்தூனு
'தத்^{3}தா^{4}வதோ அன்யா நஶ்யேதி திஷ்டத்' எந்து^{3} ஸாருத்தெ
இந்த மஹிமன்ன ஸாகல்யேன திளியலஷக்ய

அதிகமான வேகம் கொண்டவனே. கதிஸத்தமனே உனக்கு என் நமஸ்காரங்கள். அனேஜதேகம் என்று துவங்கும் ஸ்ருதி உன்னையே புகழ்கிறது. இத்தகைய மகிமைகளைக் கொண்ட உன்னை முழுமையாக அறிவது அஸாத்தியம் ஆகிறது.

579. ஸ்ரீ ஸுத^{4}ன்வனே நம:
ஶத்ருக^{3}ள கார்யதி^{3}ந்த^{3}வுள்ள 'ஸுத^{4}ன்வா' நமோ
கார்ய எந்த^{3}ரெ க்ரௌர்யதி^{3}ந்த^3 இருவ ப^{3}லிஷ்டனு
உருப^{3}லஸுஶோப^{4}ன ஶார்ங்க்^{3}ய த^{4}னுர்த^{4}ர நீனு
பரஶுராமனே ஸீதாஸமேத ஸ்ரீராமசந்திர

எதிரிகளை அழிப்பதற்காக இருக்கும் ஸுதன்வனே உனக்கு என் நமஸ்காரங்கள். இத்தகைய செயல் என்றால் பயங்கரமாக இருக்கும் வீரனே. வீரனே. மங்களங்களை அருள்பவனே. ஸாரங்க என்னும் தனுஸ் ஏந்தியவனே. பரசுராமனே. ஸீதா சமேத ஸ்ரீராமசந்திரனே.

580. ஸ்ரீ க^{2}ண்ட^{3}பரஶவே நம:
வஜ்ராத்^{3}யாயுத^{4}தி^{3}ம் ஶத்ரு நாஶக 'க^{2}ண்ட^{3}பரஶு'
ஶிரபா^{3}கி^{3} நமோ எம்பெ^{3} கொட^{3}லு வஜ்ராத்^{3}தா^{4}யுத^3

பரஶு எந்தெ3னிபுது3 ஆத்3த3ரிந்த3 க்ரூரஜாரி
க்ரு நருபர தரிது3 லோகஸஜ்ஜனர பொரெதி3

உன் வஜ்ராயுதத்தினால் எதிரிகளை அழிப்பவனே. கண்டபரஸுவே உனக்கு என் நமஸ்காரங்கள். வஜ்ராயுதம் ஏந்தியிருப்பதால், க்ரூரமான துஷ்டர்களை, எதிரிகளை அழித்து, உலகத்தில் இருக்கும் ஸஜ்ஜனர்களை நீ காக்கிறாய்.

581. ஸ்ரீ தா3ருணாய நம:
கோ4ரரூப ப்ரகடிஸுவி 'தா3ருண' நமோ எம்பெ3
க்ரூர ஶத்ருக3ள்கெ3 கோ4ரரூப ப4க்தரிகெ ஸௌம்ய
ஹொரகி3ன ஒளகி3ன ஶத்ருதா4ரண மாடி3
பொரெயுவி ப4க்தரனு தா3னவர ஸிம்ஹ ஸ்ரீஶ

உன் கோரமான ரூபத்தை வெளிப்படுத்துபவனே. தாருணனே உனக்கு என் நமஸ்காரங்கள். எதிரிகளுக்கு கோர ரூபம் ஆனால் உன் பக்தர்களுக்கு ஸௌம்ய / சாந்தமான ரூபமே காட்டுகிறாய். வெளியே & உள்ளே இருக்கும் எதிரிகளை அழித்து பக்தர்களை காப்பாய். நரஸிம்ஹனே. ஸ்ரீலட்சுமி தேவியின் தலைவனே.

582. ஸ்ரீ த்3ரவிணப்ரதா3ய நம:
ஸுவர்ண கொடு3வவ நீனு 'த்3ரவிணப்ரத3' நமோ
ஸுவர்ணோப லக்ஷித ஸர்வத்3ரவ்ய த4னாதி3க3ள
பு4வி தே3வருக3ளிகெ3 வேத3 வேத3 அர்த்த2க்3ஞான
ஸர்வ த்3ரவிணவன்னீவி புருஷார்த்த2ப்ரத3 ஸ்ரீஶ

தங்கத்தை (அருளை) கொடுப்பவன் நீயே. த்ரவிணப்ரதனே உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து வித த்ரவ்ய, செல்வங்களை அனைவருக்கும் அளிப்பவனே. வேத, வேதங்களின் அர்த்த ஞானம் ஆகியவற்றை அனைவருக்கும் புரியச்செய்பவனே. புருஷார்த்தங்களை நிறைவேற்றுபவனே. ஸ்ரீலட்சுமிதேவியின் தலைவனே.

583. ஸ்ரீ தி3வ:ஸ்ப்ரதே நம:
மோத3 உத்ஸஹாதி3 ஈவி 'திவ:ஸ்ப்ரஸ்' நமோ நினகெ3
உத்திஷ்ட நாராயண வாஸுதே3வ வைகுண்ட நின்ன
உத்தம ஸ்வரூப பாத3த்ரய ஸம்ஸ்மரிஸுவவர
ப4க்தர ஞானிக3ள மோத3 உத்ஸாஹதி3ந்த3 காயுவி

மகிழ்ச்சி, உற்சாகம் ஆகியவற்றை அருள்பவனே. திவ:ஸ்ப்ரதனே உனக்கு என் நமஸ்காரங்கள். நாராயணனே. வாஸுதேவனே. வைகுண்டனே. உன்னுடைய உத்தம பாதங்களை நினைப்பவர்களை, பக்தர்களை, ஞானிகளை, மகிழ்ச்சி / உற்சாகங்களைக் கொடுத்து அருள்கிறாய்.

584. ஸ்ரீ ஸர்வத்3ருஶே நம:
அபி4லாஷிஸுவ ஞானகொடு3வ 'ஸர்வத்3ருக்' நமோ
ஶோப4ன மஹைஸ்வர்யவான் நீ ஸர்வவன்னு நீடு3த்தி
ஸ்வப4க்தரிகெ3 நின்ன ஸார்வக்ஞத்வ வ்யாபகத்வ
வைப4வ தோரிஸி ஸஞ்ஞானவீவி ஸர்வதோமுக2

விரும்புவதான ஞானத்தைக் கொடுக்கும் ஸர்வத்ருஸே உனக்கு என் நமஸ்காரங்கள். பரம மங்களங்களைக் கொடுக்கும் மஹத் ஐஸ்வர்யங்களை கொண்டவன் நீ. உன் பக்தர்களுக்கு அனைத்தையும் அருள்கிறாய். உன்னுடைய ஸர்வக்ஞத்தை, வ்யாபகத்வத்தை, அதன் சிறப்புகளை காட்டி, நல்ல ஞானத்தை அருள்கிறாய். ஸர்வதோமுகனே.

585. ஶ்ரீ வ்யாஸாய நம:
ப4க்தாபீ3ஷ்டவ விஸ்தாரவாகி3 பூர்ணமாள்ப 'வ்யாஸ'
ஸதா3 நமோ ஸர்வ ஶ்ரேஷ்ட ஸர்வோத்தமானந்த3 ஞான
ஜ்யோதிர்வ்யாப்த பி3ரம்மாண்ட3 ஸர்வத்ர ஔளகெ3 ஹொரகெ3
விஸ்தாரவாகி3 ஹொளெயுவி தேஜ:புஞ்ச ஸாராத்ம

பக்தர்களின் விருப்பங்களை முழுமையாக நிறைவேற்றுபவனே. வ்யாஸனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஸர்வ ஸ்ரேஷ்டனே. ஸர்வோத்தமமான ஆனந்த, ஞானத்தை கொண்டவனே. ஒளிமயமானவனே. பிரம்மண்டத்தில் அனைத்திலும் உள்ளே / வெளியே முழுமையாக இருந்து ஒளிர்விப்பவனே. அபாரமான தேஜஸ் கொண்டவனே. ஸாரங்களை ஏற்றுக் கொள்பவனே.

586. ஶ்ரீ வாசஸ்பதியே நம:
யக்ஞ பூஜாதி3க3ளிகெ3 விராம ஸ்தானனாகி3ஹ
யக்ஞ நியாமக ஸ்வாமி 'வாசஸ்பதி' நமோ எம்பெ3
வாங்மனஸ தே3வதெக3ளெரல்லரிகு3 பதி நீனே
காயவாங்மனஸ க்ருதவுத்பத் ப்ரீதிகரவாக3லி

யக்ஞ பூஜைகளை ஏற்கத்தக்க இடத்தில் இருப்பவனே, யக்ஞங்களை நியமிப்பவனே, ஸ்வாமியே வாசஸ்பதியே உனக்கு என் நமஸ்காரங்கள். வாக்கு, மனஸ் ஆகியவற்றின் (தத்வாபிமானி) தேவதைகள் அனைவருக்கும் நீயே தலைவன். நம் தேகம், வாக்கு, மனஸ் ஆகியவற்றினால் செய்த செயல்கள் அனைத்தும் உனக்கும் மகிழ்ச்சியை தரட்டும்.

587. ஶ்ரீ அயோநிஜாய நம:
யோனிஸம்ப3ந்த4 ரஹித 'அயோநிஜ' நமோ எம்பெ3
நினகி3ல்ல க3ர்ப்ப4வாஸ ஸ்வேச்ச ப்ராது3ர்பா4வ மாள்பி
யோனிவ்யதிரிக்த ஸ்தம்ப4த3லி ஆவிர்ப4விஸிதி3
யோனிவ்யதிரிக்த நாபி4யிம் ஹுட்டிஸிதி3 பி3ரம்மன்ன

யோனி ஸம்பந்தம் அற்றவனே. அயோநிஜனே. உனக்கு என் நமஸ்காரங்கள். உனக்கு எந்த அவதார, ரூபத்திலும், எப்போதும் கர்ப்ப வாஸம் இல்லை. உன் இஷ்டத்திற்கேற்பவே நீ வெளிப்படுகிறாய். யோனியில் வராமல், கம்பத்திலிருந்து தோன்றினாய். அதேபோல, உன் நாபியிலிருந்து பிரம்மனை வெளிப்படுத்தினாய்.

588. ஶ்ரீ த்ரிஸாம்னே நம:
ஸோம ஸ்தோத்ர மாள்ப யக்ஞக்கெ ஹோகு3வ 'த்ரிஸாம்னே'
நமோ நினகெ3 உத்கீ3த2 ப்ரதிஹார நித4னாக்2ய
ஸாம மூரு விஷ்ணு உத்கர்ஷ மந்த்ரக3ள ஸ்துதிப்ரிய
ஸாமப்ரதிபாத்3ய நீ ஸர்வத3லி ஸம ஸர்வேஶ

உன்னை ஸ்தோத்திரம் செய்யும் யக்ஞங்களுக்கு செல்பவனே, த்ரிஸாம்னே. உனக்கு என் நமஸ்காரங்கள். உத்கீத, ப்ரதிஹார, நிதனாக்ய என்று ஸாம வேதம் உன்னை இந்த மூன்று விஷ்ணு மந்திரங்களால் புகழ்கிறது, அதனை கேட்டு மகிழ்பவனே. ஸாம வேதத்தினால் போற்றப்படுபவனே. நீ அனைவரிலும் சமமாகவே இருக்கிறாய். ஸர்வேஸ்வரனே.

589. ஶ்ரீ ஸாமகா3ய நம:
ஸ்தோத்ர அங்கீ3கார மாள்பி நீ 'ஸாமக3' நமோ எம்பெ3
வாக்3தேவி பா4ரதி 'ஸா' ப்ராணனு 'ம' ஈர்வகு3 ஸாம
இந்த2 பா4ரதீ வாயுக3தனாது3த3ரிம் ஹரிஸாமக3
மாத4வனே நீனு ஸாமவேத3தி3ந்த3லி க3ம்யனு

உனக்கு செய்யும் ஸ்தோத்திரங்களை நீ கேட்டு மகிழ்ந்து அருள்கிறாய். ஸாமகனே உனக்கு என் நமஸ்காரங்கள். 'ஸா' என்றால் வாக்தேவியான பாரதி; 'ம' என்றால் முக்ய பிராணர். இந்த இருவருக்குள்ளும் இருப்பவனே. இந்த பாரதி, முக்யபிராணர் இந்த இருவருக்கும் இருப்பதால், ஸ்ரீஹரி ஸாமக என்று அழைக்கப்படுகிறான். மாதவனே. நீ ஸாம வேதத்தினால் அறியப்படுகிறாய்.

590. ஸ்ரீ ஸாம்னே நம:
அபீ4ஷ்ட பூரெயிஸுவ 'ஸாம' நமோ நமோ நினகெ3
ஸர்வபூ4தக3ளல்லி ஸமனாகி3ருவவ நீனு
அபீ4ஷ்ட கொடு3வி பூ4தக3ளிகெ3 யதாயோக்3யதி3
ஶோப4ன ஆனந்த3 ஞான ஸ்வரூபனு ஸாம நீனு

இஷ்டார்த்தங்களை நிறைவேற்றுபவனே. ஸாமனே. உனக்கு என் நமஸ்காரங்கள். அனைத்து ஜீவர்களிலும் சமமாகவே இருப்பவனே. அவரவர்களின் யோக்யதைக்கேற்ப இஷ்டார்த்தங்களை நிறைவேற்றுகிறாய். மங்களத்தைத் தருவதான ஆனந்த, ஞான ஸ்வரூபனே. நீயே ஸாமன்.

591. நிர்வாணாய நம:
ஸுக2ரூப 'நிர்வாணம்' நமோ நமோ எம்பெ3 நினகெ3
ப்ராக்ருத விலக்ஷண அப்ராக்ருத ஸுக2சித்தனு
அகளங்கவு தோ3ஷலேபவில்ல த3ந்த2வுக3ளு
ஸ்ரீகாந்த நின்னய மூல அவதார ரூபக3ளு

சுகமய ரூபனே. நிர்வாணாய நமோ. உனக்கு என் நமஸ்காரங்கள். ப்ராக்ருதமான வஸ்துகளிலிருந்து வேறுபட்டவன். அப்ராக்ருத சுக சித்தத்தைக் கொண்டவனே. ஸ்ரீகாந்தனே, உன்னுடைய மூல மற்றும் அவதார ரூபங்களில், சிறிதளவு கூட உன்னிடம் தோஷம் இல்லை.

592. ஸ்ரீ பே4ஷஜாய நம:
ஸம்ஸார ரோக3 பரிஹாரகனு 'பே4ஷஜன்' நமோ
பே4ஷ எந்த3ரெ ரோக3, ரோக3வன்னு ஜயிஸுவவனு
ஔஷத4 நியாமகனாகி3ருதியோ நீனு
நீ ஸர்வகாமஜ தோ3ஷ ஶோகாதி3 து3க்க2 களிவி

சம்சார ரோகத்தை போக்குபவனே. பேஷஜனே. உனக்கு என் நமஸ்காரங்கள். 'பேஷ' என்றால் எத்தகைய நோயினையும் போக்குபவன். ஔஷதங்களின் நியாமகனாக இருப்பவன் நீயே. பக்தர்களின் விருப்பங்களை போக்குபவனே. தோஷ, சோகங்கள் போன்ற துக்கங்களை நீ களைகிறாய்.

593. ஸ்ரீ பி4ஷஜே நம:
பி4ஷக் நீ யக்ஞ ஸமீபஸ்த2னாகி3ருவி நமஸ்தே
'பி4ஷக்' நீ ஸம்ஸாரரோக3 வைத்3ய ஸ்ரீத4ன்வந்தரி
பி4ஷக் நீ ஸர்வரோக3 நிதா4ன சிகித்ஸெய மாள்பி
தோ3ஷதூ3ர தேஜஸ்வி மஹைஶ்வர்யாதி3 கு3ணரூப

யக்ஞங்களுக்கு அருகில் நீ இருப்பதால் 'பிஷக்' என்று அழைக்கப்படுகிறாய். சம்சார ரோகத்தை போக்குபவனான ஸ்ரீதன்வந்தரியாக இருக்கிறாய். அனைத்து நோய்களின் சிகிச்சையையும் நீ செய்கிறாய். தோஷங்கள் அற்றவனே. தேஜஸ்வியே. மஹா ஐஸ்வர்ய முதலான அனைத்து குணங்களையும் கொண்டவனே.

594. ஸ்ரீ ஸன்யாஸ க்ருச்சம நம:
கர்மன்யாஸ மாடு3வ ஶமாதி3 கு3ணதா3த நீனு
'ஸன்யாஸ க்ருச்சனு' நமோ நமோ எம்பெ3னொ நினகெ3
காம்ய கர்மத்யாக மத்து தோ3ஷத்யாக3 மாடி3ஸுவி

ஶம ஆனந்த^{3} ஞானாதி^{3}க^{3}ளன்னித்து ஸந்தெயிஸுவி

ஜீவர்களின் கர்மங்களை அழிப்பவனே. ஷம முதலான குணங்களை அவர்களுக்கு அளிப்பவனே. ஸன்யாஸ க்ருச்சனே - உனக்கு என் நமஸ்காரங்கள். காம்ய கர்மங்களை மற்றும் அதிலிருந்து வருவதான தோஷங்களை நீ விடுவிப்பாய். ஷம, ஆனந்த, ஞானம் ஆகியவற்றை கொடுத்து உன் பக்தர்களை நீ காக்கிறாய்.

595. ஶ்ரீ ஶாந்தாய நம:
ஸாமாதி^{3} கு^{3}ணவந்தரிகெ^{3} ஸோம ப்ராப்தி மாடு^{3}வி
நமோ 'ஶாந்தா' தை^{3}த்யர நாஷ மாடு^{3}வி நாரஸிம்ஹ
ஸௌம்ய ப^{4}க்தர கஷ்ட நாஶமாடி^{3} விக்ஞானவித்து
ஸம்யகு^{3}பாஸனெ கெ^{3}யிஸி ஞான ஸுக^{2}வீவி ஶ்ரீஶ

நற்குணங்களைக் கொண்டவர்களுக்கு, அமிர்தத்தை நீ கொடுக்கிறாய். ஷாந்தனே உனக்கு என் நமஸ்காரங்கள். தைத்யர்களை அழிப்பவனே. நாரஸிம்ஹனே. உன் பக்தர்களுக்கு யதார்த்த ஞானத்தை அளித்து, அவர்களை உபாஸனை செய்ய வைத்து, அவர்களின் கஷ்டங்களை போக்குகிறாய். கடைசியில் முக்தியை அளிக்கிறாய்.

596. ஶ்ரீ நிஷ்டா^{2}ய நம:
சோர நாஶக 'நிஷ்டா^{2}' நமோ நமோ எம்பெ^{3} நினகெ^{3}
ஸ்தி^{2}ரவாகி^{3} ப^{4}க்தரலி இருவவனு நிஷ்டா^{2} நீ
சோரரு நின்ன கு^{3}ணரூப மரெமாடி^{3} தாவேவெ
'ஈஶ்வரோஹம்' எம்பு^{3}வரு அந்த^{2} த^{3}ஸ்யு நாஶ மாள்பி

துஷ்டர்களை அழிப்பவனே. நிஷ்டனே உனக்கு என் நமஸ்காரங்கள். பக்தர்களில் நிலையாக நின்றிருப்பவன் நீயே. துஷ்டர்கள் (மாயாவாதிகள்) உன்னுடைய குணங்களை மறைத்து, தாமே ஈஸ்வரன் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அத்தகையவர்களை நீ அழிக்கிறாய்.

597. ஶ்ரீ ஶாந்தயே நம:
கல்யாண ரூப நீனு 'ஶாந்தி' நமோ நமோ நினகெ^{3}
நித்யஸுக^{2} உன்னதனு ரமாரமண ஶ்ரீவத்ஸ
தோயஜாஸன ஶிவாதி^{3} ப^{4}க்தரிகெ^{3} ஸுக^{2}தா^{3}த
நித்ய நிர்தோஷ கல்யாண ஸுகா^{2}த்^{3}யனுப^{4}வ 'பூ^{4}ர்ம'

நித்ய கல்யாண ரூபனே. ஷாந்தயே உனக்கு என் நமஸ்காரங்கள். நித்ய ஸுகபூர்ணனே. ஸர்வோத்தமனே. ரமாரமணனே. ஸ்ரீவத்ஸனே. பிரம்ம, சிவ முதலான பக்தர்களுக்கு சுகத்தை கொடுப்பவனே. நித்ய நிர்தோஷனே. கல்யாண சுகாதி அனுபவத்தைக் கொண்டவனே.

598. ஶ்ரீ பராயணாய நம:
உத்தம பத^{3}வீவி 'பராயண' நமோ நினகெ^{3}
ப^{4}க்தரிகெ^{3} ஸம்யக் வேதா^{3}ந்த விக்ஞான நிஸ்சிதார்த்த^{2}
நீ திளிஸி யோக்^{3}யோபாஸன மாடி^{3}ஸி அபரோக்ஷ
வித்து மோக்ஷபத^{3}வீவி நீனு முக்தரிகு^{3} ஆஸ்ரய

முக்தியை அளிப்பவனே. பராயணனே உனக்கு என் நமஸ்காரங்கள். உன் பக்தர்களுக்கு வேதாந்த யதார்த்த ஞானத்தை அளித்து, அவரவர் யோக்யதைக்கேற்ப உபாஸனை செய்வித்து, அபரோக்ஷ ஞானத்தை அளித்து, மோட்சத்தை அளிக்கிறாய். நீ முக்தர்களுக்கும் ஆஸ்ரயனாக இருக்கிறாய்.

599. ஸ்ரீ ஶுபா4ங்கா3ய நம:

ஶுப4தமபு4த்3தி4 நின்னது3 'ஶுபா4ங்க3' நமோ எம்பெ3
ஶோப4ன அங்க3க3ளு ஞானானந்தா3தி3 ப3லக3ளிம்
ஸுபூர்ணவு ஶுர த3க்ஷிணோத்தர பக்ஷக3ள் மத்4ய
த்3விபாத3 அங்கா3க்3யபி4ன்ன ஆனந்த3மய சார்வாங்க3

மங்களங்களை அருளும் புத்தி உன்னுடையது. ஷுபாங்கனே உனக்கு என் நமஸ்காரங்கள். உன்னுடைய மங்கள அங்கங்கள், ஞானானந்தாதி பலங்களால் முழுமையானவை. வேதவ்யாஸனே. ஆனந்தமயனே. சுந்தராங்கனே.

600. ஸ்ரீ ஶாந்திதா3ய நம:

த்3ரவ்யக்கெ புஷ்டி ஈவ 'ஶாந்தித3' நமோ நமோ எம்பெ3
தி3விஜரிகு3 யோக்3ய நராதி3க3ள்கு3 மோக்ஷதா3த
ஸ்ரீவரன ப்ரஸாதா3த் 'பராம்ஶாந்தி' ஸ்தா2 ஶாஶ்வத
ஸர்வ தத்3யோக்3ய அதி4காரிக3ளிகெ3 ஈவி ஸ்ரீபதே

வஸ்துக்களுக்கு அதன் சக்தியை கொடுப்பவனே. ஷாந்திதனே. உனக்கு என் நமஸ்காரங்கள். தேவர்களுக்கும், யோக்ய நரர்களுக்கும் மோட்சத்தை அருள்பவனே. அவரவர்கள் யோக்யதைகளுக்கேற்ப நிரந்தரமான மோட்சத்தையே அருள்கிறாய். லட்சுமிதேவியின் தலைவனே.

601. ஸ்ரீ ஸ்ரஷ்டே நம:

ப4க்தருக3ளிகெ3 த்3ரவ்ய கொடு3வவ 'ஸ்ரஷ்டா' நமோ
ஜக3ஸ்ஸஜ்ஜன கர்தா ஆது3த3ரிந்த3 'ஸ்ரஷ்டா' நீனு
ஏகாத்மா நாபி4பத்மதி3 படெ3தி3 பி3ரம்மதே3வன்ன
ஆ கஞ்சஜகெ போ4தி3ஸி ஹொக்கு க்ருதி நடெ3ஸுதி

பக்தர்களுக்கு அவர்களின் இஷ்டங்களை நிறைவேற்றுபவனே ஸ்ரஷ்டனே உனக்கு என் நமஸ்காரங்கள். ஸஜ்ஜனர்களை அருள்கிறாய் ஆகையால் நீ ஸ்ரஷ்டா. ஏகாத்மனே. பிரம்மதேவனை உன் நாபியில் படைத்தவனே. பிரம்மனுக்கு தத்வஞானத்தை போதித்து, அருளினாய்.

602. ஸ்ரீ குமுதா3ய நம:

பூ4மியலி ப்ரஸித்3தா3னந்தா3னுப4வவான் 'குமுத3'
நமோ எம்பெ3 ஆனந்த3லீலெயிம் ஜக3ஸ்ஸ்ருஷ்டி மாடி3
பூ4மியலி ஆனந்த3லீலாவதார மாடி3 நீனு
பூ4மி பா4ரவ இளிஸி ஸுக2 க்ஷேமவ கொடு3வி

பூமியில் பிரஸித்தமானவன், அனுபவம் மிக்கவன். குமுதனே. உனக்கு என் நமஸ்காரங்கள். ஆனந்த லீலையினால் ஜகத் ஸ்ருஷ்டியை செய்கிறாய். அந்த பூமியில் உன் லீலையினால் அவதாரங்களை செய்து, பூமியின் பாரத்தினை இறக்குகிறாய். மக்களுக்கு சுக, க்ஷேமங்களை கொடுக்கிறாய்.

603. ஸ்ரீ குவலேஶாய நம:

பூ4ம்யாதி3 ஜக3த்தல்லி வாஸ மாள்பி 'குவலேஶாய'
நமோ நீ ஜீவரொளு நியாமகனாகி3ருவி
'கா3மாவிஶ்யச பூ4தானி தா4ரயாம்யஹ மோஜஸ'
ஸ்வாமி நீ ஸர்வத்ரவாஸ 'ஈஶாவாஸ்யமித3ம்' ஸர்வம்

பூமி முதலான உலகில் நீ வசிக்கிறாய். குவலேஷாய நம:. நீ ஜீவர்களில் நியாமகனாக இருக்கிறாய். ஸ்வாமியே நீ அனைத்து இடங்களிலும் வசிப்பவன்.

604. ஶ்ரீ கோ3ஹிதாய நம:
ஸோமாதி3க3ள த4ரிஸுவி 'கோ3ஹித' நமோ எம்பெ3
ஆம்னாய ரக்ஷக வேத3வாக்யஹிதகர வ்யாஸ
பூ4மி ஸ்வர்க்3க3 ஸர்வலோக ஹிதகர வாஸுதே3வ
ரமாபதி யாத3வ நீ கோ3வுக3ள ஹிதகர

அமிர்தம் முதலானவற்றை தரித்திருப்பவனே. கோஹிதனே உனக்கு என் நமஸ்காரங்கள். வேதங்களை காப்பவனே. வேதங்களால் போற்றப்படுபவனே. வேதவ்யாஸனே. பூமி, ஸ்வர்க்கம் முதலான அனைத்து உலகங்களையும் காப்பவனே, வாஸுதேவனே. ரமாபதியே. நீ பசுக்களை காப்பவனே.

605. ஶ்ரீ கோ3பதயே நம:
ஸ்தோத்ர உபபோ4க3 மாள்ப 'கோ3பதி' நமோ நினகெ3
நேத்ர பூ4 ஜலஸ்வர்க்க3 வாக் வஜ்ர தி3ங்ரு பஶுபதி
ப4க்தக்ருத் ஸ்தோத்ரக3ளு வேத3வாக்ய ஸ்தோத்ரக3ளனு
ஹிததி3 ஸ்வீகரிஸி அனுக்3ரஹ மாள்பி கோ3பால

